

க்ரைம் நாவல்
90
தீபாவளி சிறப்பிதழ்!
நவம்பர் - 2003
விலை ரூ. 15
ராஜேஷ்குமார்
கொஞ்சம் மேகம் கொஞ்சம் நிலவு!
பள்ளிச் சிறுவர்களைக் கடத்தி, அவர்களைக் கொடுமைப்படுத்தி சந்தோஷப்படும் ஒரு சைக்கோவின் படு பயங்கர கதை...

## கோயமுத்தூரிலிருந்து

என் அன்பான வாசக உள்ளங்களுக்கு!

வழக்கமான வணக்கத்துடன் 2003ன் தீபாவளி நல்வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன். சில வருடங்களுக்கு முன் 'ஆனந்தவிகடன்' வார இதழில் தொடர் கதையாக வெளிவந்த 'கொஞ்சம் மேகம் கொஞ்சம் நிலவு' என்னும் தொடர்கதை இப்போது உங்கள் கைகளில் ஒட்டுமொத்தமாய் சிறைபட்டிருக்கிறது. நீங்கள் நாவலுக்குள் நுழைவதற்கு முன்பாக இந்த மாத ஃபேக்ஸில் நான் சொல்லிருக்கும் விஷயத்தைக் கொஞ்சம் கவலையோடு படித்துப் பாருங்கள்.

சென்ற வாரம் நாளிதழ் ஒன்றை புரட்டிக்கொண்டு இருந்தபோது அந்த நாளிதழில் பள்ளியாசிரியர் ஒருவர் (பெயர்: ஜி. சூரிய நாராயணன், ஊர்: விழுப்புரம்) கடிதம் ஒன்றை எழுதியிருந்தார். அந்தக் கடிதத்தின்



## ஃபேக்ஸ்

(தொடர்ச்சி கடைசி பக்கம்)

க்ரைம் நாவல்

நவம்பர் - 2003

## எடிட்டர் ஏரியா

எங்களை வாழ வைக்கும் வாசக தெய்வங்களே வணக்கம்!

உங்கள் அனைவருக்கும் எங்களின் இதயம் நிறைந்த தீபாவளி நல்வாழ்த்துக்கள்.

இக்கடிதம் எழுதும் இன்றைய தேதி 15.10.03 வரை சென்னையில் பிரபல துணிக்கடைகளில் அப்படி ஒன்றும் சொல்லிக் கொள்ளும் அளவிற்கு கூட்டம் இல்லை. இதில் விதிவிலக்கு ரெங்கநாதன் தெரு. இந்த தெரு என்றும் மக்கள் அலைதான். இதற்கு இரண்டு காரணங்கள்: இதே தெருவின் கடைசியில்தான் மாம்பலம் ரயில்வே ஸ்டேஷன் உள்ளது. இதே தெருவில்தான் மலிவு விலை கடைகளான சரவணா ஸ்டோர்ஸ், ஜெயச்சந்திரன் டெக்ஸ்டைல்ஸ் உள்ளது. இதையெல்லாம் விட தெருவே 15 அடி அகலம்தான் இருக்கும். தீபாவளி நெருக்கத்தில் ஒருவேளை சூடு பிடிக்கும்.

இந்த இதழில் வெளி ...துள்ள 'கொஞ்சம் ...கம் கொஞ்சம் நிலவு' ...வல் ஆனந்த விகடனில் ...ளிவந்தது. வெளிவந்த



(2 ஆம் அட்டைத் தொடர்ச்சி)

*சாராம்சம் இது:* 'பல இளைஞர்களைக் கையாண்டு வரும் ஒரு ஆசிரியன் என்ற முறையில் இன்றைய இளைஞர்களிடம் நான் காணும் நிதர்சன உண்மைகள் மிகவும் வேதனைப்பட வைக்கின்றன. எந்த ஒரு இளைஞனும் ஒரு கடின உழைப்புக்கு தன்னை ஈடுபடுத்திக்கொள்ளத் தயாராக இல்லை. அப்படி இருக்கும் ஓரிருவரையும் ஜாதி சங்கங்களும் அரசியல் கட்சிகளும் உபயோகப்படுத்திக்கொண்டு பலி வாங்கிவிடுகின்றன. ஒவ்வொரு இளைஞனும் சிந்திக்க வேண்டிய வயதில் பாலுணர்வு தூண்டப் பட்டவனாக மாறுவதால் நாட்டில் பெண் பித்து பிடித்து அலையும் காமுகர்களும், அதனால் ஏற்படும் கொலை, கொள்ளை, கற்பழிப்பு, வீட்டுக்கு அடங்காத பிள்ளைகள், பெண்கள், குறிப்பாக தவறு செய்யும் பெண்கள் அதிகரித்துவிட்டனர். இதற்கு முக்கிய காரணம்: எந்தவித தடையும் இல்லாமல் எதை வேண்டுமானாலும் செய்ய சினிமா மற்றும் சின்னத்திரைக்கு கொடுத்து இருக்கும் இடம். டி.வி. சீரியல் எடுப்பவர்களும் சினிமா எடுப்பவர்களும் கடவுளையே கொச்சைப் படுத்துகிறார்கள். போற்றுதலுக்கும் பக்திக்கும் உரிய ஐயப்பனையும், முருகனையும், மாரியம்மனையும், மருதமலையையும், கந்தகோட்டத்தையும், சஷ்டி கவசத்தையும் கேவலமாக்கிவிட்டனர்.

எதையும் எதார்த்தமாகக் காட்ட வேண்டும் என்பதில் முதல் இரவுக் காட்சியில் மட்டும் அதிக அக்கறையுடன் செயல்படுகின்றனர். சினிமா பார்க்கும் அனைத்து மக்களையும் குறிப்பாக பெண்களைக் கொச்சைப்படுத்தும் வகையில் படத்தில் அம்மனாக நடிப்பவரைக்கூட தொப்புள் தெரியுமாறும், எந்தப் பெண்ணைக் காண்பித்தாலும் அவர்களின் கவர்ச்சிப் பாகங்களை மட்டும் படம் பிடிக்கும் காமிராக்களை வைத்துள்ள காமுகர்களும், கூட்டிக் கொடுப்பவர்களும் சினிமாவில் பெருகிவிட்டனர். 'கட்டிபுடி! கட்டிபுடிடா!' போன்ற பாடல்களைக் கேட்கும்பொழுது நமது நாட்டில்

(தொடர்ச்சி 3 ஆம் அட்டையில்)

(கடைசி பக்கத் தொடர்ச்சி)

சென்சார் போர்டுகளின் நிர்வாகம் எந்த அளவுக்கு ர்குலைந்து இருந்தால் இந்த நிலைமை ருவாகியிருக்கும் என்று எண்ணி மனம் குமுறுகிறது.

சமீபத்தில் வந்த ஒரு படத்தை சினிமாத் துறையைச் சார்ந்தவர்களாலேயே பார்த்து சகிக்கமுடியாமல் ரையரங்கைவிட்டு வெளியேறி உள்ளனர். ப்படிப்பட்ட படங்களை எடுப்பவர்கள் நாட்டை குட்டிச் வாராக்கிக்கொண்டிருக்கும் தேசத் துரோகிகள். னிமேலும் சென்சார் போர்டை மத்திய அரசும் மாநில ரசும் சரிவர சீர் அமைக்காவிடில் அயோத்தி குப்பம் ரமணி, ஆட்டோ சங்கர், ஆபாச டாக்டர் பிரகாஷ் பான்றவர்கள்தான் உருவாவார்களே தவிர ஒரு ாந்தியையோ, நேருவையோ, பட்டேலையோ அல்லது அப்துல்கலாமையோ பார்க்கவே முடியாது. இன்றைக்கு ட்டுக்கு மிகவும் தேவையான சட்டம் 'பொடா' அல்ல. ன்முறை மற்றும் ஆபாச ஒழிப்பு சட்டமே!'

இப்படி ஒரு கடிதத்தை அந்த நாளிதழில் படித்ததும் னுடைய மனமும் கவலையில் கனத்துப் போயிற்று. மை, புதுமை என்று சொல்லிக்கொண்டு கண்டபடி னிமா எடுக்கும் கயவர்களுக்கு சென்சார் போர்டு வாளத்தை பூட்ட வேண்டும். அதிரடி முடிவுகளை டுத்து இந்திய அளவில் பெயர்பெற்றுள்ள தமிழக அரசு பாசத்தை ஒழிக்கவும் ஒரு அவசர சட்டத்தைக் காண்டு வரவேண்டும். கொண்டு வருமா?

காத்திருப்போம் வாசகர்களே!

இனி, அடுத்த க்ரைம் நாவல் ஸ்பெஷலில் இடம் றப் போகும் நாவல் எது என்று பார்க்கலாமா?

இரண்டு நாவல்கள் இடம்பெறப் போகின்றன. க்கம்போல் ஒன்று வெஜிடேரியன், இன்னொன்று ன்-வெஜிடேரியன். தீபாவளியைக் கொண்டாடிவிட்டு டுத்த ஸ்பெஷலில் சந்திப்போம்.

மிக்க அன்புடன்,

ராஜேஷ்குமார்.

# விளக்கம் ப்ளீஸ் விவேக்!

★ கடல் நீரை குடிநீராக மாற்ற முடியாதா...?

- ஏ.எஸ். முகம்மது தமீம், திருமங்கலக்குடி.

★★ கடல்நீரை குடிநீராக மாற்ற கோடிக்கணக்கில் பணம் செலவாகும். அதாவது ஒரு டம்ளர் கடல்நீரை குடிநீராக மாற்ற இந்திய ரூபாய் மதிப்பில் 62 ரூபாய் செலவாகும் என்று கணக்கிடப்பட்டுள்ளது. இந்த செலவெல்லாம் இந்தியா போன்ற நாடுகளுக்கு கட்டுப்படியாகுமா... என்ன? உங்களுக்கு ஒரு விஷயம் தெரியுமா பாப்? 500 கோடி வருடங்களுக்கு முன்பு கடல் தண்ணீர் மனிதர்கள் குடிக்கக்கூடிய அளவுக்கு சுத்தமான குடிநீராகத்தான் இருந்திருக்கிறது. கொஞ்சம் கொஞ்சமாய் அதன் உப்பு அளவு அதிகமாகிக்கொண்டே வந்து இன்றைக்கு வாயில் வைக்க முடியாத அளவுக்கு உப்பாகிவிட்டது. இவ்வளவு உப்பு கடலில் வந்து சேர காரணமே கடலில் வந்து கலக்கும் ஆறுகள்தான். ஆற்று நீரில் இயற்கையாகவே ஓரளவுக்கு உப்பு உள்ளது. இந்த ஆற்று நீர் கடலில் கலக்கும்போது உப்பு அங்கேயே தங்கிவிடுகிறது. கடல்நீர் சூரிய வெப்பத்தால் ஆவியாகும்போத உப்பை கடலில் விட்டுவிட்டு நீர் மட்டும் ஆவியாகி மேலே போய்விடுகிறது. கடலில் உள்ள உப்பின் அளவு நாள்தோறும் கொஞ்சம் கொஞ்சமாய் அதிகரித்து 500 கோடி வருடங்களுக்குப்பின் இந்த அளவுக்கு எட்டியுள்ளது.

**போனஸ் நியூஸ்:** இன்றைக்கு உப்பின் அளவு



அதிகமாக உள்ள கடலுக்கு சாக்கடல் (DEAD SEA) என்று பெயர். அந்தக் கடலின் தண்ணீர் ஒரு போர்வையைப் போல் கெட்டியாக இருப்பதால் மனிதன் அதன் மேல் மூழ்கிவிடாமல் படுத்துக்கொள்ளலாம். இந்தக் கடலில் விழுந்து யாரும் தற்கொலை செய்துகொள்ள முடியாது.

★ பிரதமரின் பாதுகாப்பு ஏற்பாடுகளில் 'ஜாமர் கருவி' கண்டிப்பாக இடம்பெறும் என்று போலீஸ் அதிகாரி ஒருவர் பேட்டியில் சொல்லியுள்ளார். அது என்ன ஜாமர் கருவி...? விளக்கம் ப்ளீஷ் விவேக்!

- பி. குமார் டெண்டுல்கர், வீரபாண்டி, கோவை - 19.

★★ பிரதமரின் கார் அருகே நெருக்கமான பாதுகாப்புப் பணியில் சிறப்புப் பாதுகாப்புப் படை (எஸ்.பி.ஜி) போலீஸார் ஈடுபடுகின்றனர். பாதுகாப்புப் பணியின் முக்கிய அம்சமாக கருதப்படுவது 'ஜாமர்' எனப்படும் லேசீப்டி இன்ஸ்ட்ருமெண்ட். இந்த ஜாமர் கருவி பிரதமரின் கான்வாய் கார்களில் ஒன்றில் பொருத்தப்பட்டிருக்கும். வெடி குண்டை தீவிரவாதிகள் ரிமோட் கருவி மூலம் இயக்கினால் அந்த ரிமோட் சிக்னல்களை இந்த ஜாமர் கருவி 'ஜாம்' செய்துவிடும். ஒரு கிலோமீட்டர் சுற்றளவுக்கு இந்த ஜாமர் கருவியின் சிக்னல்கள் செயல்பட்டு அந்த வளையத்திற்குள் செல்போன், ரிமோட் என்று எந்த ஒரு எலக்ட்ரானிக் கருவிகளில் இருந்தும் வெளிப்படும் சிக்னல்களை செயலற்றதாக்கிவிடும். பிரதமர் செல்லும் அனைத்து வழித்தடங்களிலும் இந்த ஜாமர் கருவி பொருத்தப்பட்ட காரும் உடன் செல்லும். எனவே இந்த கார் செல்லும் போது அந்த வழிகளில் உள்ள எல்லா வாடிக்கையாளர்களின் செல்போன்களும் செயலிழந்துவிடும்.

**போனஸ் நியூஸ்:** அண்மையில் திருப்பதி மலைப்பாதையில் ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடுவின் கார் கண்ணி வெடியில் சிக்கியது. நாயுடுவின் காரில் அந்த ஜாமர் கருவி

பொருத்தப்பட்டிருந்தால் கண்ணிவெடிகள் வெடிக்காமல் செயலிழந்து போயிருக்கும்.

**★ எலக்ட்ரிக் ட்ரெயின் மின் கம்பியைத் தொட்டுக்கொண்டே ஓடுகிறது. திடீரென்று பவர் சப்ளை நின்றுவிட்டால் ட்ரெய்னும் ஓடாமல் அதே இடத்தில் நின்றுவிடுமா...?"**

**- எம். கோபாலகிருஷ்ணன், சென்னை - 6.**

★★ ப்ரதர் கோபாலகிருஷ்ணன்! முதலில் நீங்கள் ஒரு உண்மையைப் புரிந்துகொள்ள வேண்டும். எலக்ட்ரிக் ட்ரெய்ன் தான் ஓடிக்கொண்டிருக்கிற ஒவ்வொரு விநாடியும் மேல் கம்பியிலிருந்து மின்சாரத்தைப் பெறுவது இல்லை. பத்து நிமிடங்கள் அது பெறும் மின்சாரம் ரயிலை ஒரு மணிநேரம் ஓட வைக்கும் திறன் பெற்றது. அதிக சக்தி கொண்ட மின்சாரத்தை அப்படியே நேரடியாக ரயிலை இயக்க உபயோகப்படுத்த முடியாது. ஆகவே அதன் சக்தியைக் குறைத்துக்கொடுத்து அதிக நேரத்துக்கு ரயில் ஓட்டப்படுகிறது.

**போனஸ் நியூஸ்:** அதேபோல் டீசல் ரயில் என்ஜின் முற்றிலும் டீசல் எண்ணெயில் ஓடுவது இல்லை. டீசல் என்ஜினில் உள்ள ஜெனரேட்டர் மின்சாரம் தயாரிக்க பயன்படுகிறது. பிறகு அந்த மின்சக்தியால்தான் டீசல் என்ஜின் ஓடுகிறது. எலக்ட்ரோ - டீசல் - என்ஜின்கள் என்று அவை அழைக்கப்படுகின்றன.

**★ ஓசோன் படல ஓட்டையை இன்றைக்கு வளர்ந்து வரும் விஞ்ஞானத்தால் சரி செய்ய முடியாதா விவேக் ஸார்...?**

**- ஜி. ஐஸ்வர்யா தேவி, பெங்களூர் - 56.**

★★ சூரியனிடமிருந்து வரும் புற ஊதா (அல்ட்ரா வயலட்) கதிர்களின் பாதிப்பால் பூமியில் உஷ்ணம் அதிகரிக்கிறது. பருவநிலைகளிலும் பெரிய மாற்றங்கள் உண்டாகின்றன. உலகில் உள்ள அனைத்து ஜீவராசிகளுக்கும் புதுப்புது நோய்கள் உண்டாகின்றன.



பூமியில் ரெப்ரிஜிரேட்டரில் பயன்படுத்தப்படும் சி.எப்.சி. முதல் வாகனப்புகை வரை யாவும் ஓசோன் படலத்துடன் ரசாயனவினை புரிந்து அப்படலத்தில் பாதிப்பை ஏற்படுத்துவதால் சூரியனின் புற ஊதாக் கதிர்கள் நேரிடையாக பூமியைத் தாக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. இந்த நிலையை மாற்றி ஓசோன் படலத்தில் பாதிப்பு ஏற்படாமல் தடுக்கப்பட உலகநாடுகள் துரித நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தொடர்ந்து வலியுறுத்தப்பட்டு வருகிறது. ஓசோன் படலத்துக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் குளிர்சாதனப் பெட்டிகள் நவீன தொழில் நுட்பத்துடன் மாற்றியமைக்கப்பட உள்ளன. 'பெட்டர்லாய்ட்' என்ற நிறுவனம் அதற்கான முயற்சிகளைத் துவக்கியுள்ளது. இதுவரை குளிர்சாதனப் பெட்டிகளில் சி.எப்.சி - 12 என்ற வாயு பயன்படுத்தப்பட்டு வந்தது. இது ஓசோன் படலத்தை பாதிக்கக் கூடியது என்பதால் அதனை அகற்றிவிட்டு அதற்குப் பதிலாக ஆர்.134. ஏ என்ற வாயுவை பயன்படுத்தப் போகிறார்கள். இந்த வாயு ஓசோன் படலத்தை பாதிக்காது என்பதால் இனி ஓசோனின் ஓட்டை பெரியதாகாது என்று நம்பலாம்.

**★ புள்ளிராஜா யார்...? இந்த விளம்பரத்தை வெளியிடுவது யார்?**

**- பி. மகேந்திரன், கோவை - 11.**

★★ தமிழ்நாட்டில் 'பொடா'வுக்கு அடுத்தபடியாக அதிகமாக மக்களால் பேசப்படுகிற வார்த்தை புள்ளிராஜா. வடமாநிலங்களிலும் இதே ரீதியான விளம்பரம் ஒன்று பரபரப்பாக பேசப்பட்டு வருகிறது. அங்கே புள்ளிராஜாவுக்கு பதில் 'பல்பீர் பாஷாவுக்கு எய்ட்ஸ் வருமா' என்கிற வாக்கியம் படு பிரசித்தம். இந்த விளம்பரங்களை இந்தியா முழுவதும் வெளியிட்டிருப்பது பாப்புலேஷன் சர்வீஸஸ் இண்டர்நேஷனல் (P.S.I) என்ற இந்தியாவின் முன்னணி சமூக விழிப்புணர்வு அமைப்பு. இது தமிழ்நாடு எய்ட்ஸ் கட்டுப்பாடு கழகத்துடன் இணைந்து வெளியிட்டுள்ளது.

**போனஸ் நியூஸ்:** இப்படியொரு விளம்பரத்தை வெளியிட்டு பரபரப்பை ஏற்படுத்த வேண்டிய அவசியம் என்ன?

உலகத்திலேயே இந்தியாவிலும், இந்தியாவிலேயே நம் தமிழ்நாட்டிலும்தான் எய்ட்ஸ் நோயாளிகள் அதிகம். எனவே மக்களிடையே எய்ட்ஸ் பற்றிய ஒரு விழிப்புணர்வு எண்ணத்தை ஏற்படுத்தவே இந்த விளம்பரம். இந்த புள்ளிராஜா விளம்பரம் நவம்பர் மாதம் வரை நீடிக்கும்.

**★ ஆவி இருப்பது உண்மையா விவேக் ஸார்?**

**- டி. பஞ்சாட்சரம், சேலம் - 2.**

★★ ஆவி, பேய் இதெல்லாம் மெகா கப்ஸா. இந்த உலகத்தில் உள்ள சகலவிதமான ஜீவராசிகளும் செல்களால் உருவானவை. உடம்பில் செல்களின் வளர்ச்சி இருக்கும் வரை உயிர் இருக்கும். மரத்திலிருந்து ஒரு பழுத்த இலை உதிர்வது எவ்வளவு இயல்பானதோ அதேபோல்தான் ஒரு மனிதன் இறப்பதும். இறந்துபோன மனிதன் ஆவியாக இருப்பது உண்மையென்றால் உதிர்ந்து மடிந்துபோன இலைக்கும் ஒரு ஆவி இருக்கவேண்டுமே! ஏற்கெனவே உலக ஜனத்தொகை அபாயக்கட்டத்தைத் தாண்டி எங்கேயோ போய்க்கொண்டிருக்கிறது. இதில் இறந்துபோன ஆவிகளும் சேர்ந்துகொண்டால் அவ்வளவுதான். என்னைப் பொறுத்தவரை இந்த உலகத்தில் பாவிகள் மட்டும் இருப்பது உண்மை.

**'விளக்கம் ப்ளீஸ் விவேக்'**

**பகுதிக்கு கேள்விகளை அனுப்ப வேண்டிய முகவரி:**

**விளக்கம் ப்ளீஸ் விவேக்,**
**க்ரைம் நாவல், ஜீயே பப்ளிகேஷன்ஸ்,**
**6, திருவல்லிக்கேணி நெடுஞ்சாலை,**
**சென்னை - 5.**



# சூ...ப்பர் க்ளைமேக்ஸ்!

அருமையான நாவல் மட்டுமல்லாமல் இடையிடையே அறியத்தக்க முக்கியமான செய்திகள் இருந்தன. மிக்க நன்றி. க்ரைம் நாவல் பொழுதுபோக்கு அம்சமாக மட்டும் இல்லாமல் சிந்தனைக்குரிய பல விஷயங்களையும் அறியும் வகையில் அமைந்திருப்பது க்ரைம் நாவலுக்கே உரிய தனித்தன்மை.

**- எம்.துரைபிரியன், புதுக்கோட்டை.**

'நிழலின் நிறம் சிவப்பு' மொத்தத்தில் உண்மையின் வெளுப்பு. கொலைகாரன் கையாலேயே... இன்னொரு கொடுமைக்காரனை அழிப்பது சூ...ப்பர் க்ளைமேக்ஸ். பெண்பார்க்க வரும் படலத்துக்கு பாக்யாதரும் செமடோஸ் சூப்பர். திவாகர் பாராட்டப்படவேண்டிய கேரக்டர்.

**- ஆர்.அருள், சிதம்பரநாதன் பேட்டை.**

'தி ஹிண்டு' பற்றி நான்கு பக்கங்களுக்கு குறையாமல் எடிட்டர் ஏரியாவில் எழுதி க்ரைம் நாவலுக்கும், தி ஹிண்டு பத்திரிகைக்கும் பெருமை சேர்த்த திரு.அசோகனுக்கு வாசகர்கள் சார்பாக நன்றி. இது தொடரட்டும்.

**- கே.ராஜ்தேவி, சேலம்.**

இம்மாதம் 'க்ரைம் நாவல்' ஸ்பெஷலில் வெளிவந்த இரண்டு நாவல்களுமே அசத்தல். வித்தியாசமான தலைப்புகள் வைப்பது ராஜேஷ்குமாருக்கு மட்டுமே சாத்தியம். 'விளக்கம் ப்ளீஸ் விவேக்' பகுதி பயனுள்ளதாக இருக்கிறது. வெல்டன் ஆர்.கே.சார் அண்ட் ஜீயே சார்.

**- எஸ்.ராமச்சந்திரன், பெங்களூர்-8.**




அக்டோபர் மாத வெளியீட்டின் இரு நாவல்களும் மிக அற்புதம்! தலைப்புகளே எங்களை மிரட்டுவதாய் அமைந்திருந்தன. 'நிழலின் நிறம் சிவப்பு' நாவல் சட்டத்தின் பிடியிலிருந்து யார்

**வாசகர் கடிதம்**

தப்பினாலும் அவருக்குண்டான தண்டனை எந்த வடிவிலாவது கிடைத்துவிடும் என்பதை அழகாக பறைசாற்றியது.

- பொன்.ராஜ்குமார், ஊத்தங்கால்.

கடைசியில் தான் செய்யாத குற்றத்துக்காக பெரியப்பா விஷயத்தில் டாக்டர் மாட்டிக் கொள்வதன் மூலம் குற்றவாளிகள் எப்படியும் தப்ப முடியாது என்பதை 'நிழலின் நிறம் சிவப்பு' மூலம் நிரூபித்துவிட்டார் ராஜேஷ்குமார்.

- டி.திருமலைசாமி, பொன்னியாடி.

அருமையான நாவலைத் தந்து, அரிய தகவல்களை வெளியிட்டு எங்களை மகிழ்வித்த அண்ணன் ராஜேஷ்குமார் அவர்களுக்கும், வித்தியாசமான அட்டைப்படத்தை வெளியிட்ட அசோகன்ஜி அவர்களுக்கும் இதயங்கனிந்த பாராட்டுக்கள்.

- கே.என்.சத்தியமூர்த்தி, கந்தம்பாளையம்.

தப்பு செய்தவன் தண்டனை அனுபவித்தே ஆகவேண்டும் என்று தீர்ப்பளித்த அண்ணன் ஆர்.கே அவர்களுக்கு நன்றி. அத்தியாயத்தின் ஆரம்பத்தில் இருந்த சிறு குறிப்புகள் வாசகர்களுக்கு பயனுள்ள வகையில் அமைந்தது.

- என்.ஜெயச்சந்திரன், துறையூர்.

க்ரைம்க்கு என்றும் தரம் குறையாது என்பதை அக்டோபர் மாத நாவல் மூலம் உணர்த்திய ஆர்.கே அவர்களுக்கு நன்றி. உன்படங்கள் அனைத்தும் அற்புதம்.

- கே.வி.ஈஸ்வரமூர்த்தி,
கொட்டமுத்தாம் பாளையம்.

'இலவசம் - டிஸ்கவுண்ட் - ஆஃபர் என்ற பெயரில் ஏமாற்றும் பேர்வழிகளை நம்ப வேண்டாம்' என்ற ஜீயேவின் கட்டுரை சிறப்பாக இருந்தது. மழைநீர் சேகரிப்பு தொட்டி வேஸ்ட் என்று எண்ணிய நான் தங்களின் பதில் கண்டு உடனே கட்டிவேன் மழைநீர் சேகரிப்பு தொட்டி.

- ராஜேஷ் எஸ்.இளங்கோ, அலவாய்ப்பட்டி.

**மேலும் பாராட்டுக்குரிய கடிதம் எழுதியவர்களில் சிலர்:**


பி.எம்.ஷண்முகம் - தென்காசி,
ஆர்.ஆர்.சதீஷ்குமார் - குமரி,
எஸ்.அனித்குமார் - முத்துப்பேட், பேட்டை,
பி.வேலுச்சாமி - கணபதிபாளையம்,
மா.மோகனராசன் - காமநாயக்கன்பாளையம்,
கே.ஈஸ்வரன், ஜீ.பழனிச்சாமி - கோவை,
என்.தாமணிப்ரியன் - உங்காம்பாளையம்,
ந.மணியன், செ.ரா.சந்திரசேகரன் - முரளை.





# கொஞ்சம் மேகம் கொஞ்சம் நிலவு!

## ராஜேஷ்குமார்



சைலன்சர் பொருத்தப்பட்ட ஃபிரான்ச்சிஸ் ஸ்பாஸ் ஷாட் கன். இதன் மதிப்பு இந்திய ரூபாயில் ஏறக்குறைய ரூ.34,386.75 (465 பவுன்)

## 1

“நீங்க ஷ்யாம்தானே...?”

அடர்த்தியான நீலநிற சாண்ட்ரோ ஹூண்டாய் காருக்குச் சாய்ந்து நின்றிருந்த அந்த இளைஞன் குரல் கேட்டுத் திரும்பினான்.

மெலிதாகக் கனைத்துக் கொண்டிருந்த கைனடிக்



ஹோண்டா ஸ்கூட்டரில் அந்த இளம்பெண் தெரிந்தாள். பில்லியனில் செர்ரிப்பழ நிற யூனிஃபார்மில் ஐந்து வயதுப் பையன். முதுகில் புத்தகச் சுமை. வாய் நிறைய சாக்லெட்.

இளைஞன் குளிர்கண்ணாடியைக் கழற்றிக் கையில் வைத்துக் கொண்டு அந்தப் பெண்ணை ஒரு குழப்பப் பார்வை பார்க்க... அவன் மறுபடியும் கேட்டான்.

“நீங்க... ஷ்யாம் தானே...?”

“ஆமா... நீங்க...?”

அந்தப் பெண்ணின் புன்னகை விஸ்வரூபம் எடுத்து ஒரு பெரிய சிரிப்பாக மாறியது.

“என்னைத் தெரியலையா உங்களுக்கு...?”

“ஸாரி... தெரியலையே...!”

“நான் வாணி...”

“வாணியா...?” என்று கேட்டு நெற்றி சுருக்கியவனைப் பொய்க்கோபத்தோடு முறைத்தாள் அவள்.

“இந்த இருபத்தேழு வயசுக்குள்ளே இப்படியொரு மறதியா ஷ்யாம்...? சாப்பாட்டுல மூணு நேரமும் வெண்டைக்காய் சேர்த்துக்கோ...” அவள் உரிமையோடு ஒருமையில் பேசவும், ஷ்யாம் கழுத்து டையை அவஸ்தையாக இறுக்கிக் கொண்டு தயக்கமான குரலில் கேட்டான்.

“ஸாரி... ரெகக்னைஸ் பண்ண முடியலை... நீங்க எனக்கு ரிலேஷனா...?”

“என்ன ஷ்யாம்... உனக்கு இவ்வளவு மோசமான ஞாபகசக்தியா? நீயும் நானும் மரக்கடை கார்ப்பரேஷன் ஹைஸ்கூல்ல டென்த் ஸ்டேண்டர்ட் வரைக்கும் ஒண்ணா படிச்சிருக்கோம். நான் முதல் பெஞ்ச். நீ மூணாவது பெஞ்ச். 'வாணிர வா நீ'ன்னு நீ டாய்லெட்ல கரிக்கட்டையால எழுதி வெச்சதும் அதுக்காக பிரேயர் மீட்டிங்கில் ஹெட்மாஸ்டர் 'உன்னை நூறு தோப்புக்கரணம் போடச் சொன்னதும் இன்னமும் என் மனசுக்குள்ளே பச்சைப் பசேல். அடி வாங்கித்

தோப்புக்கரணம் போட்ட உனக்கு எல்லாம் மறந்து போச்சா என்ன...?''

ஷ்யாம் மலர்ந்தான். இரண்டு தோள்களையும் சின்னதாகக் குலுக்கித் தன் வியப்பை வெளிப்படுத்தினான்.

''ஓ... அந்த வாணியா நீ...? மை குட்னஸ்! அடையாளமே தெரியலை. கண்டபடி சதை பிடிச்ச 'ஒரு டிபிக்கல் அம்மா' ரேஞ்சுக்குப் போயிட்டே. எப்படி எனக்கு அடையாளம் தெரியும்? இது யாரு... உம் பையனா...?''

''ஆமா... பேர் அபிஷேக்...! பக்கத்தில் இருக்கிற ஜெஸ்மின் கான்வெண்ட்ல ஃபர்ஸ்ட் ஸ்டேண்டர்ட் படிக்கிறான். டேய், அபிஷேக்... அங்கிளுக்கு குட்ஈவினிங் சொல்லு.''

அபிஷேக் சாக்லெட் குதப்பிய வாயோடு குட்ஈவினிங் சொல்ல, ஷ்யாம் அவனுடைய கன்னத்தைத் தட்டிவிட்டு வாணியை ஏறிட்டான்.

''பையன்கிட்ட உன்னோட ஜாடை ஒரு பர்சண்ட்கூட இல்லையே...?''

''இவன் முழுக்க முழுக்க அவரோட ஜெராக்ஸ்.''

''அவர் என்ன பண்றார்...?''

''க்ரைம் பிராஞ்ச்சில் இன்ஸ்பெக்டரா இருக்கார். பெயர் பாலமுரளி.''

ஷ்யாம் மறுபடியும் தோள்களைக் குலுக்கி அண்ணாந்து சிரித்தான்.

''என்ன சிரிக்கிறே ஷ்யாம்...?''

''ஒண்ணுமில்லை... ஸ்கூல் டேஸ்ல நீ போலீஸ்காரங்களைப் பார்த்தாலே பயப்படுவே! இப்ப எப்படி... அவர் உன்னைப் பார்த்துப் பயப்படறாரா...?''

வாணி சிரித்துவிட்டுக் கேட்டாள். ''அது இருக்கட்டும்... உன்னைப் பத்திச் சொல்லு. உனக்கு கல்யாணம் ஆயிடுச்சா... இல்லையா...?''

''இன்னும் இல்லை...''

''ஏன்...?''



''பின்னலை இன்னும் கொஞ்சம் டெவலப் பண்ணிட்டு... எனக்கு மனைவியா வரப்போறவ எது கேட்டாலும் வங்கித்தரக்கூடிய ஒரு லெவலுக்கு வந்த பின்னாடிதான் கல்யாணம்.''

''என்ன பிஸினஸ் பண்றே...?''

''அதலான் சாண்ட் பிச் பெயிண்டிங்.''

''சீக்கிரமா கல்யாணம் பண்ணிக்க ஷ்யாம். இல்லேன்னா, மண்டையில் இருக்கிற மிச்ச முடியும் கொட்டிடப் போகுது...!''

''இப்பத்தான் ஹேர் கிராஃப்டிங் வந்தாச்சே... இனிமே என்ன கவலை... ஆமா... உன் வீடு எங்கே இருக்கு?''

''ஆர்.எஸ். புரத்துல சுண்ட் சம்பந்தம் ரோடு! நீ எங்கே...?''

''நான் கொஞ்சம் அவுட்டர். சக்கநாரி கோவிலுக்குப் போற வழியில் மகாராணி அவென்யூ...''

வாணி மேலும் ஏதோ கேட்க நினைத்த விநாடி... அந்தப் பெண் பதட்டமாக வியர்வை பொங்கும் முகத்தோடு ஓடிவந்தாள்.

''வாணி... என் பையன் சாய்பிரசாத்தைப் பார்த்தியா...?''

''இல்லையே...''

''அவனைக் காணோம் வாணி!''

''காணோமா...! ஸ்கூலுக்குள்ளே நல்லா தேடிப் பார்த்தியா இந்திரா...?''

''பார்த்தேன்... ஸ்கூல் கேட்டை விட்டு சாய்பிரசாத் வெளியே வந்ததை வாட்ச்மேன் பார்த்திருக்கான்.''

''பதட்டப்படாம தேடிப்பாரு இந்திரா. உம் பையன் சாய்பிரசாத் ரொம்பவும் புத்திசாலி... யாராவது வந்து கூப்பிட்டா போயிட மாட்டான்.''

''அது எனக்கும் தெரியும் வாணி. ஆனா, பயமாயிருக்கே...''

ஷ்யாம் குறுக்கிட்டுக் கேட்டான்.

''உங்க வீடு எங்கே இருக்கு...?''

''ராம்நகர் கோகலே ஸ்ட்ரீட்.''

''இதுக்கு முன்னாடி அவன் எப்பவாவது ஸ்கூல் விட்டதும் தனியா வீட்டுக்குப் போயிருக்கானா...?''

''இல்லை...''

''போகத் தெரியுமா...?''

''தெரியும்...''

''நீங்க லேட்டா வந்ததுனால ஒருவேளை அவன் வீட்டுக்குப் போயிருக்கலாம் இல்லையா...? வீட்ல போன் இருக்கா...?''

''இருக்கு...''

''போன் பண்ணிப் பாருங்க. இது மாதிரியான நேரங்கள்ல டென்ஷன் படக்கூடாது.''

இந்திரா வியர்த்த முகத்தை சேலைத் தலைப்பால் ஒற்றிக்கொண்டே வாணியைக் கலங்கிய விழிகளோடு ஏறிட்டாள்.

''வாணி... நீயும் என் கூட கொஞ்சம் வாயேன். எனக்குப் படபடன்னு வருது.''

வாணி தன் கைனடிக் ஹோண்டா ஸ்கூட்டரை ரோட்டோரமாக நிறுத்தி ஸ்டாண்ட் போட்டுவிட்டு ஷ்யாமிடம் திரும்பினாள்.

''ஷ்யாம்... இத்தனை வருஷம் கழிச்சு நாம் சந்திக்கற நேரம் சரியில்லைனு நினைக்கிறேன். நீ கிளம்பு. மறுபடியும் சந்திக்க முடிஞ்சா பேசுவோம்...! வா... இந்திரா...''

''குழந்தையைத் தேடற விஷயத்தில் என்னோட உதவி ஏதாவது தேவைப்படுமா..?''

''வேண்டாம் ஷ்யாம்...! நீ புறப்படு. சாய்பிரசாத் கொஞ்சம் துடிப்பான பையன். சொன்ன மாதிரி அவன் வீட்டுக்குப் போயிருக்கலாம். இல்லேன்னா, ஸ்கூல் கேம்பஸுக்கு உள்ளே எங்கேயாவது விளையாடிக்கிட்டு இருக்கலாம். அவனைக் கண்டு பிடிக்கிறதுல எந்தப் பிரச்னையும் இருக்காது.''

''ஓ.கே... மறுபடியும் பார்க்கலாம்! கவலைப்படாதீங்க மிஸஸ் இந்திரா. பையன் எங்கேயும் போயிருக்கமாட்டான். வீட்டுக்கு போன் பண்ணிப்பாருங்க. அங்கே இருப்பான்'' என்றான் ஷ்யாம்.



இந்திரா கலங்கிய விழிகளோடு தலையசைத்துவிட்டு வாணியோடு வேகவேகமாகச் சற்று தொலைவில் இருந்த டெலிபோன் பூத்தை நோக்கிப் போக -

ஷ்யாம் காருக்குள் நுழைந்து... டிரைவிங் ஸீட்டுக்குச் சாய்ந்து... இக்னீஷியனைக் கனைக்க வைத்துவிட்டு திரும்பி... காரின் பின்னிருக்கையை - உதட்டில் குரூரப் புன்னகையொன்று உதிக்கப் பார்த்தான்.

செர்ரிப் பழ நிற யூனிஃபார்மில் அந்த ஐந்து வயதுச் சிறுவன் கண்மூடி வாய்பிளந்து மல்லாந்திருந்தான்.

''உம் பேர் சாய்பிரசாத்தா...?''

ஷ்யாமின் உதடுகள் கோபத்தோடு முனக, காரின் ஆக்ஸிலேட்டரைக் கால் அழுத்தியது.

அந்த ஹுண்டாய் ஏவுகணையாக மாறியது.

இரவு எட்டு மணி.

அஸிஸ்டண்ட் போலீஸ் கமிஷனர் குகனுக்கு முன்பாக காக்கி நிறத்தில் ஒரு கோடு போட்ட மாதிரி விறைப்பாக நின்றிருந்தார் இன்ஸ்பெக்டர் பாலமுரளி.

''காணாமல் போன பையன் சாய்பிரசாத்தைப் பத்தி ஏதாவது தகவல் கிடைச்சுதா...?'' என்று அவரிடம் கேட்டார் குகன்.

''இல்ல சார்...''

''மூணு மாசத்துக்கு முன்னாடி அதே ஜெஸ்மின் கான்வெண்ட்லதான் ஒரு பையன் காணாமப் போய் நாலு நாளைக்கப்புறம் குற்றுயிரும் குலையுயிருமா பாரதி பூங்கா பக்கம் ஒரு முட்புதர்ல விழுந்துகிடந்தான். இல்லையா...?''

''ஆமா சார்... அந்தப் பையன் பேர் கமலக்கண்ணன். அவனோட உயிரைக் காப்பாற்ற முடிஞ்ச டாக்டர்களால பேதலிச்சுப்போன புத்தியை இந்த நிமிஷம் வரைக்கும் சரிபண்ண முடியலை.''

"அந்த கான்வெண்ட்டை யார் நடத்தறாங்க...?"

"மிஸ்டர் ஜெயப்பிரகாசம்னு ஒருத்தர் சார். விபா டிரஸ்ட்ங்கிற பேர்ல நிறைய கல்வி நிறுவனங்களை நடத்திட்டு வர்றார். சிட்டியில் இன்னிக்கு அவர் ஒரு வி.ஐ.பி. கொஞ்சம் அரசியல் செல்வாக்கும் இருக்கு. ரெண்டு ஸ்பின்னிங் மில். போத்தனூரில் சிமெண்ட் ஃபேக்டரி. ஊட்டியில் எஸ்டேட்ஸ்..."

"அவங்க குடும்ப விவரம்?"

"மனைவி யசோதா, மகள் விபா... இந்த ரெண்டே பேர்தான் அவருக்கு உறவு... விபாவுக்கு அடுத்த வாரம் பிரசிடெண்ட் ஹால்ல கல்யாணம்."

"பையன்கள் காணாமல் போனது சம்பந்தமாக ஜெயப்பிரகாசத்தை விசாரிச்சீங்களா?"

"ஏழு மணி சுமாருக்கு அவரோட பங்களாவுக்குப் போயிருந்தேன் சார். அவரோட பெண் விபா மட்டும்தான் வீட்ல இருந்தாங்க... கல்யாண அழைப்புக்காக அப்பாவும் அம்மாவும் வெளியே போயிருக்கிறதாக சொன்னாங்க..."

குகன் மணிக்கட்டில் இருந்த வாட்சைப் பார்த்துவிட்டுச் சொன்னார்.

"போன் பண்ணிப் பாருங்க...! இந்நேரம் அவங்க வீடு திரும்பி இருக்கலாம்."

இன்ஸ்பெக்டர் பாலமுரளி, மேஜையின்மேல் இருந்த டெலிபோனைக் கையாண்டார். மறுமுனையில் ஜெயப்பிரகாசம் உடனே கிடைத்தார்.

"சார்...! நான் இன்ஸ்பெக்டர் பாலமுரளி..."

"நீங்க வந்துட்டுப் போனதா விபா சொன்னா. என்ன விஷயம் இன்ஸ்பெக்டர்...?"

"இன்னிக்கு சாயந்தரம் உங்க ஜெஸ்மின் கான்வெண்ட்டிலிருந்து சாய்பிரசாத்ங்கிற அஞ்சு வயசுப் பையன் ஒருத்தன் காணாமப் போயிருக்கான். இந்த விஷயம் உங்களுக்குத் தெரியுமா...?"

"தெரியும்... ஹெட்மிஸ்ட்ரஸ் எனக்கு போன் பண்ணிச் சொன்னாங்க. பையன் இன்னும்



கிடைக்கலையா?"

"கிடைக்கலை..."

"ஸ்கூலோட கரஸ்பாண்டெண்ட் என்கிற முறையில் போலீஸுக்கு நான் ஏதாவது முறைப்படி கம்ப்ளெயிண்ட் கொடுக்கணுமா?"

"இல்ல சார்... உங்ககிட்ட கொஞ்சம் பேசணும்."

"என்ன பேசணும்...?"

"மூணு மாசத்துக்கு முன்னாடி உங்க கான்வெண்ட்ல படிச்ச கமலக்கண்ணன்ங்கிற ஒரு பையன கடத்தப்பட்டு, நாலு நாள் கழிச்சு உடம்பில் காயங்களோடு புத்தி பேதலிச்ச நிலையில் ஒரு பார்க்கின் முட்புதர்க்கு உள்ளே கிடந்தான். அதுக்கப்புறம் நடந்திருக்கிற ரெண்டாவது சம்பவம் இது. இந்தச் சம்பவங்கள் கொஞ்சம் அசாதாரணமாயிருக்கிறதுனால உங்ககிட்ட கொஞ்சம் விசாரணை நடத்த வேண்டியிருக்கு... இப்ப வரலாமா...?"

"அது... வந்து..."

"என்ன சார் தயக்கம்...?"

"என்னோட டாட்டர் விபாவுக்கு அடுத்த வாரம் கல்யாணம். இந்த நிலைமையில் என் வீட்டுக்கு போலீஸ் வர்றதும் போறதும் பார்க்கிறவங்களுக்குக் கொஞ்சம் நெருடலாயிருக்கும். என்னை ஏதாவது கேக்கிறதாயிருந்தா டெலிபோனிலேயே கேட்டுட்டா பரவாயில்லை..."

"ஸாரி சார்...! சில விஷயங்களுக்கு டெலிபோன் பேச்சு சரிப்பட்டு வராது. நான் இப்ப நேர்ல வந்துடறேன். பத்தே பத்து நிமிஷம் போதும். விசாரணையை முடிச்சுக்கிட்டு போயிடுவேன். நீங்க சொல்லப் போகிற பதில்களை வெச்சுத்தான் நான் கேஸோட இன்வெஸ்டிகேஷனை மூவ் பண்ண முடியும். தயவு செஞ்சு ஒத்துழைங்க..."

"சரி... வாங்க..."

"தேங்க்யூ சார்..."

இன்ஸ்பெக்டர் பாலமுரளி ரிஸீவரை வைத்துவிட்டு

விஷயத்தை அசிஸ்டண்ட் கமிஷனர் குமாருக்குச் சொல்ல... அவர் தலைக்குத் தொப்பியைக் கொடுத்துக் கொண்டே எழுந்தார்.

''வாங்க... ரெண்டு பேருமே போயிட்டு வந்துடுவோம்...''

வாசலுக்கு வந்தார்கள். வெளியே காத்திருந்த ஜீப் அவர்களைச் சுமந்து கொண்டது.

''அப்பா...!''

''......''

''அப்பா...!''

''ம்...''

''உங்களுக்கு என்னாச்சு...? டெலிபோன்ல பேசினது யாரு...? ஏன் இப்படி டல்லடிச்சுப் போய் கன்னத்துல கை வெச்சு பிடிவாதமா சோக போஸ் கொடுத்துட்டிருக்கீங்க...?''

மகள் விபா போட்டு உலுக்கிய உலுக்கலில் ஜெயப்பிரகாசம் கலைந்தார். பெருமூச்சுவிட்டார்.

''ஒண்ணுமில்லேம்மா...''

பக்கத்து அறையிலிருந்து அவருடைய மனைவி யசோதா கோபமாக வெளிப்பட்டாள்.

''நீங்க ஒண்ணுமில்லைன்னு சொன்னா நாங்க நம்பிடுவோமா...? விபா... நீ விடாதே...! விஷயம் என்னான்னு கேளு...''

விபா சுட்டு விரலை உயர்த்தினாள். ''அப்பா... நீங்க இப்போ விஷயத்தைச் சொல்லப் போறீங்களா இல்லையா...?''

ஜெயப்பிரகாசம் வழுக்கையும் நெற்றியும் சங்கமித்த பரப்பை அவஸ்தையாகத் தேய்த்துவிட்டுக் கொண்டே நிமிர்ந்து விபாவைப் பார்த்தார்.

''நம்ம கான்வெண்ட்டிலிருந்து ஒரு குழந்தை காணாமப் போன விஷயமா விசாரணை செய்றதுக்காக போலீஸ் வர்றதா போன் பண்ணியிருக்காங்க.''

''வாட்டுமே... அதுக்காகவா இந்த சோக



போஸ்...?''

''எனக்கு மனசே சரியில்லேம்மா. மூணு மாசத்துக்கு முன்னாடி ஒரு குழந்தை காணாமப் போய் நாலு நாள் கழிச்சு புத்தி பேதலிச்சுப் போன நிலைமையில் கிடைச்சது. இன்னிக்கு சாயந்தரம் ஒரு குழந்தை காணாமப் போயிருக்கு. ரெண்டு குழந்தையும் நம்ம கான்வெண்ட்டிலிருந்து காணாமப் போனதால போலீஸோட கடுமையான பார்வை நம்ம இன்ஸ்டிடியூஷன் மேல திரும்பியிருக்கு. அடுத்த வாரம் உனக்குக் கல்யாணம். இந்த நிலைமையில் போலீஸ் நம்ம வீட்டுக்கு வர்றதும் போறதுமாயிருந்தா நல்லாவா இருக்கும்...?''

விபா புன்னகைத்தாள்.

''அப்பா... குழந்தை காணாமப் போயிருக்கிறது பெரிய விஷயம்தான். அதுவும் நம்ம கான்வெண்ட் குழந்தை என்கிறபோது போலீஸார் நம்மகிட்ட விசாரணைக்கு வராம வேற யார்கிட்ட போவாங்க...?'' சொன்ன விபா, யசோதா இருந்த பக்கம் திரும்பினாள்.

''அம்மா... அப்பாவோட கவலைக்குக் காரணம் அந்த காணாமல் போன குழந்தை; இங்கே விசாரணைக்காக வரப்போகிற போலீஸ். நீ பார்த்து அப்பாவை ஹேண்டில் பண்ணிக்கோ. நான் க்ராஸ்கட் ரோடு வரைக்கும் போயிட்டு வந்துடறேன்.''

''இப்ப எதுக்காக வெளியே போறே...?''

''ப்யூட்டி பெல்ட் ஷாப்பில் ஒரு இம்போர்ட்டட் ஃபேஸ் க்ரீம் வந்திருக்கு. வாங்கிட்டு வந்துடறேன்...''

சொன்னவள் டீபாயின் மேலிருந்த வானிடி பேக்கை எடுத்துத் தோளில் மாட்டிக் கொண்டு போர்டிகோவில் நின்றிருந்த கார்களில் மாருதி ஜென்னைக் குறி வைத்துப் போனாள்.

அடுத்த இரண்டாவது நிமிஷம் ஜென் ஹெட் லைட் வெளிச்சத்தோடு காம்பௌண்ட் கேட்டைக் கடந்து ரோட்டுக்கு வந்து வேகம் எடுத்து ஒரு நூறு மீட்டர் தூரத்தை விழுங்கியிருந்தபோது, ஆள் நடமாட்டம்

இல்லாத - ரோட்டோரமாக நின்றிருந்த அந்தப் பெண் காரை நிறுத்தக்கோரி கையை அசைக்க, விபாவின் கால் பிரேக்கை அழுத்தியது.

கார் கிறீச்சிட்டு நிற்க, விபா அருகே அந்தப் பெண் குனிந்தாள். நடுத்தர வயது. நெற்றியில் பெரிதாகக் குங்குமம்.

''ஸாரி விபா...''

''நீங்க...?''

''என் பேர் கோகிலம். உன்னைப் பார்க்கிறதுக்காகத்தான் வந்துட்டிருந்தேன். நீயே எதிர்ல வந்துட்டே''

''என்ன விஷயம்...?''

''உன்கிட்ட ஒரு அஞ்சு நிமிஷம் பேசணும்.''

ஜென்னலையானது.

''சொல்லுங்க... என்ன விஷயம்...?''

''காருக்குள்ளே உட்கார்ந்து பேசலாமா?''

விபா எரிச்சலோடும் வேண்டா வெறுப்போடும் காரின் பின் பக்கக் கதவைத் திறந்துவிட... கோகிலம் ஒரு தேங்க்ஸ் சொல்லி காருக்குள் வந்தாள். பின் ஸீட்டுக்குச் சாய்ந்து கொண்டாள்.

''உனக்கு அடுத்த வாரம் கல்யாணம்னு கேள்விப்பட்டேன். என்னுடைய வாழ்த்துக்கள் விபா.''

விபா கோபமாக நிமிர்ந்தாள்.

''உன்னோட வாழ்த்துக்களை அப்படி ஓரமா வெச்சுட்டு விஷயத்துக்கு வா...'' என்றாள்.

''இதோ... வந்துட்டேன் விபா... நான் இப்போ சொல்லப் போகிற விஷயத்தை வாழ்க்கையில் என்னிக்காவது நீ யோசிச்சுப் பார்த்து இருக்கலாம். விஷயம் இதுதான். நீ யார் ஜாடை...? அப்பா ஜாடையா... அம்மா ஜாடையா...?''

விபாவின் வலது பக்க நெற்றியருகே ஒரு நரம்பு கோபமாகப் புரண்டு படுத்தது.

''இதுதான் நீ பேச வந்த முக்கியமான விஷயமா?''

''பின்னே? இது முக்கியமான விஷயம் கிடையாதா?



பிறக்கிற எல்லோருக்குமே ஒன்னு அம்மா ஜாடை இருக்கும்... இல்லேன்னா அப்பா ஜாடை இருக்கும். ஆனா, உன்கிட்ட ரெண்டுமே மிஸ்ஸிங்.''

''ஏன்... எங்க தாத்தா பாட்டி ஜாடையில் நான் இருக்கக்கூடாதா...? நான் பாட்டி ஜாடைன்னு எங்கம்மா சொல்லியிருக்காங்க...''

கோகிலம் பெரிதாகப் புன்னகைத்தாள்.

''அது பொய்...''

''பொய்னு உனக்கு எப்படித் தெரியும்?''

''தெரியும்...! இந்த போட்டோவைக் கொஞ்சம் பார்க்கறியா?''

கையில் வைத்திருந்த பாலிதீன் கவரைப் பிரித்துப் பழுப்பேறிய ஒரு பாஸ்போர்ட் போட்டோவை எடுத்து விபாவிடம் கொடுத்தாள். விபா போட்டோவை வாங்கி நடுக்கமாக தன் பார்வையை அதன் மேல் நழுவ விட்டாள்.

சட்டென்று விபாவின் பார்வை உறைந்து போக -

அதிர்ச்சி அலையொன்று அவளுடைய இதயத்தை மூர்க்கமாக மோதி நெம்பியது.

கையில் இருந்த போட்டோவில் ஏழ்மைத் தோற்றத்தில் விபா காமிராவை நேர் பார்வை பார்த்தபடி சிரித்துக் கொண்டிருந்தாள்!

## 2

விபாவின் நுனிவிரல்கள் காற்றுக்காகத் திணற, அவள் கை விரல்களில் சிக்கியிருந்த போட்டோ மிக மெல்லிய நடுக்கத்துக்கு உட்பட்டது.

காரின் பின்ஸீட்டில் உட்கார்ந்திருந்த கோகிலம், விபாவின் தோளை மெள்ளத் தட்டினாள்.

''என்ன... பேச்சையே காணோம்...?''

''இது... இது...''

''உன்னோட ஒரிஜினல் அம்மா...''

''அ... அ... அப்போ வீட்ல இருக்கிறது...?''

கோகிலம் சிரித்தாள்.

"அது... சும்மா...!"

"நோ... இருக்காது..."

"என்னது... இருக்காதா...? சரியாப் போச்சு! விபா, உணர்ச்சிவசப்படாம கையில் இருக்கிற போட்டோவை மறுபடியும் ஒரு தடவை பாரு..."

விபா, தன் நடுக்கமான பார்வையை மீண்டும் போட்டோவுக்குக் கொண்டு போனாள். தண்டுவடத்தில் பனிக்கட்டி ஒன்று ஸ்லோமோஷனில் ஊர்ந்து கொண்டு போயிற்று.

நெற்றி, கண்கள், நாசி, உதட்டுச் சுழிப்பு, வழித்த மாதிரியான மோவாய்... எல்லாமே நூற்றுக்கு நூறு மார்க் வாங்கி விபாவோடு ஒத்துப்போயிருந்தது. பணக்காரச் செழுமை மட்டும் மிஸ்ஸிங்!

"என்ன விபா, நம்பிக்கை வருதா...?"

"ஊ... ஹூம்! நான் நம்பமாட்டேன்..."

"நம்பமாட்டியா... ஏன்...?"

"நீ ஏதோ பித்தலாட்டம் பண்றே...! இது என்னோட போட்டோவேதான். நீ இந்த போட்டோவில் சில்மிஷம் பண்ணி..."

கோகிலம் கையமர்த்தினாள்.

"இதோ பார் விபா... நீ இப்ப சொன்ன சில்மிஷம், பித்தலாட்டம் இந்த வார்த்தைகளுக்கெல்லாம் ஒட்டு மொத்த குத்தகைக்காரர் உங்க அப்பா, மிஸ்டர் ஜெயப்பிரகாசம்தான். நான் கிடையாது. இந்த போட்டோவில் இருக்கிறது, என்னோட அக்கா. பேர் அம்சவேணி. இருபத்திரண்டு வருஷங்களுக்கு முன்னாடி எடுத்த போட்டோ இது..."

"நீ சொல்றது உண்மையோ, பொய்யோ... அது எப்படியோ இருந்துட்டுப் போகட்டும். இப்போதைக்கு இந்தப் பிரச்னை வேண்டாம். அடுத்த வாரம் எனக்குக் கல்யாணம்..."

"அது எனக்குத் தெரியும்..."

"தெரிஞ்சு வெச்சுக்கிட்டு, இப்ப இந்தப் பிரச்னையைக் கிளப்பறது என்ன நியாயம்...? இத்தனை



நாளா இந்தச் சந்தேகத்தை மனசுல வெச்சுக்கிட்டு பூஜை பண்ணிட்டு இருந்தியா...?"

"உன்னோட கோபமும் கேள்வியும் நியாயமானதுதான். ஆனா, இப்ப நான் சொல்லப்போற விஷயத்தை நீ நம்பித்தான் தீரணும். இன்னிக்குக் காலையிலதான் முதல் தடவையா உன்னையே நான் பார்த்தேன். வழக்கம் போல நான் ராஜவீதியில் இருக்கிற ராமலிங்க சௌடேஸ்வரி அம்மன் கோயிலுக்குப் போயிட்டு பஸ்ஸைப் பிடிக்கிறதுக்காக ஒப்பணக்கார வீதியை க்ராஸ் பண்ணும்போது, நீ இதே காரை ரோட்டோரமா நிறுத்திட்டுக் கீழே இறங்கி யார்கூடவோ பேசிட்டு இருந்தே... உன்னைப் பார்த்ததுமே ஒரு நிமிஷம் ஆடிப்போயிட்டேன். என்னிக்கோ வீட்டைவிட்டு ஓடிப் போன என்னோட அக்காவே நேர்ல வர்றமாதிரி இருந்தது. நீ பாங்குக்குப் போய், யாருக்கோ அழைப்பிதழ் கொடுத்துட்டு வந்து கார்ல ஏறினே... நீ யாரு, எங்கேயிருக்கேன்னு தெரிஞ்சுக்கிறதுக்காக ஒரு ஆட்டோவைப் பிடிச்சு, உன்னோட காரை ஃபாலோ பண்ணி வீட்டைக் கண்டுபிடிச்சேன்..."

"நீ சொல்றது எதுவுமே நம்பற மாதிரி இல்லையே...?"

"நம்ப வைக்கிறேன்! என்னை உங்கப்பாகிட்ட கூட்டிட்டுப் போ..."

"வேண்டாம்... அப்பா, ஒரு பிளட் பிரஷர் பேஷண்ட்..."

"சரி! உங்கம்மாகிட்டயாவது கூட்டிட்டுப் போ..."

"ஐயோ, வேண்டாம்... அம்மா ஒரு சென்சிட்டிவ் டைப்..."

கோகிலம் தன் கட்டுவிரலை உயர்த்தினாள். "இதோ பார்... இந்த சால்ஜாப்பெல்லாம் என்கிட்ட வேண்டாம். எனக்கு உண்மை தெரிஞ்சாகணும். இருபத்திரண்டு வருஷத்துக்கு முன்னாடி, என்னோட அக்கா அம்சவேணி வீட்டை விட்டு ஓடும்போது ரெண்டு மாசக் கர்ப்பிணி! அவளோட கர்ப்பத்துக்கு யார் காரணம்னு தெரியாம, அப்ப உயிரோடு இருந்த என்னோட அம்மாவும்

அப்பாவும் திணறிட்டிருந்தாங்க! இப்ப, எங்க அக்கா அம்சவேணியையே உரிச்சுட்டு வந்தமாதிரி, என் முன்னாடி இந்த நிமிஷம் நீ நின்னுட்டிருக்கே! ஜெயப்பிரகாசம் உனக்கு அப்பாவாக இருக்கலாம். ஆனா, நீ அம்மான்னு நினைச்சுட்டிருக்கிற யசோதா... நிச்சயமாக உனக்கு அம்மாவாக இருக்க முடியாது!''

விபாவின் மனசுக்குள் ஒரு எரிமலை வெடித்தது.

கோகிலம் தொடர்ந்தான். ''என்னோட அக்கா அம்சவேணி, இப்போ உயிரோடு இருக்காளா, இல்லையாங்கிற உண்மை உன்னோட அப்பாவுக்கு மட்டும்தான் தெரியும். அதை அவர்கிட்டயிருந்து நானே கேட்டுத் தெரிஞ்சுக்கவா... இல்லே...?''

விபா படபடப்பாகக் குறுக்கிட்டாள். ''நீ எங்கப்பாவைச் சந்திக்க வேண்டாம். நானே அவர்கிட்ட பேசிட்டு உன்னைச் சந்திக்கிறேன். உன்னோட வீடு எங்கே?''

''பாப்பநாயக்கன்பாளையத்துல பெருமாள் கோவில் ரோடு... நீ உங்கப்பாகிட்ட பேசி விஷயத்தைத் தெரிஞ்சுக்கிட்டதும் இந்த டெலிபோன் நம்பருக்கு போன் பண்ணி விவரம் சொன்னா போதும்...''

''எனக்கு அடுத்த வாரம் கல்யாணம் முடிஞ்ச பின்னாடி, சாவகாசமா அப்பாகிட்ட இதைப் பத்திப் பேசி...''

''நோ! இன்னிக்கு ராத்திரியே உங்கப்பாகிட்ட இதைப் பத்திப் பேசணும். நாளைக்குக் காலையில பத்து மணிக்குள்ள எனக்குப் பதில் வரணும். அப்படிப் பதில் வரலைன்னா, நான் நேரா போலீஸ் ஸ்டேஷனுக்குப் போகவேண்டியிருக்கும். என் அக்காவோட போட்டோவை இணைச்சு, ஒரு கம்ப்ளெயிண்ட் லெட்டரை ஸ்டேஷன்ல கொடுத்தா போதும்... போலீஸ் உங்க வீட்டுக்கு வந்து விசாரணையை எப்படி நடத்தணுமோ, அப்படி நடத்தி உண்மையை வெளியே கொண்டு வந்துடுவாங்க...''

''வேண்டாம்... நான் இன்னிக்கு ராத்திரியே



அப்பாகிட்ட இதைப்பத்திப் பேசறேன்!''

''நாளை காலையில சரியா பத்து மணிவரை பார்ப்பேன். உன்கிட்டேர்ந்து போன் வரலைன்னா போலீஸ் ஸ்டேஷனுக்குப் போயிடுவேன்...''

கோகிலம் காரின் கதவைத் திறந்து கொண்டு கீழே இறங்கினான். டிரைவிங் ஸீட் பக்கம் வந்து விபாவிடம் குனிந்தான்.

''கேட்க மறந்துட்டேன்... உன்னைக் கல்யாணம் பண்ணிக்கப் போற மாப்பிள்ளைக்கு இதே ஊரா...?''

''ஆ... மா...''

''பேர் என்ன...?''

''வசந்தகீதன்...''

''பேர் நல்லாயிருக்கு... மாப்பிள்ளைக்கு என்ன வேலை...?''

''ஒரு ஃபாரின் கொலாப்ரேஷன் கம்பெனியில டெபுடி ஜெனரல் மேனேஜரா இருக்கார்!''

''செமத்தியான வரன்தான்! இதோபார் விபா... வர்ற வாரம் உன் கழுத்துல தாலி ஏறணும்னா, நான் என்னோட அக்கா அம்சவேணியைப் பார்த்தாகணும்...''

ஆட்காட்டி விரலைக் காட்டி எச்சரித்த கோகிலம், மெள்ள நடந்து இருட்டில் கரைந்து மறைந்தான்.

காரை நகர்த்தத் தோன்றாமல் அப்படியே சில நிமிடங்கள்வரை உறைந்து போய் உட்கார்ந்திருந்த விபா, பின்னர் உணர்வுக்கு வந்தவளாக காரை உயிர்ப்பித்துக் கொண்டு பங்களாவுக்கே போனாள்.

போர்டிகோவில் போலீஸ் ஜீப் ஒன்று நின்றிருந்தது. விபா காரை மௌனமாக்கிவிட்டு உள்ளே போனாள். ஹால் சோபாவில் ஜெயப்பிரகாசம், இன்ஸ்பெக்டர் ஒருவரோடு உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தார். நடைச் சத்தம் கேட்டுத் திரும்பியவர், விபாவைப் பார்த்ததும் புருவங்களுக்கு மத்தியில் இருந்த இடைவெளியைச் சுருக்கினார்.

''என்னம்மா... அதுக்குள்ளே காந்திபுரம் போயிட்டு வந்துட்டியா...?''

''இல்லேப்பா... நான் போகலை. தண்டுமாரியம்மன் கோயில்ல ஏதோ விசேஷம். எகப்பட்ட டிராஃபிக் ஜாம். ஒரு பத்து நிமிஷம் நின்னு பார்த்தேன். டிராஃபிக் ஜாம் சரியாகிற மாதிரி தெரியலை. திரும்பி வந்துட்டேன்...''

''சரி, நாளைக்குப் போயிக்கலாம். நீ இப்படி வந்து உட்காரும்மா...''

விபா எதிர் சோபாவுக்குப் போய்ச் சாய, ஜெயப்பிரகாசம் சொன்னார். ''விபா, இவர் இன்ஸ்பெக்டர் பாலமுரளி! நம்ம கான்வென்ட்ல இன்னிக்கு சாயந்திரம் சாய்பிரசாத்ங்கிற ஒரு அஞ்சு வயசுப் பையன் காணாமப் போனது சம்பந்தமா விசாரிக்க வந்திருக்கார்...''

மன உளைச்சலில் இருந்த விபா, இன்ஸ்பெக்டர் பாலமுரளியை எரிச்சலாகப் பார்த்தாள்.

''பையன் காணாமப் போனதுக்கு நாங்க என்ன சார் பண்ண முடியும்...! அது பெத்தவங்களோட பொறுப்பு... நீங்க இங்க வந்து விசாரிக்கறது தேவையில்லாதது...''

பாலமுரளி புன்னகைத்தார், ''ஸாரி, மிஸ் விபா... அது உங்க கான்வென்ட்ல நடக்கிற ரெண்டாவது சம்பவம். மூணு மாசத்துக்கு முன்னாடி கமலக்கண்ணன்னு ஒரு பையன் அதேமாதிரி காணாமப் போயிட்டான். நாலு நாளைக்கப்புறம் பாரதி பூங்கா பக்கம் ஒரு புதருக்குள்ளே புத்தி பேதலிச்ச நிலைமையில கிடைச்சான். போலீஸ் எவ்வளவோ முயற்சிகளை எடுத்தும் அந்தச் சம்பவத்துக்குக் காரணமான நபரை இதுவரைக்கும் கண்டு பிடிக்க முடியலை. இப்போ, மறுபடியும் அதே மாதிரி ஒரு சம்பவம்... ரெண்டு பையன்களும் உங்க கான்வென்ட்டிலிருந்தே காணாமப் போயிருக்கிறதால, கான்வென்ட்டை நிர்வாகம் பண்ற உங்க அப்பாகிட்ட விசாரணை பண்ண வேண்டிய கட்டாயம்...''

ஜெயப்பிரகாசம் இடைமறித்துச் சொன்னார்: ''இன்ஸ்பெக்டர், இன்னிக்கு சிட்டியில இருக்கிற



கல்வி நிறுவனங்களில் எங்க குரூப்புக்குப் பொதுமக்கள் மத்தியில் நல்ல பேர் இருக்கு. இதைக் கெடுக்கிறதுக்காக யாரோ பண்ணிட்டிருக்கிற சில்மிஷ வேலை இது...''

''நீங்க சந்தேகப்படற நபர்கள் யார் யார்ங்கிறதை ஒரு லிஸ்ட் பண்ணிக் கொடுக்க முடியுமா?''

''வெரி ஸாரி இன்ஸ்பெக்டர்! என்னோடு பழகிட்டு இருக்கிறவங்களைச் சந்தேக லிஸ்ட்டுக்குக் கொண்டுவர நான் தயாராக இல்லை. நீங்க, உங்க இன்வெஸ்டிகேஷனை எந்தக் கோணத்துல வேணும்னாலும் நகர்த்துங்க... குற்றவாளியைக் கண்டுபிடிங்க... நான் யாரையும் கட்டிக்காட்ட விரும்பலை...''

இன்ஸ்பெக்டர் பாலமுரளி தோள்களைக் குலுக்கியபடி எழுந்தார்.

''இட்ஸ் ஓகே மிஸ்டர் ஜெயப்பிரகாசம்! காணாமப் போன பையனைக் கண்டு பிடிக்கிறதுக்காக ஒரு தனி போலீஸ் ஸ்குவாட் சிட்டி முழுக்க ஜுர வேகத்துல செயல்பட்டுக்கிட்டு இருக்காங்க. அவங்ககிட்டேயிருந்து இந்த ராத்திரிக்குள்ளே ஒரு பாஸிட்டிவ் தகவலை எதிர்பார்த்துட்டிருக்கோம். ஒருவேளை, தகவல் எதுவும் வரலைன்னா... நாளைக்குக் காலையில மறுபடியும் உங்களை வந்து பார்க்க வேண்டியிருக்கும்...'' - பாலமுரளி கட்டளையிட்ட மாதிரியான தொனியில் சொல்லிவிட்டு, போர்டிகோவை நோக்கி நடக்க ஆரம்பித்துவிட... ஜெயப்பிரகாசம் நெற்றியைப் பிடித்துக் கொண்டார்.

''இது ஒரு வேண்டாத தலைவலி... நாளைக்கு இந்த இன்ஸ்பெக்டர் என்னைப் பார்க்க வந்தா, நான் வெளியூர் போயிட்டதா சொல்லிடம்மா...''

விபா தன் தலையைத் திருப்பிப் பார்வையை ஜெயப்பிரகாசத்தின் பார்வையோடு மோதவிட்டாள்.

''அப்பா...''

''என்னம்மா...?''

''அம்மா எங்கே...?''

''தலை வலிக்குதுனு ஒரு மாத்திரையைப் போட்டுட்டு, மாடி ரூமுக்குத் தூங்கப் போயிட்டா...''


விபா தயக்கமாகத் தலையை உயர்த்தி, மாடியைப் பார்க்க... ஜெயப்பிரகாசம் அவள் தோள்மேல் கையை வைத்தார்.

''எம்மா ஒரு மாதிரி இருக்கே...?''

''அப்பா...!''

''ம்...''

''அம்சவேணியைப் பத்திக் கொஞ்சம் பேசலாமா...?''



**சைலன்சர் பொருத்தப்பட்ட 66 மி.மீட்டர் ராக்கெட் லாஞ்சர். இதன் மதிப்பு இந்திய ரூபாயில் ஏறக்குறைய ரூ.6,137.85 (83 பவுண்)**

# 3

'அம்சவேணியைப்பத்தி கொஞ்சம் பேசலாமா...?' என்று தலையைக் குனிந்து கொண்டே கேட்ட விபாவை வியப்பாகப் பார்த்தார் ஜெயப்பிரகாசம்.

''நீ என்னம்மா சொல்றே...? யார் அந்த அம்சவேணி...?''

விபா நிமிர்ந்து அப்பாவின் கண்களில் பொய் தெரிகிறதா என்று படித்துப் பார்த்தாள்.

கண்டுபிடிக்க முடியவில்லை!

அவருடைய கண்களில் அதிர்ச்சி ஒட்டியிருக்க, நெற்றிப்பரப்பு நிறைய சுருக்கங்களுக்கு



உட்பட்டிருந்தது. மறுபடியும் திணறலான குரலில் கேட்டார்.

''யாரம்மா அந்த அம்சவேணி...?''

''நிஜமா அந்த பேர்ல உங்களுக்கு யாரையும் தெரியாதாப்பா?''

''தெரியாது...''

''உங்க ஃப்ளாஷ்பேக்கை இருபது வருஷங்களுக்கு முன்னாடி கொண்டுபோய் கொஞ்சம் யோசிச்சுப் பாருங்க...''

''என்னம்மா நீ... ஃப்ளாஷ்பேக், அது இதுன்னு சொல்லிக்கிட்டு...? அம்சவேணிங்கிற பேர்ல எனக்கு யாரையாவது தெரிஞ்சிருந்தா தெரியும்னு சொல்றதுக்கு எனக்கு என்ன பயமா...?''

''சரி... இந்தப் போட்டோவைக் கொஞ்சம் பாருங்கப்பா...'' விபா தன் கையில் மறைத்து வைத்திருந்த போட்டோவை ஜெயப்பிரகாசத்திடம் நீட்ட, அவர் வாங்கிப் பார்த்துவிட்டு இடது கை ஆட்காட்டி விரலால் தன் நெற்றியைச் சொறிந்தார்.

''உன்னோட போட்டோவா இது... இவ்வளவு பழசாயிருக்கு?''

''போட்டோவில் இருக்கிறது நான் இல்லேப்பா.''

''பின்னே...?''

''அம்சவேணி! அதாவது, நீங்க தெரியாதுன்னு சொன்ன அம்சவேணி. இருபத்திரண்டு வருஷத்துக்கு முன்னாடி எடுத்த போட்டோ இது.''

ஜெயப்பிரகாசம் ஆச்சரிய அலைகளில் சிக்கி சுவாசிக்க திணறிக்கொண்டிருக்க... விபா அவரைப் பார்வையால் துளைத்தபடி கேட்டாள்.

''இப்பவாவது ஞாபகம் வருதாப்பா...?''

''இல்லேம்மா... இது யார்னு எனக்குத் தெரியலை.''

''அப்பா... நான் ஒரு கேள்வி கேட்டா நீங்க தப்பா நினைச்சுக்கமாட்டீங்களே...?''

''எ... எ... என்னம்மா கேட்கப் போறே...?''

''நான் உங்க ஜாடையும் இல்லை யாது... அம்மாவோட

ஜாடையும் கிடையாது. உண்மையிலேயே நான் உங்களுக்குப் பிறந்தவன் தானா...?''

விபாவையே வெறித்துப் பார்த்தார் ஜெயப்பிரகாசம்.

''யாரோ ஏதோ ஒரு போட்டோவைக் கொடுத்து உன்னோட மனசை பாய்ஸன் பண்ணியிருக்காங்க. உனக்கு அடுத்த வாரம் கல்யாணம். மாப்பிள்ளை பெரிய இடம். கல்யாணத்தை நடக்கவிடாம பண்றதுக்காக யாரோ நம்ம குடும்பத்து சந்தோஷத்துக்கு எதிரா காய்களை மூவ் பண்ண ஆரம்பிச்சிருக்காங்க. நம்ம கான்வென்ட்ல படிக்கிற ஒரு பையன் இன்னிக்கு சாயந்தரம் திடீர்னு காணாமப் போயிருக்கான். போலீஸ் வந்து விசாரணை பண்ணிட்டு போயிருக்காங்க. அந்த டென்ஷன்ல சிக்கித் திணறிகிட்டு இருக்கும்போதே இந்த அம்சவேணி போட்டோ. இதை எல்லாம் நாம இக்னோர் பண்ணிட்டு...''

''ஸாரிப்பா... விஷயங்கள் நமக்குப் பாதகமாயிருக்குங்கிறதுக்காக அதை இக்னோர் பண்றது சரியில்லை. அதை மீட் பண்ணணும். இந்த போட்டோ தபாலில் ஒரு மொட்டைக் கடிதத்தோடு இணைக்கப்பட்டு வந்திருந்தா நீங்க சொன்ன மாதிரி இக்னோர் பண்ணிட்டு போயிருக்கலாம். ஆனா, இது என்னிடம் நேர்ல கொடுக்கப்பட்ட போட்டோ.''

''போட்டோவைக் கொடுத்தது யாரு...?''

''பேர் கோகிலம். அம்சவேணியோட சிஸ்டர். போன் நம்பரும் அவ வீட்டு அட்ரஸும் கொடுத்திட்டுப் போயிருக்கா.''

ஜெயப்பிரகாசம் பதட்டப்பட்டார்.

''பேர் என்னம்மா சொன்னே?''

''கோகிலம்...''

''போன் நம்பர் சொல்லு... இப்பவே நான் அவளை காண்டாக்ட் பண்ணி...'' டீபாயின் மேலிருந்த செல்போனை எடுக்க முயல, விபா தடுத்தாள்.

''அப்பா... அவசரப்படாதீங்க. எமோஷனலா பேசித் தீர்க்க வேண்டிய விஷயம் கிடையாது. மொதல்ல நம்ம



ஸைடில் ஏதாவது தப்பு இருக்கான்னு யோசிக்கப் பார்க்கணும்... நம்ம பக்கம் தப்பு இல்லைன்னு தீர்மானமா தெரிஞ்ச பின்னாடிதான் வாயைத் திறக்கணும்... அந்த கோகிலம் டெலிபோன் நம்பரையும் வீட்டு அட்ரஸையும் கொடுத்து நாளைக்குக் காலை பத்து மணி வரைக்கும் அவகாசமும் கொடுத்திருக்கா. உங்ககிட்ட பேசிட்டு நாளைக்குக் காலையில அவளை காண்டாக்ட் பண்றதா சொல்லியிருக்கேன்.''

''இதோ பார் விபா... என்கிட்ட எந்தத் தப்பும் கிடையாது. எனக்கு அம்சவேணியையும் தெரியாது... கோகிலத்தையும் தெரியாது. உங்கம்மாவை நான் கல்யாணம் பண்ணிக்கிறதுக்கு முன்னாடியும் சரி, கல்யாணம் பண்ணிக்கிட்ட பின்னாடியும் சரி... வேற எந்தப் பொண்ணையும் நினைச்சுப் பார்த்தது கூட கிடையாது.''

பின் பக்கம், அந்தக் குரல் கேட்டது.

''உங்க பொண்ணு உங்களை நம்ப மாட்டாங்க. ஆனா, நான் நம்பறேன்.''

விபாவும் ஜெயப்பிரகாசமும் சட்டென்று வியர்த்த முகங்களோடு திரும்ப... யசோதா மாடிப்படிகளின் இருட்டுப் பகுதியிலிருந்து மெல்ல வெளிப்பட்டாள்.

''அம்மா...!''

''என்னடி... உன் பிறப்பு மேல உனக்கே சந்தேகம் வந்து அப்பாவைக் கூண்டுல ஏத்தாத குறையா விசாரணை பண்ணிட்டிருக்கே போலிருக்கு...?''

''அம்மா... அது... வந்து...''

''நான் எல்லாத்தையும் அப்படி ஓரமா நின்னு கேட்டுக்கிட்டுத்தான் இருந்தேன். உன்னைப் பத்து மாசம் சுமந்து இடுப்பு நோக பெத்துப் போட்டவ நான். எவளோ வந்து ஒரு போட்டோவைக் காட்டி இவதான் உன்னோட அம்மான்னு சொன்னா, அதை அப்படியே நம்பிட்டு வந்து கதாகாலட்சேபமா பண்ணிட்டு இருக்கே...? உங்கப்பாவைப்பத்தி எனக்குத் தெரியும்டி. மத்த பெண்களைப் பார்க்கும்போது தப்பு பண்ணாத கண்கள்

அவருக்கு... அவரோட மனசு வெள்ளைபேப்பர்மாதிரி. நீ சொல்ற மாதிரியான கரும்புள்ளிகள் அந்த பேப்பர்ல இல்லை...''

''அம்மா, நான் என்ன சொல்ல வர்றேன்னா...''

''நீ ஒண்ணையும் சொல்லாதே...! எங்கே, அந்த போட்டோவைக் கொடு...''

விபா தயக்கமாக அந்தப் போட்டோவை நீட்ட யசோதா அதை வாங்கி ஒரு விநாடி பார்த்துவிட்டு அடுத்த விநாடியே அதை இரண்டாக... நான்காக... எட்டாகக் கிழித்து 'வேஸ்ட் பின்'னில் தூக்கிப் போட்டாள்.

''அ... அம்மா...!''

''நாளைக்குக் காலையில பத்து மணிக்கு நீயும் நானும் அந்த கோவிலத்துகிட்டே போறோம்.''

''வேண்டாம்மா...''

''என்னடி வேண்டாம்! ஒரு போட்டோவைக் காட்டி நம்ம குடும்பத்து மேல சேற்றை வாரி இறைச்சுட்டுப் போயிருக்கா... அவளைச் சும்மா விடலாமா...?''

யசோதா பெரிய குரல் எடுத்து கத்திக் கொண்டிருக்கும்போதே -

ஹாலின் மூலையில் இருந்த டெலிபோன் 'விருட் விருட்'டென்று துடித்துக் கூப்பிட்டது.

ஜெயப்பிரகாசம் எழுந்து போய் ரிஸீவரை எடுத்து காதோடு உரசவிட்டார்.

''ஹலோ...''

''மிஸ்டர் ஜெயப்பிரகாசம்?'' - ஒரு ஆண் குரல் கேட்டது.

''யெஸ்... ஹோல்டிங்.''

''ஜேஸ்மின் கான்வென்ட் உங்களோடது தானே?''

''ஆமா...''

''இன்னிக்கு சாயந்தரம் அந்த கான்வென்ட்ல படிக்கிற ஒரு அஞ்சு வயசு பையன் காணாமப் போயிட்டான் இல்லையா...?''

''ஆமா...''



''அந்தப் பையன் பேரு சாய்பிரசாத்?''

''ஆமா...! நீங்க யாரு...?''

''அசரீரி...''

''அசரீரியா...?''

''ம்... நாளைக்கு நடக்கப் போறதை இன்னிக்கே சொல்லப் போறேனே''

ஜெயப்பிரகாசம் வியர்த்தார்.

''எ... என்ன சொல்லப்போறே...?''

''இன்னிக்கு சாய்பிரசாத் காணாமப் போன மாதிரியே நாளைக்கும் ஒரு பையன் காணாமப் போகப் போறான்.''

ஜெயப்பிரகாசத்தின் இதய மையத்தில் ஆணி ஒன்று அடித்த நெருசில் வலி ஜனித்துக் கொண்டிருக்கும்போதே மறுமுனையில் ரிஸீவர் பெரிய சத்தத்தோடு வைக்கப்பட்டது.

''ஷ்யாம்...!''

''ம்...''

''பாதி பீர் அப்படியே இருக்கு...''

''போதும்...''

''என்னது...? போதுமா...? சரியாப் போச்சு...! ரெண்டாவது பீருக்கு நான் ஆர்டர் பண்ணியாச்சு...''

''எல்லாத்தையும் நீயே குடிச்சுக்க சிவா...! நான் கிளம்பறேன்...'' சொல்லிக் கொண்டே எழ முயன்ற ஷ்யாமின் தோள் மேல் கையை வைத்தான் அந்த சிவா.

''இன்னிக்கு உனக்கு என்னடா ஆச்சு...? இந்த டல்லடிக்கிறே...?''

''வீட்ல கொஞ்சம் வேலையிருக்கு. போய்ப் பார்க்கணும். நாளைக்கு மீட் பண்ணலாம். நீ இருந்து சாப்பிட்டு பில்லை செட்டில் பண்ணிட்டு வா...''

''பணம்...?''

இரண்டு ஐந்நூறு ரூபாய் நோட்டுக்களை தன் சஃபாரி பாக்கெட்டிலிருந்து உருவி சிவாவை நோக்கி வீசிய ஷ்யாம் அந்த அரையிருட்டான ரெஸ்டாரண்டிலிருந்து வெளிப்பட்டு கார் பார்க்கிங்கில் நின்றிருந்த தன்

சாண்ட்ரோவுக்கு வந்தான். சாப்பிட்ட பீர் கறுகறுவென்று நரம்பு மண்டலத்தைக் கடித்துக் கொண்டிருக்க, காரின் லாக்கை விடுவித்து டிரைவிங் இருக்கைக்கு சாய்ந்தான். டேஷ்போர்டு ஓரமாக இடம் பிடித்திருந்த எலெக்ட்ரானிக் க்ளாக் ரத்தச் சிவப்பு டிஜிடல்களில் நேரம் பத்தரையைக் காட்டிக் கொண்டிருந்தது.

காருக்கு அருகே குனிந்து சல்யூட் வைத்த செண்ட்ரிக்கு ஐம்பது ரூபாய் நோட்டொன்றை சுண்டி விட்டு, குபீரென்று காரைக் கிளப்பிக் கொண்டு அகலமான அந்த ஹைவேஸ் ரோட்டுக்கு வந்தான்.

லாரிகள் இரண்டு திசைகளிலும் ரோட்டை அரைத்துக் கொண்டிருக்க, ஷ்யாம் சாண்ட்ரோவை எண்பதில் கையாண்டான்.

'கோவை 15 கி.மீ.' - மஞ்சள் பெயிண்ட்டின் பின்புலத்தில் கறுப்பு எழுத்துக்களைக் காட்டிய நெடுஞ்சாலைத் துறையின் போர்டு ஒரு மைக்ரோ விநாடியில் கடந்து போயிற்று. ரோட்டோர புளிய மரங்கள் ஹெட் லைட்டுகளின் உபயத்தால் அவசர அவசரமாக ஒரு வெளிச்சக் குளியல் போட்டுவிட்டு மறுபடியும் இருட்டுக்குள் காணாமல் போயின.

ஷ்யாம் வெறித்த பார்வையோடு காரை விரட்டிக் கொண்டிருக்க, சஃபாரியின் பைக்குள் கங்காரு குட்டியாய் எட்டிப் பார்த்துக் கொண்டிருந்த செல்போன் முனகி முனகி கூப்பிட்டது.

காரின் வேகத்தை சற்றே குறைத்து செல்போனை எடுத்து இடது காதுக்குக் கொடுத்தான்.

''யெஸ்...''

''ஷ்யாம் - நான் ஸ்வரூபா...''

ஒரு பெண்ணின் குரல் ஐஸ்க்ரீமாய் ரிஸீவரில் வழிந்தது.

''சொல்லு...''

''என்ன சொல்ல...? இப்ப மணி பத்தரை...''

''அதுக்கென்ன...?''

''என் வீட்டுக்கு வர்றதா சொன்னீங்களே...?''



''எப்ப சொன்னேன்...?''

''ரெண்டு நாளைக்கு முந்தி ராத்திரி நேரு ஸ்டேடியத்துக்கு கீழே இருட்டில் காரை நிறுத்திட்டு என் மடியில் தலை வெச்சு படுத்துட்டு இருந்தப்ப...''

''ஸாரி... மறந்துட்டேன்.''

''இட்ஸ் ஓகே! இப்ப வாங்க... வெயிட் பண்றேன்...''

''மறுபடியும் ஸாரி ஸ்வரூபா...! ரெண்டு நாளைக்கு நான் கொஞ்சம் பிஸி.''

''வேற எங்கேயாவது ஃபிக்ஸ் ஆயிட்டீங்களா?''

''சேச்சே! நீயிருக்கும்போது இன்னொருத்தியா? 'கனியிருப்ப காய் கவர்ந்தற்று'ன்னு வள்ளுவரே சொல்லியிருக்கார்...''

''நம்பறேன்...! எப்ப வர்றீங்க...?''

''போன் பண்ணிட்டு வர்றேன்...'' செல்போனை அணைத்த ஷ்யாம், அது மறுபடியும் வாயைத் திறக்காமல் இருப்பதற்காக ஊமையாக்கிவிட்டு காரின் வேகத்தை அதிகப்படுத்தினான்.

பத்தே நிமிஷம்!

கோவை நகரம் சோடியம் வேப்பர் விளக்குகளோடு வந்தது. போக்குவரத்து அறவே இல்லாத சாலைகளில் விரைந்த சாண்ட்ரோ அந்த எக்ஸ்டென்ஷன் ஏரியாவுக்குள் நுழைந்ததும் வேகத்தைக் குறைத்துக் கொண்டு ஊர்ந்தது.

பங்களாக்கள் தள்ளி தள்ளி உட்கார்ந்து இருட்டில் தூங்கிக் கொண்டிருந்தன. அடித்த காற்றில் குளிர் ஊசி முனைகளாக மாறியிருக்க, கிழக்கு திசையில் உதயமாகி இருந்த நசுங்கிய நிலவு மேகத்தின் பிடியில் சிக்கி அழகாயிருந்தது.

ஷ்யாம் நிசலமாகியிருந்த அந்த சரளைக்கல் சாலையில் காரை கவனமாக ஓட்டி மரங்கள் சூழ்ந்த ஒரு பங்களாவுக்கு முன்பாக காரைக் கொண்டு போய் நிறுத்தி சின்னதாக ஹாரன் கொடுக்க, இருட்டுக்குள் இருந்து அந்த கறுப்பு நாய் 'திமு திமு'வென்று ஓடி வந்தது. நான்கடி உயரத்தில் ஒரு கன்றுக்குட்டி சைஸுக்கு

வளர்ந்திருந்த அந்த நாய் காம்பௌண்ட் கேட்டைப் பற்றிக் கொண்டு எட்டிப் பார்த்தது...

ஷ்யாம் குரல் கொடுத்தான்.

''சீஸர்... ஓப்பன் த கேட்...''

சீஸர் உடனே செயல்பட்டு, கேட்டின் தாதாங்கியை வாயால் விடுவித்து, கேட்டின் இரண்டு பக்கத்தையும் திறந்து வைத்தது.

கார் உள்ளே நுழைந்து, இருட்டான போர்டிகோவுக்குள் போய் நிற்பதற்குள் சீஸர் கேட்டைச் சாத்திவிட்டு மூச்சிரைக்க ஓடி வந்து நின்றது.

ஷ்யாம் இறங்கி, சீஸரைத் தட்டிக் கொடுத்துவிட்டுப் படியேறிக் கதவுக்கு முன்பாக வந்து நின்று, தொங்கிக் கொண்டு இருந்த பூட்டுக்கு விடுதலை கொடுத்தான்.

''சீஸர், கோ அண்ட் வாட்ச்...''

சீஸர், போர்டிகோவின் இருட்டுக்குள் ஓடிப்போய்விட ஷ்யாம் வீட்டுக்குள் நுழைந்து கதவைச் சாத்தித் தாழிட்டுக் கொண்டான்.

ஹால் ஜீரோ வாட்ஸ் வெளிச்சத்தில் இருந்தது. அரையிருட்டில் மெதுவாக நடந்து, ஹாலைக் கடந்து பக்கவாட்டு அறைக்கதவைத் திறந்தான்.

டைனிங் அறை அது. நாற்பது வாட்ஸ் விளக்கு வெளிச்சத்தில், கிரானைட் கல்லாலான டைனிங் டேபிள் தெரிய, டேபிளின் மேல் வகை வகையான உணவு அயிட்டங்கள்... சில்லி சிக்கன், நூடுல்ஸ், ஃப்ரைட் ரைஸ் காற்றில் மணத்தது. சாக்லேட்டுகள் மேஜை பூராவும் இறைந்து கிடக்க... கிளாஸ் பிளாஸ்க்கில் உருகாத ஐஸ்க்ரீம்கள்.

டைனிங் டேபிளுக்குப் பக்கத்தில் ஒரு நாற்காலி போடப்பட்டிருக்க... அதில் அந்த சிறுவன் மலங்க மலங்க விழித்தபடி உட்கார்ந்திருந்தான். கைகளும் கால்களும் நைலான் கயிற்றால் நாற்காலியோடு சேர்த்துக் கட்டப்பட்டிருக்க, வாயில் ஒரு பெரிய பிளாஸ்டர் ஒட்டப்பட்டிருந்தது.

ஷ்யாம் ஒரு நாற்காலியை இழுத்துப் போட்டுக்



கொண்டு பக்கத்தில் உட்கார்ந்தான். உதட்டில் ஒரு குரூரப் புன்னகை கேட்காமல் வந்து உட்கார்ந்து கொண்டது. கரகரத்த குரலில் கூப்பிட்டான்.

''சாய்பிரசாத்!''

சிறுவன், தன் பெரிய விழிகளில் மிரண்டான். தொண்டைக்குழி துடித்தது.

ஷ்யாம் தன் இடதுகையின் ஆட்காட்டி விரலால் சிறுவனின் மோவாயை நிமிர்த்தினான்.

''என்ன சாய்பிரசாத்... நீ பசிக்குதுனு சொன்னே... உனக்காக இவ்வளவு அயிட்டம் வாங்கிட்டு வந்து, ஆசையோடு பரிமாறிட்டுப் போனேன். நீ என்னடான்னா ஒண்ணைக் கூடத் தொட்டுப் பார்க்கலை போலிருக்கே! இது உனக்கே நியாயமா, சொல்லு...?''

சிறுவனின் கண்களில் நீர் பளபளத்துத் திரண்டு கன்னங்களில் வழிய, ஷ்யாம் தன் வலது கை ஆட்காட்டி விரலால் அந்தக் கண்ணீரைத் தொட்டு, நாக்கில் வைத்துச் சுவை பார்த்தான். கண்மூடிச் சொன்னான்.

''ஃபென்டாஸ்டிக்!''

## 4

இடது கைவிரல்களால் சிறுவன் சாய்பிரசாத்தின் தலைகேசத்தை அளைந்து கொண்டே ரகசியம் பேசுகிற மாதிரி கேட்டான் ஷ்யாம். ''உனக்கு சாக்லெட்டும் ஐஸ்க்ரீமும் ரொம்பவும் பிடிக்கும் போலிருக்கே?''

சிறுவனின் பெரிய விழிகளில் புதிதாக நீர் நிரம்பி இரண்டு ஜிகினாத்துணுக்குகள் மாதிரி பளபளத்தது. பயத்தில் தலை மேலும் கீழும் அசைய, தொண்டைக்குழியிலிருந்து ''ம்...'' என்ற முக்கல் வெளிப்பட்டது.

''சாக்லெட், ஐஸ்க்ரீம் நிறைய சாப்பிடுவியா?''

''ம்...''

''அதான் உன்னோட கண்ணீர் இவ்வளவு ஸ்வீட்டாயிருக்கு'' - சொல்லிச் சிரித்த ஷ்யாம், சிறுவனின் வாயில் ஒட்டப்பட்டு இருந்த பிளாஸ்டரை

மெள்ளப் பிரித்தான். பிளாஸ்டரை எடுத்ததுமே சாய்பிரசாத் வீறிட்டு அழ ஆரம்பிக்க, பாம்பு சீறுகிற மாதிரி ''உஷ்'' என்றான் ஷ்யாம்.

பாதி திறந்த வாயில் அழுகை அப்படியே நின்றது. ''இதோ பார் சாய்... சத்தம் போட்டு அழுதா இந்த அங்கிளுக்குப் பிடிக்காது. மறுபடியும் வாயை ஒட்டிரட்டுமா?''

''வே... வே... வேண்டாம்...''

''இனிமே சத்தம் போட்டு அழமாட்டியே?''

''ஊஹூம்...''

''குட் பாய்...''

சாய்பிரசாத் பொங்கிவந்த அழுகையை மென்று விழுங்கிவிட்டு சிரித்தபடியே ஷ்யாமை ஏறிட்டான்.

''அ... அங்கிள்...''

''என்னடா ராஜா...?''

''எ... எ... எனக்கு... எனக்கு...''

''உனக்கு...''

''ப... பசிக்குது.''

ஷ்யாம் சிரித்தான். ''பசிக்குதா...? பசிச்சா சாப்பிட வேண்டியதுதானே ராஜா...! டேபிள் மேல் எத்தினி அயிட்டம் பார்த்தியா...? சில்லி சிக்கன், நூடுல்ஸ், ஃப்ரைட்ரைஸ், ஐஸ்க்ரீம்... ம்... சாப்பிடு.''

''எப்படிச் சாப்பிடறது அங்கிள்...?''

''ஏண்டா ராஜா..?''

''என் ரெண்டு கையையும் கட்டிப் போட்டிருக்கீங்களே...''

''கட்டிப் போட்டு இருந்தா என்ன... சாப்பிட முடியாதா?''

''எ... எ... எப்படிச் சாப்பிடறது?'' - சாய்பிரசாத் அழுகை வெடிக்கும் குரலில் கேட்க, ஷ்யாம் சிரித்தான்.

''எப்படிச் சாப்பிடறதுன்னு இப்ப காட்றேன் பார்...'' சொன்ன ஷ்யாம் எழுந்து பங்களாவின் முன் பக்கம் போய் வாசல் கதவைத் திறந்து குரல் கொடுத்தான்.

''சீஸர்...''



காம்பௌண்ட் கேட்டுக்குப் பக்கத்தில் சென்ட்ரி வேலை பார்த்துக் கொண்டு இருந்த சீஸர், இருட்டில் தலைதெறிக்க ஓடிவந்து ஷ்யாமுக்கு முன்பாக மண்டி போட்டு உட்கார்ந்தது.

''சீஸர்! உள்ளே போ...''

உள்ளே வந்தது.

''கமான்... போய் சாப்பிடு...''

தோரணையோடு ஹாலுக்குள் நடை போட்ட சீஸர், டைனிங் ரூமுக்குள் நுழைந்து டேபிளின் மேல் சத்தமில்லாமல் தாவி உட்கார்ந்தது. உமிழ்நீர் கொட்டும் நாக்கைத் தொங்கவிட்டபடி ஷ்யாமைப் பார்க்க... அவன் மார்புக்கு குறுக்கே கையைக் கட்டிக் கொண்டு ''சீஸர்! ஹெல்ப் யுவர் டின்னர்...'' என்றான்.

சீஸர் சில்லி சிக்கனில் வாய் வைத்தது. இரண்டே நிமிடத்தில் அதை முடித்துவிட்டு ஃப்ரைட் ரைஸையும் நூடுல்ஸையும் விழுங்கியது.

ஷ்யாம், சாய்பிரசாத்துக்குப் பக்கத்தில் வந்து நின்றான். ''கையைக் கட்டிப்போட்டிருந்தா எப்படிச் சாப்பிடறதுன்னு கேட்டியே ராஜா...! சீஸரைப் பார்த்தியா?''

சாய்பிரசாத்தின் கண்களில் பசிக்களைப்பு கனமாகத் தெரிய, நாய் சாப்பிடுவதை இமைக்காமல் பார்த்தான்.

ஷ்யாம் கேட்டான்.

''என்ன ராஜா... பசிக்குதா...?''

''ம்...''

''ரொம்ப பசிக்குதா...?''

''ம்...''

''சீஸர் ஏதாவது மிச்சம் வெச்சா அது கண்டிப்பா உனக்குத்தான். உன்னோட அதிர்ஷ்டம் எப்படியிருக்குன்னு பார்க்கலாம்...''

வயிற்றில் இன்னும் பசியோடும் மனசுக்குள் நொண்டியடிக்கும் பயத்தோடும் சாய்பிரசாத், சீஸரையே பார்த்துக் கொண்டிருக்க... அது எல்லாவற்றையும் 'ஸ்வாகம்' செய்துவிட்டு டேபிளிலிருந்து கீழே குதித்தது.

அடுத்த கட்டளைக்காக ஷ்யாமை அண்ணாந்து பார்த்தது.

''கோ... அண்ட் வாட்ச்...''

சீஸர் அதை ராணுவக் கட்டளையாகப் பாவித்து, விருட்டென்று வெளியே ஓடிவிட, சாய்பிரசாத்தின் கன்னத்தைச் செல்லமாகத் தட்டினான் ஷ்யாம்.

''உனக்கு அதிர்ஷ்டம் இல்லடா ராஜா.''

சாய்பிரசாத் கண்களில் சட்டென்று நீர் திரண்டு உருண்டது. ''அங்கிள்... எனக்கு ரொம்ப பசிக்குது.''

''கொஞ்சம் தண்ணி சாப்பிடறியா?'' - ஷ்யாம் ஒரு டம்ளரில் சிறிது தண்ணீரை வார்த்து சாய்பிரசாத்தின் வாயருகே கொண்டுபோன விநாடி -

வெளியே -

சீஸர் குரைத்தது.

காது ஜவ்வின் ஓட்டை விழுந்துவிடக்கூடிய அளவுக்கு எக்கச்சக்க டெஸிபல்களை உள்ளடக்கிய மூர்க்கமான குரைப்பு.

ஷ்யாமின் மூளைப் பகுதிக்குள் சைரன் ஒலித்தது. கையில் வைத்திருந்த தண்ணீர் டம்ளரைச் சத்தம் இல்லாமல் மேஜை மேல் வைத்துவிட்டு முகம் மாறினான்.

'சீஸர் அப்படிக் குரைத்தால் யாரோ வந்திருக்கிறார்கள் என்று அர்த்தம்.'

ஷ்யாம் கதவை நோக்கி வேகமாகப் போனான். சீஸர் பயங்கரமாக குரைத்துக் கொண்டிருக்க... பாதி திறந்திருந்த கதவின் வழியாக மெள்ள எட்டிப் பார்த்தான்.

காம்பௌண்ட் கேட்டுக்கு வெளியே கொட்டியிருந்த இருட்டில் யாரோ நிழலுருவமாக தெரிந்தார்கள்.

ஷ்யாமின் உடம்பிலிருந்த அத்தனை மில்லியன் செல்களும் போர்க்கவசம் பூண்டன.

'யாரது...?'

'போய்ப் பார்க்கலாமா...?'

'வேண்டாமா...?'



ஷ்யாம் யோசித்துக் கொண்டிருக்கும்போதே கேட்டுக்கு வெளியே நின்றிருந்த அந்த உருவம் குரல் கொடுத்தது.

''ஷ்யாம்...''

பெண் குரல்.

ஷ்யாம் பெரிதாக திடுக்கிட்டான். 'இந்த நேரத்தில் இங்கே ஒரு பெண்...'

'யாராக இருக்கும்...?'

மறுபடியும் அந்தப் பெண்ணின் குரல் கேட்டது.

''ஷ்யாம்... கொஞ்சம் வெளியே வா...''

ஷ்யாம் குரலை உயர்த்தினான்.

''யாரது...?''

''வந்து பார்த்தாத்தானே தெரியும்...?''

ஷ்யாம் வெளிப்பட்டு காம்பௌண்ட் கேட்டை நோக்கிப் போக... சீஸர் குரைப்பதை தற்காலிகமாக நிறுத்திக் கொண்டது.

காம்பௌண்ட் கேட்டின் இரும்புக் கம்பிகளை இரண்டு கைகளாலும் பற்றிக் கொண்டு நின்றிருந்த அந்தப் பெண்ணுக்கு இருபத்தைந்து வயது இருக்கலாம். கறுப்பு நிறம். அவ்வளவு அழகாக இல்லை. சல்வார் கம்மீஸுக்குள் நுழைந்திருந்த அவள் அந்த இரவு நேரத்திலும் மெலிதான குளிர் கண்ணாடி போட்டிருந்தாள். வாய் தீவிரமாக எதையோ மென்று கொண்டிருந்தது. ஷ்யாம் தன் மூளையை உசுப்பி 'இவளை எங்கே பார்த்திருக்கிறோம்' என்று கேட்க, அது தீர்மானமாக 'இல்லை' என்றது.

அந்தப் பெண்ணுக்குப் பக்கத்தில் போய் நின்றான் ஷ்யாம். பார்வையால் துளைத்துக் கொண்டே கேட்டான்.

''யார் நீ...?''

''பிரம்மபுத்திரி...''

''பிரம்மபுத்திரியா...?''

''அது என் பேர்... சொந்த ஊர் யாழ்ப்பாணம்.''

''சரி... என்ன விஷயம்...?''

''சிம்பிளா ஒரு கேள்வியைக் கேட்டுட்டு போலாம்னு

வந்தேன்..."

"என்ன கேட்கப்போறே?"

"ஒன்னுமில்ல ஷ்யாம்... சாய்பிரசாத்ங்கிற ஒரு பையனைக் கடத்திக்கிட்டு வந்தியே... அவன் உயிரோடு இருக்கானா, இல்லை கொன்னுட்டியா...?"

ஷ்யாமின் இதயத்தை யாரோ கொக்கி போட்டு 'விருட்'டென்று இழுத்தமாதிரியான உணர்வு.

"எ... எ... என்ன கேட்டே...?"

"சாய்பிரசாத் இன்னும் உயிரோடு இருக்கானா... இல்லை, கொன்னுட்டியான்னு கேட்டேன்..."

"நீ... நீ... என்ன சொல்றேன்னு எனக்குப் புரியலை, சாய்பிரசாத்தா... யாரது...?"

"இதோ பார் ஷ்யாம்... உன்னோட முகத்துல இருக்கிற அப்பாவி முகமூடியைக் கழட்டிட்டு ஒரிஜினல் முகத்தைக் காட்டு. விஷயத்தைப் பேசி முடிக்க அது சுலபமா இருக்கும்."

ஷ்யாம் திகைத்துப்போய் பிரம்மபுத்திரியையே பார்த்துக் கொண்டிருக்க, அவள் புன்னகையோடு தொடர்ந்தாள்.

"என்ன பொய் சொல்லலாம்னு யோசிக்காதே ஷ்யாம். எனக்கு எல்லா விஷயமும் தெரியும். இன்னிக்கு சாயந்தரம் நாலு மணிக்கு நீ ஜெஸ்மின் கான்வென்ட்டுக்கு வந்தே. காரை கொஞ்சம் தள்ளி நிறுத்திக்கிட்டு ரெண்டு சிகரெட் பிடிச்சே, மூணாவது சிகரெட் பிடிக்கும்போது உன் காருக்குப் பக்கமா ஒரு பையன் வந்தான். நீ பேச்சு கொடுத்தே. பக்கத்துல கூப்பிட்டே. பையன் பக்கத்துல வந்ததும் முகத்தை கர்ச்சீப்பால் பொத்தி காருக்குள்ளே ஒரு மைக்ரோ செகண்ட் நேரத்துக்குள்ளே இழுத்துப் போட்டே. அப்புறம் ஒன்னும் தெரியாத மாதிரி காருக்கு வெளியே அஞ்சு நிமிஷம் நின்னு பராக்கு பார்த்தே. அந்த நேரத்துலதான் வாணி வந்தா. 'நீங்க ஷ்யாம் தானே'ன்னு கேட்டா... நீ முழிச்சே... அதுக்கப்புறம் அடையாளம் தெரிஞ்சுகிட்டு நீ பேசினே. நீங்க ரெண்டு பேரும்



பேசிக்கிட்டு இருக்கும்போதே பையனைக் காணோம்னு அவனோட அம்மா ஓடிவந்தா. அதுக்கப்புறம்..."

பேசிக்கொண்டே போன பிரம்மபுத்திரியைக் கையமர்த்தினான் ஷ்யாம்.

"உனக்கு எல்லாம் தெரிஞ்சிருக்கு. உள்ளே வா... பேசிக்கலாம்..."

"உன்னை மாதிரியான ஒரு ஆளை நம்பி உள்ளே வர எனக்குப் பைத்தியமா பிடிச்சிருக்கு...? இப்படியே நின்னுகிட்டு பேசவேண்டியதைப் பேசிடலாம்."

ஷ்யாம் அவளையே பார்த்தான்.

"என்ன யோசிக்கிறே ஷ்யாம்... எல்லாம் ஒரு முன்னெச்சரிக்கை தான். இன்னொரு விஷயத்தையும் இப்பவே சொல்லிடறேன்... கொஞ்சம் தலையை நீட்டி அந்த தெருமுனையைப் பாரு..."

"எதுக்கு...?"

"பாரு... சொல்றேன்."

ஷ்யாம் வேண்டாவெறுப்பாக தலையை நீட்டி தெரு முனையை எட்டிப் பார்த்தான்.

நூறு மீட்டர் தொலைவில் கார்ப்பரேஷனின் மெர்க்குரி வெளிச்சத்துக்கு கீழே ஒருவன் பைக்கில் உட்கார்ந்திருப்பது தெரிந்தது.

"யா... யார் அவன்...?"

"என்னோட ஹஸ்பெண்ட் ரத்னாகரன். உன்னால எனக்கு ஏதாவது ஆபத்து ஏற்பட்டா, அவர் உடனே போலீஸுக்கு தகவல் சொல்லிடுவார்..."

ஷ்யாமின் முகம் அந்த குளிரிலும் வியர்த்து எண்ணெய் பூசிக் கொண்ட மாதிரி மினுமினுத்தது.

"சரி... உனக்கு இப்போ என்ன வேணும்?"

"இதோ பார் ஷ்யாம்... உனக்கும் எங்களுக்கும் நடக்கப்போற இந்த பேரத்தில் எந்த ஒளிவு மறைவும் வேண்டாம். நாங்க யாருங்கிறதை உங்கிட்ட சொல்லிடறேன்... நானும் சரி, என்னோட கணவரும் சரி... இலங்கை மற்றும் தமிழ்நாட்டு போலீஸாரால் தேடப்பட்டு வர்ற ஒரு தீவிரவாத அமைப்பைச்

சேர்ந்தவங்க... செட்டி அவுட்டர்ல ஒரு வீடு எடுத்து தங்கியிருக்கோம். இந்த கோயம்புத்தூர்ல ஒரு ஆறு மாச காலம் தங்கி சில நிழல் காரியங்கள் பண்ண வேண்டியிருக்கு. எங்க செலவுக்கு வேண்டிய பணம் மாசா மாசம் தலைமையகத்திலிருந்து வந்துட்டிருந்தது. ஆனா, கடந்த ரெண்டு மாசமா பணம் வரலை. போலீஸ்ல எல்லாரும் மாட்டிக்கிட்டதா தகவல் மட்டும் வந்தது. அடுத்த வேளை சாப்பாட்டுக்கே இனி பணம் இல்லை என்கிற நிலை வந்தபோது தான் ஒரு பையனைக்கடத்திப் பணம்பறிக்க திட்டம் போட்டு சாயந்திரம் ஜேஸ்மின் கான்வென்ட் பக்கம் நானும் என்னோட கணவரும் வந்தோம். நாங்க எதைப் பண்ண நினைச்சு அங்கே வந்தோமோ.அதை நீயே..."

"போதும்...! உனக்கு இப்போ பணம் வேணும்... அவ்வளவுதானே...?"

"ஆமா...!"

"எவ்வளவு...?"

"ரெண்டு லட்சம்..."

ஷ்யாம் மௌனித்தான்.

"என்ன... பேச்சையே காணோம்...?"

"இப்ப என்கிட்ட அவ்வளவு பணம் கிடையாது..."

"எப்ப தரமுடியும்...?"

"நாளைக்கு இதே நேரம்..."

"கண்டிப்பா கிடைக்குமா?"

"கிடைக்கும்..."

"எங்களை ஏமாத்த நினைச்சா இந்த வீட்டுக்கு போலீஸ் ஜீப் வர்றதை உன்னால தவிர்க்க முடியாது."

"தெரியும்..."

"நீயும் சரி, நாங்களும் சரி... போலீஸுக்கு வேண்டாதவங்க... நம்ம பேரம் உண்மையாக நடக்காதபட்சத்தில் போலீஸுக்குத்தான் லாபம்..."

"அதுவும் எனக்குத் தெரியும்! நீ கேட்ட பணம் நாளைக்கு இந்நேரம் ரெடியாயிருக்கும்."

"பணத்தை வாங்கின கையோடு உன்னை நாங்க



மறந்துடுவோம் ஷ்யாம். நீ சாய்பிரசாத்தை எதுக்காக கடத்திக்கிட்டு வந்திருக்கே... நீ என்ன பண்ணப்போறே - இதெல்லாம் எங்களுக்குத் தேவையில்லாத விஷயங்கள். நாங்க அதைக் கண்டுக்கவும் மாட்டோம். பணம் கொடுத்து உதவி பண்ற உன்னைக் காட்டிக் கொடுக்கவும் மாட்டோம்... வரட்டுமா...? நீ போய், உன்னோட வேலையைப் பார்க்கலாம்..."

சொல்லிவிட்டு அவள் இருட்டில் கரைந்து தெரு முனையில் நின்றிருந்த பைக்கை நோக்கி நடக்க ஆரம்பித்துவிட, ஷ்யாம் ஒரு நிமிஷம் வரைக்கும் அங்கேயே நின்று வெறித்துப் பார்த்துவிட்டு பங்களாவுக்குள் கோபமாகப் போனான். அவனுடைய கோபத்தை உணர்ந்துகொண்ட சிலர் பம்மி பின்வாங்கியது.

ஷ்யாம் கதவை அறைந்து சாத்தித் தாழிட்டுவிட்டு டைனிங் ரூமுக்குள் நுழைந்தான்.

மனசு பூராவும் பிரம்மபுத்திரி ஒரு பெரிய நெருப்பு ஜ்வாலை மாதிரி எரிந்தான். பொறியில் மாட்டிக் கொண்ட எலியாக அறைக்குள் கோபமாக நடைபோட்ட ஷ்யாம், பின் மூச்சிரைக்க நின்று சுவர் அலமாரியைத் திறந்தான்.

உள்ளே ஸ்காட்ச் பாட்டில்கள் விதவிதமான சைஸ்களில் தெரிய, ஒன்றை எடுத்துக் கொண்டு டேபிளுக்கு வந்தான்.

சாய்பிரசாத் பசி மயக்கத்தால் கிறங்கிப்போய் ஒரு பக்கமாக தலை துவண்டிருந்தான்.

ஷ்யாம் அவனைப் பார்த்துக் கொண்டே ஸ்காட்ச் பாட்டிலின் தலையைத் திருகி கிங்சைஸ் கண்ணாடி டம்ளரில் ஒரு பெண் சிரிக்கிற மாதிரியான தொனியில் ஊற்றினான். பாதி டம்ளர் நிரம்பியதும் பாட்டிலைத் தள்ளி வைத்துவிட்டு எழுந்தான்.

பக்கத்து அறைக்குப் போய்விட்டு திரும்பியபோது அவன் கையில் ரத்தத்தை உறிஞ்சி எடுக்கும் சிரிஞ்ச் இருந்தது.

சாய்பிரசாத்தை நெருங்கி உட்கார்ந்து, அவன் கன்னத்தை மெள்ளத் தட்டினான் ஷ்யாம்.

"தூங்கறியா ராஜா...?"

சாய்பிரசாத் சட்டென்று விழித்துக் கொண்டு சோர்ந்த கண்களால் ஷ்யாமைப் பார்த்து வறண்ட உதடுகளை அசைத்தான்.

"அ... அ... அங்கிள்..."

"ம்..."

"த... தண்ணி..."

"தண்ணிதானே... தர்றேன்...! மொதல்ல அங்கிளுக்கு ஸ்காட்ச்சோடு கலந்து சாப்பிட அது வேணும். ஒரு பத்து சொட்டு எடுத்துக்கிறேன்.

ஷ்யாம் குரூர சிரிப்பொன்றை உதிர்த்துக் கொண்டே தன் கையில் வைத்திருந்த சிரிஞ்ச் ஊசியை சாய்பிரசாத்தின் இடது கை மணிக்கட்டு அருகே குத்தி அழுத்த சிரிஞ்சின் கண்ணாடி உடம்புக்குள் ரத்தம் ஸ்லோமோஷனில் நிரம்ப ஆரம்பித்தது.



**எஸ்.ஏ 80 ஏர்கன்.**

**இதன் மதிப்பு இந்திய ரூபாயில் ஏறக்குறைய ரூ.5,916.00 (79.95 பவுண்)**

# 5

சிரிஞ்சின் கண்ணாடி உடம்புக்குள் ரத்தம் நிரம்பியதும் ஊசியை உருவிக் கொண்டு, "தேங்க்யூ ராஜா..." என்று சொல்லி, கோணல் சிரிப்பொன்றை உதிர்த்தான் ஷ்யாம்.



"அ... அங்கிள்..."

"ம்..."

"த... த... தண்ணி."

"தண்ணிதானே... தர்றேன் ராஜா...! ஒரு டம்ளருக்கு ரெண்டு டம்ளரா தர்றேன்..." என்று சொன்ன ஷ்யாம், டைனிங் டேபிளின் மேல் இரண்டு கண்ணாடி டம்ளர்களை வைத்துத் தண்ணீரை வழிய வழிய ஊற்றி விட்டுக் கண்ணைச் சிமிட்டினான்.

"ஒரு டம்ளர்ல சிறுவாணி வாட்டர்... இன்னொரு டம்ளர்ல மினரல் வாட்டர். உனக்கு எது பிடிக்குமோ அதை எடுத்துக்கோ..."

கட்டிப் போடப்பட்டிருந்த கைகளைப் பார்த்தான் சாய்பிரசாத். கண்களில் நீர்முட்டிக் கொண்டு பளபளத்தது.

ஷ்யாம் சிரித்தான்.

"அடடே! கைகளைக் கட்டிப் போட்டிருக்கேனா...? ஸாரி ராஜா..." - கொஞ்சலாகச் சொல்லிக் கொண்டே, இரண்டு டம்ளர்களையும் கைக்கு ஒன்றாக எடுத்துக் கொண்டான் ஷ்யாம்.

"நான் ஊத்தறேன்... நீ குடி ராஜா!"

சாய்பிரசாத் தண்ணீருக்காகப் பரக்கப் பரக்க வாயைத் திறக்க, ஷ்யாம் இரண்டு டம்ளர் தண்ணீரையும் சாய்பிரசாத்தின் வாயில் ஊற்றினான்.

பிறகு மேஜைமேல் கிடந்த அந்த பிளாஸ்டரை எடுத்து சாய்பிரசாத்தின் வாயில் வைத்து மூர்க்கமாக ஒட்டினான். "இனி, உனக்குத் தண்ணி நாளைக்குத்தான்... இனி, நாளைக்குக் காலையில டிபன் சாப்பிடறப்பதான் வாயைத் திறக்கணும் - கண்ணை மூடிக்கிட்டுத் தூங்கு" - சாய்பிரசாத்தின் கன்னத்தை ஷ்யாம் தட்டிக் கொடுத்துவிட்டு, சிரிஞ்ச் ரத்தத்தோடு விஸ்கி டம்ளருக்கு வந்தவனின் முகம் சட்டென்று மாறியது.

பங்களா வாசலில் ஏதோ ஒரு வாகனம் வந்து நிற்க... ஸீஸர் குரைத்தது.

விஸ்கி டம்ளரைச் சத்தமில்லாமல் வைத்த ஷ்யாம், வேகநடையில் ஹாலைக் கடந்து முன்பக்க அறைக்கு வந்து, அங்கிருந்த ஜன்னல் வழியாக எட்டிப் பார்த்தான்.

காம்பௌண்ட் கேட்டுக்கு வெளியே - மண்டையில் சுழலும் சிவப்பு விளக்கோடு போலீஸ் ஜீப் ஒன்று நின்றிருக்க, ஒரு இன்ஸ்பெக்டரும் கான்ஸ்டபிள்களும் இறங்கி நின்றிருந்தார்கள்.

ஷேலர் எம்பி எம்பிக் குரைத்துக் கொண்டிருந்தது.

ஷ்யாம் உறைந்து, மெள்ளப் பின் வாங்கினான்.

'போலீஸுக்கு எப்படி...?'

'அந்த பிரம்மபுத்திரி போலீஸுக்குத் தகவல் கொடுத்திருக்கலாம்!'

ஷ்யாம் யோசித்துக் கொண்டிருக்கும்போதே, வெளியே கான்ஸ்டபிளின் குரல் கேட்டது.

''சார், இந்த வீட்ல என்கொயரி பண்ணிப் பார்க்கலாம்...''

''எனக்கென்னவோ இந்த ஏரியாவுக்கு அவங்க வந்திருக்கமாட்டாங்கனு தோணுது...''

''எதுக்கும் கேட்டுப் பார்த்துடலாம் சார்...''

''சரி, நீ போய்க் கேட்டுட்டு வா... நான் வயர்லஸ்ல ஏதாவது மெஸேஜ் வருதானு பார்த்துக்கிட்டிருக்கேன். இந்த க்யூ பிராஞ்ச்காரங்க எதையாவது சொல்லிட்டுப் போயிடுவாங்க. இப்படி இருட்டுலயும் வெளிசிலேயும் லோல் படறது நாமதான்...''

இன்ஸ்பெக்டருக்கும் கான்ஸ்டபிளுக்கும் நடந்து கொண்டிருந்த சம்பாஷணை, ஷ்யாமின் காதுக்குள் ஸ்பஷ்டமாக விழ... அவன் வியர்ப்பதை நிறுத்தினான்.

'ஏதோ என்கொயரிக்கு வந்திருக்கிறார்கள்...'

கான்ஸ்டபிளின் குரல் கேட்டது.

''சார்... சார்...''

ஷேலரின் குரைப்புச் சத்தம் அதிகமாயிற்று.

''இப்படியொரு நாய் இருக்கும்போது, எவன் உள்ளே நுழைய முடியும்...? அது மேல விழுந்து புடுங்கினா, நம்ம எடையில ஒரு கிலோ குறைஞ்சுடும் போயிருக்கு



சார்...'' - இன்ஸ்பெக்டரிடம் சொன்னார் கான்ஸ்டபிள்.

ஷ்யாம் போர்டிகோ விளக்கைப் போட்டுவிட்டு, கதவைத் திறந்து கொண்டு வெளியே வந்தான்.

''அதோ... சாரே வந்துட்டார்!''

மூர்க்கமாகக் குரைத்துக் கொண்டிருந்த நாயை, ஷ்யாம் அதட்டினான்.

ஷேலர் வாயைச் சாத்திக் கொண்டு, போர்டிகோவின் ஓரமாகப் போய் படுத்துக் கொண்டது.

ஷ்யாம் காம்பௌண்ட் கேட்டுக்குப் பக்கத்தில் வர, கான்ஸ்டபிள் கிரில் கம்பிகளுக்கு இடையே குனிந்து பார்த்து ''தொந்தரவுக்கு மன்னிக்கணும் சார்... ஒரு சின்ன என்கொய்ரி...'' என்றார்.

''என்ன சொல்லுங்க...''

''இந்த போட்டோவக் கொஞ்சம் பாருங்க ஸார்...''

கான்ஸ்டபிள் நீட்டிய போட்டோவை வாங்கிப் பார்த்தான் ஷ்யாம்.

பிரம்மபுத்திரியும் ஒரு இளைஞனும் கசங்கிய அந்த போட்டோவில் சிரித்துக் கொண்டிருந்தார்கள்.

கான்ஸ்டபிள் சொன்னார்: ''சார், இவங்க ரெண்டு பேரும் ஸ்ரீலங்காவிலிருந்து வந்திருக்கிற தீவிரவாதிகள். கணவன் - மனைவி மாதிரி, தமிழ்நாட்டுல சுத்திச் சுத்தி வந்துக்கிட்டிருக்காங்க. கொஞ்ச நேரத்துக்கு முந்தி இந்த ஏரியாவுல அவங்க நடமாட்டம் தென்பட்டதா க்யூ பிராஞ்ச் போலீஸ் எங்களுக்குத் தகவல் கொடுத்தாங்க. அதைச் சரிபார்க்கத்தான், இந்த ஏரியாவுல இருக்கிறவங்க கிட்ட விசாரணை பண்றோம். போட்டோவில் இருக்கிற இந்த நபர்களை நீங்க பார்த்தீங்களா...?''

ஷ்யாம் மறுபடியும் போட்டோவைப் பார்த்துவிட்டுத் தலையாட்டினான்.

''இல்லையே!''

''சார், இந்த போட்டோவை நல்லாப் பார்த்து, ரெண்டு பேரோட முகங்களையும் ஞாபகம் வெச்சுக்குங்க... அவங்களைப் பார்க்க நேர்ந்தா, ஹண்ட்ரட்டுக்கு

உடனடியா போன் பண்ணுங்க...''

போட்டோவை மறுபடியும் தீர்க்கமாக பார்த்துவிட்டுத் திருப்பிக் கொடுத்தான் ஷ்யாம். கான்ஸ்டபிள் நகர்ந்து போய், இன்ஸ்பெக்டரோடு ஏதோ பேச ஆரம்பித்துவிட... ஷ்யாம் உள்ளே வந்தான். விளக்கை அணைத்துவிட்டுக் கதவைச் சாத்திய விநாடி, உள்ளே டெலிபோன் கூப்பிட்டுக் கொண்டிருந்தது. வேக நடையில் போய் எடுத்தான்.

''ஹலோ...''

''ஷ்யாம்! நான் பங்கஜாட்சன்...''

''ஆபீஸ் விஷயமா டெல்லி போயிருக்கிறதா உன் வீட்ல சொன்னாங்க. டெல்லியிலிருந்து எப்ப வந்தே?''

''சாயந்திரம்...''

''சாயந்திரம் வந்துட்டு இப்பத்தான் உனக்கு போன் பண்ண முடிஞ்சதா...?''

''ஸாரிடா...! வீட்ல ஒரே கெஸ்ட் மயம். இப்பக்கூட உனக்கு போன் பண்ணியிருக்க மாட்டேன். ஆனா நான் பார்த்த ஒரு விஷயத்தை உன்கிட்டே சொல்லியாகணுமே... அதுக்காகத்தான் போன் பண்ணினேன்.''

''என்ன விஷயம் சொல்லு.''

''விபா வீட்ல ஏதோ பிரச்னை போலிருக்கு... போலீஸ் வந்துட்டுப் போனாங்க...''

மறுநாள் காலை ஒன்பது மணி.

ஹால் சோபாக்களில் கவலையிலும் பயத்திலும் இறுகிப் போன முகங்களோடு ஜெயப்பிரகாசமும் யசோதாவும் உட்கார்ந்திருக்க, விபா தன் அறையிலிருந்து வெளிப்பட்டு மாடிப்படி இறங்கி வந்தாள். ராத்திரி அவள் சரியாகத் தூங்கவில்லை என்பதை சிவப்பு வரிகளோடிய கண்கள் ஸ்கேன் மாதிரி காட்டிக் கொடுத்தது.

''போலாமாப்பா...?''

தலையைக் குனிந்து ஏதோ யோசனையில் இருந்த



ஜெயப்பிரகாசம் நிமிர்ந்து விபாவை ஏறிட்டார்.

''அந்த கோகிலத்தோட வீடு எங்கேயிருக்குன்னு சொன்னேம்மா...?''

''பாப்பநாயக்கன்பாளையம் பெருமாள் கோயில் ரோட்ல.''

''போன் நம்பர் கொடுத்து இருக்காளா?''

''ஆமாம்ப்பா.''

''நாம அவளைப் பார்க்க வந்துட்டிருக்கோம்னு போன் பண்ணிச் சொல்லிடு...''

''போன் வேண்டாம்ப்பா...! அவளைப் பார்க்கத்தான் போயிட்டிருக்கோமே... அநாவசியத்துக்கு அவளை பெரிய மனுஷியாக்கக் கூடாது...''

''உங்கம்மா அந்த இடத்துக்கு வரணுமா...?''

''கண்டிப்பா அம்மா அங்கே வரணும். நாம கேட்க முடியாத கேள்வியெல்லாம் அம்மாவால கேட்க முடியும். ம்... புறப்படுங்கப்பா...''

''என்னங்க... இனியும் அவளைச் சும்மா விடக்கூடாது. கிளம்புங்க...''

யசோதா வேகவேகமாக நடைபோட்டு போர்டிகோவில் நின்றிருந்த காண்டஸாவை நோக்கிப் போக... விபாவும் ஜெயப்பிரகாசமும் அதே வேகத்தோடு பின் தொடர்ந்தார்கள்.

விபா டிரைவிங் ஸீட்டுக்குப் போய்ச் சாய, அவர்கள் பின் ஸீட்டில் புதைந்து கொண்டார்கள்.

காண்டஸா கனைத்துவிட்டு கோபமாக நகர்ந்து வேகம் பிடித்து காம்பௌண்ட் கேட்டை நோக்கிச் சீறியது. ஐம்பதடி பாய்ந்த கார் சட்டென்று வேகம் குறைந்து நின்றது.

ஜெயப்பிரகாசம் கேட்டார்.

''என்னம்மா... ஏன் காரை நிறுத்திட்டே...?''

''அ... அப்பா... அ... அவங்க கார் வருது...'' விபாவின் குரலில் வெட்கமும் கலந்து வரவே ஜெயப்பிரகாசம் காரின் முன்புற கண்ணாடி வழியே குனிந்து பார்த்து முகம் மாறினார்.

''யசோதா... மாப்பிள்ளை வீட்டுக்காரங்க வர்றாங்க...''

யசோதாவும் கலவரமானாள்.

''என்னங்க இது நிஜமா வர்றாங்க! அந்தக் கோகிலம் ஏதாவது போன் பண்ணி சொல்லியிருப்பாளா...?''

''அப்பா...! மாப்பிள்ளையே காரை ஓட்டிக்கிட்டு வர்றாரு...''

## 6

போலீஸ் ஜீப் ஒன்று வீட்டுக்குள் நுழைந்தது. அதைப் பார்த்ததுமே விபாவின் முகத்தில் சொற்பமாக இடம் பிடித்து இருந்த அற்ப சந்தோஷமும் சட்டென்று காணாமல் போயிற்று.

ஷ்யாம் போலீஸ் ஜீப்பையே பார்த்துக் கொண்டிருக்க... அவனுடைய அண்ணி சந்திரா கேட்டாள்.

''என்ன விபா! வீட்டுக்கு போலீஸ் ஜீப் வருது...?''

''அது... வந்து... வந்து...'' - விபா பதில் சொல்ல லேசாகத் திணறிக் கொண்டிருக்கும்போதே... போலீஸ் ஜீப், எய்த அம்பு மாதிரி போர்டிகோவில் வந்து புதைந்து நின்றது. இன்ஸ்பெக்டர் பாலமுரளி எட்டிப் பார்த்து விபாவிடம் கேட்டார்.

''அப்பா... வீட்ல இருக்காரா...?''

''ம்... இருக்கார்...''

பாலமுரளி ஜீப்பினின்றும் இறங்கி, போர்டிகோ படிகள் ஏறிக்கொண்டிருக்க... சந்திரா, விபாவின் முகத்தைப் பார்த்துவிட்டு மறுபடியும் கேட்டாள்...

''என்ன விபா... ஏதாவது பிரச்னையா...?''

''பி... பிரச்னையெல்லாம் ஒண்ணும் இல்லை. நாங்க நடத்தற கான்வென்ட்டுல ஒரு பையன் காணாமப் போயிட்டான். அது சம்பந்தமான என்கொயரிக்கு இன்ஸ்பெக்டர் வந்திருக்கார்...''

ஷ்யாம் தன் முகத்தில் எந்தவிதமான உணர்ச்சியையும் காட்டிக் கொள்ளாமல் கேட்டான்.



''கான்வென்ட்ல பையன் காணாமப் போனா, இங்கே எதுக்காக போலீஸ் வரணும்...?''

''இப்படிப் பையன் காணாமப் போறது, எங்க கான்வென்ட்டைப் பொறுத்தவரைக்கும் ரெண்டாவது சம்பவம். இதுக்கு முந்தி கமலக்கண்ணன்னு ஒரு பையன் காணாமப் போய், நாலஞ்சு நாள் கழிச்சுப் புத்தி பேதலிச்ச நிலையில் கிடைச்சான். இப்போ காணாமப் போயிருக்கிற பையனுக்கும் அந்த நிலைமை ஏற்பட்டுவிடக் கூடாதேங்கிறதுக்காக போலீஸ் மும்முரமா இயங்கிட்டிருக்காங்க. நேத்தும் வந்து அப்பாகிட்டே விசாரிச்சுட்டுப் போனாங்க. இன்னிக்கும் வந்திருக்காங்க...'' என்றாள் விபா.

ஷ்யாம் கோணல் புன்னகை ஒன்றை உதட்டில் நீந்தவிட்டான்.

''போலீஸ் டிபார்ட்மெண்ட்டே இப்படித்தான்! குற்றவாளி எந்தத் திசையில் இருக்கிறானோ, அந்தத் திசைக்கு நேரெதிர் திசையில்தான் இன்வெஸ்டிகேஷனை ஸ்டார்ட் பண்ணுவாங்க. குற்றவாளியே அவங்க முன்னாடி வந்து நின்னாக்கூடக் கண்டுக்கமாட்டாங்க...''

விபா, தன் கையில் வைத்திருந்த பூப்போட்ட சிறிய வாசனை கர்ச்சீப்பால் நெற்றி வியர்வையை ஒற்றிக் கொண்டே உள்ளே போக... ஷ்யாமும் சந்திராவும் தொடர்ந்தார்கள்.

ஜெயப்பிரகாசம் இன்ஸ்பெக்டர் பாலமுரளியிடம் உஷ்ணமான குரலில் சொல்லிக் கொண்டிருந்தார்.

''ஓக்... மிஸ்டர் இன்ஸ்பெக்டர்! திஸ் இஸ் டூ மச்... ஒரு பையன் காணாமப் போயிட்டான்னா அவனோட பேரண்ட்ஸ் சைடிலிருந்து விசாரணையை ஆரம்பிச்சு, பிரச்னை என்னன்னு பார்க்கணும். அதை விட்டுட்டுத் திரும்பத் திரும்ப என்கிட்டயே வந்து, கேட்ட கேள்விகளையே கேட்டுக்கிட்டு இருக்கிறது கொஞ்சம்கூட சரியில்லை. இன்னும் ஒரு வாரத்துல என் பொண்ணுக்குக் கல்யாணம். கல்யாணத்துக்காக

உறவுக்காரங்க நிறைய பேர் ஊர்லயிருந்து வந்துக்கிட்டிருக்காங்க. எல்லாத்துக்கும் மேலா, நீங்க வந்திருக்கிற இந்த நேரத்துல மாப்பிள்ளை வீட்டுக்காரங்களே இங்க இருக்காங்க. அதோ, மாப்பிள்ளையும் இருக்கார். ஒரு சுபகாரியம் நடக்கப் போகிற நேரத்துல காக்கி யூனிஃபார்ம்கள் அடிக்கடி வந்துட்டுப் போறது நல்லாவா இருக்கும்...?''

இன்ஸ்பெக்டர் பாலமுரளி கையமர்த்தினார்.

''மிஸ்டர் ஜெயப்பிரகாசம்... பையன் சாய்பிரசாத் காணாமப் போயிருக்கிற விஷயத்தை நாங்க சாதாரணமா எடுத்துக்க முடியாது. காரணம், இன்னும் இருபத்துநாலு மணி நேரத்துக்குள்ளே நாங்க பையனைக் கண்டுபிடிக்க பேரண்ட்ஸ்கிட்ட ஒப்படைச்சாகணும்னு கல்வி அமைச்சர்கிட்டேயிருந்து எங்களுக்கு உத்தரவு வந்திருக்கு. என்கொயரி உங்ககிட்ட மட்டும் நடக்கலை... பேரண்ட்ஸ் சைடிலிருந்தும் பண்ணிக்கிட்டிருக்கோம். நேத்து ராத்திரி உங்களுக்கு மிரட்டல் போன் வந்ததா சொன்னீங்க. இன்னிக்கும் ஒரு பையன் உங்க கான்வெண்ட்டில் இருந்து கடத்தப்பட இருக்கிறதா யாரோ போன் பண்ணிச் சொன்னதா எனக்குத் தகவல் கொடுத்தீங்க. நடந்த சம்பவங்களைப் பார்க்கும்போது, உங்கமேல யாருக்கோ என்னவோ ஒரு பெரிய கோபம் இருக்குன்னு தெரியுது. அவங்க யாரா இருக்கும்னு நீங்க கெஸ் பண்ணிச் சொன்னாக்கூடப் போதும்... அந்த நபரை நாங்க கண்டுபிடிக்க மடக்கிடுவோம்...''

இரண்டு கைகளையும் எரிச்சலாக விரித்தார் ஜெயப்பிரகாசம்.

''வெரி ஸாரி இன்ஸ்பெக்டர்... என்னோட ஃப்ரெண்ட்ஸ் சர்க்கிள்ல யாருக்கும் இப்படியொரு மட்டமான கிரிமினல் புத்தி இருக்க நியாயமில்லை. இந்த விஷயத்துல நான் யாரையும் சந்தேகப்பட விரும்பலை...''

''சரி... இன்னிக்கு உங்க கான்வெண்ட்டுக்கு ஏன் லீவ் விட்டீங்க?''



''காரணம், போன் மிரட்டல்! இன்னிக்கும் ஒரு பையன் காணாமப் போயிட்டான்னா மொத்த போலீஸ் டிபார்ட்மெண்ட்டும் இந்த வீட்டு வாசல்லதான் இருக்கும்...''

''ஒரு போன் மிரட்டலை சீரியஸா எடுத்துக்கிட்டு நீங்க கான்வெண்ட்டுக்கு லீவு விட்டது சரியில்லை...''

''இன்ஸ்பெக்டர்! இந்த நிமிஷம் நான் பெரிசா நினைக்கிறது, என்னோட மக கல்யாணத்தைத்தான். அதுக்காக கான்வெண்ட்டை ஒரு வார காலம் மூடி வெச்சாலும் தப்பில்லை...''

ஷ்யாம் கேட்டான்: ''உங்க பேர் பாலமுரளி இல்லையா...?''

''யெஸ்...''

''நீங்க வாணியோட கணவரா...?''

பாலமுரளியின் கண்களில் வியப்பு அலை அடித்தது. ''யெஸ்! வாணி என் மனைவிதான்...! வாணியை உங்களுக்கு எப்படித் தெரியும்...?''

ஷ்யாம் புன்னகைத்தான்.

''நாங்க ரெண்டு பேரும் மரக்கடை கார்ப்பரேஷன் ஸ்கூல்ல ஒண்ணா படிச்சோம். நேத்து சாயந்திரம் ஜெஸ்மின் கான்வெண்ட்டுக்குப் பக்கத்தில் காரை நிறுத்திட்டு ஒரு ஃப்ரெண்டுக்காக வெயிட் பண்ணிட்டு இருந்தபோது, உங்க மனைவி வாணியை நான் பார்த்தேன். உங்க மகனை கான்வெண்ட்டிலிருந்து கூட்டிட்டுப் போறதுக்காக அவங்க வந்திருந்தாங்க. எனக்கு அவங்களை அடையாளம் தெரியலை. பட்... அவங்க என்னை அடையாளம் தெரிஞ்சுக்கிட்டு வந்து பேசினாங்க. பரஸ்பரம் ஒருத்தரைப் பத்தி ஒருத்தர் விசாரிச்சுக்கிட்டபோது தான் தன்னோட கணவர் பாலமுரளி ஒரு போலீஸ் இன்ஸ்பெக்டர்ங்கற விஷயத்தைச் சொன்னாங்க...''

பாலமுரளி கொஞ்சம் உற்சாகமானார். ''யெஸ்... யெஸ்...! வாணியும் உங்களைப் பத்திச் சொன்னா...

நீங்களும் அவளும் பேசிக்கிட்டு இருந்தபோதுதான், சாய்பிரசாத்தோட அம்மா பதட்டமா ஓடி வந்து பையனைக் காணோம்னு சொன்னதாகவும் சொன்னா..."

"ஆமா...! பையனைப் பெத்த அந்த அம்மாவோட அழுகையை என்னால கண்கொண்டு பார்க்க முடியலை. பையன் தானே வீட்டுக்குப் போய் இருப்பான்னு ஆறுதல் சொன்னேன்."

பாலமுரளி யோசனையாகத் தன் வலது நெற்றிப் பொட்டைத் தேய்த்துவிட்டு தலைக்கத் தொப்பியைப் பொருத்திக் கொண்டே எழுந்து ஜீப்பை நோக்கிப் போனார்.

"கல்யாண ஏற்பாடுகளைப் பத்திப் பேசறதுக்காக வந்தீங்க... இன்ஸ்பெக்டர் வந்து மூடைக் கெடுத்துட்டுப் போய்ட்டார். நீங்க தப்பா நினைக்கக்கூடாது..."

"இதுல தப்பா நினைக்க என்ன இருக்கு...? எதிர் பார்க்காம வர்ற பிரச்னைகளுக்கு நாம என்ன பண்ண முடியும்...?"

"விபா... எல்லாருக்கும் காபி கொண்டுவாம்மா!" ஜெயப்பிரகாசம் சொல்ல... யசோதாவுக்குப் பக்கத்தில் உட்கார்ந்திருந்த விபா எழுந்து உள்ளேயிருந்த கிச்சனை நோக்கிப் போனாள். மனசுக்குள் பயமும் குழப்பமும் கூட்டு அமைத்துக் கொண்டு எண்ணங்களை உற்பத்தி செய்தது!

'மணி இப்போதே ஒன்பதரை...!'

'அவர்கள் எப்போது கிளம்புவார்கள் என்று தெரியவில்லை!'

'கோகிலத்தைப் பத்து மணிக்குள் போய்ப் பார்க்க வேண்டும்... இல்லாவிட்டால் அவள் போலீஸ் ஸ்டேஷனுக்குப் போய் விடுவாள்!'

'என்ன செய்யலாம்...?'

'இவர்கள் எப்போது கிளம்புவார்கள்?'

ஹாலில் சிரிப்பும் பேச்சுமாக நேரம் கடந்து கொண்டிருந்தது.



பத்தரை மணிக்கு மேல்தான் கிளம்பிப் போனார்கள்.

காரை ஓட்டிய ஷ்யாம், அண்ணனை ஆபீஸில் இறக்கிவிட்டு அண்ணி சந்திராவை ட்ராப் செய்வதற்காக வீட்டை நோக்கி விரட்டினான். கார் வடகோவை மேம்பாலம் ஏறிக் கொண்டிருந்தபோது சந்திரா கூப்பிட்டாள்.

"ஷ்யாம்..."

"என்ன அண்ணி...?"

"இன்னிக்கு விபாவைக் கவனிச்சியா..? ரொம்பவும் டென்ஷனா இருந்தா இல்லையா...?"

"ஆமா...! காரணம் போலீஸ் வந்ததுன்னு நினைக்கிறேன்."

"நான் அப்படி நினைக்கலை..."

"பின்னே..?"

"வேற ஏதோ காரணம் இருக்கு... விபாவோட அப்பா அம்மாகிட்ட கூட... அந்தப் பழைய சந்தோஷம் மிஸ்ஸிங்..."

"நான் வேணும்னா விபாவுக்கு போன் பண்ணி விஷயம் என்னான்னு கேட்கட்டுமா?"

"இப்பவே வேண்டாம்...! ரெண்டு நாள் கழிச்சு போன் பண்ணிக் கேளு..."

"சரி, அண்ணி..."

பேசிக்கொண்டே வந்ததில் கார் பங்களாவைத் தொட்டிருந்தது. சந்திரா இறங்கிக் கொண்டே கேட்டாள்.

"நீயும் ஆபீஸுக்குத்தானே போறே...?"

"இல்லேண்ணி... நம்ம கெஸ்ட் ஹவுஸுக்கு."

சந்திரா கோபமாக ஷ்யாமைப் பார்த்தாள்.

"வர வர உன் போக்கே சரியில்லை. நினைச்சா கெஸ்ட் ஹவுஸ் போறே...! ராத்திரியில கூட சில நாட்கள்ல தங்கிக்கறே... என்ன விஷயம்...?"

"ஒண்ணுமில்லே அண்ணி! சேகருக்கு கொஞ்ச நாளாவே உடம்பு சரியில்லை. வாட்ச்மேன் வேற வேலையைவிட்டுப் போயிட்டதால..."

''வீணாரை அங்கே எதுக்காக விட்டு வெச்சிருக்கே? நம்ம பங்களாவுக்கே கொண்டாந்துடு...''

''சரி...!''

''கொஞ்ச நாளாகவே நீ சரியில்லை. பார்த்து நடந்துக்கோ... பெரிய இடத்துக்கு மாப்பிள்ளையாகப் போறே.''

''நான் சாதாரணமாகத்தான் இருக்கேன் அண்ணி... நீங்க நினைக்கிற மாதிரியெல்லாம் இல்லை...''

''எப்படியோ... நல்லாயிருந்தா சரி!'' சந்திரா சொல்லிவிட்டு உள்ளே போய்விட, காரை விரட்டினான் ஷ்யாம்.''

சரியாகப் பதினைந்து நிமிடம்.

நிசப்தமாக கெஸ்ட் ஹவுஸ் வந்தது.

காம்பௌண்ட் கேட் அருகே காரைக் கொண்டுவந்து நிறுத்திய விநாடி இதயம் அதிர்ந்தது.

அந்த ஏரியா போஸ்ட்மேன் காதர் கேட்டுக்கு வெளியே நின்று உள்ளே எட்டிப் பார்த்துக் கொண்டிருந்தார். காரைப் பார்த்ததும் பக்கத்தில் வந்தார்.

''குட்மார்னிங் சார்!''

''குட்மார்னிங்...! என்ன காதர்! உள்ளே பார்த்துட்டிருக்கீங்க... எனக்கு ஏதாவது தபால் இருக்கா?''

''இல்ல சார்...'' என்ற காதர் குரலைத் தாழ்த்திக் கொண்டு கேட்டார்.


''சார்... பங்களா பூட்டியிருக்கு. ஆனா, உள்ளேயிருந்து ஏதோ சத்தம் கேட்ட மாதிரி இருந்தது. அதான் நின்னு பார்த்துட்டிருந்தேன். உள்ளார யாராவது இருக்காங்களா சார்?''

ஷ்யாம் உஷாரானான்.

''எ... எ... என்ன சத்தம் கேட்டது...?''

''ஒரு பையன் அழற சத்தம் மாதிரி இருந்தது...'' ஷ்யாமின் பார்வை இப்போது ஒரு கத்திக்குத்து போல் காதர்மேல் விழுந்தது.





**சைலன்சர் பொருத்தப்பட்ட சிறிய ரக கன். இதன் மதிப்பு இந்திய ரூபாயில் ஏறக்குறைய ரூ.27,731.25 (375 பவுண்)**

# 7

ஷ்யாமின் இதயப் பிரதேசத்துக்குள் ஆயிரக்கணக்கான வெளவால்கள் இரைச்சலிட்டுப் பறந்து கொண்டிருக்க, அந்த அவஸ்தையான உணர்வுகளை வெளிக்காட்டிக் கொள்ளாமல் போஸ்ட்மேன் காதரை, ஒரு போலியான திகைப்பு பார்வையோடு கேட்டான்.

''வீட்டுக்குள்ளே இருந்து அழுகைச் சத்தம் கேட்டதா...?''

''ஆமா சார்...''

''பக்கத்தில் இருக்கிற ராவ் பங்களாவிலிருந்து கேட்டிருக்கும்...''

போஸ்ட்மேன் சிரித்தார். ''என்ன சார் இது...? ராவ் பங்களா ஆறு மாசமா பூட்டிக் கிடக்கு. ராவ் வெளி நாட்டுக்குப் போய், அங்கே இருக்கிற தன் மகன் வீட்டிலேயே செட்டிலாயிட்டதாகவும் இந்த பங்களாவை விக்கறதுக்கான முயற்சிகளில் ஈடுபட்டிருக்கிறதாகவும் நீங்க தானே சார் சொன்னீங்க...? குப்பையும் கூளமுமா இருக்கிற அந்த பங்களாவுக்கு உள்ளே, யார் சார் இருக்கப் போறாங்க...? அழுகைச் சத்தம் உங்க பங்களாவுக்குள்ளே இருந்துதான்

வந்தது சார்..."

"ஆச்சரியமாயிருக்கே..."

"ஒரு சின்னப் பையன்... இல்லேன்னா, ஒரு சின்னப் பொண்ணு... அவங்க அழுகைச் சத்தம் மாதிரி இருந்தது சார்..."

"டி.வி-யை ஆஃப் பண்ணாம போயிட்டேனோ என்னவோ...?"

"அப்படியிருக்கவும் வாய்ப்பில்லே சார்..."

"நீ என்ன சொல்றே...?"

"இந்த ஏரியா பூராவும் இன்னிக்குக் காலையிலிருந்தே கரண்ட் கிடையாது சார்... டிரான்ஸ்ஃபார்மர்ல வேலை நடந்துக்கிட்டிருக்கு. சாயந்திரம் அஞ்சு மணிக்குமேல்தான் கரண்ட் வரும் சார்..."

ஷ்யாம் உடம்பின் முக்கியப் பகுதிகள் கலவரப் பிரதேசமாக அறிவிக்கப்பட்டு, ராணுவ வண்டிகள் ஓடின. துளியும் பதட்டம் காட்டாமல் புன்னகைத்தான்.

"நேத்து ராத்திரி பத்து மணிவரைக்கும் இங்கே இருந்துட்டுத்தான் போனேன். போகும்போது பங்களாவைப் பூட்டிவிட்டுப் போனது நல்லாவே ஞாபகம் இருக்கு. நாய் சீலர் காவலுக்கு இருக்கும்போது, ஒரு பூனைக்குட்டி கூட உள்ளே போகமுடியாதே...?"

போஸ்ட்மேன் சிரித்தார். "அதுவும் எனக்குத் தெரியும் சார்... உங்ககிட்ட இருக்கிறது நாய் கிடையாது. ஆர்மியோட ஒரு ரெஜிமெண்ட்!" - சொல்லிக் கொண்டிருக்கும்போதே, அவர் முகம் மாறியது.

"பார்த்தீங்களா சார்...?"

"என்ன...?"

"அழுகைச் சத்தம் கேட்குது!"

ஷ்யாம் தன் முழுக் கவனத்தையும் காதுகளுக்குக் கொடுத்தான். ஸ்ருதி பிசகிய ஷெனாய் போல் சோர்வான ஒரு அழுகைச் சத்தம்.

ஷ்யாமின் முகப்பரப்பில் உணர்ச்சிகள் விதவிதமாகப் புரண்டன.



"கேட்குதா சார்...?"

"ம்..."

"எப்படி சார்...?"

"அ... அ... அதான் புரியலை..."

"உள்ளே போய்ப் பார்க்கலாமா சார்...?" - கேட்ட போஸ்ட்மேனைச் சில விநாடிகள்வரை இமைக்காமல் பார்த்தான் ஷ்யாம். பிறகு, இறுகிப்போன முகத்தோடு "வா..." என்று சொல்லிவிட்டு, கேட்டின்மேல் கையை வைத்து "சீலர்..." என்று கூப்பிட்டான்.

சீலர் ஓடி வந்தது.

"ஓப்பன் த கேட்..."

சீலர் திறந்துவைக்க, இருவரும் உள்ளே போனார்கள்.

"இப்பல்லாம் சீலர் என்னைப் பார்த்தா குரைக்கறதில்லை சார்..." என்றார் காதர்.

"ம்... ம்..."

"இந்த நாய்க்கு ஏழறிவு சார்..."

ஷ்யாம் ஒன்றும் பேசாமல் வாசல் பூட்டுக்கு விடுதலை கொடுத்துக் கதவைத் தள்ளி உள்ளே நுழைந்தான். போஸ்ட்மேன் பின் தொடர்ந்தார்.

அழுகைச் சத்தம் நின்று போயிருந்தது. பங்களா முழுக்கச் செதுக்கிய மாதிரி நிசப்தம். ஹாலுக்கு நடுவே வந்து நின்றார்கள்.

"சார்..."

"ம்..."

"ஒவ்வொரு ரூமா போய்ப் பார்த்துடலாமா...?" - போஸ்ட்மேன் கேட்ட கேள்விக்கு ஷ்யாம் பதில் சொல்லாமல், எங்கோ பார்த்தபடி நகம் கடித்துத் துப்பிக் கொண்டிருந்தான்.

"உங்களைத்தான் சார்..."

ஷ்யாம் திரும்பாமல், "என்ன கேட்டே?" என்றான். முகம் இப்போது கோபச்சிவப்போடு வியர்த்திருக்க, நெற்றியோர நரம்புகள் புடைத்துக் கொண்டு தெறித்தன.

போஸ்ட்மேன் லேசாக மிரண்டு போய்ப் பின்வாங்கி, தயக்கக் குரலில் சொன்னார்.

''அ... அழுகைச் சத்தம் எங்கேயிருந்து வந்ததுனு தெரிஞ்சுக்கிறதுக்காக, ஒவ்வொரு ரூமா போய்ப் பார்க்கலாமானு கேட்டேன்...''

ஷ்யாமின் பார்வையில் இப்போது நெருப்பு வீச்சு, போஸ்ட்மேனைக் கீழ்ப்பார்வை பார்த்தான்.

''உனக்கு இப்போ அந்த அழுகைச் சத்தம் எங்கேயிருந்து வந்ததுனு தெரியணும், அவ்வளவுதானே...?''

''என்ன சார்... வீட்டுக்குள்ளே வந்ததும் என்னவோ மாதிரி பேச ஆரம்பிச்சுட்டீங்க...?''

ஷ்யாம் உதடுகள் கோணச் சிரித்தான்.

''சாதர்... நீ கேட்ட அந்த அழுகைச் சத்தம், எனக்கு ஆனந்த சங்கீதம்! அந்தச் சங்கீதம் எந்த ரூமிலிருந்து வந்தது தெரியுமா...?''

போஸ்ட்மேன் கண்களில் இப்போது பயமும் திகிலும் பார்ட்னர்ஷிப் போட்டுக் கொண்டு உட்கார்ந்தன.

''சார், உங்க பேச்சு சரியில்லை... நீங்க நடந்துக்கிற விதமும் சரியில்லை. நான் கிளம்பறேன்...''

போஸ்ட்மேன் நகர முயல, ஷ்யாம் இரண்டே எட்டில் வாசல் கதவுக்குப் பாய்ந்து, கதவைத் தடாலடியாகச் சாத்தித் தாழ்ப்பாளைப் போட்டுவிட்டு மூச்சிரைத்தான். மூக்கு நுனியில் வியர்வை கொட்டியது.

போஸ்ட்மேன் கலவரமாகி, தப்பிக்கச் சுற்றும்முற்றும் பார்த்துக் கொண்டிருக்கும்போதே... ஷ்யாம் ஓரமாக நகர்ந்து, மூலையில் சாத்திவைத்திருந்த ஈட்டி மரத்திலான அந்த உருட்டுக்கட்டையை எடுத்துக் கொண்டான் ஷ்யாம்.

போஸ்ட்மேனின் கையில் இருந்த கடிதக்கட்டு கீழே விழ... கடிதங்கள் சிதறின.

ஷ்யாம் கடைவாய்ப் பற்களை அரைத்துக் கொண்டு, உதட்டில் ஒரு நசுங்கிய புன்னகையை நிறுத்திக் கொண்டு, உருட்டுக் கட்டையை வாகாகப் பிடித்தபடி போஸ்டுமேனை நோக்கி நடந்தான்.



அவர் திகைத்த விழிகளோடு, காய்ந்து போன தொண்டையில் எச்சில் விழுங்கிக் கொண்டே பின்வாங்கி ஓட முயல...

பிடரியில் உருட்டுக்கட்டை இடியாக இறங்கியது. ஒரு சின்ன அலறலைக்கூட வெளிப்படுத்தாமல், மீன் தொட்டிக்குப் பக்கத்தில் சுருண்டு விழுந்தார். பின் மண்டையிலிருந்து ரத்தம் உடனே எட்டிப் பார்த்து, போஸ்ட்மேனின் பழுப்பு நிற யூனிஃபார்மை வேகமாக நனைக்க ஆரம்பித்தது.

ஷ்யாம் உருட்டுக் கட்டையை ஓரமாக வீசிவிட்டு போஸ்ட்மேனை பூட்ஸ் காலால் எத்தித் தள்ள... அவர் உடல் மல்லாந்தது. திறந்த கண்களில் உயிர் பிரிந்து கொண்டிருந்தது.

ஷ்யாமின் உதட்டில் மறுபடியும் ஒரு புன்னகை நசுங்கியது. போஸ்ட்மேன் அருகே குனிந்து, தன்னுடைய இடது கையின் ஆட்காட்டி விரலால் ரத்தத்தைத் தொட்டு, அவருடைய நெற்றியில் பொட்டாக வைத்தான்.

''உன்னோட வேலையை நீ ஒழுங்கா பார்த்துட்டுப் போயிருந்தா, இப்படி உயிரை விட்டிருக்க வேண்டியதில்லை. விதி வலியது... ஊழ்வினை உறுத்து வந்து ஊட்டும்னு சும்மாவா சொல்லிட்டுப் போயிருக்காங்க...''

எழுந்து ஒரு சிகரெட்டைப் பற்ற வைத்துக் கொண்ட ஷ்யாம், மெள்ள நடை போட்டு, டைனிங் ரூமுக்குள் நுழைந்தான்.

நாற்காலியோடு கட்டிப் போடப்பட்டிருந்த சாம்பிரசாத், பசி மயக்கத்தில் கிறங்கிப் போய்த் தலை துவண்டிருந்தான். வாய்மேல் ஒட்டியிருந்த பிளாஸ்டர் பாதி கழன்று தொங்கிக் கொண்டிருந்தது.

''குட்மார்னிங் ராஜா...''

சாம்பிரசாத் சிரமப்பட்டு விழிகளைப் பிரித்தான். கன்னங்களில் வழிந்திருந்த கண்ணீர், நிரந்தரத் தடத்தை உற்பத்தி செய்திருந்தது. பிளாஸ்டரைச் சரியாக

ஒட்டிவிட்டு நிமிரும்போது -

''பீங்க்க்...''

பங்களாவுக்கு வெளியே - கார் ஹாரன் சத்தம்.

சீஸர் குரைத்தது. அந்தக் குரைப்பில் ஒருவித் மென்மையும் பாசமும் தெரிய -

ஷ்யாம் உஷாரானான்.

யாரோ தெரிந்தவர்கள்.

ஒட்ட நடையில் ஹாலைக் கடந்து வாசல் பக்க ஜன்னலைக் கொஞ்சமாகத் திறந்து எட்டிப் பார்த்தான்.

அண்ணன் ராம்கோபால் - அவருடைய காண்டஸா காரிலிருந்து இறங்கிக் கொண்டிருந்தார்.

பாப்பநாயக்கன் பாளையத்தை நோக்கி காரை விரட்டிக் கொண்டிருந்தாள் விபா.

பின் சீட்டில் ஜெயப்பிரகாசமும் யசோதாவும் பதட்டம் தரித்த முகங்களோடு சாய்ந்திருந்தார்கள். காருக்குள் ஏ.ஸி. முழுவீச்சில் இயங்கிக் கொண்டிருந்தாலும் வியர்த்திருந்தார்கள்.

''விபா...''

''என்னப்பா...?''

''அந்த கோகிலம் போலீஸ்க்குப் போயிருப்பாளா?''

''போயிருக்க மாட்டாப்பா...''

''பத்து மணிவரைக்கும் பார்த்துட்டுப் போயிடுவேன்னு சொன்னான்னு சொன்னியே?''

''சும்மா அப்படிப் பயமுறுத்தி இருக்கா. போயிருக்கமாட்டா...''

கார் அவிநாசி ரோட்டில் பயணித்து, பிரஸிடெண்ட் ஹாலைத் தாண்டியது.

யசோதா கண்களில் நீரைக் காட்டிக் குரல் தழுதழுத்தாள்.

''தலைக்கு மேல் கல்யாண வேலைகளை வெச்சுக்கிட்டு இப்படி எவளையோ பார்க்கப் போறது நம்ம தலைவிதி...''

''அப்பா...?''



''என்னம்மா...?''

''அந்த கோகிலத்தை நாம ஜெயிக்கணும்...''

''ஜெயிக்கத்தான் போறோம்...''

''இப்படிச் சொல்லிட்டு, அங்கே போய்த் தலைகுனியும் படியா ஆயிடக்கூடாது...''

''ஆகாதம்மா!''

''எதுக்கும் உங்க ஃப்ளாஷ்பேக்கை நல்லா நினைவுபடுத்திப் பார்த்துக்குங்கப்பா... அவ ஏடாகூடமா கேள்வி கேட்டு...''

யசோதா சீறினாள்.

''அவகிட்ட நான் பேசிக்கறேன்... நீங்க ரெண்டு பேரும் வாயையே திறக்க வேண்டாம்...''

கார், இப்போது குப்புசாமி நாயுடு ஹாஸ்பிட்டலின் பிரம்மாண்டத்தைக் கடந்து, பெருமாள் கோயிலை நெருங்கிக் கொண்டிருந்தது.

''அட்ரஸ் ஞாபகம் இருக்கா விபா...?''

''ம்... பெருமாள் கோயிலுக்குப் பக்கத்து சந்து...''

## 8

கார் இரண்டாவது தெருவுக்குள் நுழைந்து, அடர்த்தியான வேப்பமரம் தெரிந்த கடைசி வீட்டை நோக்கிப் போயிற்று. அந்த முற்பகல் வேளையில் தெருவே வெறிச்சோடிப் போயிருக்க, ரேஷன் கடையில் மட்டும் சின்னதாக ஒரு பெண்கள் க்யூ; கொஞ்சம் சண்டை.

கார் வேப்பமரத்து நிழலில் போய் நின்றது. பழைய காலத்து வீடு. காம்பௌண்ட் சுவர், சமீபத்திய மழை சீஸனில் பாசி பிடித்து, பச்சை டிஸ்டெம்பரை விட்டுவிட்டு அடித்த மாதிரி தெரிந்தது.

காரை விட்டு முதலில் இறங்கிய விபா, வீட்டுக் கதவில் தொங்கிக் கொண்டிருந்த பூட்டைப் பார்த்ததும் முகம் மாறினாள்.

''அப்பா, வீடு பூட்டியிருக்கு...''

''நாம சொன்ன நேரத்துக்கு வராததால போலீஸ்

ஸ்டேஷனுக்குப் போயிட்டாளோ என்னவோ...?''

''இவ்வளவு சீக்கிரத்துல நான் போலீஸ்டேஷன்லெல்லாம் போயிட மாட்டேன்...''

பின்பக்கம் குரல் கேட்டு, மூன்று பேரும் திடுக்கிட்டுப் போய்த் திரும்பிப் பார்க்க...

கோகிலம் உதட்டில் ஒரு சின்னச் சிரிப்போடும் கையில் காக்கிப் பையோடும் தெரிந்தாள்.

''ரேஷன்ல இன்னிக்குச் சர்க்கரை போட்டாங்க. அதான், போய் வாங்கிட்டு வந்தேன். உங்க கார், ரேஷன் கடையை க்ராஸ் பண்ணும்போதே பார்த்துட்டேன்...''

''இதோ பார்...'' என்று ஏதோ பேச முயன்ற யசோதாவைக் கையமர்த்தினாள் கோகிலம்.

''நீங்க எதைப் பேசறதா இருந்தாலும் வீட்டுக்குள்ளே வந்து உட்கார்ந்து பேசுங்க. கார்ல வந்திருக்கீங்க... குழாயடிச் சண்டையெல்லாம் வேண்டாம். இல்ல, குழாயடிச் சண்டைதான் உங்களுக்குப் பிடிக்கும்னா... நானும் தயார்! உங்களுக்கு எது வசதி...? வீட்டுக்குள்ளே போகலாமா... இல்ல, இங்கேயே நிக்கலாமா...?''

ஜெயப்பிரகாசம் கைகாட்டினார்.

''மொதல்ல கதவைத் திற...''

''இது புத்திசாலித்தனம்!'' என்ற கோகிலம் காம்பௌண்ட் கேட்டைத் திறந்து கொண்டு உள்ளே போனாள். கையில் வைத்திருந்த சாவியால் பூட்டுக்கு விடுதலை கொடுத்துக் கதவைத் தள்ளினாள்.

சுத்தமான சிறிய ஹால் ஒன்று சோபா செட்டோடு பார்வைக்குக் கிடைத்தது. சுவரில் ஒட்டப்பட்டிருந்த வால் பேப்பரில் தென்னைமரக் கூட்டத்துக்கு நடுவே சூரியோதயம் காரட் நிறத்தில் நிகழ்ந்து கொண்டிருந்தது. மீன் தொட்டியில் சால்மன் நிற மீன்கள் யோசித்து யோசித்து நீந்தின.

''உட்காருங்க...''

மூன்று பேரும் சோபா செட்டுக்குப் போய்ச் சாய, கோகிலம் சர்க்கரை பையை உள்ளே கொண்டுபோய் வைத்துவிட்டு, சேலைத் தலைப்பால் நெற்றி



வியர்வையை ஒற்றிக் கொண்டே வந்து, அவர்களுக்கு எதிரே உட்கார்ந்தாள்.

''வெயில்ல வந்திருக்கீங்க... லெமன் ஜூஸ் கலக்கட்டுமா... இல்ல, மோர் கொண்டாரட்டுமா...?''

''ஒண்ணும் வேண்டாம்...'' யசோதா சீறினாள்.

''சரி, விஷயத்துக்கு வாங்க...'' என்றாள் கோகிலம்.

''விபா, எனக்குப் பிறந்த பொண்ணு இல்லேன்னு சொன்னியாமே...?''

''ஆமா!''

''எப்படிச் சொல்றே...''

''என்னோட அக்கா அம்சவேணியும் விபாவும் ஒரே ஜாடை...''

''ஒரே ஜாடையா இருந்துட்டா, விபா உன்னோட அக்கா பொண்ணு ஆயிடுவாளா...?''

''என்னோட அக்கா அம்சவேணியோட போட்டோவை நீங்க பார்த்திங்களா...?''

''பார்த்தோம்...''

''விபாவையே ஜெராக்ஸ் எடுத்த மாதிரி இல்லையா?''

''இந்த உலகத்துல ஒருத்தர் மாதிரியே ஏழு பேர் இருப்பாங்க... அது உனக்குத் தெரியுமா?''

''தெரியாது...''

''இப்பத் தெரிஞ்சுக்கிட்டியல்ல... பிரச்னை பண்ணாமப் போயிடு...'' என்றாள் யசோதா.

''பிரச்னை பண்றது நானில்லை... நீங்கதான். இருபத்திரண்டு வருஷங்களுக்கு முன்னாடி காணாமப் போனஎன்னோட அக்கா அம்சவேணி, இப்போ எங்கே இருக்காங்க உங்க கணவரான மிஸ்டர் ஜெயப்பிரகாசத்துக்குத் தெரியும். அந்த உண்மையை மட்டும் அவர் சொல்லிட்டார்னா போதும். எனக்கு, என்னோட அக்காவைப் பார்க்கணும்...''

யசோதா சீறிக்கொண்டு எழுந்தாள்.

''ஏய்... இருபத்திரண்டு வருஷத்துக்கு முன்னாடி காணாமப் போன உன்னோட அக்காவைப் பத்தி

விசாரிக்கிறதுக்கு, இளிச்சவாயங்க நாங்கதான் கிடைச்சோமா...?"

"நான் கேட்ட கேள்விக்குப் பதில் சொல்ல வேண்டியது உங்க கணவர்; நீங்க இல்லை..."

ஜெயபிரகாசம் குறுக்கிட்டார்: "சரி, நானே பதில் சொல்றேன். அம்சவேணிங்கிற உன்னோட அக்காளை எனக்குத் தெரியாது. நான் தொட்ட முதல் பெண்ணே, என்னோட மனைவி யசோதா தான். வேற ஒரு பொண்ணை என்னோட கல்யாணத்துக்கு முன்னாடியும் சரி, பின்னாடியும் சரி... மனசளவில் கூட தீண்டிப் பார்த்தது கிடையாது..."

கோகிலம் புன்னகைத்தாள். "நீங்க பேசின இந்த டயலாக்கைக் கேட்டு, உங்க மனைவி சந்தோஷப்படலாம். ஆனா, எனக்கு வேண்டியது உண்மை... என்னோட அக்கா அம்சவேணி இப்போ உயிரோடு இருக்காளா, இல்லையா...? உயிரோடு இருந்தா, இப்போ எங்கே...?"

யசோதா மறுபடியும் ஆவேசமானாள். "இனி நீ ஒரு வார்த்தை பேசினாலும் மரியாதை கெட்டுப் போயிடும். உன் மனசுக்குள்ளே, நீ என்னதாண்டி நினைச்சுட்டிருக்கே...? உன்னோட ஓடுகாலி அக்காளைத்தான் தெரியாதுன்னு சொல்றார் இல்லையா... அப்புறமும் என்ன...? விபாவைப் பத்து மாசம் சுமந்து, இடுப்பு நோகப் பெத்தது நான்தான். உனக்கு அதுல ஏதாவது சந்தேகம் இருந்தா, டாக்டர் ஆஷாதேவியைப் போய்க் கேட்டுக்கோ..."

"எந்த ஆஷாதேவி...? சாய்பாபா காலனியில் ஆஷா பாலிகிளினிக் வெச்சு நடத்தறாங்களே, அவங்களா...?"

"ஆமா சிட்டியில் இன்னிக்கு அவங்க லீடிங் டாக்டர். எனக்குப் பிரசவம் பார்த்தது அந்த டாக்டர் தான். இன்னிக்கும் விபாவைப் பார்க்கும்போதெல்லாம் அந்த டாக்டர், 'உங்கம்மாவை நீ படுத்தின கஷ்டம் இருக்கே... அதை உங்கம்மா மறந்தாலும் என்னால மறக்க முடியாது'ன்னு சொல்வார். உனக்குச் சந்தேகம்



இருந்தா, அதை டாக்டரம்மாகிட்டயே வந்து கேட்டுக்கலாம்..."

கோகிலம் சில விநாடிகள் யோசித்துவிட்டுப் பின் எழுந்தாள்.

"சரி, கிளம்புங்க... போவோம். விபா உங்களுக்குத்தான் பிறந்தவள்னு அந்த டாக்டரம்மா சொல்லிட்டா, அதே நிமிஷம் இந்தப் பிரச்னையை விட்டுடறேன். அதுக்கப்புறமா, அம்சவேணி விஷயமா நான் என்னிக்குமே வாயைத் திறக்கமாட்டேன்..."

யசோதா கோபத்தோடு கையைச் சொடுக்கினாள். "இப்ப சொன்னியே, இது வார்த்தை...! எழுந்திரு. இந்த நிமிஷமே டாக்டர் ஆஷாதேவியைப் பார்க்கப் போகலாம்..."

கிளம்பினார்கள்.

கோகிலம் வீட்டைப் பூட்டிக்கொள்ள, காருக்கு வந்தார்கள்.

அண்ணன் ராம்கோபால் காண்டஸா காரிலிருந்து இறங்குவதைப் பார்த்த ஷ்யாம் சில விநாடிகள் உறைந்து, பின் உணர்வுக்கு மீண்டான்.

'அண்ணன் இப்போது எதற்காக இங்கே வருகிறார்..?'

'பொதுவாக, அவர் இந்த கெஸ்ட் ஹவுஸ் பக்கம் வரமாட்டாரே!'

காம்பௌண்ட் கேட்டை சீஸர் திறந்துவிடும் சத்தம் கேட்டது.

ஷ்யாம் வியர்த்துக் கலவரமாகிச் சுற்றும் முற்றும் பார்த்தான்.

'முதலில் போஸ்ட்மேனின் உடலை மறைக்க வேண்டும். பிறகு, சாய்பிரசாத்தை ஸ்டோர் ரூமுக்குள் கொண்டு போய் அடைத்து வைக்க வேண்டும்...'

ராம்கோபாலின் பூட்ஸ் சத்தம் வெளியே கேட்டது.

ஷ்யாம் இரண்டே எட்டில் போஸ்ட்மேனின் உடலுக்கு வந்து, கால்களைப் பற்றித் தரதரவென்று

இழுத்துக் கொண்டு போய்ப் படுக்கையறைக்குள் நுழைந்து, கப்போர்ட் வார்ட்ரோப்பைத் திறந்து உள்ளே திணித்து மூடினான்.

ரத்தம் கோடாக இழுபட்டிருந்த இடங்களை அவசர அவசரமாக ஒரு டர்க்கி டவலால் தேய்த்து எடுத்துக் கொண்டிருந்தபோது, காலிங்பெல் 'ர்ர்ர்ர்...' என்று கூப்பிட்டது.

டர்க்கி டவலைச் சுற்றிப் பரணில் மின்னல் வேகத்தில் எறிந்த ஷ்யாம், டைனிங் ரூமுக்குள் நுழைந்து, நாற்காலியோடு சாய்பிரசாத்தைத் தூக்கிக் கொண்டு பங்களாவின் கோடியில் இருந்த ஸ்டோர் ரூமுக்குள் நுழைந்தான்.

காலிங்பெல் மறுபடியும் கூப்பிட்டது. உடம்பின் சகல திசைகளிலும் வியர்வை. இதயம், விலா எலும்புகளுக்கு மத்தியில் ஏசகுபிசகாகச் சிக்கிக் கொண்டு திணறித் திணறித் துடித்தது.

ஸ்டோர் ரூமிலிருந்து தோட்டாவாகப் பாய்ந்து வாசல் கதவை நெருங்குவதற்குள், காலிங்பெல் மூன்றாவது தடவையாகத் நீளமாகக் கூப்பிட்டது. கதவின்மேல் போய் விழாத குறையாக நெருங்கித் தாழ்ப்பாளை விடுவித்தான் ஷ்யாம். மூச்சிரைத்தான்.

கதவுக்கு வெளியே நின்றிருந்த ராம்கோபால் ஷ்யாமை ஒரு வியப்பான பார்வையில் குளிப்பாட்டிக் கொண்டே கேட்டார்: "உள்ளே என்னடா பண்ணிட்டிருந்தே...?"

"அது... வந்து... வந்து... ஒரு பீரோவை நகர்த்தி வெச்சிக்கிட்டிருந்தேன்..."

"பீரோவை நகர்த்தி வெச்சுட்டு இருந்தியா... எதுக்கு...?"

"பீரோ இடுக்குல ஒரு பூனை மாட்டிக்கிட்டு செத்துப் போயிடுச்சு..."

பொய் சரளமாக வந்தது.

"அதை எடுத்துப் போட்டுட்டியா...?"

"ம்... போட்டுட்டேன்..."



ராம்கோபால் உள்ளே நுழைந்து கொண்டே கேட்டார். "வெளியே... வாசல்படியில் ஜோடியாய் செருப்பு இருக்கு... அது யாரோடது...?"

ஷ்யாமுக்குள் மின்னல் வெட்டியது. 'அது போஸ்ட்மேனின் செருப்பாக இருக்கலாம்...'

"என்னடா... இப்படி முழிக்கிறே...? யாராவது வந்து, மறந்து விட்டுட்டுப் போயிட்டாங்களா...?"

"இ... இல்லேண்ணா... அது... பழைய வாட்ச்மேனோட செருப்பு. எங்கேயோ கிடந்ததை சீசர் கொண்டு வந்து போட்டிருக்கலாம்..."

ராம்கோபால் சில விநாடிகள் வரை ஷ்யாமை ஒரு சலனமில்லாத பார்வை பார்த்துவிட்டுக் கேட்டார்.

"இப்ப மணி எத்தனை...?"

ஷ்யாம் மணிக்கட்டில் இருந்த வாட்ச்சைப் பார்த்துவிட்டு, "பதினொண்ணு முப்பது..." என்றான்.

"இப்ப நீ ஆபீஸில் இருக்க வேண்டிய நேரம். உன்னோட டைரியில், நீ எழுதியிருக்கிற என்கேஜ்மெண்ட்ஸ்படி கம்பெனி ஆடிட்டரைப் பார்த்து, இன்கம்டாக்ஸ் விஷயமா டிஸ்கஸ் பண்ணிக்கிட்டு இருக்கணும். ஆனா, நீ இங்கே கெஸ்ட் ஹவுஸுக்கு வந்து, வாட்ச்மேன் வேலை பார்த்துக்கிட்டிருக்கே...! என்னடா இதெல்லாம்... இப்போ எதுக்காக கெஸ்ட் ஹவுஸ் வந்தே...? சொல்லு..."

"அது... வந்து... சீசருக்குக் கொஞ்சம் உடம்பு சரியில்லாம இருந்தது. நேத்து பூராவும் அவன் ஒண்ணுமே சாப்பிடலை. இப்போ எப்படியிருக்கான்னு பார்த்துட்டுப் போகலாம்னு வந்தேன். வந்த இடத்துல... பூனை... பீரோ..."

ராம்கோபால் கையமர்த்தினார்.

"இதோ பார் ஷ்யாம்... கொஞ்ச நாளாவே நீ சரியில்லை. ஏதோ ஒருவிதப் பதட்டத்துல இருக்கே! எப்போ பார்த்தாலும் யோசனை முகம். பெரும்பாலான ராத்திரிகளை கெஸ்ட் ஹவுஸில் கழிக்கிறே..."

'எல்லாவற்றையும் கவனித்திருக்கிறார்கள்'

''பார்த்தியா... இப்பக்கூட நான் பேசப் பேச எங்கேயோ பார்த்துக்கிட்டு, ஏதோ யோசனை பண்ணிட்டு இருக்கே...''

ஷ்யாம் வலுக்கட்டாயமாகப் புன்னகைத்துக் கொண்டு ராம்கோபாலை ஏறிட்டான்.

''அண்ணா, நீங்க நினைக்கிற மாதிரி எதுவும் இல்லை. அ'யம் கொயட் நார்மல். பிஸினஸ் டென்ஷன் காரணமாக நான் என்னைக் கொஞ்சம் ரிலாக்ஸ் பண்ணிக்கிறதுக்காக இந்த கெஸ்ட் ஹவுஸுக்கு வர்றேன். அடுத்த வாரம் எனக்குக் கல்யாணம். அதனால எனக்கு லேசான பதட்டம். தட்ஸ் ஆல்...''

''உன்னோட அண்ணி என்ன சொன்னா தெரியுமா...?''

''சொல்லுங்க...''

''உன்னை ஒரு நல்ல மனநோய் மருத்துவர்கிட்ட கூட்டிட்டுப் போகச் சொல்றா...''

ஷ்யாமின் முகம் ஒரு விநாடி சிவந்து, அடுத்த விநாடி வெளிறியது.

''அவ ஒண்ணும் தப்பா சொல்லலை ஷ்யாம். நீ உன்னை ரிலாக்ஸ் பண்ணிக்கக் கூட, ஒரு நல்ல சைக்யாட்ரிஸ்ட்டை போய்ப் பாக்கலாம்...''

ஷ்யாம் உதட்டைக் கடித்துக் கொண்டு நிற்க, ராம்கோபால் அவன் தோள்மேல் கையை வைத்தார்.

''சரி, நான் இப்போ எதுக்காக இங்கே வந்தேன்கிறதுக்கான காரணத்தைச் சொல்லிடறேன். இந்த கெஸ்ட் ஹவுஸை நல்ல விலைக்கு விற்க ஏற்பாடு பண்ணிட்டேன். விலை, நாம எதிர்பார்த்ததைவிட அஞ்சு லட்சம் அதிகம். நோ அட்வான்ஸ்... நோ அக்ரிமெண்ட்... உடனடிக் கிரயம்...! பங்களாவைப் பார்க்க பார்ட்டி வரப்போறாங்க...''

''எ... எ... எப்போ...?''

''இன்னும் கொஞ்ச நேரத்துல பார்ட்டியைக் கூட்டிக்கிட்டு புரோக்கர் இங்கே வந்துடுவார்...''





**சைலன்சர் பொருத்தப்பட்ட கிரீஸ் கன். இதன் மதிப்பு இந்திய ரூபாயில் ஏறக்குறைய ரூ.25,512.75 (345 பவுண்)**

# 9

ராம்கோபாலின் பாக்கெட்டில் இருந்த செல்போன் கனைத்தது.

எடுத்தார். ''ஹலோ...''

மறுமுனையில் விட்டு புரோக்கர்.

''ஐயா... நான் பொன்னுசாமிங்க...''

''சொல்லு...'' என்றார் ராம்கோபால்.

''நீங்க கெஸ்ட் ஹவுஸ் போய் சேர்ந்துட்டீங்களாய்யா?''

''இப்ப அங்கேயிருந்துதான் பேசிக்கிட்டிருக்கேன்...''

''பார்ட்டியைக் கூட்டிட்டு வந்துடட்டுங்களா...?''

''ம்... வா...! பார்ட்டி பேசின விலையிலேயே நிக்கணும்... இங்கே வந்து வீட்டைப் பார்த்த பின்னாடி குறைச்சுக் கேக்கிற வேலையெல்லாம் வெச்சுக்கக்கூடாது...''

''ஐயா...! பார்ட்டி ஏற்கெனவே நம்ம கெஸ்ட் ஹவுஸ் பங்களாவைப் பார்த்திருக்கார். இப்ப பார்க்க வர்றது அவரோட சம்சாரம்... அந்தம்மா பார்த்து ஓ.கே சொல்லிட்டா ரெஜிஸ்ட்ரேஷனுக்கு நான்

பார்த்துடலாம்...''

''எப்படியோ நீ இருந்து முடிச்சுக் கொடு பொன்னுசாமி... கமிஷன் தொகைக்கு மேல கொஞ்சம் போட்டுக் கொடுத்துடறேன்...''

''சரிங்கய்யா...''

ராம்கோபால் செல்போனை அணைத்துவிட்டு ஷ்யாமைப் பார்க்க... அவன் நகம் கடித்து ஒரே திசையைப் பார்த்தபடி துப்பிக் கொண்டிருந்தான். முகம் ஏதோ ஒரு கடினமான பொருளால் செய்யப்பட்ட நிறுசில் இறுகிப் போயிருந்தது.

''ஷ்யாம்...''

''ம்...''

''பங்களாவைப் பார்க்க பார்ட்டி வந்துக்கிட்டிருக்காங்க...''

''ம்...''

''என்னடா... ம்...?''

''எனக்குப் பிடிக்கலை...''

''எது...?''

''இந்த பங்களாவை விக்கறது...''

''உனக்குப் பிடிக்காதுன்னு எனக்குத் தெரியும். தெரிஞ்சேதான் விக்கறதுக்காக ஏற்பாடு பண்ணியிருக்கேன்...''

''இப்ப எதுக்காக விக்கணும்...?''

''ஷ்யாம்! கொஞ்ச நாளாவே நீ சரியில்லைன்னு உன்னோட அண்ணி சொல்லிட்டிருக்கா. உனக்கு ஃப்ரெண்ட்ஸ் சர்க்கிள் சரியில்லை... மத்த பெண்களோட தொடர்பும் உனக்கு இருக்கு. உன்கிட்ட எல்லா கெட்ட பழக்கமும் இருக்கு. அந்தக் கெட்ட பழக்கமெல்லாம் டெவலப்பாகக் காரணம் இப்படியொரு கெஸ்ட் ஹவுஸ் இருக்கிறதுதான்.''

ஷ்யாம் மூச்சிரைத்தான்.

''இதெல்லாம் உங்களுக்கு யார் சொன்னது... அண்ணியா...?''

''அண்ணி சொன்னது பாதி. நானாகக் கண்டு பிடிச்சது



மீதி...''

ஷ்யாம் இப்போது வேகமாக நகத்தைக் கடித்துத் துப்ப, ராம்கோபால் அவன் தோள் மேல் கையை வைத்தார்.

''இதோபார் ஷ்யாம்...! அடுத்த வாரம் உனக்குக் கல்யாணம். ஒரு பெரிய குடும்பத்துக்கு மாப்பிள்ளையாகப் போறே...! இனிமே நீ கொஞ்சம் மாறணும். உன்னோட ஃப்ரெண்ட்ஸ் சர்க்கிளை விட்டு நீ வெளியே வரணும். உங்கிட்ட இருக்கிற கெட்ட பழக்கங்களுக்கு நீ டாட்டா... பை பை சொல்லியாகணும். இல்லேன்னா நாளைக்கு நீ விபாவுக்கு ஒரு நல்ல கணவனா இருக்க முடியாது...''

ஷ்யாமின் வாயில் இடது கையின் கட்டைவிரல் நகம் பதட்டத்தோடு கடிபட்டது. ராம்கோபால் தொடர்ந்தார்.

''இந்த கெஸ்ட் ஹவுஸ் பங்களா இருக்கிறவரைக்கும் நீ உன்னோட பழக்கங்களை மாத்திக்கமாட்டே... ஃப்ரெண்ட்ஸைக் கூட்டிட்டு வந்து தண்ணி போடுவே. சீட்டாடுவே. டெக்ல காஸெட்டுகளைப் போட்டு பார்க்கக்கூடாத படங்களைப் பார்ப்பே. எவளையாவது வாடகைக்கு கூட்டி வந்து ராத்திரி பூராவும்.''

''அ... ண்... ணா...'' கண்களில் கோப ரத்தம் பாய இரைத்தான் ஷ்யாம்.

''பார்த்தியா...! உண்மையைச் சொன்னா இப்படித்தான் கோபம் வரும். உன்னோட கெட்ட பழக்கங்களுக்கு இந்த கெஸ்ட் ஹவுஸ் பங்களா ஒரு சரணாலயமா இருக்கிறதை நான் விரும்பலை. பெண்களோட தொடர்பை நீ அடியோடு விட்டுடணும். வீட்ல மனைவி இருக்கும்போது பிற பெண்களைத் தேடிப்போறது எதுக்குச் சமம் தெரியுமா... டைனிங் டேபிள்ல நல்ல சாப்பாடு இருக்கும்போது வீதியில் இருக்கிற குப்பைத் தொட்டிக்குப் போய் எச்சிலைப் பொறுக்கிச் சாப்பிடறதுக்கு சமம்...''

ஷ்யாமின் உடம்புக்குள் ரத்தம் தறிகெட்டுப் பாய, அடி மனதில் தூங்கிக் கொண்டிருந்த மிருகம்

முன்னங்கால்களை ஊன்றிக் கொண்டு எழுந்தது.

ராம்கோபால் தொடர்ந்தார். "ஷ்யாம்...! நம்ம அப்பா சாகும்போது உனக்கு அஞ்சு வயசு. எனக்குப் பத்து வயசு. அவரைப்பத்தி உனக்கு அதிகம் தெரியாது. அவர் ஒரு கலாசி கூலித் தொழிலாளிங்கிற விஷயம்கூட நான் சொல்லித்தான் உனக்குத் தெரியும்... அப்பா உயிரோடு இருந்தவரைக்கும் அவர் பீடி, சிகரெட் குடிச்சு நான் பார்த்தது இல்லை. நம்ம அம்மாமேல அவர் உயிரையே வெச்சிருந்தார்."

"இப்ப எதுக்காக இந்த ஃப்ளாஷ் பேக்கெல்லாம்?" கோபத்தோடு கத்திய ஷ்யாமைப் புன்னகையோடு பார்த்தார் ராம்கோபால்.

"உனக்குப் புத்திமதி சொல்லத்தான்... அப்பா உயிரோடு இருந்திருந்தா உனக்கு என்ன புத்திமதி சொல்வாரோ அதைத்தான் நான் இப்போ சொல்லிக்கிட்டிருக்கேன்... இனிமே நீ ஒரு புது மனுஷனா மாறணும்... அதுக்கான ஆரம்பம்தான் இந்த கெஸ்ட் ஹவுஸ் டிஸ்போஸல்..."

"பீங்க்க்க்..."

வெளியே கார் ஹாரன் பிளிறியது.

"பார்ட்டி வந்துட்டாங்க போலிருக்கு..." ராம்கோபால் சொல்லிக் கொண்டே வாசலை நோக்கிப் போக, ஷ்யாம் அவர் முதுகையே வெறித்துப் பார்த்தான். பயம் ஒரு எலியாக மாறி உடம்பின் மூலை முடுக்கெல்லாம் ஓடியது.

'படுக்கையறையின் வார்ட்ரோப்புக்குள் போஸ்ட்மேன் காதரின் உடல்..!'

'ஸ்டோர் ரூமுக்குள் மயங்கிக் கிடக்கும் சாய்ப்பிரசாத்.'

'கண்டு பிடித்துவிடுவார்களோ...?'

"வணக்கம்...! வாங்க... தைரியமா வாங்க! நாய் ஒண்ணும் பண்ணாது..."

ராம்கோபால் சொல்லிக் கொண்டிருக்க, அவர்கள் உள்ளே வந்தார்கள்.



சாயிபாபா காலனியின் மையப் பகுதியில் டாக்டர் ஆஷா தேவியின் ஆஷா பாலிக்ளினிக் மே ஃப்ளவர் மரங்களுக்கு மத்தியில் யாருக்கோ பயந்த மாதிரி ஒளிந்து கொண்டு உட்கார்ந்திருந்தது.

காரை பார்க்கிங் ஏரியாவில் நிறுத்திவிட்டு விபா இறங்கினாள். அவளைத் தொடர்ந்து இறுகிப் போன முகங்களோடு ஜெயப்பிரகாசம், யசோதா, கோகிலம் இறங்கி விபாவைப் பின் தொடர்ந்து நடந்தார்கள்.

ஒரு த்ரீ ஸ்டார் ஓட்டலுக்குரிய அந்தஸ்தோடு இருந்த ரிசப்ஷன் கௌண்ட்டருக்கு முன்பாக வந்து நின்ற விபா, உதட்டுச் சாயத்திலிருந்து காதில் இருக்கும் ஸ்டட் வரை மேட்ச்சிங்கைப் பேணிக் காத்திருந்த ரிசப்ஷனிஸ்ட் பெண்ணிடம் கேட்டாள்.

"டாக்டர் ஆஷா தேவியைப் பார்க்கணும்... இருக்காரா?"

"நீங்க...?"

"விபா..."

"கன்சல்டேஷனா...?"

"இல்லை... பர்சனல்..."

ரிசப்ஷனிஸ்ட் இண்டர்காமில் ரகசியம் பேசுகிற மாதிரி பேசிவிட்டு நிமிர்ந்தாள்.

"போய்ப் பாருங்க... முதல் மாடில செகண்ட் ரூம். நேரம் அதிகமா எடுத்துக்காதீங்க. டாக்டர் ரவுண்ட்ஸ் போக வேண்டிய நேரம் இது..."

மாடிப்படிகளில் ஏறும்போது யசோதா, கோகிலத்திடம் கடுகடுத்தாள்.

"இதோ பார்... டாக்டர்கிட்ட நாங்கதான் பேசுவோம். நீ வாயைத் திறந்து முந்திரிக்கொட்டைத் தனமா எதுவும் பேசக்கூடாது..."

கோகிலம் தன் தோள்பட்டைகளை அலட்சியமாகக் குலுக்கினாள். "டாக்டரம்மாகிட்ட நீங்களே பேசுங்க. எனக்கு வேண்டியது ஒரு வரி பதில். விபாவுக்கு அம்மா நீங்களா இல்லை என்னோட அக்கா அம்சவேணியா...?"

''டாக்டரம்மா நான்தான்னு சொல்லிட்டா அந்த விநாடியே நீ கிளம்பிப் போயிடணும்...''

''கிளம்பிப் போகாமே...? அதுக்கப்புறம் எனக்கென்ன வேலை இங்கே...?''

விபா எகிறுகிற இதயத் துடிப்போடு மாடிப்படிகளை முடித்துக் கொண்டு வராந்தாவில் நடந்து இரண்டாவது அறைக்கு முன்பாக வந்து நின்றாள். கதவை இரண்டு தடவை தட்டினாள். உள்ளேயிருந்து ''கம்மின்'' என்கிற டாக்டரின் குரல் தப்பித்து வெளியே வந்த காதுகளில் விழுந்தது. டோர் க்ளோஷரை எதிர்த்துத் தள்ளிக் கொண்டு விபா உள்ளே நுழைந்தாள்.

டாக்டர் ஆஷாதேவி ஐம்பது வயதுகளின் ஆரம்பத்தில் கொஞ்சம் சௌகார்ஜானகி போல் ஜாடை காட்டிவிட்டு பக்கவாட்டில் பார்க்கும்போது அதுவும் இல்லை என்றாள். முன் நெற்றி கேசத்திலும் காதோரங்களிலும் 'டை'யின் உபயம் தெரிந்தது.

''வா... விபா...! அடேடே... அப்பாவும் அம்மாவும் கூட வர்றாங்களா, ரிசப்ஷனிஸ்ட சொல்லவேயில்லையே...''

''ஸாரி டாக்டர்... இது உங்களுக்கு ரவுண்ட்ஸ் நேரம். தொந்தரவு தர்றதுக்கு மன்னிக்கணும்...''

''நோ... ப்ராப்ளம்... உட்காரு... யாருக்கு என்ன உடம்பு...?'' ஆஷா தேவியின் உதடுகளிலிருந்து வார்த்தைகள் வந்து கொண்டிருந்தாலும் பார்வை கோகிலத்தின் மீது படிந்து 'யார் இந்தப் பெண்?' என்ற கேள்வி இரண்டு புருவங்களுக்கு மத்தியில் சம்மணம் போட்டு உட்கார்ந்து கொண்டது. குழப்பத்தைக் காட்டிக் கொள்ளாமல் ஆஷா தேவி மறுபடியும் கேட்டாள்.

''அடுத்த வாரம் கல்யாணம். இப்ப ஹாஸ்பிட்டலுக்கு வந்திருக்கீங்க. யாருக்கு என்ன உடம்பு...?''

யசோதா இறுகிய முகத்தோடு பேச்சை ஆரம்பித்தாள். ''டாக்டர்! நாங்க நல்லாத்தான் இருக்கோம். யார் உடம்புக்கும் எதுவும் இல்லை.



உங்ககிட்ட நாங்க வந்தது ஒரு சின்ன விளக்கத்துக்காகத்தான்...''

''எது விஷயமா?''

யசோதா சில விநாடிகள் தயங்கிவிட்டு தீர்க்கமான குரலில் கேட்டாள்.

''டாக்டர் விபா என்னோட பொண்ணுதானே...?''

''இது என்ன கேள்வி...?''

''ப்ளீஸ்... டாக்டர்... கேட்ட கேள்விக்குப் பதில் சொல்லுங்க. விபா என்னோட பொண்ணுதானே...?''

''ஆமா... உங்க பொண்ணுதான்!''

''என் வயித்துல பொறந்தவதானே...?''

''எதுக்காக... இப்படியொரு...?''

''ப்ளீஸ் டாக்டர். நான் கேக்கிற கேள்விகளுக்குப் பதிலை மட்டும் சொல்லுங்க போதும்.''

''சரி... கேளுங்க...''

''விபா என் வயித்துல பொறந்தவதானே?''

''ஆமா...''

''பிரசவம் பார்த்தது நீங்கதானே?''

''ஆமா...''

''விபா என் பொண்ணுங்கிறதுல உங்களுக்கு ஏதாவது சந்தேகம் இருக்கா டாக்டர்?''

''ஒரு சந்தேகமும் கிடையாது.''

யசோதா இப்போது கோகிலத்தின் முகத்துக்குப் பார்வையைக் கொண்டு போனாள்.

''டாக்டரம்மா சொன்னதைக் கேட்டுக்கிட்டியா?'' என்றாள் அவளிடம்.

''ம்... கேட்டுக்கிட்டேன்...''

''இனி கிளம்பிப் போக வேண்டியதுதானே...?''

கோகிலம் புன்னகைத்தாள். ''டாக்டரம்மாகிட்ட நீங்க பேசி முடிச்சிட்டீங்களா, இல்ல இனியும் பேச வேண்டியது ஏதாவது பாக்கியிருக்கா...?'

''பேச வேண்டியதை பேசியாச்சு.''

''சரி. இனிமே நான் பேசலாமா?''

''பேசு.''

கோகிலத்தின் பார்வை ஆணியடித்த மாதிரி ஆஷா தேவியின் முகத்தில் நிலைத்தது. ''டாக்டர்! உங்க மனசைத் தொட்டுச் சொல்லுங்க... விபா, யசோதாவுக்குப் பொறந்த பொண்ணா?''

ஆஷா தேவி எரிச்சலானாள்.

''மிஸ்டர் ஜெயப்பிரகாசம்! வாட் ஈஸ்... திஸ்? எதுக்காக இப்படியொரு விசாரணை? யார் இந்த வேடி?''

கோகிலம் இடது கையை உயர்த்தினாள். ''ஒரு உண்மை வெளியே வரணும்னா இப்படிப்பட்ட விசாரணை தேவை டாக்டர். இந்த விசாரணைக்கு உங்க ஒத்துழைப்பு அவசியம் டாக்டர்! என்னைப்பத்திச் சொல்லிடறேன். என் பேர் கோகிலம். சொந்த ஊர் மெட்ராஸ். இந்த கோயம்புத்தூர்க்கு வந்து செட்டிலாகி ரெண்டு வருஷமாச்சு. அப்பா அம்மா இறந்துட்டாங்க. இப்ப நான் ஒண்டிக்கட்டை....''

சொல்லிக்கொண்டே போனவள் தன் கையில் வைத்து இருந்த வானிடி பேக்கைத் திறந்து ஒரு பாஸ்போர்ட் சைஸ் போட்டோவை எடுத்து ஆஷா தேவியிடம் நீட்டினாள்.

''இந்த போட்டோவைக் கொஞ்சம் பாருங்க டாக்டர்...''

ஆஷாதேவி வாங்கிப் பார்த்தாள். கோகிலம் தன் புன்னகையின் பரப்பளவை விஸ்தீரணமாக்கினாள்.

''போட்டோவில் இருக்கிறது யார் டாக்டர்?''

''விபா மாதிரி இருக்கு.''

''இது என்னோட அக்கா அம்சவேணி. இருபத்திரண்டு வருஷங்களுக்கு முன்னாடி திடீர்னு வீட்டை விட்டுக் காணாமப் போயிட்டா. அவ எங்கே போனா, யார்கூட போனா... அதெல்லாம் எனக்குத் தெரியாது. ஆனா, ரெண்டு நாளைக்கு முந்தி ஒப்பணக்கார வீதியில் விபாவை எதேச்சையாகப் பார்த்தேன். என்னோட அக்காவே நேர்ல வந்த மாதிரி அப்படியே ஆடிப்போயிட்டேன். அவளை ஃபாலோ பண்ணி...''



ஆஷாதேவி குறுக்கிட்டாள்.

''புரியுது...! நீ எதையும் விளக்கமா சொல்ல வேண்டாம். உன் அக்காவோட ஜாடையில் விபா இருக்கிறதுனால ஜெயப்பிரகாசத்துக்கும் உன்னோட அக்காவுக்கும் தொடர்பு இருக்குமோன்னு நீ சந்தேகப்படற...?''

''ஆமா...''

''உனக்கு வந்திருக்கிறது தேவையில்லாத சந்தேகம். விபாவுக்கும் உன்னோட அக்காவுக்கும் ஒரே மாதிரியான ஜாடை இருக்கிறது, ஒரு விபத்து மாதிரி தற்செயலா ஏற்பட்டது. இதைப் பெரிசு பண்ணி குழப்பிக்க வேண்டாம். யசோதாவுக்குப் பிரசவம் பார்த்த டாக்டர்ங்கிற முறையில் சொல்றேன். விபா நூறு சதவிகிதம் யசோதாவோட பொண்ணு.''

''அதே நூறு சதவிகிதம் நான் சொல்றேன் டாக்டர். விபா என்னோட அக்கா அம்சவேணியோட பொண்ணு...'' கோகிலம் மோவாயைத் தாங்கிக் கொண்டு புன்னகையோடு சொல்ல, டாக்டர் ஆஷாதேவியின் முகத்தில் அனல் பறந்தது.

''என்ன பந்தயம் போடுறியா...?''

''போட்டுக்கலாமே...!''

## 10

டாக்டர் ஆஷாதேவி, தன் மூக்குக் கண்ணாடியைக் கழற்றி மேஜையின் மேல் வைத்துவிட்டு, கோகிலத்தை ஒரு உஷ்ணப் பார்வையோடு கேட்டாள்.

''என்ன... கலாட்டா பண்றதுக்காகவே இங்கே வந்திருக்கியா...?''

''நியாயம் கேட்டா, அதுக்கு உங்க பாஷையில பேரு கலாட்டாவா...? எனக்குக் கலாட்டா பண்ற எண்ணம் இருந்தா, இப்படி உங்க முன்னாடி ஃபேனுக்குக் கீழே உட்கார்ந்து பேசிட்டிருக்க மாட்டேன். தெருவுல நின்னு

பேசிட்டிருப்பேன்! உண்மை வெளியே வரணும்னா, நான் எப்படியும் பேசத் தயார். இங்கேயே உட்கார்ந்து பேசலாமா? இல்ல... தெருவுக்குப் போயிடலாமா...?''

கோகிலம் புன்னகை சிதையாமல் பேசிக் கொண்டிருக்கும்போதே பக்கத்து நாற்காலியில் உட்கார்ந்திருந்த யசோதா, நாற்காலியைப் பின்னுக்குத் தள்ளிக்கொண்டு எழுந்தாள்.

''நீ எதுக்கும் துணிஞ்சவனு எங்களுக்குத் தெரியும்டி! குப்பைத் தொட்டியில் விழுந்து கிடக்கிற எச்சிலை நீ... எங்க பக்கத்துல உட்காரக்கூட....''

ஆஷாதேவி கையமர்த்தினாள்... ''யசோதா! நீங்க பேசாம இருங்க... இவகிட்ட நான் பேசிக்கிறேன்...'' என்று சொன்னவள், கோகிலத்திடம் திரும்பினாள்.

''இதோ பார்... அந்தப் பொண்ணு விபாவுக்கு அடுத்த வாரம் கல்யாணம். உன் அக்காவோட சாயல்ல விபா இருக்காங்கிற ஒரே ஒரு காரணத்துக்காக, நீ இப்படி அழிச்சாட்டியம் பண்றது சரியில்லை. யசோதாவுக்குப் பிரசவம் பார்த்த டாக்டர் நான். விபா அவங்க குழந்தை தான்... இதுல சந்தேகமே இல்லே...''

''இந்த உறுதிமொழி எனக்குப் போதாது டாக்டர்...''

''வேற என்ன வேணும்...?''

''ஜெயப்பிரகாசத்துக்கும் யசோதாவுக்கும் பேரண்டல் டெஸ்ட்... ஐ மீன்... டி. என். ஏ. டெஸ்ட் பண்ணணும். அந்த ரிப்போர்ட்டை நான் பார்க்கணும். விபா, அவங்க பொண்ணுதான்னு டி.என்.ஏ. ரிப்போர்ட் சொல்லட்டும். நான் இந்தப் பிரச்னைக்கு முட்டை சொல்லிட்டுப் போயிடறேன்...''

''அந்த டெஸ்ட்டைப் பண்ணலைன்னா, நீ இந்தப் பிரச்னையை விடமாட்டியா...?''

''மாட்டேன்...''

யசோதா மறுபடியும் ஆவேசமானாள்... ''இவளுக்கு எவ்வளவு திமிர் பார்த்தீங்களா டாக்டர்...?''

''இதோ பார் கோகிலம்...! நீ இப்படிப் பிடிவாதம்



பிடிக்கிறது கொஞ்சம்கூட சரியில்லை... விபாவோட கல்யாணம் நல்லபடியா நடந்து முடியணும். அதுதான் இப்போ முக்கியம்...''

''உங்களுக்கு விபாவோட கல்யாணம் முக்கியம். எனக்கு, என்னோட அக்கா அம்சவேணி முக்கியம். அவ எங்கே இருக்கானு விபாவோட அப்பாவை சொல்லச் சொல்லுங்க... அது எனக்குப் போதும்...''

ஜெயப்பிரகாசம் குறுக்கிட்டார் பதட்டமாக... ''உன்னோட அக்கா யாருன்னே எனக்குத் தெரியாதேம்மா...''

''பொய்...''

''டாக்டர்... இவ வழிக்கு வரமாட்டா... இனி இவகிட்ட பேசிப் பிரயோஜனமில்லை. போலீஸுக்கு போன் பண்ணுங்க...'' என்றார் ஜெயப்பிரகாசம்.

கோகிலம் சிரித்தாள்.

''அதை... அதை... அதைத்தான்... நானும் எதிர் பார்த்தேன். போலீஸுக்கு போன் பண்ணுங்க... அவங்களே வந்து, இந்தப் பிரச்னையை சால்வ் பண்ணட்டும்...''

''போலீசெல்லாம் வேண்டாம் ஜெயப்பிரகாசம்...''

''ஏன் டாக்டர் பயப்படறீங்க...?''

''இது பயமில்லை... கவலை. விஷயம் போலீஸுக்குப் போனா, அடுத்த நாளே அது பேப்பருக்குப் போயிடும். விபா யாருக்கு சொந்தம்ங்கிற தலைப்பில் பட்டிமண்டபங்கள் கூட நடக்கும். விபாவுக்குக் கல்யாணம் நடக்கவிருக்கிற இந்த நேரத்தில் இதெல்லாம் தேவையா? மாப்பிள்ளை வீட்டுக்காரங்களுக்குத் தெரிஞ்சா, எவ்வளவு பெரிய அசிங்கம்! எல்லாத்தையும் நாம யோசனை பண்ணிப் பார்க்கணும்...''

''டாக்டர்... யூ மே பி கரெக்ட்! பட்... இந்த கோகிலம் தலைக்குமேல ஏறி உட்கார்ந்துட்டு, இந்த ஆட்டம் போடறாளே...? இவ கொட்டத்தை அடக்க வேண்டாமா...? நீங்க போலீஸுக்கு போன்

பண்ணுங்க... இனி பயந்தா ஒண்ணும் வேலைக்கு ஆகாது. போலீஸ் வந்து இவனை ரெண்டு தட்டு தட்டினாத்தான், இவ யாரு... என்னங்கிற விவரம் வெளியே வரும்...''

''அவசரப்படாதீங்க ஜெயப்பிரகாசம்! இது போலீஸுக்குப் போகவேண்டிய விஷயம் இல்லை. பேசித் தீர்க்க வேண்டிய விஷயம்...

நீங்க மூணு பேரும் வெளியே போய் இருங்க... நான் பேசிப் பார்க்கிறேன். தனியா பேசினாத்தான் சில விஷயங்கள் முடிவுக்கு வரும்...''

கோகிலம் மறுக்கும்விதமாக தலையாட்டினாள் ''ஸாரி டாக்டர்! இந்த ரகசியப் பேச்சு வார்த்தையெல்லாம் எனக்குப் பிடிக்காது. விஷயத்தை போலீஸுக்குக் கொண்டு போயிடுவோம். அவங்க வரட்டும். ரெண்டு தரப்புப் பேச்சையும் கேட்டுகட்டும். விபா யாருக்குச் சொந்தம்ங்கிற உண்மையை வெளியே கொண்டுவர, மரபணு சோதனை நடத்திப் பார்க்கட்டும். பொய் சொல்றது யார்னு அப்பத் தெரிஞ்சுடுமே...! நான் சொன்னது பொய்யாயிட்டா, சட்டம் தர்ற தண்டனையை நான் ஏத்துக்கிறேன். அதே மாதிரி, நீங்க பொய் சொல்லியிருந்தா... அதே சட்டத்துக்குக் கட்டுப்பட்டு...''

கோகிலம் பேசிக்கொண்டிருக்கும்போதே, ஜெயப்பிரகாசம் பொறுமை இழந்தவராக நாற்காலியைத் தள்ளிக் கொண்டு எழுந்தார்.

''டாக்டர்... திஸ் இஸ் டூ மச்... இந்த டார்ச்சரை இனிமேலும் பொறுத்துக்க முடியாது. விஷயத்தை போலீஸுக்குக் கொண்டு போயிடுவோம்...''

''மிஸ்டர் ஜெயப்பிரகாசம்! ப்ளீஸ் வெயிட்...''

''ஸாரி டாக்டர்...'' ரிஸீவரை எடுத்து போலீஸுக்கு டயல் செய்ய முயன்ற ஜெயப்பிரகாசத்தின் கையைப் பற்றினாள் ஆஷாதேவி.

''வே... வேண்டாம்...''

''ஏன் டாக்டர் பயப்படறீங்க...? தப்பு அவகிட்ட



இருக்கு. நம்மகிட்ட இல்லை...''

''மொதல்ல ரிஸீவரை வையுங்க...''

''டா... டாக்டர்...! உங்ககிட்ட ஏன் இவ்வளவு தடுமாற்றம்...?''

ஆஷாதேவி கலக்கமாக நிமிர்ந்தாள். நெற்றி வியர்வையில் குங்குமப்பொட்டு இளகியிருந்தது. கண்களில் நீர் பளபளத்தது. உலர்ந்த உதடுகளிலிருந்து வார்த்தைகள் திக்கித் திணறிச் சிரமமாக வெளிப்பட்டன.

''போலீஸுக்குப் போய்... அதுக்கப்புறம் டி.என்.ஏ. டெஸ்ட்டுக்குப் போய்த் தெரியவேண்டிய உண்மையை இப்பவே சொல்லிடறது பெட்டர்னு நினைக்கிறேன்... விபா உங்க பொண்ணு கிடையாது...''

''வாங்க... உள்ளே வாங்க... உங்களுக்காகத்தான் வெயிட் பண்ணிட்டிருக்கேன்...''

கெஸ்ட்ஹவுஸை வாங்கவந்த பார்ட்டியை ராம்கோபால் வரவேற்றுக் கொண்டிருக்க... நகம் கடித்துப் படபடமாகத் துப்பியபடி, சுவரில் சாய்ந்து நின்றிருந்த ஷ்யாம் எரிச்சலாகத் திரும்பிப் பார்த்தான்.

புதிதாகக் கல்யாணமான தினுசில் அந்த அழகான இளம் தம்பதி பார்வைக்குக் கிடைத்தார்கள். கூடவே ஒட்டடைக்குச்சியாக புரோக்கர் பொன்னுசாமி, தாம்பூல வாயோடு அண்ணாந்து ஜாக்கிரதையாகப் பேசிக் கொண்டிருந்தார்.

''இதுமாதிரியான பங்களாவை எல்லாம் இப்போ படிச்சுட்டு வர்ற இன்ஜினியர்ஸ் கட்டவே முடியாது. கருங்கல் வெச்சுக் கட்டின கோட்டை மாதிரி வீடு. மொத்தம் மூவாயிரத்துச் சொச்சம் சதுர அடி. எல்லாமே மார்பிள்... கதவு, ஜன்னல்னு எதை எடுத்துக்கிட்டாலும் சரி... பர்மா தேக்குதான்! பத்து வருஷத்துக்கு முன்னாடி போட்ட பாலீஸ். இன்னும் கண்ணாடி மாதிரி இருக்கு. சுத்திலும் இருபது தென்னைமரம். வேண்டிய மட்டும் சிறுவாணித் தண்ணி. தூசி தும்பு இல்லாத காத்து.

கார்த்தால அஞ்சு மணிக்கு எழுந்திரிச்சு, மொட்டை மாடியில் போய் நின்னு காத்தை சுவாசிச்சா, தொண்டை இனிக்கும். இந்த ஏரியாவுக்குக் குடிவர்றவங்க, போனஸா ஒரு அஞ்சு வருஷம் உயிர்வாழலாம்...''

ராம்கோபால் சிரித்தார். ''பொன்னுசாமி... அரசியல்வாதிங்க மாதிரி பேசிக்கிட்டிருக்காம, வந்தவங்களுக்கு வீட்டை சுத்திக்காட்டு...''

பொன்னுசாமி, அவர்களை அழைத்துக் கொண்டு உள்ளே போக முயல... ஷ்யாம் எதிர்ப்பட்டான்.

''பொன்னுசாமி...''

''ஐயா...''

''அவங்களுக்கு நானே வீட்டைக் காட்டறேன். அப்படிப் போய் உட்கார்...''

''நீங்களே காட்டறீங்களா... அதுவும் சரிதான்...'' - பொன்னுசாமி நகர்ந்து போய்விட, ராம்கோபால் அந்த இளைஞனிடம் சொன்னார்: ''ஹி இஸ் மை பிரதர்... ஷ்யாம்...''

''ஹலோ...'' - கைகளைக் குலுக்கிக் கொண்டார்கள். ஷ்யாம் கேட்டான்.

''நீங்க என்ன பண்றீங்க...?''

''பிஸினஸ்! சேலத்துல 'மஹா அசோஸியேட்ஸ்'ங்கிற பேர்ல, டெக்ஸ்டைல்ஸ் ஸ்பேர்ஸ் சப்ளையர்ஸா இருக்கோம். என் பேர் சரவணன். ஷி இஸ் மை வொய்ஃப்...''

''ப்ளீஸ்... கம் வித் மீ...''

ஷ்யாம் அவர்களை உள்ளே அழைத்துக்கொண்டு நடந்தான். ''இந்த பங்களாவுக்கு மொத்தம் ரெண்டு ஹால். உங்களுக்கு வேண்டாம்னா, ஒரு ஹாலை ரெண்டா தடுத்து ரூம்ஸ் பண்ணிக்கலாம். பை த பை... சேலத்திலிருந்து கோயம்புத்தூருக்கு எதுக்காக வர்றீங்க...?

''இங்கே ஒரு பிஸினஸை ஆரம்பிக்கப்போறோம்...''

''இது டைனிங் ரூம்! டெக்ஸ்டைல்ஸ் பிஸினஸ் இப்போ அவ்வளவு ஹெல்தியா இல்லையே...?''



''தெரியும்... இருந்தாலும், வேற பிஸினஸ்ல ரிஸ்க் எடுக்கப் பயமா இருக்கு...''

அந்தப் பெண் கேட்டாள்: ''கிச்சன் எங்கே...?''

''கம் திஸ் வே...'' - டைனிங் ரூமை ஒட்டிச் சென்ற நடைபாதையில் நடந்து ஷ்யாம் போக, அவர்கள் பின்தொடர்ந்தார்கள்.

''இந்த வீட்டை நீங்க கட்டினதா... இல்லை... வாங்கினதா...?''

''வாங்கினதுதான்... காரைக்குடி செட்டியார் ஒருத்தர் வித்துட்டுப் போனார். இது கிச்சன்...''

''இவ்வளவு பெரிய பங்களாவுக்கு கிச்சன் சின்னதா இருக்கே...?''

''அந்தக் காலத்துல இது போதும்னு நினைச்சிருக்கலாம்...''

வெளியே வந்தார்கள்.

''இது ஒரு பெட்ரூம்...'' - போஸ்ட்மேன் காதரின் உடல் இருந்த அறையைக் காட்டிவிட்டுத் தயங்கினான் ஷ்யாம்.

''உள்ளே போய்ப் பார்க்கணுமா...?''

''பார்க்கலாமே...'' - அறைக்குள் அந்தப் பெண் நுழைந்தாள். ஷ்யாமின் பார்வை, காதரின் உடல் திணித்து வைக்கப்பட்டிருந்த வார்ட்ரோப் பக்கமாகப் போயிற்று.

'ஏதாவது வித்தியாசமாகத் தெரிகிறதா...?' பார்த்தான். லேசாக ஒரு ரத்தத் தீற்றல் மட்டும் தெரிந்தது.

சரவணன் கேட்டான்: ''அறையோட டைமென்ஷன் எவ்வளவு...?''

''சிக்ஸ்டீன் பை சிக்ஸ்டீன்...''

''அட்டாச்டு பாத்ரூம் தானே...?''

''ஆமா... அதோ, அந்த கார்னர் கதவு...''

அந்தப் பெண் மட்டும் போய், பாத்ரூம் கதவைத் திறந்து பார்த்துவிட்டு வந்தாள்.

''போகலாமா...?'' - ஷ்யாம் வியர்வையை கர்ச்சீப்பால் ஒற்றிக்கொண்டே வெளியே வந்தான்.

ஸ்டோர் ரூம் பக்கம் போகாமல், பங்களாவிலிருந்த எல்லா அறைகளையும் காட்டிவிட்டுத் திரும்பும்போது சரவணனின் பார்வை, சாத்தியிருந்த ஸ்டோர் ரூம்மேல் படிந்தது.

''அது... ஸ்டோர் ரூம்தானே...?''

''ஆ... ஆமா...'' - ஷ்யாம் எச்சில் விழுங்கிக் கொண்டு சொல்ல, சரவணன் மனைவியை ஏறிட்டான்.

''போய்ப் பார்க்றதாயிருந்தா பாரு...''

அவள் ஸ்டோர் ரூமை நோக்கி அடியெடுத்து வைக்க, ஷ்யாம் பதட்டம் காட்டாமல் குறுக்கிட்டான்.

''ஸாரிங்க! அந்த ரூம் பூட்டியிருக்கு... சாவியை எங்கேயோ வெச்சுட்டு, ஒரு வாரமா தேடிக்கிட்டிருக்கேன்...''

''நோ ப்ராப்ளம்... அந்த ரூம் என்ன அளவு...?''

''எய்ட் பை எய்ட்...''

ராம்கோபாலிடம் வந்தார்கள். பொன்னுசாமியிடம் டாகுமெண்ட் காப்பிகளைக் காட்டி ஏதோ சொல்லிக் கொண்டிருந்த ராம்கோபால் புன்னகையோடு கேட்டார்.

''என்ன சரவணன்... உங்க வொய்ஃபுக்கு வீடு பிடிச்சுதா...?''

''ம்... ஓகே சொல்லிட்டா!''

''அப்புறமென்ன...? இந்தாங்க, பத்திர காப்பி, வில்லங்க சர்டிபிகேட்... உங்க லாயர்கிட்ட கொண்டு போய்க் காட்டுங்க. லீகல் ஒபீனியன் தெரிஞ்சதும் ஒரு டேட் ஃபிக்ஸ் பண்ணுங்க. ரெஜிஸ்தர் பண்ணிடலாம்...''

ஹாலின் மூலையில் டெலிபோன் கூப்பிட்டது. சுவரில் சாய்ந்து, நகம் கொறித்துத் துப்பிக் கொண்டிருந்த ஷ்யாம், வேக நடையில் போய் ரிஸீவரை எடுத்தான்.

''சரி சார்...'' - ஷ்யாம் ரிஸீவரை வைத்துவிட்டு ராம்கோபாலிடம் வர, அவர் கேட்டார்: ''போன்ல யாரு...?''

''என் ஃப்ரெண்ட்...''

''ஊரைச் சுத்தலாம், வா...னு கூப்பிடறானா...?''



சரவணனும் அவனுடைய மனைவியும் பத்திர காப்பியை மும்முரமாகப் படித்துப் பார்த்துக் கொண்டிருக்க, அவர்களை ஒரு தடவை பார்வையால் நனைத்துவிட்டு அண்ணனை ஏறிட்டான் ஷ்யாம்.

''என் ஃப்ரெண்ட் ஒருத்தன் ஹாஸ்பிட்டல்ல அட்மிட் ஆகியிருக்கான்...''

''போயிட்டு வாயேன்.''

''பங்களாவை...''

''நான் பூட்டிட்டு வரேன்...! அவங்க டாகுமெண்ட் காப்பியைப் படிச்சுப் பார்த்துக்கிட்டிருக்காங்க. அவங்க ஏதாவது சந்தேகம் கேட்டா சொல்ல வேண்டாமா...? நீ கிளம்பு...''

''அது... வந்து...''

''என்ன?''

''நீ... நீங்க... கிளம்ப இன்னும் எவ்வளவு நேரமாகும்?''

ராம்கோபால் தன் தாடையைத் தேய்த்துக் கொண்டு, ஷ்யாமை ஒரு புதுப் பார்வை பார்த்தார். குரலைத் தாழ்த்திக் கொண்டு கேட்டார்: ''நான் இங்கே இருக்கிறதுனால உனக்கென்ன கஷ்டம்...?''

''கஷ்டம் ஒண்ணுமில்லை...''

''பின்னே என்ன... கிளம்பு! நான் பார்ட்டியை அனுப்பிட்டு, வீட்டுக்கு லஞ்சுக்கு வந்துடறேன். நீயும் வீட்டுக்கே வந்துடு...''

தயக்கமாகத் தலையாட்டிவிட்டு, புயலடிக்கிற மனதோடு வாசலை நோக்கி நடந்தான் ஷ்யாம்.

வாசல் கதவைத் தாண்டும் முன்பாக, ஹாலின் மூலையை நோக்கிப் பார்வை போக... ரத்த ஓட்டத்தில் ஐஸ்வாட்டர் கலந்த மாதிரியான உணர்ச்சி!

ஹாலின் மூலையில் போஸ்ட்மேன் காதரின் பின்னந் தலையைப் பதம் பார்த்த அந்த சட்டி மர உருட்டுக்கட்டை தெரிய, அதன் முனையில் கொஞ்சம் ரத்தம்... நிறைய ஈக்கள்!



**ரெப்ளிகா வால்தர் பி.38 எனும் துப்பாக்கி. இதன் மதிப்பு இந்திய ரூபாயில் ஏறக்குறைய ரூ.2,958.00 (39.95 பவுண்)**

# 11

ஒரு மைக்ரோ செகண்ட் விநாடிதான்!

மின்னல் வேகத்தில் அந்த உருட்டுக்கட்டையைக் கையில் எடுத்துக் கொண்ட ஷ்யாம், மெள்ள திரும்பி அண்ணன் ராம்கோபாலைப் பார்த்தான். அவர் சரவணனிடம் ஏதோ சிரித்துப் பேசிக் கொண்டிருந்தார்.

ராம்கோபால் பேசிக் கொண்டிருக்கும்போதே ஷ்யாம் போர்டிகோவுக்கு வந்து, காரின் டிக்கியைத் திறந்து உள்ளே உருட்டுக்கட்டையைப் போட்டு, டிரைவிங் ஸீட்டுக்கு வந்து இக்னீஷியனைக் கனைக்க வைத்தான். சீலர் விழுந்தடித்துக் கொண்டு ஓடிப் போய் காம்பௌண்ட் கேட்டைத் திறந்து வைக்க... கார் ஒரு சூறாவளியின் சீற்றத்தோடு வெளியேறியது.

மனசுக்குள் இயலாமை வெடிக்க, ஆக்ஸிலேட்டர் கோபமாக மிதிபட்டது.

'வார்ட் ரோப்புக்குள் போஸ்ட்மேனின் உடல்.'

'ஸ்டோர் ரூமுக்குள் மயக்கமான சாய்பிரசாத்.'

'கண்டு பிடித்து விடுவார்களா...?'

மனசுக்குள் பயம் நொண்டி அடித்தது. இதயம் பேயடி



அடித்துக் கொண்டு ரத்தத்தை இறைத்து இறைத்துப் போட்டது. உடம்பின் கேந்திரப் பகுதிகளில் வெள்ளமாக வியர்வை.

பத்து நிமிஷம் தறிகெட்டு ஓடிய கார், அவினாசி சாலை மேம்பாலத்தில் ஏறி, வழுக்கி செஷன்ஸ் கோர்ட்டை அரைவட்டம் அடித்துக் கொண்டு, அன்னபூர்ணா பிப்பிள்ஸ் பார்க் ஓட்டலுக்குள் நுழைந்து கார் பார்க்கிங்கில் மௌனமாயிற்று.

கீழே இறங்கி கார் கதவைப் பூட்ட முயன்ற விநாடி -

முதுகுக்குப் பின்னால் அந்த மென்மையான தொண்டைச் செருமல் சத்தம் கேட்டது.

''க்கும்...''

ஷ்யாம் திரும்பினான்.

ஆலீவ் வண்ண கடிதாரில் அந்தப் பெண் நின்றிருந்தாள். உயர்த்திப் போட்ட வலைக்கொண்டை. கண்களில் மீன் வடிவ குளிர் கண்ணாடி. உதடுகளில் பார்வையை உறிக்காத லிப்ஸ்டிக் பூச்சு. கழுத்தில் கறுப்பு பாசிமணி மாலை.

''ஹலோ... ஷ்யாம்'' - அவள் ஒரு மின்சாரப் புன்னகையைச் சிந்திக் கொண்டே பக்கத்தில் வர, ஷ்யாம் அவளைக் குழப்பப் பார்வை பார்த்தான்.

''நீ... நீங்க...?''

அவளுடைய புன்னகையில் வோல்டேஜ் கூடியது.

''என்னைத் தெரியலையா ஷ்யாம்?''

''தெ... தெரியலையே!''

''இப்பப் பாரு... தெரியும்...'' அவள் குளிர் கண்ணாடியைக் கழற்றிவிட்டு தலையை ஒரு பக்கமாகச் சாய்த்துப் பார்க்க... ஷ்யாம் இறுக்கமான முகத்தோடு தலையாட்டினான்.

''ஸாரி...! தெரியலை...''

''நேத்து ராத்திரி இருட்டுல பார்த்தது - என்னோட முகம் உன் மனசுல சரியா ரெஜிஸ்டராகலை போலிருக்கு!''

ஷ்யாமுக்குள் ஒரு நெருப்புப் பொறி பறந்தது.

"நீ... நீ... பிரம்மபுத்திரி...?"

"அதே... அதே...! சத்தம் போட்டுச் சொல்லாதே ஷ்யாம்...! என்னையும் என்னோட கூட்டாளியையும் பிடிக்கிறதுக்காக போலீஸ் ஜரூரா வேகத்தில் இயங்கிகிட்டிருக்கு... அதான் இப்படியொரு அவதாரம்...! காலேஜ் கேர்ள் மாதிரி இருக்கேனா?"

ஷ்யாம் எரிச்சலாக அவளைப் பார்த்தான். "நீ கேட்ட பணத்தை ரெடி பண்ணிட்டேன். ராத்திரி கெஸ்ட் ஹவுஸுக்கு வந்து வாங்கிக்க..."

"அதைப் பத்தி பேசறதுக்காகத்தான் உன்னை ஃபாலோ பண்ணிட்டு வந்தேன். ஷ்யாம்... காரை இப்படியா ரேஷ் டிரைவ் பண்றது...? உன்னைப் பின் தொடர்ந்து வர்றதுக்குள்ளே திணறிப் போயிட்டேன்..."

"சரி, என்கிட்ட என்ன பேசணும்... அதைச் சொல்லு மொதல்ல..."

"காருக்குள்ளே உட்கார்ந்து பேசலாமா? ரோட்டுக்குள்ளே போறவங்களும் வர்றவங்களும் உன்னையும் என்னையும் ஒரு மாதிரியாக பார்க்க ஆரம்பிச்சுட்டாங்க..."

ஷ்யாம், பிரம்மபுத்திரியை ஒரு தீப்பார்வை பார்க்க, அவள் சின்னதாக புன்னகைத்தாள்.

"கோபப்படாதே ஷ்யாம்... எனக்காக ஒரு பத்து நிமிஷம் ஒதுக்கு போதும்..."

காரின் கதவைப் படீரென்று திறந்து கொண்டு ஷ்யாம் உள்ளே போய் உட்கார, மறுபக்க கதவு வழியாக பிரம்மபுத்திரி வந்தாள். அவள் மேல் பரவியிருந்த பெர்ஃப்யூம் ஆர்க்கமாக மணத்தது. கண்ணாடிக் கதவுகள் சுற்றிலும் ஏற்றப்பட்டிருக்க, ஷ்யாம் தன் இடதுகை முஷ்டியால் முன்னிருக்கையைக் கோபமாகக் குத்திவிட்டு... பிரம்மபுத்திரியிடம் திரும்பினான்.

"என்கிட்ட என்ன பேசணும்... சொல்லு..."

"ஷ்யாம்... க்யூ பிராஞ்ச் போலீஸ் நாங்க இந்த ஊர்ல இருக்கிறதை எப்படியோ ஸ்மெல் பண்ணிட்டாங்க. நேத்து ராத்திரி உன்னோட கெஸ்ட் ஹவுஸ் இருக்கிற



ஏரியாவுக்கு நாங்க வந்ததை மோப்பம் பிடிச்சுட்டாங்க... அந்த ஏரியாவுல இருக்கிற ஒவ்வொரு வீட்டுக்கும் போய் எங்க போட்டோக்களைக்காட்டி விசாரணை பண்ணியிருக்காங்க. உன் வீட்டுக்கும் வந்திருப்பாங்களே?"

"ம்... வந்தாங்க..."

"பார்த்தியா...! அதனால இனிமே நாங்க அந்த ஏரியாவுக்கு வர முடியாது."

"சரி... நீயே வேற இடம் ஒண்ணைச் சொல்லு... அந்த இடத்துக்கு நானே வந்து பணத்தைக் குடுத்துடறேன்."

"ஆர்.எஸ்.புரம் சாஸ்திரி மைதானம்?"

"ஓகே...! எத்தனை மணிக்கு வரணும்?"

"ராத்திரி பதினோரு மணிக்கு வரணும்."

"வந்துடறேன்..."

"மைதானத்துக்கு வடக்குப் பக்கமா காரைக் கொண்டாந்து நிப்பாட்டிக்க. கீழே இறங்காம கார்லயே இரு. நானே வந்து பணத்தை வாங்கிக்கறேன்."

"சரி, விஷயம் அவ்வளவுதானே... இனி நீ கீழே இறங்கு!"

"இரு ஷ்யாம்..."

"என்ன... இனியும் என்ன...?"

"அந்த பையன் சாய்பிரசாத்தை கொன்னுட்டியாமே இல்ல..."

ஷ்யாம் உஷ்ணமானான்.

"அது உனக்குத் தேவையில்லாத விஷயம்..."

"தெரியும்... இருந்தாலும் தெரிஞ்சுக்கலாமேன்னு கேட்டேன். அழகான பையன்."

"நீ இப்ப காரைவிட்டு கீழே இறங்கப் போறியா இல்லையா?"

ஷ்யாம் சுட்டுவிரலை உயர்த்தி கோபமாகப் பேசிய விநாடி-

"டொக்... டொக்..."

காரின் கண்ணாடிக் கதவு தட்டப்பட்டது.

கொஞ்சம் முகம் மாறி பயத்தோடு யோசித்த ஷ்யாம், தயக்கத்தோடு காரின் கண்ணாடியைக் கீழே இறக்கினான்.

கண்ணாடி கீழே இறங்க... இறங்க...

கதவின் அந்தச் சதுரத்தில் இன்ஸ்பெக்டர் ஒருவரின் மீசை வைத்த முகம் தெரிந்தது.

டாக்டர் ஆஷாதேவி சொன்னதைக் கேட்டு கோகிலம் விடாப் பிடியாக புன்னகைத்துக் கொண்டிருக்க, யசோதா நாற்காலியைத் தள்ளிக்கொண்டு ஆவேசமாக முன்னால் வந்து இரைந்தாள்... "என்ன சொல்றீங்க டாக்டர்..? விபா எம் பொண்ணு கிடையாதா..?"

ஆஷாதேவி நிமிர்ந்து பார்க்கத் திராணியில்லாமல் தலையைக் குனிந்து கொண்டே "ஆமாம்..."

"எ... எப்படி... எப்படி டாக்டர்...? இந்தக் கோகிலம் மிரட்டறதைப் பார்த்துட்டு பயந்துட்டீங்களா...?"

ஆஷாதேவி தன் இடது கையின் ஆட்காட்டி விரலால் நெற்றியின் மையப்பரப்பை அவஸ்தையாகக் கீறியபடி நிமிர்ந்தாள். "மிஸஸ் யசோதா... நீங்க என்னை மன்னிக்கணும். விபா உங்களுக்குப் பிறந்த பொண்ணுதான்னு தொடர்ந்து என்னால பொய் பேசிட்டிருக்க முடியாது. காரணம், நாளைக்குப் பிரச்னை போலீஸுக்குப் போய் கோர்ட் வாசற்படி ஏறும்போது டி.என்.ஏ. டெஸ்ட் பண்ண வேண்டி வரும். உயிரியல் விஞ்ஞானம் மூலமா உண்மை தெரியும்போது அவமானம் தான் மிஞ்சும். என்னிக்கோ தெரியப் போகிற உண்மை இன்னிக்கே தெரிஞ்சுட்டா, விஷயம் இந்த ரூமை விட்டு வெளியே போகாதபடி பார்த்துக்கலாம்."

யசோதா இரண்டு கைகளாலும் தலையைப் பற்றிக் கொண்டு வெறித்த பார்வையோடு உட்கார்ந்துவிட ஜெயபிரகாசம் இப்போது சீறினார்.

"டாக்டர்! விபா எங்களுக்குப் பிறந்த குழந்தையில்லைன்னு சொல்றீங்க... அப்படின்னா



உண்மையிலேயே எங்களுக்கு பிறந்த குழந்தை என்னாச்சு...?"

ஆஷாதேவி உதட்டைக் கடித்துக் கொண்டு சில விநாடிகள் மௌனமாக இருந்துவிட்டு, பின் மெல்லிய குரலில் பேச்சை ஆரம்பித்தாள்.

"மிஸ்டர் ஜெயப்பிரகாசம்... இருபத்திரண்டு வருஷங்களுக்கு முன்னாடி நடந்த அந்தச் சம்பவம் என்னைப் பொறுத்தவரைக்கும் நியாயமான ஒண்ணுதான். உங்க மனைவி பிரசவத்துக்காக இங்கே அட்மிட்டாகியிருந்த அதே நேரத்துல தான் ஆட்டோவில் அடிபட்டு நினைவிழந்த நிலையில ஒரு பொண்ணும் இங்கே அட்மிட்டாகி இருந்தா. அந்தப் பொண்ணும் நிறைமாத கர்ப்பமா இருந்தா. அவ யார், எந்த ஊரைச் சேர்ந்தவங்கிற விவரமும் தெரியலை. ஒரு தடவை நினைவு திரும்பியபோது தன்னோட 'பேரு அம்சவேணி'ன்னு சொன்னா. அதுக்கப்புறம் அவ பேசவேயில்லை..."

அறைக்குள்ளே வேண்டாத மௌனம் நிலவிக்கொண்டிருக்க, ஆஷாதேவி சில விநாடிகள் பேச்சை நிறுத்திவிட்டு, பின் பிசிறு தட்டிப்போன குரலில் தொடர்ந்தாள்:

"மிஸ்டர் ஜெயப்பிரகாசம்... ஒரு விஷயம் உங்களுக்கு ஞாபகம் இருக்கும்னு நினைக்கிறேன். இருபத்திரண்டு வருஷங்களுக்கு முன்னாடி இந்த ஹாஸ்பிட்டல் இவ்வளவு பெரிசு கிடையாது. பின்பக்கம் கட்டடம் எழுப்ப முயற்சி பண்ணி கையில் பணம் இல்லாததால் அந்த வேலை அப்படியே முடங்கிக் கிடந்தது. யசோதாவை இங்கே பிரசவத்துக்காக சேர்த்த அன்னிக்கு 'கட்டட வேலை ஏன் பாதியில நிக்குது?'ன்னு கேட்டீங்க. நான் 'ஃபண்ட்ஸ் இல்லே'ன்னு சொன்னேன், நீங்க உடனே உங்க செக் புக்கை எடுத்து ஒரு லட்ச ரூபாய்க்கு செக் எழுதி என்கிட்ட கொடுத்துட்டு ஒரு வார்த்தை சொன்னீங்க... அது உங்களுக்கு ஞாபகம் இருக்கா...?"

''ம்... இருக்கு...! 'என்னோட மனைவிக்குச் சுகப் பிரசவம் பார்க்கப் போறெ உங்களுக்கு நான் கொடுக்கிற அட்வான்ஸ் ஃபீஸ்'ன்னு சொன்னேன்... உங்க ஹாஸ்பிட்டல் கட்டட வேலைக்கு அந்தப் பணம் உதவியாயிருக்கட்டும்ங்கிற நல்ல எண்ணத்துலதான் அந்த செக்கைக் கொடுத்தேன்...''

ஆஷாதேவி பெருமூச்சுவிட்டாள். ''அந்த ஒரு லட்ச ரூபாய் செக்தான் இந்தக் குளறுபடிக்குக் காரணம்.''

''டாக்டர்... நீங்க என்ன சொல்றீங்க?''

''உங்க மனைவி யசோதாவுக்கும் அந்தப் பெண் அம்சவேணிக்கும் ஒரே சமயத்துலதான் பிரசவம் நடந்தது. குழந்தையைப் பெத்த மறுநிமிஷமே அம்சவேணி இறந்துட்டா. அழகான பெண் குழந்தை... பட், யசோதாவுக்குக் குழந்தை இறந்தே பிறந்தது. எனக்கு பயங்கர அதிர்ச்சி. உங்ககிட்ட உண்மையைச் சொல்ல எனக்குத் தயக்கமாயிருந்தது. காரணம் - நீங்க எனக்குக் கொடுத்த ஒரு லட்ச ரூபாய் செக். அந்தச் சமயத்துல அந்தப் பணம் எனக்குத் தேவையாயிருந்தது. உண்மையைச் சொல்ற பட்சத்தில் அந்த செக்கை உங்களுக்குத் திருப்பிக் கொடுக்கறதுதான் சரியான முறையாக இருக்கும். என்ன பண்றதுன்னு யோசிச்சு... கடைசியில மனசைக் கல்லாக்கிக்கிட்டு அம்சவேணியோட குழந்தையை உங்க குழந்தைன்னு காட்டிட்டேன்.''

யசோதா மறுபடியும் கோபாவேசமாக எழுந்து ஏதோ பேச முயல, ஜெயப்பிரகாசம் அவளுடைய புஜத்தைப் பற்றி அமர்த்தினார்.

''யசோதா... இனிமே இந்த கோபத்துக்கும் ஆவேசத்துக்கும் இங்கே அர்த்தம் கிடையாது. விபாவுக்கு அடுத்த வாரம் கல்யாணம். விபா உன் வயித்துல பிறக்கலைன்னாலும் இந்த ஊர் உலகத்துக்கு அவ உன் பொண்ணுதான்...! பார்... விபா உடைஞ்சு போய் அழுதுட்டிருக்கா... அவளைச் சமாதானம் பண்ணு...''



ஆஷாதேவி கண்களில் நீர் மின்ன யசோதாவின் அருகே போய் அவளுடைய கைகளைப் பற்றிக் கொண்டாள்.

''பெத்தவளைக் காட்டிலும் வளர்த்தவதான் தாய்னு சொல்லுவாங்க. அந்த வகையில் பார்த்தா நீங்கதான் விபாவுக்கு அம்மா. இருபத்திரண்டு வருஷமா தூங்கிக்கிட்டிருந்த இந்த உண்மை இந்த அறையைவிட்டு இனி வெளியே போகாது...''

''எக்ஸ்க்யூஸ்மீ டாக்டர்...'' அதுவரைக்கும் ஒன்றும் பேசாமல் உட்கார்ந்திருந்த கோகிலம் குரல் கொடுக்க, ஆஷாதேவி திரும்பினாள்.

''என்ன...?''

''நான் ஒரு போன் பண்ணிக்கலாமா...?''

''யா... யாருக்கு போன் பண்ணே?''

''விபாவோட ஒரிஜினல் அப்பாவுக்கு.''

## 12

கோகிலம் சொன்ன அந்த ஒற்றைவரி பதிலில் எல்லோரும் உறைந்து போக, டாக்டர் ஆஷாதேவி மட்டும் அதிர்ச்சியை ஜீரணித்துக் கொண்டு பதட்டம் கசிந்த குரலில் கேட்டாள்.

''யா... யாருக்கு போன் பண்றதா சொன்னே...?''

கோகிலத்தின் உதடுகளில் தொற்றியிருந்த அந்த வேண்டாத புன்னகை தன் பரப்பளவை அதிகப்படுத்திக் கொண்டது.

''விபாவோட ஒரிஜினல் அப்பாவுக்கு.''

''வி... விபாவுக்கு அப்பா இருக்காரா..?''

''அப்பா இல்லாமே எப்படி...?'' - கோகிலம் அந்த அசௌகரியமான வேளையில் அடித்த ஜோக்குக்கு டெபாசிட் போயிற்று.

ஜெயப்பிரகாசம் வேக வேகமாக அவள் பக்கத்தில் வந்து நின்றார்.

''மொதல்ல ரிஸீவரைக் கீழே வை!''

"ஏன்...?"

"வை... சொல்றேன்..."

கோகிலம் ரிஸீவரை வைத்துவிட்டு இரண்டு கைகளாலும் அலட்சியமாக மோவாயைத் தாங்கிக் கொண்டாள்.

"ம்... சொல்லுங்க..."

"நீ யாருக்கும் போன் பண்ண வேண்டாம்."

"போன் பண்ண வேண்டாமா..? ஏன்? விபாவோட அப்பா யாருனு நீங்க தெரிஞ்சுக்க வேண்டாமா?"

"அவசியம் இல்லை...! இனிமே பழசையெல்லாம் போட்டுக் கிளறிட்டிருக்க வேண்டாம். விபாவுக்கு நாங்கதான் அப்பா - அம்மா..."

கோகிலம் சிரித்தாள். "அப்படின்னு நீங்க சொல்லிக்கலாம். பட், அது உண்மையாகாதே...!"

"சரி... நான் நேரடியாகவே விஷயத்துக்கு வந்துடறேன். உனக்கு எவ்வளவு பணம் வேணும்...?"

"பணமா..? எனக்கெதுக்குப் பணம்...?"

"அதுக்காகத்தானே இவ்வளவு மெனக்கெட்டுப் பழசையெல்லாம் கிண்டிக்கிட்டு இருக்கே...?"

"மன்னிக்கணும்... நீங்க நினைக்கிற மாதிரி நான் பிளாக்மெயிலர் கிடையாது. எனக்கு உங்ககிட்டயிருந்து ஒரு பைசாகூட வேண்டாம்... பட், இந்த விஷயத்தை நான் அடைக்காக்கவும் முடியாது."

ஜெயப்பிரகாசம் திகைப்பாய் அவளைப் பார்த்தார்.

"நீ... நீ... என்ன சொல்றே...?"

"விபாவோட அப்பா, தாத்தா, பாட்டி மூணு பேரும் ஹாஸ்பிட்டலுக்கு வெளியே கார்ல கையில் செல்போனை வெச்சுக்கிட்டு காத்திட்டிருக்காங்க. நான் போன் பண்ணா போதும்... அடுத்த நிமிஷம் இங்கே இருப்பாங்க."

"வே... வேண்டாம்...! போன் பண்ணாதே..."

"நான் போன் பண்ணாம இருக்க முடியாது மிஸ்டர் ஜெயப்பிரகாசம்... விபாவைக் கண்டு பிடிச்சுத் தர்றதா நான் ஏற்கெனவே ஒப்பந்தம் போட்டு ஒரு பெரிய



தொகையையும் கையில் வாங்கிட்டேனே...! ஒப்பந்தத்தை நான் மீற முடியுமா என்ன...?"

யசோதா மறுபடியும் ஆவேசமாகி கோகிலத்தின் மேல் பாய முயல, ஜெயப்பிரகாசம் அவளைத் தடுத்தார்.

"யசோதா... இனி கோபம் உதவாது. பிரச்னையைப் பேசித்தான் தீர்க்கணும்."

"அது புத்திசாலித்தனம்!" கோகிலா புன்னகைக்க ஜெயப்பிரகாசம் அவள் பக்கமாகத் திரும்பினார்.

"யார் அவங்க...?"

"விபாவோட அப்பா சம்பந்தப்பட்ட ஃபேமிலியைத்தானே கேட்கறீங்க...?"

"ஆமா..."

"அது ஒரு ஜமீன் பரம்பரை ஃபேமிலி. பூர்வீகம் ஆந்திராவைச் சேர்ந்த ஹன் கொண்டா. மெட்ராஸுக்கு வந்து செட்டிலாகி இருபத்தஞ்சு வருஷமாச்சு... இப்ப இருக்கிற ஜமீன்தார் பேரு ருத்ர நரசிம்மலு. அவரோட மனைவி சாந்தம்மா. அவங்களுக்கு ஒரே ஒரு ஆண் வாரிசுதான். பேரு விஜயேந்திரன். விபாவுக்கு அப்பா இந்த விஜயேந்திரன்தான்..."

"என்ன மறுபடியும் கதை சொல்ல ஆரம்பிச்சுட்டியா?"

"ஐயையோ..! இது கதை கிடையாது. ஒவ்வொரு அட்சரமும் உண்மை. என்னோட அக்கா அம்சவேணி இருபத்தாறு வருஷத்துக்கு முன்னாடி கொரட்டூரில் இருந்த ஜமீன் பங்களாவில் தோட்ட வேலைக்குப் போயிட்டிருந்தா. அந்தச் சமயத்துலதான் விஜயேந்திரனுக்கும் அம்சவேணிக்கும் தொடர்பு ஏற்பட்டிருக்கு. வயித்துல கரு ஏறினதும் விஜயேந்திரன் கழன்றுகொள்ள... கருவைக் கலைக்க முடியாத அக்கா ஊரைவிட்டே ஓடியிருக்கா. அதுக்கப்புறம் விஜயேந்திரனுக்கு ஜமீன் பரம்பரையில் இருந்து ஒரு பெண்ணைக் கல்யாணம் பண்ணி வெச்சதும், ஒரு கார்ரேஸ்ல கலந்துகிட்ட விஜயேந்திரனுக்கு இடுப்புல அடிபட்டு ஆண்மை

பறிபோனதும், அதைக் காரணம் காட்டி விஜயேந்திரனின் மனைவி டைவோர்ஸ் வாங்கி வேற ஒருவரைக் கல்யாணம் பண்ணிக்கிட்டதும்... இப்படி எல்லாமே கடந்த இருபத்தஞ்சு வருஷ காலத்துக்குள்ளே நடந்து முடிந்த சம்பவங்கள்...''

எல்லோரும் கோகிலத்தையே பார்த்துக் கொண்டிருக்க, அவள் சேலைத் தலைப்பால் நெற்றி வியர்வையை ஒற்றியபடி தொடர்ந்தாள்.

''ரெண்டு வருஷத்துக்கு முந்தி நான் மெட்ராஸில் இருந்தப்ப ஒரு நாள் சாயந்தர நேரம் என் வீட்டுக்கு முன்னாடி ஒரு கார் வந்து நின்னது. காரிலிருந்து விஜயேந்திரனும் அவரோட அப்பாவும் அம்மாவும் இறங்கி வந்தாங்க. என்னோட அக்கா அம்சவேணியைப் பத்திக் கேட்டாங்க. 'இருபத்திரண்டு வருஷத்துக்கு முந்தி வீட்டைவிட்டு ஓடிப்போன அக்கா இப்போ எங்கே இருக்காளு எனக்குத் தெரியாது. நானும் அவளைத்தான் தேடிக்கிட்டு இருக்கேன்'னு சொன்னேன்.

விஜயேந்திரனுக்குக் குழந்தை பிறக்காததனால ஜமீன் பரம்பரைக்கு வாரிசே இல்லாமப் போகக்கூடிய அபாயம் ஏற்பட்டிருக்கிறதாகவும், அதனால எப்பாடு பட்டாவது அம்சவேணியையும் அவளுக்குப் பிறந்த குழந்தையையும் கண்டு பிடிச்சே ஆகணும்னும் சொன்னாங்க. அதுக்கான முயற்சிகளை எடுத்துக்கும்படியா சொல்லி ஒரு பெரிய தொகையையும் எனக்குக் கொடுத்தாங்க. நான் அக்காவைத் தேடிக் கண்டு பிடிக்கிற முயற்சியில் தீவிரமா இறங்கினேன். அம்சவேணி கோயம்புத்தூர் பக்கமாத்தான் போயிருக்கணும்னு அவ ப்ஃரெண்ட் ஒருத்தி சொன்னதை வெச்சுக்கிட்டு இந்தப் பக்கமா வந்து ஒரு வீடு எடுத்துத் தங்கினேன். கடந்த ரெண்டு வருஷ காலமா அலைஞ்சதுக்குப் போன வாரம்தான் பலன் கிடைச்சது. விபாவை காந்திபுரம் கிக்னல்கிட்டே பூ வாங்கிக்கிட்டு இருக்கும்போது பார்த்தேன். அக்கா



அம்சவேணியையே ஜெராக்ஸ் எடுத்த மாதிரியான தோற்றம். ஃபாலோ பண்ணினேன். வீட்டைக் கண்டு பிடிச்சேன். உங்க குடும்பப் பின்னணியைத் தெரிஞ்சுக்கிட்டு அவங்களுக்குத் தகவல் கொடுத்தேன். அவங்களும் உடனே புறப்பட்டு வந்தாங்க. விபாவைப் பார்த்தாங்க. உண்மையை வெளியே கொண்டு வர்றதுக்காக அவங்க சொல்லிக் கொடுத்தபடி காய்களை மூவ் பண்ணினேன். உண்மை இப்போ அதிகாரபூர்வமா வெளிப்பட்டிருக்கு... அவங்க வெளியே கார்ல என் போன் காலுக்காக வெயிட் பண்ணிட்டிருப்பாங்க. நான் போன் பண்ணவா... வேண்டாமா...?''

''போன் பண்ணு...'' ஜெயப்பிரகாசம் கையை உயர்த்த கோகிலம் ஒரு 'தேங்க்யூ' சொல்லி ரிஸீவரை எடுத்துக் கொண்டு டயலில் எண்களைத் தட்டினாள். மறுமுனையில் ரிங் போய் குரல் கேட்டது.

கோகிலம் பேசினாள்.

''சார்... அம்மாக்கு உண்மை வெளியே வந்தாச்சு. விபா உங்க பொண்ணுதான்...''

''......''

''ஆமா...! டாக்டரே ஒப்புக்கிட்டார்.''

''......''

''அக்காவா...? அக்கா உயிரோடு இல்லை. டெலிவரி சமயத்துல இறந்துட்டாங்களாம்...''

''......''

''என் பார்ட் ஓவர். இனிமே நீங்கதான் இந்தப் பிரச்னையை டீல் பண்ணிக்கணும்...''

''......''

''வாங்க... அவங்க காத்துக்கிட்டிருக்காங்க...'' பேசிவிட்டு ரிஸீவரை அதனிடத்துக்குக் கொடுத்த கோகிலம் ஜெயப்பிரகாசத்தை ஏறிட்டாள்.

''அவங்க வர்றாங்க...''

அறைக்குள் ஒரு பிடிவாதமான நிசப்தம் உருவாகிக் கொண்டிருக்க... எல்லோரும் காத்திருக்க ஆரம்பித்தார்கள்.

சரியாக ஐந்து நிமிஷம்.

''டொக்... டொக்...!''

அறைக்கதவு மெலிதாக தட்டப்பட்டது. டாக்டர் ஆஷாதேவி கமறிய குரலில் ''யெஸ்... கம்மின்'' என்று குரல் கொடுக்க, கதவு தள்ளப்பட்டு அவர்கள் உள்ளே நுழைந்தார்கள்.

க்ரே வண்ண ஷெர்வாணி அணிந்த ஒரு பெரியவர் இரட்டை நாடி சரீரத்துக்குப் பட்டுப்புடவை கொடுத்திருந்த ஒரு அம்மாள், பைஜாமா ஜிப்பா அணிந்த நடுத்தர வயது நபர் ஒருவர்.

கடைசியாக -

அகன்ற தோள்களோடு இரண்டு முரட்டு ஆட்கள்.

கார் கதவின் அந்தச் சதுரத்தில் இன்ஸ்பெக்டர் ஒருவரின் மீசை வைத்த முகம் தெரிய, ஷ்யாமின் இதயப் பிரதேசம் கார்கில் பகுதியாகமாறி போஃபர்ஸ் பீரங்கிகள் முழங்கின. இருந்தாலும் உதட்டுக்குப் புன்னகையைக் கொடுத்தான்.

''யெஸ்...''

அந்த இன்ஸ்பெக்டர் சொன்னார்.

''எக்ஸ்க்யூஸ்மீ... உங்க காரைக் கொஞ்சம் தள்ளி பார்க் பண்ணிக்க முடியுமா...? கமிஷனரோட காரை ரிவர்ஸ் எடுக்க வேண்டியிருக்கு...''

''நோ... ப்ராப்ளம்'' ஷ்யாம் காரை விட்டு இறங்கி டிரைவிங் ஸீட்டுக்கு வந்தான்.

''ஸாரி ஃபார் த ட்ரபுள்! சந்தோஷமா பேசிட்டிருந்த உங்களுக்குத் தொந்தரவு கொடுத்துட்டேன்...''

''ஸோ வாட்...'' - செயற்கையாக சிரித்த ஷ்யாம், காரை நகர்த்தி ஓட்டலுக்குப் பின்பக்கமாக இருந்த பார்க்கிங் ப்ளேஸில் கொண்டுபோய் நிறுத்தினான்.

பின் ஸீட்டில் உட்கார்ந்து இருந்த பிரம்மபுத்திரி சிரித்தாள்.

''ஒரு நிமிஷம் நடுங்கிப் போயிட்டேன். ஏதோ மறு ஜென்மம் எடுத்த மாதிரி இருக்கு...''

''இனியும் என்ன... கீழே இறங்கிப் போய்க்கிட்டே



இரு...! நீ என் பக்கத்துல இருந்தா ஏதோ ஐம்பது கிலோ ஆர்.டி.எக்ஸ் டைனமைட்டுக்குப் பக்கத்துல உட்கார்ந்துட்டிருக்கிற மாதிரி இருக்கு. மொதல்ல இடத்தைக் காலி பண்ணு...''

''சொன்னதெல்லாம் ஞாபகம் இருக்கா...?'' என்று கேட்டாள் பிரம்மபுத்திரி.

''இருக்கு...''

''எதுக்கும் டெஸ்ட் பண்ணிக்கிறேன்... பணத்தை எங்கே கொண்டு வரணும்...?''

''சாஸ்திரி மைதானம்! போதுமா...?''

''எத்தனை மணிக்கு...?''

''பதினோரு மணிக்கு...!''

''தொகை...?''

''ரெண்டு லட்சம்...''

''ஓகே ஷ்யாம்... ராத்திரிக்கு மீட் பண்ணுவோம்...'' - சொல்லிக் கொண்டே காரின் கதவை 'ப்ளக்' என்று திறந்து கீழே இறங்க முயன்ற பிரம்மபுத்திரி, ஷ்யாமின் தோள் மேல் கையை வைத்தாள்.

''ஷ்யாம்...''

''என்ன..?''

''அந்த இன்ஸ்பெக்டர் உன்னையும் என்னையும் கிட்டத்தட்ட கணவன் மனைவியாவே நினைச்சுட்டார் போலிருக்கு...''

ஷ்யாம் முறைத்தான்.

''அதுக்கென்ன இப்போ...?''

''அவர் அப்படிச் சொன்னது எனக்கு சந்தோஷமாயிருந்தது. உனக்கு..?''

''கெட் லாஸ்ட்...''

''எனக்குப் பிடிச்சதே உன்கிட்ட இருக்கிற இந்த கோபம்தான்...'' ஷ்யாமின் கன்னத்தை லேசாக தட்டிவிட்டு காரிலிருந்து கீழே இறங்கிப் போனாள். ஒரு நிமிஷ நேரம் வரைக்கும் அப்படியே உட்கார்ந்திருந்த ஷ்யாம் பின் தளர்வாக இறங்கி ஓட்டலை நோக்கிப் போனான்.



**இந்திய ரூபாயில்
ஏறக்குறைய ரூ.6655.50
மதிப்புள்ள
வெற்றுத்துப்பாக்கி
(89.95 பவுண்)**

# 13

"ஆமா சார்! பெருவிடா. ஜெஸ்மின் எஜுகேஷன் டிரஸ்ட் ஜெயப்பிரகாசம் உங்களுக்குத் தெரியுமா...?"

"தெரியும்..."

"அவரோட பொண்ணுதான்..."

"பெரிய இடம்... அட்வான்ஸ் கங்கிராட்ஸ்!"

"நீங்களும் கல்யாணத்துக்கு வாங்க சார்..."

"ஷ்யூர்... ஷ்யூர்..."

"என்னோட கல்யாணம் முடிஞ்ச அடுத்த வாரம் உங்க பங்களாவை நான் கிரயம் பண்ணிக்கறேன்..."

"கடைசியில பேச்சு மாறமாட்டியே ஷ்யாம்...?"

"மாறமாட்டேன் சார்... எனக்கு உங்க பங்களா வேணும்..."

"சரி, மொதல்ல உன்னோட கல்யாணம் முடியட்டும். அதுக்கப்புறம் ரெண்டு நாள் கழிச்சு ரெஜிஸ்ட்ரேஷன் தேதியை முடிவு பண்ணிக்குவோம்..."

"நீங்க எந்த ஓட்டல்ல தங்கியிருக்கீங்க ஸார்...?"

"ஓட்டல் ரெஸிடென்ஸி. ரூம் நம்பர் ஃபைவ் டபுள் நைன்..."

"நான் அடிக்கடி உங்களை காண்டாக்ட் பண்ணிக்கறேன் சார்..."

"ப்ளீஸ்..."



சுதாகர்ராவை பார்த்துவிட்டு, ஷ்யாம் வீடு திரும்பியபோது இரண்டு மணி.

போர்ட்டிகோவில் அண்ணன் ராம்கோபாலின் கார் இல்லை. 'அண்ணன் இன்னுமா கெஸ்ட் ஹவுஸில் இருக்கிறார்...?'

பயம் குடலை உருவிவிட்டது.

'ஏதாவது கண்டு பிடித்திருப்பாரோ...?'

"என்ன ஷ்யாம், லஞ்சை காருக்கே கொண்டு வந்துடட்டுமா?"

குரல் கேட்டுத் திடுக்கிட்டு நிமிர்ந்தான். அண்ணி சந்திரா, இடுப்பில் இரண்டு கைகளையும் வைத்துக் கொண்டு போர்டிகோ படிகளில் நின்றிருந்தாள்.

ஷ்யாம் ஒரு அசட்டுப் புன்னகையோடு காரிலிருந்து இறங்கினான்.

"ஸாரி அண்ணி... ஏதோ ஆபீஸ் ஞாபகம்..."

"இந்தக் கதை விடாதே... விபாவோடு டூயட் பாடிக்கிட்டுதானே இருந்தே... எந்த லொகேஷன்... ஊட்டியா, காஷ்மீரா...?"

ஷ்யாம் பேச்சை மாற்றினான். "அண்ணன் இன்னும் கெஸ்ட் ஹவுஸிலிருந்து திரும்பலையா அண்ணி...?"

"அதுசரி... அவர் வந்து சாப்பிட்டுக் கிளம்பிப்போய் அரைமணி நேரமாச்சு. கல்யாண மண்டபத்துல ஏதோ அலங்காரம் பண்ற வேலையாம்... செண்ட்ரல் மினிஸ்டர் உன்னோட கல்யாணத்துக்கு வர்றேன்னு எந்த நிமிடி கன்ஃபர்ம் பண்ணினாரோ, அப்பலேர்ந்து உங்க அண்ணன் கால்ல சக்கரத்தைக் கட்டிக்கிட்டார். உன்னோட கல்யாணம் முடிஞ்ச பின்னாடிதான் சக்கரத்தைக் கழட்டுவார்..."

சந்திரா பேசிக்கொண்டே டைனிங் ஹாலுக்குள் நுழைந்தாள்.

"ஃபேஸ் வாஷ் பண்ணிட்டு வந்து உட்கார். இன்னிக்கு உனக்குப் பிடிச்ச மூணு அயிட்டம் ஹாட்பேக்ல கடக்கடக் காத்திட்டிருக்கு..."

''ம்... ம்...''

''என்ன அயிட்டம்னு கேட்கமாட்டியா...?''

''சொ... சொல்லுங்க அண்ணி...''

''தேங்காய்ப்பால் சாதம், பட்டாணி பகாளாபாத், கோதுமை பாயசம்...''

''......''

''உனக்காகக் கஷ்டப்பட்டு இந்த மூணு அயிட்டத்தையும் பண்ணியிருக்கேன். ஒரு தேங்க்ஸ் கிடையாதா...?''

''அண்ணி! எனக்கு இப்போ சாப்பிடற மூடே கிடையாது...''

''ஏன்...?''

''அண்ணன் கெஸ்ட் ஹவுஸை விக்க ஏற்பாடு பண்ணிட்டார். உங்களுக்குத் தெரியுமா..?''

''சொன்னார்... சேலம் பார்ட்டிக்குத்தான் முடிவாகியிருக்காமே!''

''அண்ணி...''

''என்ன...?''

''கெஸ்ட் ஹவுஸை விக்க வேண்டாம்னு நீங்களாவது சொல்லக் கூடாதா...?''

''சரியாப்போச்சு! அதை விக்கச் சொன்னதே நான் தானே...?''

ஷ்யாம் முறைக்க, சந்திரா தொடர்ந்தாள். ''இதோ பார் ஷ்யாம்... அந்த கெஸ்ட் ஹவுஸ் ஏதோ சூன்யம் பிடிச்ச பங்களா மாதிரி இருக்கு. ஒரு வீட்டுக்குள்ளே நுழைஞ்சா, மனசுக்கு அமைதி கிடைக்கணும். ஆனா, அந்த பங்களாவுக்குள்ளே நுழைஞ்சா... சந்தோஷமாயிருக்கிற மனசும் கொஞ்ச நேரத்துல கெட்டுப்போயிடுது. நீ எப்படி மணிக்கணக்கா அந்த பங்களாவுக்குள்ளே இருக்கேன்னு எனக்குத் தெரியலை. நீ அங்கே அடிக்கடி போக ஆரம்பிச்ச பின்னாடிதான், உன்கிட்ட இருந்த அந்தப் பழைய துள்ளல், உற்சாகம் எல்லாமே காணாமப் போயிடுச்சு!''

ஷ்யாம் இடதுகைக் கட்டை விரல் நகத்தைக் கடிக்க



ஆரம்பிக்க, சந்திரா அவனுடைய மன ஓட்டங்களைப் புரிந்து கொள்ளாமல் தட்டு எடுத்து வைத்தாள்.

''இனிமே நீ பழைய ஷ்யாமா மாறணும். விபா கெட்டிக்காரப் பொண்ணு. நீ இப்படி நகம் கடிச்சுக்கிட்டு 'மூடி' டைப்பாயிருந்தா, அவளுக்குப் பிடிக்காது. அவ ரொம்பவும் சோஷியல் டைப். ஒரு பத்து நிமிஷம் பேசினா, எவ்வளவு ஜோக் சொல்றா தெரியுமா...? ரெண்டு நாளைக்கு முன்னாடி, அவகூட டெலிபோனில் பேசிட்டிருந்தப்ப ஒரு கடிஜோக் சொன்னா. அன்னிக்கு பூராவும் நினைச்சு நினைச்சு சிரிச்சுட்டே இருந்தேன்...''

ஹாட்பேக்கைத் திறந்தாள் சந்திரா. தேங்காய்ப்பால் சாதம் நெய்யை பார்ட்னராகச் சேர்த்துக் கொண்டு மணத்தது.

''அந்த கடிஜோக் என்ன தெரியுமா...?''

ஷ்யாம் மௌனிக்க... சந்திரா சாதத்தைப் பரிமாறிக் கொண்டே சொன்னாள்: ''புகைவிடும் பிராணி எதுன்னு கேட்டா. நான் எவ்வளவோ யோசிச்சும் பதில் கிடைக்கலை. கடைசியில் அவ சொன்ன பதில் என்ன தெரியுமா...? சாம்பிராணி...!''

ஷ்யாம் லேசாகச் சிரிக்க முயன்ற விநாடி பங்களாவின் பின்பக்கமிருந்து நாயின் குரைப்புச் சத்தம் கேட்டது.

''லொள், லொள்...''

''அண்ணி...''

''ம்...''

''இது நம்ம சீஸர் மாதிரி இருக்கே...?''

''சீஸரேதான்...!''

''கெஸ்ட் ஹவுஸில் இருந்த சீஸர்... இங்கே எப்படி...?''

''உங்கண்ணன் கூட்டிட்டு வந்துட்டார். இனிமே நாயைக் காரணம் காட்டி கெஸ்ட் ஹவுஸுக்கு நீ போக முடியாது.''

''அ... ண்... ணி...''

''கெஸ்ட் ஹவுஸ் சாவி இனி உங்கண்ணன்கிட்டதான்

இருக்கும். கல்யாணம் முடிஞ்சவரைக்கும் நீ அந்தப் பக்கம் போகவே முடியாது.''

ஷ்யாமின் இருதயப் பிரதேசத்தில் புது பிளேடின் கீறல் ஒன்று அழுத்தமாக விழுந்தது.

டாக்டர் ஆஷாதேவியின் அறைக்குள் வேண்டாத மௌனம் நிலவிக் கொண்டிருக்க... அரை ஷெர்வானி அணிந்த அந்தப் பெரியவர் கலைத்தார்.

''நான் ஜமீன்கொண்டா ருத்ர நரசிம்மலு. இது என்னோட ஒய்ஃப் சாந்தம்மா! இவன் விஜயேந்திரன். என்னோட சன். இவங்க எங்க பாடி கார்ட்ஸ்...''

ஆஷாதேவி பெரியவரை ஏறிட்டார்.

''விபா உங்க வாரிசா... ஜெயப்பிரகாசத்தோட வாரிசாங்கிற சர்ச்சையே இங்கே வேண்டாம். பெத்தவங்க - வளர்த்தவங்க ரெண்டு பேரும் பார்க்க வேண்டிய ஒரே விஷயம் - அடுத்த வாரம் நடக்கப் போகிற அவ கல்யாணம்தான்.''

ருத்ர நரசிம்மலு தன் பெரிய நரை மீசைக்குக் கீழே பல்செட் உபயத்தால் சிரித்தார்.

''இப்ப பிரச்னையே இந்தக் கல்யாணம்தானே டாக்டர்?''

''நீங்க என்ன சொல்றீங்க...!''

''டாக்டர்...! விபாவோட உடம்புல ஓடிட்டிருக்கிறது எங்க ஜமீன் பரம்பரை ரத்தம். என் மகன் விஜயேந்திரன் தெரிஞ்சோ தெரியாமலோ பண்ணின தப்புக்கு எங்களுக்கு கிடைச்ச பரிசு விபா. விபா மூலமாத்தான் இனி எங்க ஜமீன் பரம்பரையே துளிர்க்க முடியும். விபா யாருக்கோ கல்யாணம் செய்து கொடுக்கப்பட வேண்டிய பொண்ணு கிடையாது...''

ஜெப்பிரகாசம் குறுக்கிட்டார்.

''நீங்க இப்ப என்ன சொல்ல வர்றீங்க... எனக்குப் புரியலை.''

''நாங்க விபாவுக்கு வேற மாப்பிள்ளை பார்த்து வெச்சிருக்கோம். மாப்பிள்ளை ஜமீன் பரம்பரை. படிச்சுட்டு வெளிநாட்டுல பிசினஸ் பண்ணிட்டிருக்கார்.''



''என்ன பேசறீங்க நீங்க? விபாவுக்கு அடுத்த வாரம் கல்யாணம். இன்விடேஷன் பிரிண்ட் பண்ணி ஆயிரக் கணக்கில் டிஸ்ட்ரிப்யூட் பண்ணியிருக்கோம். டெல்லியிலிருந்து சென்ட்ரல் மினிஸ்டர் வர்றார். இந்தக் கல்யாணத்தை நிறுத்த முடியுமான்னா...? பெரிய ஜமீன் பரம்பரையாம் பரம்பரை. நடுவுல வந்து நின்னுகிட்டு இப்படி குழப்பம் பண்றீங்க...! மொதல்ல இந்தக் கல்யாணம் நடக்கட்டும்... விபாவோட பிரச்னை பத்தி பின்னாடி பேசிக்கலாம்...''

விஜயேந்திரன் ஜெயப்பிரகாசத்தைக் கையமர்த்தினார். ''வெரி ஸாரி மிஸ்டர் ஜெயப்பிரகாசம். விபா எனக்குப் பிறந்த பொண்ணுதான்னு உறுதியாயிட்ட இந்த நிலைமையில் அவ கல்யாணத்தைப் பத்தி பேச... அவ கல்யாணத்தை நடத்த எங்களுக்குத்தான் உரிமையிருக்கு. இந்த உரிமையை நாங்க விட்டுக்கொடுக்க முடியாது.''

''என்ன மிரட்டறியா...?''

''இது மிரட்டல் கிடையாது. ஒரு அன்பான கோரிக்கை, கல்யாணத்தை நிறுத்தணும்ங்கிற எண்ணம் எங்களுக்கு அறவே இல்லை. ஆனா, அதைத் தவிர வேறு வழியும் இல்லை. எத்தனையோ கல்யாணம் தாலி கட்டப் போகிற சமயத்தில கூட நின்னுபோயிருக்கு. ஸோ இந்தக் கல்யாணம் நிறுத்தப்படறது ஒரு பெரிய விஷயமே கிடையாது.''

இப்போது யசோதா சீறிக்கொண்டு எழுந்தாள். ''கல்யாணத்தை நாங்க நிறுத்த மாட்டோம். சொன்ன தேதியில கல்யாணம் நடக்கும். உங்களால என்ன பண்ண முடியுமோ பண்ணிக்குங்க... உங்க மிரட்டலுக்கு நாங்க பயப்படமாட்டோம்.

பெரியவர் ருத்ர நரசிம்மலு சிரித்தார்.

''இது மாதிரி சவால்விட்டுப் பேச எங்களாலேயும் முடியும்மா! பிரச்னை சுமுகமா தீர்க்கப்படணும்.

அதுதான் எங்க விருப்பம்... சட்டப்படி நாங்க நடவடிக்கை எடுத்தா அது உங்களுக்கு மனக்கஷ்டம். எங்களுக்கும் மனக்கஷ்டம். யோசனை பண்ணுங்க..."

"சட்டப்படி உங்களாலே என்ன நடவடிக்கை எடுக்க முடியும்...?"

"நாளைக்கே கோர்ட்ல ஸ்டே ஆர்டர் வாங்கி இந்தக் கல்யாணத்தை நிறுத்த முடியும். ஏன்னா விபா எங்க வாரிசு. எங்க வாரிசுக்கு கல்யாணம் பண்ணி வைக்க உங்களுக்குத் தார்மீக முறையில் எந்த உரிமையும் கிடையாது."

"உங்களுக்கு எந்த அளவுக்கு சட்டம் தெரியுமோ அதைவிட ஒருபடி மேலாகவே எங்களுக்கு சட்டம் தெரியும். கல்யாணம்ங்கிறது ஒரு பெண் சம்பந்தப்பட்ட விஷயம். ஒரு பெண் யாரை விரும்பறாளோ அவரைக் கல்யாணம் பண்ணிக்க இந்த சட்டம் அனுமதி கொடுத்திருக்கு. விபா மேஜர். நீங்க சொல்ற எந்தச் சட்டமும் அவளைக் கட்டுப்படுத்தாது." என்றார் ஜெயப்பிரகாசம்.

ருத்ர நரசிம்மனு விபாவிடம் திரும்பினார். "நீ என்னம்மா சொல்றே...?"

அதுவரைக்கும் ஒரு வார்த்தை கூட பேசாமல் மௌனமாகத் தலை குனிந்து உட்கார்ந்திருந்த விபா, கண்களில் நீர் பளபளக்க நிமிர்ந்தாள்... நிதானமான குரலில் பேச ஆரம்பித்தாள்.

"என்னோட பிறப்பில் இப்படியொரு ரகசியம் ஒளிஞ்சிட்டிருக்கும்னு நான் கொஞ்சம்கூட நினைச்சுப் பார்க்கலை. அதுக்காக நான் வெட்கப்படவோ... கூனிக் குறுகி தலையைத் தாழ்த்திக்கவோ தயாராக இல்லை. என்னைப் பொறுத்தவரைக்கும் இத்தனை வருஷ காலமாக என்னை வளர்த்தவங்கதான் என் அப்பா அம்மா. அவங்க என்ன சொல்றாங்களோ அதைத்தான் நான் கேட்பேன். நீங்க பாசம் காரணமா என்னைத் தேடி வரலை... உங்க ஜமீன் பரம்பரைக்கு வாரிசு வேணுமேங்கிற தேவைக்காக வந்திருக்கீங்க... உங்க



பேச்சைக் கேட்கவோ... உங்ககூட வரவோ நான் தயாராக இல்லை... தயவு பண்ணி மொதல்ல எல்லோரும் வெளியே போயிடுங்க..."

விபா பேசிக் கொண்டிருக்கும்போதே விஜயேந்திரன் கோபமான முகத்தோடு அவளுக்கு முன்பாக வந்து நின்றார்.

"இதுதான் உன்னோட முடிவா...?"

"ஆமா..."

"எங்க முடிவை சொல்லட்டுமா...?"

"தாராளமாக சொல்லலாம்..."

"உன்னை இங்கிருந்து கூட்டிக்கிட்டு போகாமே ஒரு மில்லி மீட்டர்கூட நாங்க நகரப் போறதில்லை."

## 14

கோபத்தில் முகம் காரட் நிறத்துக்குப் போக, ஆவேசமான ஜெயப்பிரகாசத்துக்குத் தொண்டையின் குரல் நாண்கள் அவஸ்தையாய் புடைத்துக் கொண்டன. விஜயேந்திரனிடம் இரைந்தார்.

"எ... என்ன... சொ... சொன்னே...! எம் பொண்ணை இங்கிருந்து கூட்டிட்டுப் போகாம ஒரு மில்லி மீட்டர்கூட நகரமாட்டியா...?"

"யெஸ்..." விஜயேந்திரன் அலட்சியமாகத் தோள்களைக் குலுக்கினான். "மெட்ராஸிலிருந்து நாங்க புறப்படும்போதே அந்த முடிவோடுதான் புறப்பட்டோம். விபா எங்க உடைமை என்கிற உண்மை எந்த நிமிஷம் தெரிஞ்சதோ... அந்த நிமிஷத்தில் இருந்தே அவ உங்க மகள்ங்கிற முத்திரையோடு இந்த கோயம்புத்தூரில் இருக்க முடியாது. உங்களுக்குள்ள மரியாதையை நீங்க இனியும் காப்பாத்திக்கப் பிரியப்பட்டா, விபாவைச் சத்தம் இல்லாம எங்களோடு அனுப்பி வைக்கிறதுதான் உத்தமம்..."

விபா தன் இரண்டு காதுகளையும் பொத்திக் கொண்டு வீறிட்டாள்.

"நோ... உங்களோடு நான் வர முடியாது. என்னோட

பிறப்புக்குக் காரணமான அந்த அசிங்கமான இறந்த காலத்தையும் அந்த இறந்த காலத்துக்குச் சொந்தமான உங்களையும் நினைச்சுப் பார்க்கவே பிடிக்கலை...''

விஜயேந்திரன் உதடு பிரியாமல் சிரித்துவிட்டுச் சொன்னான்: ''அப்படிச் சுலபமா ஒரு வார்த்தையைச் சொல்லிவிட்டு நீ ஒதுங்கிக்க முடியாது விபா, உன்னை நல்லபடியா மெட்ராஸுக்குக் கூட்டிட்டுப் போகவே விரும்பறோம். நீ அடம்பிடிச்சா நாங்க எங்க எல்லையைத் தாண்ட வேண்டியிருக்கும்...''

''இந்த மிரட்டலுக்கெல்லாம் நான் பயப்படமாட்டேன். உங்களையெல்லாம் பார்த்தா ஜமீன் பரம்பரை மாதிரி தெரியலை... பிள்ளை பிடிக்க வந்த கூட்டம் மாதிரி தெரியுது. மரியாதையா வெளியே போயிருங்க...''

விஜயேந்திரன், பெரியவர் ருத்ர நரசிம்மனுவிடம் திரும்பினான்.

''அப்பா...! இனி இவங்ககிட்ட சாத்வீகமா பேசிட்டிருக்க முடியாது. நம்ம பலத்தைக் காட்ட வேண்டியதுதான்.''

பெரியவர் கையமர்த்தினார். ''கொஞ்சம் பொறு விஜய்...! ஏற்கெனவே மிரண்டு போயிருக்கிற விபாகிட்ட நீ இப்படிப் பேசறது சரியில்லை. நம்ம நிலைமையை அவளுக்குப் புரியவைக்கணும்... விபாவுக்கும் அவளை இருபத்திரண்டு வருஷ காலமா வளர்த்தவங்களுக்கும் யோசிக்க அவகாசம் கொடுப்போம். ரெண்டு நாள் கழிச்சு மறுபடியும் அவங்களை மீட் பண்ணுவோம்.''

''ரெண்டு நாளைக்கப்புறமும் அவங்க பிடிவாதமா இருந்துட்டா...?''

பெரியவர் தன் நரை மீசையை இடது கை விரல்களால் கோதிக்கொண்டே கோணலாகச் சிரித்தபடி சொன்னார். ''அதுக்கப்புறம் நம்ம சுயரூபத்தைக் காட்ட வேண்டியதுதான். ஜமீன் பரம்பரையின் பெருமையை நிலை நிறுத்தறதுக்காக நாம எந்த எல்லைக்கும்



போகக்கூடியவங்க தாங்கிறதை அப்ப அவங்க புரிஞ்சுக்குவாங்க...''

ஜெயப்பிரகாசம் கோபமாகக் குறுக்கிட்டு ஏதோ பேச முயல... பெரியவர் இடைமறித்துக் குரலை நுழைத்தார்.

''இனிமே... நீங்க எதுவும் பேச வேண்டாம்...! பேசினாலும் வீண் கோபதாபங்கள்தான். உங்களுக்கு முழுசா ரெண்டு நாள் டைம் தர்றோம். பதட்டப்படாம யோசிங்க. நியாயம் யார்பக்கம் இருக்குனு உங்களுக்கே தெரியும். சரியா நாற்பத்தெட்டு மணி நேரம் கழிச்சு உங்களை மறுபடியும் மீட் பண்ணும்போது விபா எங்களோடு புறப்படத் தயாராயிருக்கணும்.''

பெரியவர் ருத்ர நரசிம்மனு சொல்லிவிட்டு அறைக் கதவை நோக்கி நடக்க ஆரம்பித்துவிட, விஜயேந்திரனும் சாந்தம்மாவும் தொடர்ந்தார்கள்.

அதுவரைக்கும் ஒன்றும் பேசாமல் இருந்த கோகிலம் பின் தயக்கமாக எழுந்து நின்று விபாவை ஏறிட்டாள்.

''விபா...''

''உன்கூட நான் பேசத் தயாராயில்லை... இளம்பு. என் குடும்பத்தோட சந்தோஷத்தைப் பாழ் பண்ணின நீ நல்லாயிருக்கமாட்டே....!''

''உன்னோட சாபம் பலிக்கட்டும் விபா. ஏற்கெனவே நான் நல்லாயில்லாத கேஸ்தான். எனக்கு இந்த உலகத்துல இந்த நிமிஷம் எந்த சொந்தபந்தமும் கிடையாது. லேட்டஸ்ட்டா எனக்குக் கிடைச்சிருக்கிற ஒரே சொந்தம் நீதான். என் அக்காவோட மகள் நீ. இந்த உறவு எனக்கு இனிச்சாலும் உனக்கு இனிக்காது. நீ என்கிட்ட எதையும் பேசவேண்டாம். ரெண்டே ரெண்டு வார்த்தை நான் மட்டும் பேசிட்டுப் போயிடறேன்...''

எல்லோரும் கோகிலத்தையே கோபப் பார்வை பார்த்துக் கொண்டிருக்க... அவள் தொடர்ந்தாள்.

''கோயில் வாசல்லயிருந்த ஒரு பூக்காரி என்னுடைய நடத்தையை கமெண்ட் அடிக்கப்போய்... நீங்க எல்லோரும் என்னை ஒரு தொழில்காரின்னு நினைச்சிருக்கலாம். நான் அப்படிப்பட்டவ

கிடையாதுங்கிற உண்மை அந்தக் கடவுளுக்கு மட்டுமே தெரியும். நான் இப்ப குடியிருக்கிற வீட்டைக் காலி செய்ய மறுத்ததாலே வீட்டுக்கு சொந்தக்காரம்மா கட்டிவிட்ட கதை அது. தெருவில் இருந்த நாலைஞ்சு ஆண்களோடு பேசியதன் பலன் எனக்குக் கிடைச்சது அந்த தொழில்காரி பட்டம். விபா! உனக்கு என்னிக்காவது எந்த நிமிஷமாவது இந்த சித்தியோட ஞாபகம் வந்தா அவ கெட்டவ இல்லைங்கிறதையும் ஞாபகப்படுத்திக்கோ..."

யசோதா வெடித்தாள்: "சரி...! நீ உத்தம பத்தினிதான்... ஒப்புக்கறோம். போய்ட்டு வா..."

கோகிலம் கதவை நோக்கி இரண்டடி நடந்துவிட்டு... பின் மறுபடியும் தயங்கி நின்றாள்.

"ஒரே ஒரு விஷயம்..."

"என்ன...?"

"இப்போ வந்துட்டுப்போன ஜமீன் பரம்பரைக் குடும்பத்தை நீங்க பகைச்சுக்கிறது அவ்வளவு நல்லதில்லை. விபா அவங்க உடைமை. அனுப்பிவெச்சுடறது நல்லது... இதை நீங்க என்னோட வேண்டுகோளா எடுத்துக்கிட்டாலும் சரிதான்... எச்சரிக்கையா எடுத்துக்கிட்டாலும் சரிதான்."

கோகிலம் சொல்லிவிட்டு விருட்டென்று கதவைத் திறந்துகொண்டு வெளியேறிவிட, அறைக்குள் அரை நிமிஷ நேரம் நிசப்தம் நிலவியது.

ஜெயப்பிரகாசம் ஆஷாதேவியிடம் நிமிர்ந்தார். "இந்தப் பிரச்னைக்கு என்ன தீர்வு டாக்டர்...?"

"போலீஸுக்குப் போயிட வேண்டியதுதான்."

"போலீஸுக்குப் போனா பிரச்னை விஸ்வரூபம் எடுத்துடுமே... அடுத்த வாரம் கல்யாணம். மாப்பிள்ளை வீட்டுக்காரங்களுக்கு விஷயம் தெரியாதபடிக்கு இந்தப் பிரச்னைக்கு ஒரு முடிவு கட்டணும்."

"ஏதாவது ஒரு லாயரை கன்ஸல்ட் பண்ணிப் பார்த்தா என்ன...?"

"சட்டத்தின் மூலமா இதுக்கு தீர்வு கிடைக்காது. எந்த



வக்கீல்கிட்ட இந்தப் பிரச்னையைக் கொண்டு போனாலும் சரி... அவர் அதை கோர்ட்டுக்குக் கொண்டு போகத்தான் பார்ப்பார்."

டாக்டர் ஆஷாதேவி உஷ்ணமாகப் பெருமூச் சொன்றை வெளியேற்றியபடி இரண்டு கைகளாலும் பற்றிக் கொண்டு நாற்காலிக்குச் சாய்ந்தார்.

"இருபத்திரண்டு வருஷத்துக்குப் பிறகு விபாவோட வாழ்க்கையில் இப்படியொரு புயல் வீசும்னு நான் எதிர் பார்க்கவேயில்லை..."

"டொக்... டொக்!"

சாத்தப்பட்டிருந்த அறைக்கதவு மெலிதாகத் தட்டப்பட்டது.

எல்லோருடைய பார்வையும் அறைக் கதவுக்குப் போயிற்று.

ஆஷாதேவி குரல் கொடுத்தாள்.

"யெஸ்...! கம்மின்..."

கதவின் டோர் க்ளோஷரைத் தள்ளிக் கொண்டு ராம்கோபால் உள்ளே வந்தார்.

ஷ்யாம் அரையும் குறையுமாகச் சாப்பிட்டுவிட்டு வாஷ்பேசினில் கை கழுவ, சந்திரா இடுப்பில் தன் இரண்டு கைகளையும் வைத்துக் கொண்டு முறைத்தாள்.

"எவ்வளவு மெனக்கெட்டு தயார் பண்ணியிருந்தேன்... நீ லஞ்ச் சாப்பிடற லட்சணம் இதுதானா...?"

"பசிக்கலை அண்ணி..."

"விபா என்னிக்கு இந்த வீட்டுக்குள்ளே நுழையறாளோ அன்னிக்குத்தான் நீ ஒரு ஒழுங்குக்கு வருவே..."

ஷ்யாம் டவலால் வாயை ஒற்றிக் கொண்டு மாடிப் படியேறினான்.

"என்ன ஷ்யாம்! மாடிக்குக் கிளம்பிட்டே... ஆபீஸுக்குப் போகலையா...?"

"ஒரு பத்து நிமிஷம் ரெஸ்ட் எடுத்துக்கிட்டு

கிளம்பறேன். வெயில்ல அலைஞ்சது தலையை வலிக்குது.''

''மாத்திரை போட்டுக்கறியா?''

''வேண்டாம்... கொஞ்ச நேரம் கண்ணை மூடிப் படுத்திருந்தா போதும்...'' ஷ்யாம் படிகளில் உயர்ந்து தன் மாடியறைக்குப் போய்விட, சந்திரா டைனிங்டேபிளை ஒழுங்கு படுத்தும் முயற்சியில் ஈடுபட்டாள்.

ஷெல்ஃபில் இடம்பிடித்திருந்த செல்போன் மெலிதாய் கனைத்துக் கூப்பிட்டது. போய் அதை எடுத்து இடது காதுக்கு ஒட்டவைத்தாள்.

''ஹலோ...''

''சந்திரா...''

மறுமுனையில் ராம்கோபால் குரல் கொடுத்தார். குரலில் பதட்டம் - போனஸாக நடுக்கம்!

''என்னங்க...?''

''ஷ்யாம் லஞ்சுக்கு வந்தானா...?''

''இப்பதான் வந்து சாப்பிட்டார்.''

''பக்கத்துல இருக்கானா...?''

''இல்லை... சாப்பிட்டதுமே மாடிக்குப் போய்ட்டார். தலைவலியாம். பத்து நிமிஷம் ரெஸ்ட் எடுத்துக்கிட்டு அப்புறமா ஆபீஸ் போறேன்னு சொன்னார். ஷ்யாம்கிட்ட ஏதாவது சொல்லணுமா... கூப்பிடட்டுமா...?''

''வே... வேண்டாம்... அவனைக் கூப்பிடாதே...! நான் உனக்கு போன் பண்ணினதே அவனுக்குத் தெரிய வேண்டாம்...''

''ஏன்... உங்க குரல் ஒரு மாதிரியா இருக்கு...?''

''சந்திரா...! ஷ்யாம் - விபா கல்யாணத்துல இப்போ ஒரு பெரிய சிக்கல்...''

''சிக்கலா...? என்ன சொல்றீங்க...?''

''போன்ல எதையும் சொல்லிட்டு இருக்க முடியாது...! உனக்கு டாக்டர் ஆஷாதேவியோட நர்ஸிங்ஹோம் தெரியுமில்லையா?''

''தெரியும்...! சாய்பாபா காலனி தானே?''

''ஆமா...! நீ உடனே புறப்பட்டு அங்கே வா...''



''எ... எ... எனக்கு வயித்தைக் கலக்குதுங்க. கல்யாணம் ரொம்ப பக்கத்துல இருக்கு. இப்ப போய் என்ன சிக்கல்...?''

''நேர்ல வா...''

''ஷ்யாம்கிட்ட என்ன சொல்லிட்டு வர்றது...?''

''முக்கியமான உறவுக்காரங்க ரெண்டு பேருக்கு கல்யாண அழைப்பிதழ் கொடுக்கலை. இந்த நேரத்துக்குப் போனாத்தான் அவங்களைப் பார்க்க முடியும்னு சொல்லிட்டு நீ கிளம்பி இங்கே வந்துடு.''

''அங்கே யார் யார் இருக்காங்க...?''

''நீ போன்ல எதையும் தொண தொணன்னு கேட்டுக்கிட்டு இருக்காதே! உடனே புறப்பட்டு வா...'' மறுமுனையில் தொடர்பு துண்டிக்கப்பட்டுவிட, சந்திரா செல்போனை அணைத்தாள். நெற்றியும் பின்னங்கழுத்தும் வியர்வை சொதசொதப்பில் இருந்தது.

'என்ன சிக்கல்...?'

கேள்வி ஒரு உளியாக மாறி இதய ஓரங்களைச் செதுக்கியது.

கால்கள் பின்ன... ஹாலுக்குள் நுழைந்து டீபாயின் மேல் இருந்த இண்டர்காம் டெலிபோனைத் தொட்டு ரிஸீவரை எடுத்து மாடியில் இருந்த ஷ்யாமின் அறைக்கு பட்டனைத் தட்டினாள். ரிங் போய் ரிஸீவர் எடுக்கப்பட்டது.

''ஷ்யாம்...''

''என்ன அண்ணி...?''

''நான் அவசரமா கொஞ்சம் வெளியே போகணும்.''

''என்ன விஷயம்...?''

''முக்கியமான உறவுக்காரங்க ரெண்டு பேருக்கு இன்விடேஷன் கொடுக்க விட்டுப் போச்சு... போய்ட்டு ரெண்டு மணி நேரத்துக்குள்ளே வந்துடுவேன்.''

''அவ்வளவு நேரமாகுமா...?''

''கணபதியில அவங்களுக்கு வீடு. கொஞ்சம் இன்டீரியர். நீ வேணும்னா கொஞ்ச நேரம் ரெஸ்ட்

எடுத்துக்கிட்டு ஆபீஸ் கிளம்பிப் போ. சமையல்காரர் வேலுவும் வாட்ச்மேனும் தான் இருக்காங்களே?''

''சரி அண்ணி... அப்ப நீங்க புறப்படுங்க. கொஞ்ச நேரம் ரெஸ்ட் எடுத்துக்கிட்டு நானும் ஆபீஸுக்குக் கிளம்பிடறேன்...''

படுக்கையில் சாய்ந்தபடி பேசிக் கொண்டிருந்த ஷ்யாம் ரிஸீவரை வைத்துவிட்டு எழுந்து உட்கார்ந்தான். குபீரென்று எழுந்த ஒரு பயத்தில் மனசு பூராவும் கெஸ்ட் ஹவுஸ் வியாபித்தது 'சாம்பிரசாத் உயிரோடு இருப்பானா...? அவன் கடத்தப்பட்டு கிட்டத்தட்ட இருபத்து நாலு மணி நேரமாகப் போகிறது. அந்த அடைசலான ஸ்டோர் ரூமில் காற்றும் வராதே!''

எழுந்து அறைக்குள் நடந்தான் ஷ்யாம். போஸ்ட்மேன் காதரின் நினைவு மனதின் இன்னொரு பக்கத்திலிருந்து முள்ளாய் முளைத்தது.

'காதரின் உடலை என்ன செய்யலாம்?'

'வெளியே கொண்டுபோய் டிஸ்போஸ் பண்ண முடியுமா...?'

'கெஸ்ட் ஹவுஸ் சாவி அண்ணனிடம். பங்களாவுக்குள் எப்படி நுழைவது...?'

'போய் நோட்டம் விட்டுப் பார்க்கலாமா?'

போர்டிகோவில் கார் கனைக்கிற சத்தம் கேட்டு மாடி ஜன்னலுக்குப் போய் கீழே எட்டிப்பார்த்தான். அந்த க்ரீம் நிற மாருதி காம்பௌண்ட் கேட் வழியாக வேகமாக வெளியேறிக் கொண்டிருந்தது.

கார் மறையும் வரை பார்த்துக் கொண்டிருந்த ஷ்யாம், தன் பாண்ட் பாக்கெட்டுக்குள் கையை நுழைத்து அந்த சில்வர் சிகரெட் கேஸை எடுத்து அதன் கீழ் முனையை அழுத்த இம்போர்ட்டட் சிகரெட் ஒன்று வெளிப்பட்டது. எடுத்து உதட்டுக்குப் பொருத்திக் கொண்டவன், மெள்ள நடந்து போய் அறையின் மூலையில் இருந்த மேஜையை நெருங்கி அதன் முதல் டிராயரை இழுத்தான்.

உள்ளே -

நாற்றுக்கணக்கில் விபாவின் பாஸ்போர்ட் சைஸ்



போட்டோக்கள்.

ஒன்றை எடுத்தான்.

இரண்டு உள்ளங்கைகளிலும் வைத்துச் கசுட்டினான். போட்டோ தீக்குச்சி சைஸுக்குச் சுருண்டதும் அதை சிகார் லைட்டரில் பற்றவைத்து பின் சிகரெட் தலைக்குத் தகனம் நடத்தினான்.

''தேங்க்யூ... விபா...!'' சிகரெட் புகையை ஆழமாய் இழுத்து, நாசித்துவாரங்களிலும் கடைவாயிலும் அடர்த்தியாக வெளிப்படுத்தினான்.

சிகரெட்டின் உடம்பு பாதியாகக் கரைந்திருந்தபோது அதை ஆஷ்ட்ரேயில் இட்டு நசுக்கிவிட்டுக் கீழே இறங்கி வந்தான்.

''வேலு...''

''அய்யா...!'' சமையலறைப் பக்கமிருந்து அந்த ஆள் ஓடி வந்தான்.

''வீட்டைப் பார்த்துக்க... நான் ஆபீஸ் கிளம்பறேன்... அண்ணன் போன் பண்ணி கேட்டா சொல்லிடு...''

''சரிங்கய்யா...''

போர்டிகோவில் நின்றிருந்த தன்னுடைய காருக்கு வந்தான் ஷ்யாம். மணிக்கட்டில் நேரம் இரண்டரை.

கார் கெஸ்ட் ஹவுஸ் போய்ச் சேர்ந்தபோது மூன்று மணி. எல்லா திசைகளிலும் துல்லியமான நிசப்தம். காற்றுகூட யோசித்து யோசித்து வீசியது.

காரை விட்டு இறங்கிய ஷ்யாம் சுற்றும் முற்றும் பார்த்தான்.

ஆள் நடமாட்டம் அறவே இல்லை.

காம்பௌண்ட் கேட்டை நெருங்கித் தள்ள அது கொஞ்சமும் அசைந்து கொடுக்காமல் உட்பக்கமாகப் பூட்டப்பட்டிருந்த பூட்டைக் காட்டியது.

கேட்டின் க்ரில் கம்பிகளில் காலை வைத்து மேலே உயர்ந்து மறுபக்கம் குதித்தான். போர்டிகோவைக் கடந்து முன் வாசலுக்குப் போக, கதவில் தொங்கிய மஞ்சள் பூட்டு வெய்யிலில் மினுமினுத்தது.

'இந்தப் பூட்டு எதற்கும் அசைந்து கொடுக்காதே!'

பங்களாவைச் சுற்றிக்கொண்டு காம்பௌண்ட் சுவரோரமாகவே நடந்து பின்பக்கம் வந்தான்!

சரியாகப் பராமரிக்காத தோட்டம், பார்த்தீனியச் செடிகளின் கொடுங்கோல் ஆட்சியில் சிக்கியிருந்தது. அந்தப் பகல் நேரத்திலேயே சில வண்டுகள் 'ஜ்ஜ்ர்ர்ர்ர்' என்று சுருதி கூட்டிக்கொண்டிருக்க... பங்களாவின் பின்பக்கக் கதவை நெருங்கினான்.

வைரம் பாய்ந்த தேக்குமரக்கதவு... உட்பக்கமாகத் தாழிட்டுவிட்டால், அதற்கு யானை பலம்.

அவநம்பிக்கையோடு அந்தக் கதவின் மேல் இரண்டு கைகளையும் வைத்துத் தள்ளிப் பார்த்தான்.

ஒரு சின்ன பிளிறலோடு அது திறந்து கொண்டது!



**சைலன்சர் பொருத்தப்பட்ட கோல்ட்.45. இதன் மதிப்பு இந்திய ரூபாயில் ஏறக்குறைய ரூ.19,596.75 (265 பவுன்)**

# 15

பங்களாவின் கனமான பின்பக்கக் கதவு சின்னப் பிளிறலோடு திறந்து கொண்டதும் ஷ்யாமின் மனசு ஒரு கலர்ஃபுல் ஹோலி கொண்டாடியது.

அண்ணன் பின்பக்கக் கதவைத் தாழ் போட மறந்துவிட்டார். இதுபோன்ற சின்னச் சின்ன மறதிகள் எல்லாம் அண்ணன் ராம்கோபாலின் அன்றாட வாழ்க்கையில் வெகு பிரசித்தம்.

ஷ்யாம் உள்ளே நுழைந்து கதவைத் தாழிட்டபின், பங்களாவுக்குள் நடந்தான். அனைத்து ஜன்னல்களும்



திரைச்சீலைகளை இழுத்துப் போர்த்திக்கொண்டு வெளிச்சத்தை வெளியிலேயே நிறுத்தியிருக்க, பங்களா முழுவதும் ஒரு செயற்கை இருட்டு பரவியிருந்தது. டியூப் லைட்டை உயிர்ப்பிக்க, சுவரிலிருந்த ஸ்விட்ச்சைத் தேய்த்துப் பார்த்தான். மின்சாரம் இறந்து போயிருந்தது.

அரையிருட்டில் நிதானமாக நடந்து, எதன்மீதும் மோதிக்கொள்ளாமல் ஹாலுக்குள் நுழைந்தான்.

'முதலில் சாய்பிரசாத்தைப் பார்க்க வேண்டும்...'

ஸ்டோர் ரூமை நோக்கிப் போனான் ஷ்யாம்.

பழைய கதவு ஒன்று ஸ்டோர் ரூமை அடைகாத்திருக்க, தாழ்ப்பாளை விலக்கித் திறந்தான்.

அறைக்குள் அடைபட்டிருந்த காற்று உஷ்ணமாக முகத்தில் மோத, நாற்காலியோடு பிணைத்துக்கட்டப் பட்டிருந்த சாய்பிரசாத் பார்வைக்குக் கிடைத்தான். தலை ஒரு பக்கமாகத் துவண்டிருந்தது.

ஷ்யாமின் முகபாவம் கொஞ்சம் கொஞ்சமாக மாறி, ஒரு இறுக்கத்துக்குப் போய்க் கொண்டிருக்க... குரூரப் புன்னகையொன்று அவனுடைய உதட்டில் இடம் பிடித்துக்கொண்டது. குரலைத் தாழ்த்திக்கொண்டான்.

''எப்படியிருக்கே ராஜா...?'' - கேட்டுக்கொண்டே சாய்பிரசாத்தை நெருங்கினான்.

சாய்பிரசாத்தின் பாதிக் கண்கள் மட்டும் ஒரு விநாடி திறந்து மறுவிநாடி மூடிக்கொண்டன.

பையனின் தலைமுடியைச் செல்லமாகக் கோதிவிட்டு, ஷ்யாம் அந்த ஸ்டோர் ரூமினின்றும் வெளிப்பட்டான்.

இப்போது மனசு பூராவும் காதர்.

'காதரின் உடலை எங்கே கொண்டுபோய், எப்படி டிஸ்போஸ் செய்வது...?'

'வெளியே கொண்டுபோவது இப்போதைக்குச் சாத்தியம் கிடையாது. காம்பௌண்ட் கேட் பூட்டியிருக்கிறது!'

'இதே பங்களாவில் எங்கேயாவது குழி தோண்டிப் புதைக்க முடியுமா...?'

'யோசிக்க வேண்டும்... டிஸ்போஸ் செய்வதில் இம்மி பிசகினாலும் மாட்டிக்கொள்வோம்!'

ஷ்யாம் குழப்பங்களோடு படுக்கையறைக்குள் நுழைந்தான்., காதரின் உடலைத் திணித்து வைத்திருந்த வார்ட்ரோப்பை மெள்ள இழுத்தான். ஒரு மூட்டை மாதிரி திணித்து வைக்கப்பட்டிருந்த காதரின் உடல் உள்ளேயிருந்து வெளிப்பட்டது.

உருண்டது... மல்லாந்தது... வீசிய காற்று கெட்டிருந்தது.

காதரின் உடம்பை ஷ்யாம் இழுத்துப் பார்த்தான். கனத்தது.

'என்ன செய்யலாம்...?' - யோசிக்க யோசிக்க, ஷ்யாமுக்கு உடம்பு வியர்த்துக்கொட்டியது. தண்டுவடம் பனிக்கட்டியில் வைத்த மாதிரி உறைந்து போயிருந்தது.

அரை மணி நேர யோசனையில், மூளை வெகுவாகக் களைத்துப் போக... ஷ்யாம் சிகரெட் ஒன்றைப் பற்ற வைத்துக்கொண்டான். காதரின் உடலையே வெறித்துப் பார்த்தபடி புகைவிட்டுக்கொண்டிருந்தவனை பாக்கெட்டில் இருந்த செல்போன் கூப்பிட்டது. உஷாரானான்.

'யார் கூப்பிடுகிறார்கள்...?'

செல்போனில் டயல் செய்யப்பட்ட எண்களைப் பார்த்தான். புதிய எண்!

குழப்பமாகக் காதுக்குக் கொடுத்தான்.

''ஹலோ...''

மறுமுனையில் கதாகர்ராவ் பேசினார்.

''ஷ்யாம்! நான்தான்... ஓட்டல் ரெசிடென்ஸியிலிருந்து பேசிட்டிருக்கேன்...''

''சொல்லுங்க சார்... என்ன விஷயம்...?''

''என்னோட வீட்டை வாங்கிக்கிற விஷயத்தில் பின்வாங்கிட மாட்டியே...?''

''உங்களுக்கு ஏன் சார் திடீர்னு இப்படியொரு சந்தேகம்...?''



''உங்க அண்ணனுக்கு விஷயம் தெரிஞ்சு, நாளைக்கு ஏதாவது முட்டுக்கட்டை போட்டுட்டார்னா...?''

''யார் முட்டுக்கட்டை போட்டாலும் சரி, உங்க வீட்டை நான் வாங்காமல் இருக்கமாட்டேன். என்னோட கல்யாணம் முடியட்டும் சார்... ரெஜிஸ்ட்ரேஷன் பண்ற தேதியை முடிவு பண்ணிக்கலாம்... கெஸ்ட் ஹவுஸை அண்ணன் விலை பேசிட்டதால, எனக்குக் கண்டிப்பா உங்க பங்களா வேணும் சார்...''

''நீ இப்படிப் பேசறது எனக்குச் சந்தோஷமாயிருக்கு ஷ்யாம்... என்னோட பங்களா, உன்னோட கெஸ்ட்ஹவுஸ் அளவுக்குப் பெரிசா இல்லேன்னாலும் பின்னாடி கட்டிக்கிற அளவுக்குக் காலியிடம் இருக்கு. ரெண்டு வருஷத்துக்கு முந்தி மேற்கொண்டு கட்டடம் கட்டிடலாம்னு வேலைகளை ஆரம்பிச்சேன். நாலு பில்லர்களைப் போடறதுக்காகக் குழிகளைத் தோண்டின பிறகு வேண்டாம்னு விட்டுட்டேன். இன்னும்கூட அந்தக் குழிகள் அப்படியே இருக்கு. நீ பிரியப்பட்டா கன்ஸ்ட்ரக்ஷனை கண்டினியூ பண்ணிக்கலாம். இன்ஜினியர் போட்டுக்கொடுத்த பிளான்கூட இருக்கு...''

''.....''

''என்ன ஷ்யாம்... பேச்சையே காணோம்...?''

''பில்லர் போடறதுக்காக எத்தனை குழிகள் தோண்டியிருக்கிறதா சொன்னீங்க...?''

''நாலு...''

''எந்த இடத்துல...?''

''பங்களாவுக்கு மேற்குப் பக்கத்துல...''

''இன்னும் அந்தக் குழிகள் அப்படியேவா இருக்கு...?''

''ஆமா!''

''குழி எவ்வளவு ஆழம் இருக்கும்...?''

''சுமார் பத்தடி! இன்னும் வேணும்னா ரெண்டடி வரைக்கும் ஆழப்படுத்திக்கலாம்...''

''ரெஜிஸ்ட்ரேஷன் முடிஞ்ச அடுத்த வாரமே நான் கட்டட வேலையை ஆரம்பிச்சிடுவேன் சார்...''

''குட்!''

''சார், உங்க பங்களாவை நான் வாங்கற விஷயத்துல யார் என்ன சொன்னாலும் சரி... பின்வாங்கவே மாட்டேன்..''

''எனக்கு இந்த வார்த்தையே போதும் ஷ்யாம்... ரெண்டு நாள் கழிச்சு, மறுபடியும் உன்னை காண்டாக்ட் பண்ணிப் பேசறேன்...''

''ஓகே சார்!'' - ஷ்யாம் செல்போனை அணைத்து, பாக்கெட்டில் போட்டுக்கொண்டு மெதுவாக எழுந்தான். மனசுக்குள் சந்தோஷ பலூன்கள் பறந்தன.

'பத்தடி ஆழத்தில் நான்கு குழிகள் ரெடி... தேங்க்யூ வெரிமச் ராவ்!'

ஷ்யாம் கையில் வைத்திருந்த சிகரெட் மீதத்தை காதரின் உடம்பை நோக்கி சுண்டிவிட்டு, அறையினின்றும் வெளிப்பட்டான். பங்களாவின் பின்பக்கக் கதவைத் திறந்துகொண்டு, பக்கவாட்டில் தெரிந்த ராவ் பங்களாவை நோக்கிப் போனான்.

மே.ஃப்ளவர் மரங்களுக்கு மத்தியில் ராவின் பங்களா தெரிந்தது. கெஸ்ட் ஹவுஸையொட்டி எழுப்பப்பட்டிருந்த குட்டையான காம்பௌண்ட் சுவரை சுலபமாகத் தாண்டி உள்ளே குதித்தான். பார்த்தீனிய செடிகள் இடுப்பளவு உயரத்துக்கு வளர்ந்து, காடாக மண்டிக்கிடக்க... ஷ்யாம் அவற்றை விலக்கிக்கொண்டு பங்களாவின் மேற்குப் பகுதியை நோக்கிப் போனான்.

பதினைந்து அடி இடைவெளி விட்டு சதுரமாகத் தோண்டப்பட்டிருந்த அந்த நான்கு குழிகளும் வரிசையாகப் பார்வைக்குக் கிடைத்தன. பத்தடிக்குக் குறையாத ஆழத்தோடு வாய்பிளந்து, அடியில் சில குப்பைக் காகிதங்களைக் காட்டியது.

ஷ்யாமின் இதழ்க்கோடியில் ஒரு புன்னகை உதித்தது. 'இதில் ஏதாவது ஒரு குழியைக் காதருக்குக் கொடுத்துவிட வேண்டியதுதான்!'

'யாருக்கும் எப்போதும் தெரியப்போவதில்லை!'



ஷ்யாம் பார்வையைச் சுற்றிலும் துரத்திப் பார்த்தான் மனித சஞ்சாரம் அறவே இல்லை. காற்றுகூட வாயைச் சாத்தியிருந்தது. சுற்றுப்புறம் முழுக்க ஏதோ ஸ்டில் போட்ட மாதிரியான நிறுவில் உறைந்து போயிருந்தது.

'காதரின் உடலை இப்போதே கொண்டுவந்து குழிக்குள் தள்ளி டிஸ்போஸ் செய்துவிட்டால் என்ன...'

எண்ணத்தைச் செயல்படுத்த, கெஸ்ட் ஹவுஸை நோக்கி வேக நடை போட்டான் ஷ்யாம்.

சாய்பாபா காலனியில் இருந்த ஆஷாதேவியின் நர்ஸிங் ஹோமுக்கு சந்திரா போய்ச் சேர்ந்தபோது, ராம்கோபால் போர்டிகோவின் வாசலிலேயே நின்றிருந்தார். முகத்தில் இரண்டு கோட்டிங் கவலை பெயின்ட்.. சந்திரா காரை விட்டு இறங்கிக்கொண்டே, அவரைப் பார்த்துத் தவிப்பும் பதட்டமுமாகக் கேட்டாள்...

''என்னங்க! யாருக்கு என்ன உடம்பு...? எதுக்காக என்னை ஹாஸ்பிட்டலுக்கு வரச் சொன்னீங்க...? ஷ்யாம் - விபா கல்யாணம் நடக்கறதுல என்ன சிக்கல்...?''

ராம் கோபால் கையமர்த்தினார். ''சந்திரா டென்ஷன் படாம, என் பின்னாடி வா... நீ இங்கே வர்றது ஷ்யாமுக்குத் தெரியாதே...?''

''தெரியாது! முக்கியமான ரெண்டு ரிலேட்டிவ்ஸ் வீட்டுக்கு அழைப்பிதழ் கொடுக்கப் போகணும்னு சொல்லிட்டு வந்திருக்கேன்...''

''ஷ்யாம் இப்போ எங்கே...?''

''ஆபீஸ் போயிருப்பான்...''

ராம்கோபால் ரிசப்ஷனிலிருந்த சோபாவுக்குப் போய்ச் சாய்ந்தார். பின்னங்கழுத்திலும் முகத்திலும் அரும்பி வழிந்த வியர்வையைச் சேலைத் தலைப்பால் ஒத்திக்கொண்டே கணவருக்கு அருகே போய் உட்கார்ந்தாள் சந்திரா.

''சொல்லுங்க... என்ன விஷயம்...?''

பெருமூச்சொன்றைக் காற்று மண்டலத்துக்குத் தாரை

வார்த்த ராம்கோபால் மெதுவாகப் பேச்சை ஆரம்பித்தார்.

''ஒருமணி நேரத்துக்கு முந்தி கல்யாண மண்டபத்துக்குப் போயிட்டுத் திரும்பும் வழியில், சிக்னலில் என் கார் நின்னுது. எதேச்சையா திரும்பிப் பார்த்தப்ப, ஆஷாதேவி நர்ஸிங் ஹோம்ல ஜெயப்பிரகாசத்தோட கார் நின்னுட்டிருந்தது. 'யாருக்கு என்ன உடம்போ தெரியலையே... போய் விசாரிச்சுப் பார்ப்போம்'கிற எண்ணத்துல காரை ஹாஸ்பிட்டலுக்குத் திருப்பினேன். ஹாஸ்பிட்டல் ரிசப்ஷனிஸ்ட்கிட்ட விவரம் கேட்டேன். ஜெயப்பிரகாசம் தன் மனைவி, மகளோடு டாக்டரைப் பார்க்க வந்திருப்பதாகவும் ஏதோ ஒரு பிரச்னையில் இருந்த மாதிரி ஃபீல் பண்ணினதாகவும் ரிசப்ஷனிஸ்ட் சொன்னா. நான் டாக்டர் ரூமுக்குப் போனேன். வெறுமனே சாத்தியிருந்த கதவு பக்கமா போய் நின்னபோது, உள்ளே வாக்குவாதம் நடந்துக்கிட்டு இருந்தது...''

''வாக்குவாதமா...?''

''ம்! விபா யாருக்கு மகள்ங்கிற வாக்குவாதம்...''

''இது என்னங்க புதுக் குழப்பம்...?''

''புதுக் குழப்பம்தான்! உள்ளே நாலஞ்சு பேர் இருந்தாங்க... ஏதோ ஜமீன் • பரம்பரைனு பேசிக்கிட்டாங்க. நான் உள்ளே போகாம, வெளியே நின்னுக்கிட்டே எல்லாத்தையும் கேட்டேன். ஜமீன் பரம்பரைனு சொல்லிக்கிட்டு வந்தவங்க மிரட்டிட்டுப் போனதும் அதுக்கப்புறமா, நான் கதவைத் தட்டிட்டு உள்ளே போனேன். நான் அப்படி உள்ளே போனதும் ஜெயப்பிரகாசத்தோட ஃபேமிலி அப்செட்டா விட்டாங்க!''

''பிரச்னை என்னன்னு மொதல்ல சொல்லுங்க...''

ராம்கோபால் சில நிமிடங்களைச் செலவழித்து பிரச்னையின் மொத்தப் பரிமாணத்தையும் எடுத்துச் சொல்ல... சந்திராவின் கண்களில் மாறி மாறி



அதிர்ச்சியும் பயமும் தெரிந்தன.

''அப்படின்னா, விபா உண்மையிலேயே அந்த ருத்ர நரசிம்மனு ஜமீன் பரம்பரையின் வாரிசுதானா...?''

''ஆமா! டாக்டர் ஆஷாதேவியோட ஸ்டேட்மெண்ட்படி பார்த்தா, அது நூத்துக்கு நூறு உண்மை...''

''இப்ப என்னங்க பண்றது...? ஜமீன் பரம்பரை மிரட்டிட்டுப் போயிருக்காங்க. ஷ்யாம் - விபா கல்யாணம் நடக்குமா...?''

''கண்டிப்பா நடக்கும்! விபா நம்ம பக்கம் இருக்கா. அவ மேஜர் பொண்ணு. தன்னோட கல்யாணத்தைப் பத்தி முடிவெடுக்க, அவளுக்கு மட்டுமே உரிமை இருக்கு. ஷ்யாமைத்தான் கல்யாணம் பண்ணிக்குவேன்னு அந்த ஜமீன் பரம்பரைகிட்டயே ஸ்ட்ராங்கா சொல்லிட்டா!''

சந்திரா அப்போதுதான் உணர்வுக்கு வந்தவளாகச் சுற்றும் முற்றும் பார்த்துவிட்டுக் கேட்டாள்.

''விபா இப்போ எங்கே...?''

ராம்கோபால் எழுந்தார். ''வா, போகலாம். ஜெயப்பிரகாசத்தோட வொய்ஃப், ஏற்கெனவே பிளட் பிரஷர் பேஷண்ட். இந்தப் பிரச்னையின் காரணமா பிரஷர் ஏறினதுல மைல்ட் ஹார்ட் அட்டாக்... ஐ.சி. யூனிட்ல வெச்சு ட்ரீட்மெண்ட் கொடுத்துட்டிருக்காங்க. விபாவும் ஜெயப்பிரகாசமும் அங்கேதான் இருக்காங்க...''

மாடிப்படிகளில் உயர்ந்தார்கள். முதல் மாடியின் கோடியில் ஐ.சி. யூனிட் தெரிய, யூனிட்டுக்கு வெளியே போடப்பட்டிருந்த பி.வி.சி. நாற்காலிகளில் தலைகளைக் குனிந்தபடி உட்கார்ந்தார்கள் ஜெயப்பிரகாசமும் விபாவும்.

விபாவை நெருங்கி அவளுடைய தோளை சந்திரா தொட... விபா உதட்டைக் கடித்து அழுகையை அடக்கியபடி எழுந்து நின்றாள்.

''இதோ பார் விபா... நீ அழக்கூடாது. யாரோ என்னவோ சொல்லிட்டுப் போகட்டும். உனக்கு அப்பா,

அம்மா இவங்கதான். அம்மாவுக்கு ஒண்ணும் ஆகாது. பயப்படாம இரு... அதே மாதிரி, ஷ்யாமுக்கும் உனக்கும் வர்ற வாரம் கண்டிப்பா கல்யாணம் நடக்கும். அதை யாராலயும் தடுக்க முடியாது. எந்த ஜமீன் பரம்பரை வந்தாலும் சரி, மன்னர் பரம்பரை வந்தாலும் சரி... அவங்களால ஒரு துரும்பைக்கூட கிள்ளி எடுத்துப் போட முடியாது..."

விபா கண்ணீர் மிதக்கும் விழிகளோடு சந்திராவை ஏறிட்டாள். சின்ன தயக்கத்துக்குப் பிறகு கேட்டாள்...

"அவர்... அவர்... வரலையா...?"

"யார்... ஷ்யாமா...?"

"ம்..."

"ஷ்யாமுக்கு விவரம் தெரியாது. நான் மட்டும்தான் புறப்பட்டு வந்தேன்..."

"நான்... அவர்கூடப் பேசணுமே...?"

"செல்போன்ல பேசறியா...?"

விபா தலையசைக்க, ராம்கோபால் தன் செல்போனை எடுத்துக்கொண்டு, டயலில் எண்களை ஒற்றியெடுக்க ஆரம்பித்தார்.

## 16

ராம்கோபால் செல்போனில் ஷ்யாமைப் பிடிக்க ஐந்து நிமிஷ நேரம் முயற்சி செய்து பார்த்துவிட்டு... ஒரு பெருமூச்சோடு சந்திராவை ஏறிட்டார்.

"லைன் கிடைக்கலை.. செல்போனை ஆஃப் பண்ணி வெச்சுட்டான் போலிருக்கு."

"ஷ்யாம் ஆபீஸில்தான் இருப்பான். ஆபீஸ் டெலிபோன் நம்பருக்கு ட்ரை பண்ணிப்பாருங்க..."

ராம்கோபால் ஆபீஸுக்கு போன் செய்ய... ஷ்யாமின் பர்சனல் செக்ரெட்டரி சில்வியா லைனுக்கு வந்தாள்.

"வணக்கம் ஸார்...?"

"ஷ்யாமுக்கு கனெக்ட் பண்ணு..."

"ஸாரி சார்... மிஸ்டர் ஷ்யாம் காலையிலிருந்தே



ஆபீஸுக்கு வரலை..."

"மத்தியானம் வந்திருக்கணுமே...?"

"வரலைசார்... சில முக்கியமான ஃபைல்களில் அவர் கையெழுத்துப் போட வேண்டியிருக்கு. அவருக்காகத்தான் நானும் காத்துக்கிட்டிருக்கேன்..."

"ஷ்யாம்கிட்டேயிருந்து ஏதாவது போன் வந்ததா...?"

"வரலை சார்..."

"ஓகே... ஷ்யாம் ஆபீஸுக்கு வந்தா என்னை உடனே செல்போனில் காண்டாக்ட் பண்ணச் சொல்லு..."

"யெஸ் சார்..." மறுமுனை பவ்யமாக சொல்லிக்கொண்டிருக்கும்போதே... ராம்கோபாலின் கையில் இருந்த செல்போன் உயிரை விட்டது. சந்திராவிடம் குனிந்து கோபம் கலந்த கிசுகிசுப்பான குரலில் சொன்னார்.

"ஷ்யாம் ஆபீஸுக்கும் போகலை..."

"போறதா என்கிட்ட சொன்னானே...?"

"அவன் சரியில்லை... இப்பெல்லாம் நிறைய பொய் சொல்றான்..."

"சரி... சரி... ஷ்யாம் மேல குற்றப்பத்திரிகை படிக்க இது நேரம் கிடையாது. விபா பார்த்துட்டிருக்கா... அவளுக்கு சமாதானமா ஏதாவது ஒரு பதிலைச் சொல்லி வையுங்க..."

கலங்கிய விழிகளோடு நின்றிருந்த விபாவிடம் வந்தார் ராம்கோபால்.

"இதோ பாரம்மா...! ஆபீஸ் விஷயமா ஷ்யாம் வெளியே போயிருக்கான். செல்போன் எடுக்கலை. பேட்டரி சார்ஜ் ஆகியிருக்காதுன்னு நினைக்கிறேன். வெளியே போயிருக்கிற ஷ்யாம் ஆபீஸுக்கு வந்ததும் என்னை காண்டாக்ட் பண்ணுவான். அப்ப நீ பேசலாம்..."

விபா உதட்டைக் கடித்து, அழுகையை அடக்கியபடி கேட்டாள். "உங்க தம்பி இந்தக் கல்யாணத்துக்கு ஒப்புக்குவாரா...?"

''ஏம்மா... அப்படிக் கேட்கிறே...?''

''என்னோட பிறப்பில் இப்படியொரு குளறுபடி இருக்கிறதை நீங்களும் உங்க மனைவியும் ரொம்பவும் சாதாரணமாக எடுத்துக்கிட்டீங்க. உங்க பிரதரும் அப்படியே எடுத்துக்குவாரான்னு கொஞ்சம் கலக்கமாயிருக்கு...''

ராம்கோபால் சின்னதாகப் புன்னகைத்து விட்டுச் சொன்னார்: ''ஷ்யாம் எங்களைவிட ரொம்பவும் முற்போக்கான டைப். ஒரு விஷயத்தைச் சொன்னா நீ நம்ப மாட்டே...! உன்னைத்தான் கல்யாணம் பண்ணிக்குவேன்னு அவன் கடந்த மூணு வருஷ காலமா பிடிவாதமா இருந்தான். வேற எந்தப் பொண்ணை பார்க்கக் கூப்பிட்டாலும் வரமாட்டான். உன்னைப் பெண் கேட்கிறதுக்காகவே எங்க ஸ்டேட்டஸை இந்த மூணு வருஷ காலத்துல உயர்த்திக்கிட்டோம். பிசினஸை டெவலப் பண்ணி ஆர். எஸ். புரத்துல ஒரு பெரிய பங்களாவைக் கட்டினோம். மூணு கார் வாங்கினோம்.''

விபா அந்தக் கலக்கத்திலும் தன் பெரிய விழிகளை வியப்பால் விரித்தாள். ''நி... நி... நிஜமாவா...?''

''கலப்படமில்லாத நிஜம். கடந்த மூணு வருஷ காலமாவே ஷ்யாம் உன்னை மானசீகமா காதலிச்சுட்டு வந்திருக்கான். நீ காலேஜில் படிச்சிட்டிருக்கும் போது தினமும் உன்னைப் பார்க்க வந்துருவான். 'அது கல்லூரி வாசல் இடையாது. சொர்க்கவாசல்'னு டைரியில் கவிதை கூட எழுதி வெச்சிருந்தான்...''

விபாவின் கண்களில் சந்தோஷச் சலனங்கள். ''அவர் மூணு வருஷமா என்னைக் காதலிச்சாரா?''

''ஆமா...''

''ஒரு தடவைகூட அவரை என்னோட காலேஜ் வாசல்ல நான் பார்த்தது இல்லையே...?''

''எந்த விஷயத்துக்குமே அவன் தன்னை வெளிப்படுத்திக்கமாட்டான்.''

''நீங்க சொல்றதெல்லாம் ஆச்சரியமாயிருக்கு...''



''எங்களுக்கு அந்த ஆச்சரியமெல்லாம் பழகிப்போச்சு. ஷ்யாம் உன்னைத் தன்னோட மனசுக்குள்ளே ஒரு தேவதை மாதிரி வெச்சிருக்கான்.''

சந்திரா பக்கத்தில் வந்தாள். ''இன்னொரு விஷயத்தையும் சொல்லிடறேன் விபா. ஷ்யாமுக்கு நாங்க உன்னை பெண் கேட்டுக்கிட்டு வந்தபோது உங்கப்பா மட்டும் 'நோ'ன்னு சொல்லியிருந்தா ஷ்யாம் இப்போ உயிரோடு இருந்திருக்கமாட்டான். தற்கொலை பண்ணிக்கவும் தயாராயிருந்தான்.''

விபா வியப்பிலும் சந்தோஷத்திலும் நத்தளித்தாள். ''எ... எ... எப்படி... அவருக்கு... என்... மேல... இ... இப்படியொரு...?''

''நான் காரணம் கேட்டுப் பார்த்தேன். அது ஆயிரம் ஜென்ம பந்தம்னு சொல்லிச் சிரிச்சான். உனக்கும் ஷ்யாமுக்கும் கல்யாணம் நிச்சயமானதும் உன்கிட்டயிருந்து உன்னோட பாஸ்போர்ட் சைஸ் போட்டோ ஒண்ணைக் கேட்டு வாங்கினானே... ஞாபகமிருக்கா...?''

''ம்... ஞாபகம் இருக்கு...''

''அந்த ஒரு போட்டோ இப்போ ஆயிரம் போட்டோக்களா மாறியிருக்கு. ஷ்யாமோட ரூமுக்குள்ளே போய் மேஜை... அலமாரின்னு எதைத் திறந்தாலும் சரி... மூச்சையே அடைக்கிறமாதிரி உன்னோட போட்டோக்கள்தான். எதுக்கு இவ்வளவு போட்டோன்னு கேட்டா அதுக்கு ஷ்யாமோட பதில் என்ன தெரியுமா விபா...?''

''எ... என்ன...?''

'''விபாவைப் பார்க்க ஆயிரம் கண் வேணும். ஆனா என் ரெண்டு கண்ணால விபாவோட ஆயிரம் போட்டோவைப் பார்க்க முடியுமே...!'''

விபா நெகிழ்ந்து போய் கண்களில் நீர் காட்டினாள். ''அவருக்கு என்மேல அவ்வளவு பிரியமா...? அவர்கிட்ட ரெண்டு மூணு தடவை பேசியிருக்கேன்.

பேசும்போது அப்படித் தெரியலையே...?''

''அதுதான் ஷ்யாம்...''

சந்திரா சொல்லிக்கொண்டிருக்கும்போதே... ஐ.ஸி. யூனிட் கதவைத் திறந்துகொண்டு ஆஷாதேவி வெளிப்பட்டாள். எல்லோரும் அவளைச் சூழ்ந்தார்கள். விபா பதற்றக் குரலில் கேட்டாள்:

''டாக்டர்...! அம்மாவுக்கு பயப்படும்படி ஏதும் இல்லையே...?''

''இந்த நிமிஷம் வரைக்கும் இல்லை... மைல்ட் அட்டாக்கிலிருந்து யசோதா இப்ப மீண்டுட்டாங்க. பட்... மறுபடியும் ஒரு அட்டாக் வராம பார்த்துக்கணும். ஐ... மீன்... எந்த ஒரு அதிர்ச்சியான தகவலும் அவங்க காதுக்குப் போய்டக்கூடாது. அதுக்கு உங்க எல்லாரோட ஒத்துழைப்பும் வேணும். ஷ்யாமையும் விபாவையும் கல்யாண கோலத்துல பார்க்கணுங்கிறதுதான் யசோதாவோட ஆசை. அதுக்கான முயற்சிகளை நீங்க எடுத்துக்கிறது நல்லது...''

ஷ்யாம் கெஸ்ட் ஹவுஸுக்கு மறுபடியும் நுழைந்து போஸ்ட்மேன் காதரின் உடலை நெருங்கினான்.

'இனி, ஒரு விநாடியைக்கூட வீணாக்கக்கூடாது பாடியை பில்வர் குழிக்குள் தள்ளினால்தான் நிம்மதியாகச் சுவாசிக்க முடியும்...!'

உடலை இரண்டு பக்கங்களுக்கும் கை கொடுத்து இழுத்தான்.

படுக்கையறையைத் தாண்டினான். மனசுக்குள் ஒரு பயம் காளான் மாதிரி முளைவிட்டது.

'பாடியை இப்படி திறந்தவெளிக் காட்சிப்பொருளாய் ராவ் பங்களாவுக்குக் கொண்டுபோய் டிஸ்போஸ் செய்வது அவ்வளவு புத்திசாலித்தனம் இல்லை...! யாராவது பார்த்துவிட்டால் ஆபத்துக்கு ஆரத்தி கரைத்துப் பொட்டு வைத்துவிடுவார்கள்...!'

ஷ்யாம், காதரின் உடலை அப்படியே போட்டுவிட்டு,



வியர்வை வழிய இரண்டு நிமிஷ நேரம் யோசித்துவிட்டு பின் உள்ளே போனான்.

சமையலறை பரண்மீது காலியான அந்த ஃப்ரிஜ் அட்டைப் பெட்டி தெரிய... அதைக் கீழே இறக்கிக்கொண்டு வந்தான். பெட்டியின் வாயை அகலத் திறந்துவைத்துவிட்டு, காதரின் உடலை மூச்சைப் பிடித்துக்கொண்டு குண்டுக்கட்டாகத் தூக்கிப் பெட்டிக்குள் திணித்தான்.

உடல் கோணல் மாணலாக மடங்கி இடத்தை அடைத்துக்கொள்ள, பெட்டியின் வாயை மூடி ஒரு கயிற்றைக் கொண்டுவந்து இறுக்கமாகக் கட்டினான்.

மூச்சு வாங்கி வியர்வை கொட்டியது. பெட்டியைத் தள்ளினான். அது மார்பிள் தரையில் வழுக்கிக்கொண்டு போயிற்று.

பெட்டி பின்பக்கக் கதவுக்கு வந்ததும் அதை அங்கேயே நிறுத்திவிட்டு வெளியே வந்து ரோட்டுப் பக்கம் பார்வையைப் போட்டான். கண்ணுக்கெட்டிய தூரம் வரைக்கும் பாலைவன வெறுமை. வாயைப் பொத்தின இருளில் நிசப்தம்.

பெட்டியைத் தள்ளிக்கொண்டு போய்விடலாம். இடைவெளி கொடுக்காமல் வேலை செய்தால் பத்தே பத்து நிமிஷம்தான்! உடல் குழிக்குள் போய்விடும்.

பெட்டிக்கு வந்தான். குனிந்து அதன் இரண்டு முனைகளையும் பற்றிக்கொண்டு மூச்சை இழுத்துப் பிடித்து தள்ளிய விநாடி... ஷர்ட் பாக்கெட்டில் சொருகி வைத்திருந்த செல்போன் தலை குப்புற எகிறி விழுந்தது. தாவி அதை இடது கை விரல்களால் பற்றினான் ஷ்யாம். விழுந்த வேகத்தில் ஆஃப் செய்து வைத்திருந்த செல் உயிர்ப்பெற்று கத்தியது. காதுக்குக் கொடுத்தான்.

ஆபீஸிலிருந்து சில்வியா. அரைநிமிட நேர பேச்சுக்குப்பின் கோபத்தோடு செல்போனை அணைத்து பாக்கெட்டுக்குள் போட்டுக் கொண்டு இரண்டு கைகளாலும் வியர்வையை வழித்தவன் பெட்டியைத்

தன்ன ஆரம்பித்தான்.

பெட்டி அங்குலம் அங்குலமாக நகர்ந்து பின்பக்கக் கதவைத் தாண்டியது.

இன்ஸ்பெக்டர் குருவாயூர் கண்ணன் அந்தச் சிறிய போஸ்ட் ஆபிஸுக்குள் நுழைந்து விசாரணையை ஆரம்பித்தபோது, சாயந்தரம் மணி நான்கு. போஸ்ட் மாஸ்டர் திரவியமும் சக ஊழியர்களும் மாறி மாறி பதில் சொல்லிக்கொண்டிருந்தார்கள்.

''போஸ்ட் மேனோட முழுப் பேரே காதர்தானா...?''

''இல்ல சார்... காதர் மொய்தீன்.''

''எத்தனை வருஷ சர்வீஸ்...?''

''பத்து வருஷம்...''

''கல்யாணம்...?''

''ஆயிடுச்சு சார். ஆனா, ஃபேமிலி மேலப்பாளையத்துல. மாசத்துக்கு ஒரு தடவை ஊருக்குப் போயிட்டு வருவார்.''

''காதரோட காரெக்டர் எப்படி...?''

''கொஞ்சம் செலவாளி.''

''பெண்கள் தொடர்பு...?''

ஊழியர்கள் மத்தியில் மௌனம். போஸ்ட் மாஸ்டர் திரவியம் மட்டும் தயக்கமாகக் குரலை இழுத்தார்.

''அப்படி எதுவும் இருக்கிற மாதிரி தெரியலை.''

''இன்னிக்கு பட்டுவாடா செய்யப்பட வேண்டிய மணியார்டர் பணம் காதர்கிட்ட எவ்வளவு இருந்தது...?''

''நாலாயிரத்துச் சொச்ச ரூபாய்.

''இதுக்கு முன்னாடி மணியார்டர் பணத்துல காதர் ஏதாவது கையாடல் பண்ணியதுண்டா...?''

''அப்படியெல்லாம் பண்ணியது இல்லை. ஆனா,



டியூட்டி நேரத்துல வீட்டு புரோக்கர் வேலை பார்ப்பான். அதுக்காக காதர் நாலஞ்சு தடவை மெமோ வாங்கியிருக்கான். மத்தபடி வேலையில் எந்த ரிமார்க்கும் இல்லை.''

''காதர் எத்தனை மணியிலிருந்து காணாம போயிருக்கார்?''

''பதினொரு மணியிலிருந்து.''

''எப்படி அவ்வளவு கரெக்டா சொல்றீங்க...?''

''ப்ரின்ஸ் அவென்யூவில் ஒரு ரிடையர்டு ஹெட் மாஸ்டருக்கு ரெஜிஸ்டர் போஸ்ட் ஒண்ணை டெலிவரி பண்ணியிருக்கான். அப்போ மணி பதினொண்ணு... ஹெட்மாஸ்டரை விசாரிச்சபோது கிடைச்ச தகவல் இது... அதுக்கப்புறம் காதர் யாருக்கும் லெட்டர்லை டெலிவரி பண்ணலை.''

''ஹெட்மாஸ்டர் வீட்டுக்கு அடுத்தபடி யார் வீடு?''


''அது ஒரு எக்ஸ்டன்ஷன் ஏரியா சார். பாதி ப்ளாட் பொட்டல். ஹெட்மாஸ்டர் வீட்டை விட்டா அதுக்கப்புறம் இருநூறு மீட்டர் தள்ளி சுதாகர் ராவ் பங்களாவும் அந்த பங்களாவையொட்டி ஒரு கெஸ்ட் ஹவுஸும் இருக்கு''

''அந்த இடத்துக்குப் போய் யாரையாவது விசாரிச்சீங்களா?''

''பண்ணினோம். ஆனா உபயோகமான தகவல் கிடைக்கலை.''

குருவாயூர் கண்ணன் எழுந்தார் தீர்க்கமாக. ''நீங்க போய் விசாரணை பண்றதுக்கும் போலீஸ் போய் விசாரணை பண்றதுக்கும் நிறைய வித்தியாசம் இருக்கு. வாங்க போகலாம். காதர் எங்கேயிருந்தாலும் சரி... ரெண்டு மணி நேரத்துக்குள்ளே கண்டுபிடிச்சுடலாம்...''

குருவாயூர் கண்ணனின் நடையில் ஒரு புயல் மையம் கொண்டது.



**சைலன்சர் பொருத்தப்பட்ட ஆர்.பி.ஜி 2 ராக்கெட் லாஞ்சர். இதன் மதிப்பு இந்திய ரூபாயில் ஏறக்குறைய ரூ.20,336.25 (275 பவுண்)**

## 17

போஸ்ட்மேன் காதரின் உடல் திணிக்கப்பட்டிருந்த அந்தப் பெட்டியைக் கொஞ்சம் கொஞ்சமாக நகர்த்தி, குட்டையான காம்பௌண்ட் சுவரைத் தொடுவதற்குள் ஷ்யாம் திணறிப் போனான். நுரையீரல்கள் காற்றுக்காகத் தவித்து வலித்தன.

பெரிது பெரிதாக மூச்சு வாங்கிக்கொண்டு சுற்றும் முற்றும் பார்த்தான். எல்லாத் திசைகளிலும் செதுக்கப்பட்ட நிசப்தம். வோல்டேஜ் குறைந்த மாலைநேரச் சூரியன் மரங்களுக்குப் பின்னால் ஒளிந்துகொள்ள... வடிகட்டப்பட்ட வெளிச்சத்தில் கொஞ்சம்போல் இருட்டு ஊடுருவியிருந்தது.

ஷ்யாம் மூச்சைப் பிடித்துக்கொண்டு உடல் இருந்த பெட்டியைத் தூக்கி காம்பௌண்ட் சுவர்மேல் வைத்துவிட்டு, மறுபக்கம் குதித்துப் பெட்டியைக் கீழே இறக்கினான்.

அடிவயிறு வலித்தது.

'இனி கவலை இல்லை...! இழுத்துக்கொண்டு போய்விடலாம்...'

இழுத்தான்.

பார்த்தீனிய செடிகள் நசுக்கப்பட... பெட்டி பில்லர்



குழியை நோக்கிப் போயிற்று. சிரமமான பத்து நிமிஷத் தள்ளலில், பில்லர் குழி வாயைப் பிளந்தபடி பக்கத்தில் தெரிய... ஷ்யாம் மறுபடியும் ஒரு தடவை சுற்றுமுற்றும் பார்த்துவிட்டு பெட்டியைக் குழிக்குள் தள்ளினான்.

'த்த்த்ட்ட்ட்ட்....''

குழியின் ஓரங்களைச் சிராய்த்துக்கொண்டு பெட்டி வேகமாகக் கீழே இறங்கித் தரையோடு மோதிக்கொண்டு நிற்க, சின்னதாக ஒரு புழுதி மண்டலம் எழும்பி மேலே புகையாக வந்தது.

பக்கத்தில் குவித்து வைக்கப்பட்டிருந்த மணலை ஷ்யாம் இரண்டு கைகளாலும் தள்ள... குழி ஸ்லோமோஷனில் நிரம்பியது. பெட்டியே தெரியாத அளவுக்கு மணல் மூடியிருந்தபோது, ஷ்யாமின் இதயம் சட்டென்று இரண்டு விநாடி துடிப்பை நிறுத்தியது.

'காதர் கொண்டுவந்த தபால்பை, படுக்கையறையின் வார்ட் ரோப்புக்குள் இருக்கிறதே... அதை என்ன பண்ண...?'

'அதையும் இதே குழியில் போட்டு டிஸ்போஸ் பண்ணிவிட வேண்டியதுதான். போஸ்ட்மேன் காதர் சம்பந்தப்பட்ட எதுவும் வீட்டில் இருக்கக்கூடாது...!'

மணல் தள்ளுவதை நிறுத்திவிட்டு, கெஸ்ட்ஹவுஸை நோக்கி வேகவேகமாகப் போனான். காம்பௌண்ட் சுவரை லாவகமாகத் தாண்டி பின்பக்கக் கதவைத் திறந்துகொண்டு உள்ளே நுழைந்தான்.

படுக்கையறை வந்தது. வார்ட்ரோப்பைத் திறக்க... தபால்கட்டுகளைக் கர்ப்பம் தரித்த அந்த காக்கிக்கொட்டை நிறப் பை பார்வைக்குக் கிடைத்தது. எடுத்துக்கொண்டான்.

அறையைவிட்டு வெளியே வந்தபோது மனசு சொல்லியது: 'குழிக்குள் மணலைச் சீக்கிரமாகத் தள்ளி மூட ஒரு மண்வெட்டி தேவை... எடுத்துக்கொள்...!'

கார்டன் ஷெல் இருந்த ஸ்டோர் ரூமை நோக்கிப் போனான். ரூம் கதவைத் திறக்க... சாய்பிரசாத்தின் முனகல் சத்தம் ஈனஸ்வரத்தில் கேட்டது. தலை ஒரு

பக்கமாகத் துவண்டிருந்தது. பையனைத் தொட்டுப் பார்த்தான் ஷ்யாம்.

சாய்பிரசாத் விழிகளைத் திறக்கப் பிரயத்தனப்பட்டுத் தோற்றான்.

ஷ்யாம், ஸ்டோர்ரூமின் அந்த அரையிருட்டில் தேடி ஒரு மண்வெட்டியை எடுத்துக்கொண்டான்.

ரூம் கதவைப் பழையபடி சாத்திவிட்டு, கெஸ்ட் ஹவுஸின் பின்பக்கத்தை நோக்கி நகர முயன்ற விநாடி - ரோட்டில் அந்த மெலிதான இரைச்சல் கேட்டது.

ஷ்யாமின் நடை தயங்கியது.

'அது என்ன சத்தம்...?' காதுகளுக்குச் சற்று கூடுதல் உன்னிப்பைக் கொடுக்க... சத்தம் பிடிபட்டது.

ஒரு வாகனத்தின் இன்ஜின் சத்தம்.

'காரா... வேனா...?'

ஷ்யாம் சத்தம் காட்டாமல் ரோட்டைப் பார்த்த மாதிரி இருந்த வெளிப்பக்க ஜன்னலுக்குப் போய் அதன் கொக்கியைச் சத்தமில்லாமல் நீக்கி... கொஞ்சமாக திறந்து, பார்வையை வெளியே அனுப்பினான்.

சுழலும் சிவப்பு விளக்கோடு போலீஸ் ஜீப் ஒன்று ராவ் வீட்டுக்கு முன்பாக நின்று உடம்பை உதறிக்கொண்டிருந்தது.

ஷ்யாமின் அத்தனை புலன்களும் கூர்மைக் கொண்டன.

'ராவ் வீட்டுக்கு முன்பு எதற்காக போலீஸ் ஜீப்...?'

'ஸ்மெல் பண்ணிவிட்டார்களா...?'

ஷ்யாம் திகைத்த விழிகளோடு பயமாகப் பார்த்துக்கொண்டிருக்கும் போதே... ஜீப்பின் முன்பக்கம் இருந்து அந்த இன்ஸ்பெக்டர் இறங்கினார். தொடர்ந்து இரண்டு கான்ஸ்டபிள்கள், போஸ்டல் டிபார்ட்மெண்ட்டைச் சேர்ந்த மூன்று ஊழியர்கள்.

ஓர் ஊழியர் சொன்னார்.

''இந்த வீடுதான் சார்...''

''ஓனர் பேர் என்ன சொன்னீங்க...?''

''சுதாகர் ராவ்...''



''அவர் இப்போ ஃபாரின்ல இருக்கார், இல்லையா...?''

''ஆமா... சார்...''

''போஸ்ட் மேன் காதர் கடைசியா லெட்டர் டெலிவரி பண்ணின இடம் இந்த ஏரியாதானா...?''

''ஆமா... சார்...''

''ராவ் வீட்டுக்கு வாட்ச்மேன் உண்டா...?''

''கிடையாது சார்...''

''பக்கத்து பங்களாதான் நீங்க சொன்ன கெஸ்ட் ஹவுஸா...?''

''ஆமா சார்... மிஸ்டர் ராம்கோபாலும் அவரோட பிரதர் ஷ்யாமும் அடிக்கடி வந்துட்டுப் போவாங்க. பெரும்பாலும் ஷ்யாம் இருப்பார்...''

''இப்ப கெஸ்ட் ஹவுஸ் திறந்திருக்கான்னு பாருங்க.

ஒரு தபால் ஊழியர் கெஸ்ட் ஹவுஸ் பக்கம் நடந்து வர... ஜன்னலின் இடைவெளி வழியே பார்த்துக்கொண்டிருந்த ஷ்யாமுக்கு மூச்சு அடைத்தது. வியர்வை சுரப்பிகள் மறுபடியும் விழித்துக்கொண்டன.

''கெஸ்ட் ஹவுஸ் பூட்டியிருக்கு சார்...''

''வெளியே கார் நிக்குது...''

''காரை நிறுத்திவிட்டு, வாக்கிங் போயிருக்கலாம் சார்... இல்லேன்னா, பிரதர்ஸ் ரெண்டு பேரும் தனித்தனி கார்களில் கெஸ்ட் ஹவுஸ் வந்து, திரும்பிப் போகும்போது ஒரு கார்ல போயிருக்கலாம்...?''

''காதரைப் பத்தி அவங்ககிட்ட என்கொயர் பண்ணீங்களா...?''

''மத்தியானம் இங்கே வந்தோம் சார்... ராம்கோபால் இருந்தார். அவரோட பிரதர் ஷ்யாம் இல்லை. ராம் கோபால்கிட்டே 'போஸ்ட்மேன் காதர் இங்கே வந்தாரா?'ன்னு கேட்டோம். 'அவர் வரலை'ன்னு சொல்லிட்டார்...

இன்ஸ்பெக்டர் பக்கத்தில் நின்றிருந்த கான்ஸ்டபிளிடம் திரும்பினார்.

''ஆறுமுகம்...''

''சார்...''

''இந்த இடத்திலிருந்து ஒரு நூறு ஸ்கொயர் மீட்டர் பரப்புக்கு ஸீன் ஆஃப் க்ரைம் பார்த்துடுங்க! காதருக்கு இந்த இடத்துல ஏதாவது ஆகியிருந்தா, நிச்சயமா ஏதாவது தடயம் கிடைக்கும். அப்படி ஒரு தடயம் கிடைச்சாதான் மேற்கொண்டு இந்த கேஸை மூவ் பண்ண முடியும்...''

''யெஸ்... சார்...''

''ஃபர்ஸ்ட், ரோட் சைடு பாருங்க... காதர் தாக்கப் பட்டிருந்தா, அவரோட பொருள் ஏதாவது கீழே விழுந்து இருக்கலாம். போஸ்டல் டிபார்ட்மெண்ட்காரங்களையும் பக்கத்துல வெச்சுக்குங்க...''

''யெஸ்... சார்...'' கான்ஸ்டபிள் ஆறுமுகம் தபால் ஊழியர்களோடு நகர்ந்துபோக... இன்ஸ்பெக்டர் மெள்ள நடைபோட்டு, ராவ் வீட்டின் காம்பௌண்ட் கேட்டுக்குப் பக்கத்தில் வந்து நின்று, உள்ளே எட்டிப் பார்த்தார்.

ஜன்னல் இடைவெளியில் கண்ணைப் பதித்திருந்த ஷ்யாமுக்கு உதடுகளும் தொண்டையும் காகிதமாக உலர்ந்துபோயின.

'இன்ஸ்பெக்டரின் பார்வை சரியில்லை. ராவ் வீட்டுக்குள் நுழைந்து விடுவாரோ...?'

ஷ்யாம் திகிலோடு யோசித்துக்கொண்டிருக்கும்போதே... இன்ஸ்பெக்டர் காம்பௌண்ட் கேட்டின் பூட்டை இழுத்துப் பார்த்தார்.

ஷ்யாமுக்குள் சைரன் அடித்தது. ஜன்னல் கதவைச் சத்தம் இல்லாமல் சாத்திவிட்டு தோளில் மாட்டியிருந்த தபால் பையையும் கையில் வைத்திருந்த மண்வெட்டியையும் கவரோரமாக வைத்துவிட்டு பின்வாங்கி, பங்களாவின் பின்பக்கக் கதவுக்கு வந்தான். துளிகூட சத்தம் கேட்டுவிடாமல் கதவைச் சாத்தி உட்பக்கமாகத் தாழிட்டான். விநாடிகள் வியர்வையில் கரைந்துகொண்டிருக்க... வெளியே பேச்சுக்குரல்



கேட்டது.

''ரொம்ப நாளா இந்த வீடு பூட்டிக்கிடந்திருக்கும் போலிருக்கே...?''

''ஆமா... சார்...''

''வெளியே ஸீன் ஆஃப் க்ரைம் பார்த்ததும் உள்ளேயும் போய்ப் பார்த்துடு... ரொம்ப நாளா பூட்டிக்கிடக்கிற வீடு... இங்கேகூட அசம்பாவிதம் நடந்திருக்கலாம். பார்வையைப் போட்டு வையுங்க...''

''யெஸ்... சார்...''

ஷ்யாம் அதிர்ந்துபோனவனாக, மறுபடியும் ரோட்டுப்பக்க ஜன்னலுக்கு வந்து கொஞ்சமாகத் திறந்து வெளியே எட்டிப் பார்த்தான்.

இன்ஸ்பெக்டர் இப்போது ஜீப் வயர்லஸ்ஸில், தலையை அண்ணாந்து சத்தம் போட்டுப் பேசிக்கொண்டு இருந்தார்.

''கண்டுபிடிக்க முடியலே சார்...''

''.....''

''மணியார்டர் பணம் நாலாயிரத்து சொச்ச ரூபாய் இருந்திருக்கு. பணத்துக்காக போஸ்ட்மேனைத் தாக்கியிருக்கலாம்...''

''.....''

''இப்ப ஸீன் ஆஃப் க்ரைம் பார்த்துட்டிருக்கோம்... போஸ்ட்மேன் இங்கே தாக்கப்பட்டிருந்தா கண்டுபிடிச்சுடுவோம் சார்... யெஸ்... இஸ்... இஸ்... குருவாயூர்க் கண்ணன்... ஓவர்...''

இன்ஸ்பெக்டர் வயர்லஸ்ஸை அணைத்துவிட்டு, ஒரு சிகரெட்டுக்காகத் தன் பாக்கெட்டைத் தடவிக்கொண்டிருந்தபோது, எதிர் திசையில் இருந்து அந்த மெர்ஸிடஸ் கார் சன்னமாக அருவி கொட்டுகிற மாதிரியான சத்தத்தோடு வந்துகொண்டிருந்தது.

இன்ஸ்பெக்டர் சிகரெட்டை மறந்துவிட்டு காரையே பார்க்க... அது மிதந்து வந்து கெஸ்ட் ஹவுஸுக்கு முன்பாக நின்றது.

ஷெர்வாணி அணிந்த அந்த நபர் கீழே இறங்கி,

கண்களைக் கவ்வியிருந்த குளிர்க் கண்ணாடியைக் கழற்றியபடியே காம்பௌண்ட் கேட்டை நோக்கிப் போக முயன்றவர், கேட் முகப்பில் தொங்கிய பூட்டை பார்த்துவிட்டுத் தாடையைத் தடவிக்கொண்டு நின்றார்.

இன்ஸ்பெக்டர் பக்கத்தில் வந்தார். ஷெர்வானியைப் பார்வையில் சில விநாடிகள் அலம்பிவிட்டுக் கேட்டார்.

''உங்களுக்கு யார் வேணும்...?''

''இது ஷ்யாமோட கெஸ்ட் ஹவுஸ்தானே...?''

''ஆமா...''

''ஷ்யாமைப் பார்க்கலாம்னு வந்தேன். பூட்டியிருக்கு...''

''நீங்க யாரு...?''

''ஷ்யாமுக்கு வேண்டியவன்...''

''உங்க பேரு...?''

''விஜயேந்திரன்...''

டாக்டர் ஆஷாதேவியின் அறை.

ராம்கோபால், சந்திரா, ஜெயப்பிரகாசம், விபா நான்கு பேரும் இறுகிப்போன முகங்களோடு உட்கார்ந்திருக்க... ஆஷாதேவி சொல்லிக்கொண்டு இருந்தாள்.

''விபாவோட பிரச்னை தீர்கிற வரைக்கும் நாம கொஞ்சம் பொறுமையா இருக்க வேண்டியது அவசியம். அந்த ஜமீன் பரம்பரை மாதிரி நம்மாலும் கோபத்தைக் காட்டி ஆவேசமா பேசமுடியும். பதிலுக்கு சவால் போட்டு, காரியத்தையும் பண்ண முடியும். ஆனா அது புத்திசாலித்தனமா எனக்குப் படலை...''

ராம்கோபால் படபடத்தார்: ''டாக்டர்! அந்த ஜமீன் பரம்பரை நமக்கு நாற்பத்தெட்டு மணி நேரம் அவகாசம் கொடுத்திருக்காங்க. அதுக்குள்ளே விபாவை அவங்ககிட்ட ஒப்படைக்கணும்ங்கிறது அவங்க போட்டிருக்கிற கண்டிஷன். இந்த அவகாசம் முடியறதுக்கு முந்தியே நாம ஏதாவது ஒரு முடிவுக்கு வந்தாகணும்...''



ஜெயப்பிரகாசம் கம்மிய குரலில் குறுக்கிட்டார்.

''போலீஸுக்குப் போயிடறது உத்தமம்னு தோணுது...''

''எனக்கு அது சரியாபடலை...''

''ஏன்...?''

''அவங்க ஜமீன் பரம்பரை... பின்பலமா நல்ல அரசியல் செல்வாக்கும் இருக்கும்... விநியை நிதியால் வெல்லுகிற காலம் இது. அவங்க இவ்வளவு துணிச்சலா பேசிட்டுப் போயிருக்காங்கன்னா, நிச்சயம் அவங்க கையில் ஏதோ ஒரு ஆயுதம் இருக்கு. இன்னொரு விஷயத்தையும் நீங்க கவனிக்கணும். விபா விவகாரத்தை அவங்க போலீஸுக்குக் கொண்டு போகலை... ஒரு நிழல் யுத்தத்துக்கு அவங்க தயாராயிட்டு வர்றாங்க... நாமும் அதே பாணியில் யுத்தம் செய்ய வேண்டியதுதான்...'' என்றார் ராம்கோபால்.

''ஜெயிக்க முடியுமா...?''

''முடியும்...''

''எப்படி...?''

''அந்த ஜமீன் பரம்பரை இப்போ நிதானத்துல இல்லை. கோபத்தோட விளிம்பில் நின்னுக்கிட்டு, வார்த்தைகளை வீசிக்கிட்டு இருக்காங்க. அவங்க கோபத்தை உபயோகப்படுத்திக்கிட்டு நாம காய்களை 'மூவ்' பண்ணினா ஜெயிச்சுடலாம். 'விபா - ஷ்யாம்' கல்யாணத்தை நடத்திடலாம்...''

ஆஷாதேவி கேட்டாள்: ''மிஸ்டர் ராம்கோபால்! உங்ககிட்ட ஏதோ திட்டம் இருக்குன்னு நினைக்கிறேன்...''

''யெஸ்...''

''சொல்லுங்க...''

''விபா - ஷ்யாம் கல்யாணம் அடுத்த வாரம் நாம நிச்சயம் பண்ணின தேதியில கண்டிப்பா நடக்கும். ஆனா, கல்யாணம் கோயமுத்தூர்ல கிடையாது...''

''அப்புறம்...?''

''ஊட்டியில...''

ஜெயப்பிரகாசம் பெருமூச்சு விட்டார். ''உலகத்தின் எந்தக் கோடியில் நாம கல்யாணத்தை நடத்தினாலும் அது அந்த ஜமீன் பரம்பரைக்குத் தெரிஞ்சுடும். நம்ம நடமாட்டங்களை அவங்க கண்காணிக்காம இருப்பாங்களா என்ன...?''

''கண்காணிப்பாங்க... நான் இல்லைனு சொல்லலை. ஒரு கண்ணாமூச்சி ஆட்டம் ஆடி ஏமாத்திட வேண்டியது தான்...''

''எ... எப்படி...?''

''அவங்க நமக்குக் கொடுத்திருக்கிற அவகாசம் நாற்பத்தெட்டு மணிநேரம். நாளை கழிச்சு, மறுநாள் மத்தியானம் வரைக்கும் டயம் இருக்கு. இங்கே ஹாஸ்பிட்டல்ல இருக்கிற விபாவோட அம்மாவைப் பார்க்கிறதுக்காக, நாம ஹாஸ்பிடலுக்கு வந்துக்கிட்டும் திரும்ப வீட்டுக்குப் போய்க்கிட்டும் இருப்போம். இதை அவங்க கண்காணிப்பாங்க. நாளைக்கு சாயந்தரம் ஆறுமணிக்கு மேல் விபாவும் ஜெயப்பிரகாசமும் வீட்டிலிருந்து புறப்பட்டு ஹாஸ்பிட்டலுக்கு வரணும். ஒரு அரை மணி நேர வித்தியாசத்துல நான், சந்திரா, ஷ்யாம் மூணு பேரும் எங்க வீட்டிலிருந்து புறப்பட்டு ஹாஸ்பிட்டலுக்கு வருவோம். இதையெல்லாம் ஜமீன் ஆட்கள் பார்த்துக்கிட்டு இருப்பாங்க. ஏழு மணிக்கு மேலே நம்ம கண்ணாமூச்சி விளையாட்டு ஆரம்பமாகும்...''

எல்லோரும் ஆர்வமாகப் பார்க்க... ராம்கோபால் தொடர்ந்தார்.

''டாக்டர்...! இந்த இடத்துலதான் உங்க உதவி வேணும்...''

''சொல்லுங்க... என்ன உதவி...?''

''உங்க ஹாஸ்பிடல்ல எத்தனை ஆம்புலன்ஸ் வேன் இருக்கு...?''

''ரெண்டு...''

''அதுல ஒண்ணை போர்டிகோவில் கொண்டு வந்து



நிறுத்தணும்...''

ஆஷாதேவி புன்னகைத்தாள்.

''உங்க திட்டம் புரியுது... நீங்க எல்லாரும் ஸ்ட்ரெச்சர்ல பேஷண்ட்ஸ் மாதிரி படுத்துக்கிட்டு ஆம்புலன்ஸ் வேனுக்குள்ளே போயிடுவீங்க... அதுக்கப்புறம் அதே வேனில் ஊட்டிக்குப் பயணம்...''

''கரெக்ட்...! பட்... நாங்க எல்லாரும் ஊட்டிக்குப் போகப் போறதில்லை...''

''அப்புறம்...''

''எங்க வீட்டு சார்பில் சந்திரா, அவங்க வீட்டு சார்பில் ஜெயப்பிரகாசம். அப்புறம் விபா, ஷ்யாம்... நாலுபேர் மட்டும்தான். ஊட்டிக்கு மேல போற வழியில எங்களுக்குச் சொந்தமான எஸ்டேட் ஒண்ணு இருக்கு. அந்த எஸ்டேட்ல நாலுபேரும் தங்கிக்குவாங்க. அந்த ஏரியாவில் வீரமாத்தே அம்மன் கோவில் ரொம்பவும் பிரசித்தம். அந்தக் கோவில்ல வெச்சு விபாவுக்கும் ஷ்யாமுக்கும் சொன்ன தேதியில, சொன்ன நேரத்துல... கல்யாணம்...''

## 18

ராம்கோபால் ஆவேசமாக சொல்லிக்கொண்டிருக்க பயந்த குரலில் இடைமறித்தார் ஜெயப்பிரகாசம்.

''நீங்க சொல்ற மாதிரி கல்யாணம் நடந்தா அந்த ஜமீன் குடும்பம் சும்மா இருப்பாங்களா...? ஏற்கெனவே அமிலம் தெளிச்ச மாதிரி பேசிட்டுப் போயிருக்காங்க... இந்த நிலைமையில நாம கல்யாணத்தை வேற பண்ணிட்டோம்னா பிரச்னை எரிமலையோட உச்சிக்குப் போயிடாதா...?''

''போதும்... கண்டிப்பா போகும்...! பட், கோபத்தை அவங்க பேச்சுலதான் காட்ட முடியுமே தவிர செயல்ல காட்ட முடியாது. காரணம்... விபா கழுத்துல தொங்கற தாலி.''

''நாம தப்பான வழியில் போறோமோன்னு மனசுக்குள்ளே ஒரே உதைப்பாயிருக்கு...''

ராம்கோபால் புன்னகைத்தார்.

''மிஸ்டர் ஜெயப்பிரகாசம்... இந்த வழி தப்போ சரியோ, எனக்குத் தெரியாது. ஆனா, நாம போக வேண்டிய வழி இது ஒண்ணுதான்.''

''ஊர் பூராவும் அழைப்பிதழ்கள் கொடுத்திருக்கோம். சொன்ன தேதிக்கு அத்தனை பேரும் கல்யாண மண்டபத்துக்கு வந்துடுவாங்களே, அது நமக்கு அவமானம் இல்லையா...?''

''கல்யாணம் நடக்க ரெண்டு நாள் இருக்கும்போதே எல்லா பேப்பர்களிலும் விளம்பரம் கொடுத்துடலாம்.''

''விளம்பரமா...?''

''ம்...! தவிர்க்க இயலாத சில காரணங்களால் இந்த தேதியில் நடக்க இருந்த ஷ்யாம் - விபா திருமணம் வேறு ஒரு தேதிக்கு தள்ளி வைக்கப்பட்டிருக்கிறது. அது குறித்த விவரம் பின்னர் நண்பர்களுக்கும் உறவினர்களுக்கும் வேறு அழைப்பிதழ் மூலமாக தனித்தனியே தெரியப்படுத்தப்படும். இப்படிக்கு ஜெயப்பிரகாசம் மற்றும் ராம்கோபால் குடும்பத்தார்.''

''இதையெல்லாம் இன்னும் கொஞ்சம் யோசனை பண்ணி செய்யலாமே...''

''யோசனை பண்ணிட்டிருக்க நமக்கு அவகாசம் இல்லை மிஸ்டர் ஜெயப்பிரகாசம்... நம்மை கிராஸ் பண்ணி போயிட்டிருக்கிற ஒவ்வொரு செகண்டும் நமக்கு முக்கியம். நாற்பத்தெட்டு மணி நேரம் கழிச்சு அந்த ஜமீன் குடும்பம் எதுமாதிரியான நடவடிக்கை எடுப்பாங்கன்னு தெரியாது. அது அதிரடி நடவடிக்கையாகக்கூட இருக்கலாம். அதுக்கு நம்மைத் தயார்படுத்திக்க வேண்டாமா...? இந்த நிலைமையில் நாம அவங்களோடு நேருக்கு நேர் மோதாம 'பேக் டோர் வேஸ்'களை கையாள்றதுதான் உத்தமம்...''

''கல்யாணம் பண்ணிக்கப்போற உங்க தம்பிகிட்ட ஊட்டி போறது சம்பந்தமா கன்சல்ட் பண்ண வேண்டாமா? நாம எல்லாத்தையும் ஏற்பாடு பண்ணிட்ட பிறகு அவர் ஒப்புக்காம



போயிட்டார்னா...?''

''நோ... நோ... நான் எது செஞ்சாலும் ஷ்யாமுக்கு ஓ.கே. சொல்லித்தான் பழக்கம். விபா அவனுக்கு வேணும். தட்ஸ் ஆல்... ஷ்யாமைப் பத்தின கவலை உங்களுக்கு வேண்டாம்...''

''இருந்தாலும் உங்க தம்பியை ஒரு வார்த்தை கேட்டுட்டு இந்த ஊட்டி திட்டத்தை முடிவு பண்ணிக்கலாமே...?''

அதுவரைக்கும் எதுவும் பேசாமல் மௌனம் காத்த சந்திரா, கணவர் ராம்கோபாலின் தோளைத் தொட்டாள்.

''அவர் சொல்றதிலும் நியாயம் இருக்குங்க. மொதல்ல ஷ்யாமுக்கு போன் பண்ணி அவனை இங்கே வரவழைங்க...''

''செல்போனில் கிடைக்கமாட்டேங்கிறானே... ஆஃப் பண்ணி வெச்சிருக்கான் போலிருக்கு...''

''மறுபடியும் ஆபீஸுக்கு போன் பண்ணி சில்வியாகிட்ட கேட்டுப் பாருங்க...''

''சமயத்துக்கு இவன் கிடைக்க மாட்டான்...!'' ராம்கோபால் சொல்லிக்கொண்டே தன் செல்போனில் எண்களைத் தட்ட, ஷ்யாமின் பர்சனல் செக்ரெட்டரி சில்வியா உடனே கிடைத்தாள். கொஞ்சலாக 'குட் ஈவினிங்' சொன்னவளை கோபமாக எதிர்கொண்டார்.

''என்ன... ஷ்யாம் எங்கிருந்தாவது உன்னை காண்டாக்ட் பண்ணினானா...?''

''வால்பாறையிலிருந்து பேசினார் சார்...''

''வால்பாறையிலிருந்தா...?''

''யெஸ் சார்...''

''அங்கே எதுக்காக போனான்...?''

''எஸ்டேட் ஓனர் ரெண்டு பேரை கல்யாணத்துக்கு இன்வைட் பண்ணணும்னு சொன்னார்...''

ராம்கோபாலின் தலைக்குள் கோபரத்தம் தறிகெட்டு பாய்ந்தது. ''ஷிட்'' என்று சொல்லி பற்களைக் கடித்தவர் விபா பார்த்துக்கொண்டிருப்பதை உணர்ந்து குரலை நிதானத்துக்குக் கொண்டு வந்தார்.

''வால்பாறையிலிருந்து ஷ்யாம் உனக்கு எப்போது போன் பண்ணினான்...?''

''பதினஞ்சு நிமிஷத்துக்கு முந்தி...''

''உடனே எனக்கு போன் பண்ணி ஏன் தகவல் சொல்லலை...?''

''ஸாரி சார்... நம்ம போன் லைன்ஸ் எல்லாமே பிஸியா இருந்தது..''

''இட்ஸ் ஓகே... நான் போன் பண்ணினதை ஷ்யாமுக்கு நீ சொன்னியா...?''

''சொ... சொன்னேன்... சார்...''

''நீ சொல்லியிருந்தா அவன் என்னை காண்டாக்ட் பண்ணியிருக்கணுமே...?''

''அவரோட செல்போன் வேலை செய்யலைன்னு சொன்னார் சார்...''

''பூத்திலிருந்து பண்ணியிருக்கலாமே...?''

''நான் விவரம் சொன்னேன் சார்...''

''அர்ஜெண்ட்னு சொன்னியா...?''

''சொன்னேன் சார்... விஷயம் எதுவாயிருந்தாலும் சரி, ராத்திரி வந்து உங்ககிட்ட பேசிக்கிறதா சொன்னார் சார்...''

''வால்பாறை நம்பர் ஏதாவது கொடுத்திருக்கானா?''

''இல்ல சார்...''

''மறுபடியும் உனக்கு போன் பண்றதா சொல்லியிருக்கானா...?''

''இல்ல சார்...''

ராம் கோபால் எரிச்சலாக செல்போனை அணைத்து ஊமையாக்கிவிட்டு சந்திராவை ஏறிட்டார்.

''வால்பாறைக்கு போயிருக்கானாம்...''

''அவனுக்கு அங்கே யார் ஃப்ரெண்ட்ஸ்?''

''நிறையப்பேர் இருக்காங்க...! அவன் எங்கே வேணும்னாலும் போகட்டும். போகும் போது ஒரு வார்த்தை சொல்ல வேண்டாமா...?''

டாக்டர் ஆஷாதேவி மறுபடியும் ஐ.ஸி. யூனிட்டுக்குள் போய்விட்டு வெளியே வந்தாள்.



''யசோதா இப்போ கொஞ்சம் தெளிவாயிருக்காங்க. போய் பேசிட்டிருங்க. அவங்களை அதிகமா பேசவிட வேண்டாம்...''

எல்லோரும் ஐ.ஸி.யூனிட்டை நோக்கி நகர முயல... பக்கவாட்டு வராந்தாவிலிருந்து அந்தக் குரல் அளவான சத்தத்தோடு எழுந்தது.

''ஹலோ, ராம்கோபால்...''

ராம்கோபால் திரும்பினார். லேசாக மலர்ந்தார் தொப்பையும் வழுக்கையுமாக நின்ற அந்த நபரைப் பார்த்துவிட்டு சந்திராவிடம் திரும்பினார்.

''அவர் என்னோட ஃப்ரெண்ட் திருமலைசாமி. உள்ளே போயிட்டிரு. நான் ரெண்டு நிமிஷம் பேசிட்டு வந்துடறேன்...''

சந்திரா தலையசைத்து விடைபெற்றுப் போய்விட ராம்கோபால் செயற்கையான மலர்ச்சியோடு அவரை நோக்கிப் போனார்.

''எப்படியிருக்கீங்க... திருமலைசாமி...?''

''ஃபைன்...''

''பிஸினஸ்...''

''சுமார்தான்... டெக்ஸ்டைல்ஸ் பிஸினஸ் தலைகுப்புற விழுந்து எங்கேயோ போய்ட்டிருக்கு. கூடிய சீக்கிரம் ஐ.ஸி. யூனிட்டுக்கு கொண்டுபோய் அட்மிட் பண்ணப்பட வேண்டிய நிலைமை.''

''எல்லா பிஸினஸ்ஸும் அப்படித்தான்...! அது கிடக்கட்டும்... யாருக்கு என்ன உடம்பு... மில்லை விட்டு சாமான்யத்துல எழுந்து வராத நீங்க வந்திருக்கீங்க.''

''என் வொய்ஃப்புக்கு கொஞ்சம் யூட்ரஸ் ப்ராப்ளம். செக்கப் பண்ணிட்டு போலாம்னு வந்தேன்! அட்மிட் பண்ண சொல்லிட்டாங்க... நீங்க... எங்கே இந்த பக்கம்...?''

''சம்பத்தியம்மாவுக்கு ஒரு மைல்ட் அட்டாக். ஐ.ஸி.யூனிட்ல இருக்காங்க...''

''அடடே... அடுத்த வாரம் கல்யாணம் வேற

இருக்கே...! கல்யாணத்துக்காக ரொம்பவும் ஸ்ட்ரெயின் பண்ணிக்கிட்டாங்க போலிருக்கு.''

''ஆமா... சரியான அலைச்சல்...''

''பயப்படற அளவுக்கு ஒன்னும் இல்லையே...''

''நோ... நோ... ரெண்டு நாள்ல வீட்டுக்குப் போயிடலாம்...''

''நாம இப்படி எங்கேயாவது மீட் பண்ணினாத்தான் உண்டு. உங்க தம்பி ஷ்யாம் வரலையா?''

''வரலை... வெளியூர் போயிருக்கான்.''

''வெளியூரா...? உங்க கெஸ்ட் ஹவுஸுக்கு முன்னாடி ஷ்யாமோட கார் நின்னுட்டிருந்ததே!''

ராம்கோபால் கண்களில் திடுக்கிட்டார்.

''காரை எப்பப் பார்த்தீங்க...?''

திருமலைசாமி வாட்ச்சைப் பார்த்து விட்டு சொன்னார். ''இருபது நிமிஷத்துக்கு முன்னாடி...''

''இருக்காதே... வேற யாரோட காரையாவது பார்த்திருப்பீங்க...''

திருமலைசாமி புன்னகைத்தார். ''எனக்கு ஷ்யாமோட சாண்ட்ரோ காரைத் தெரியாதா என்ன...? காருக்கு பின்னாடி ஒட்டியிருக்கிற ஸ்டிக்கர் வாசகம் The Begining is Always Today! எனக்கு ரொம்பவும் பிடிச்ச ஒன்னாச்சே... காரோட நம்பர் ட்ரிபுள் ஃபைவ் மறக்கக்கூடிய நம்பரா?''

ராம்கோபால் லேசாக வியர்க்க, திருமலைசாமி சிரித்தார் ''ஷ்யாம் வெளியூர் போறதா பொய் சொல்லிட்டு கெஸ்ட்ஹவுஸுக்கு போயிட்டான் போலிருக்கு... டேக் இட் ஈஸி ராம்கோபால். இந்தப் பொய்களை எல்லாம் நாம கண்டுக்கக்கூடாது... போய் சம்பத்தியம்மாளைப் பாருங்க...''

திருமலைசாமி ராம்கோபாலின் தோளைத் தட்டிக்கொடுத்துவிட்டு நகர்ந்துவிட, அவர் அப்படியே நின்றார்.

'ஷ்யாம் கெஸ்ட் ஹவுஸில் இருக்கிறானா...?'

'இருக்க முடியாதே...! கெஸ்ட் ஹவுஸ் சாவி



என்னிடமல்லவா இருக்கிறது...?'

முதுகில் குரல் கேட்டது.

''உங்க ஃப்ரெண்ட் தான் போயிட்டாரே... அப்புறமும் என்ன நின்ன இடத்திலேயே யோசனை...?''

திரும்பினார்.

சந்திரா நின்றிருந்தாள்.

ராம்கோபால் தன் நெற்றியில் அவசரமாக துளிர்த்திருந்த வியர்வையை கர்ச்சீப்பால் ஒற்றிக்கொண்டே அவளை ஏறிட்டார்.

''சந்திரா...''

''என்னங்க...?''

''நான் கொஞ்சம் நம்ம கெஸ்ட் ஹவுஸ் வரைக்கும் போயிட்டு வந்துடறேன்...''

''இப்ப எதுக்கு திடீர்னு அங்கே...?''

''ஷ்யாமோட கார் கெஸ்ட் ஹவுஸுக்கு முன்னால நிக்குதாம். அவன் அங்கே இருக்கானான்னு பார்த்துட்டு வந்துடறேன்''

''அவன் வால்பாறை போயிருக்கிறதா சொன்னீங்க?''

''அப்படின்னு சில்வியா சொன்னா. என்னோட ஃப்ரெண்ட் திருமலைசாமி இருபது நிமிஷத்துக்கு முன்னாடி ஷ்யாமோட காரை கெஸ்ட் ஹவுஸ் வாசல்ல பார்த்திருக்கார்...''

''கெஸ்ட் ஹவுஸ் சாவி உங்ககிட்டதானே இருக்கு...?''

''ஆமா...''

''சாவி உங்ககிட்ட இருக்கும்போது ஷ்யாம் எப்படி கெஸ்ட் ஹவுஸுக்குள்ளே இருக்க முடியும்... உங்க ஃப்ரெண்ட் வேற யாரோட காரையோ பார்த்துட்டு தப்பா சொல்லியிருக்கார். நீங்க உள்ளே வாங்க...''

''இல்ல சந்திரா... ஷ்யாமோட நடவடிக்கைகள் கொஞ்சநாளாவே சரியில்லை... டூப்ளிகேட் சாவி போட்டு கெஸ்ட் ஹவுஸை அவன் ஓப்பன் பண்ணியிருக்கலாம். எதுக்கும் நான் போய் பார்த்துட்டு வந்துடறேன். நீ இங்கேயே இரு...''

''நீங்க எங்கேன்னு அவங்க கேட்டா நான் என்ன பதிலைச் சொல்றது...?''

''ஏதோ ஒரு முக்கிய காரியமா ஆபீஸ் வரைக்கும் போயிருக்கிறதா சொல்லி வை...''

ராம்கோபால் கிளம்பினார்.

ஜன்னலின் ஒரு மில்லிமீட்டர் இடைவெளி வழியே வெளியே நடப்பவற்றைப் பார்த்துக்கொண்டிருந்த ஷ்யாம் திடுக்கிட்டான்.

'யார் இந்த விஜயேந்திரன்...?'

'இதற்கு முன்பாக அந்த ஆளை எங்கேயும் எந்த சந்தர்ப்பத்திலேயும் பார்த்ததாக ஞாபகம் இல்லையே?'

விஜயேந்திரனிடம் இன்ஸ்பெக்டர் கேட்டுக்கொண்டிருந்தார்.

''நீங்க இங்கே வரப்போறதா முன்கூட்டியே ஷ்யாம்கிட்ட சொல்லியிருந்தீங்களா...?''

''இல்லை...''

''இது அவரோட கார்தான்... வீட்டைப் பூட்டிகிட்டு வேற கார்லகூட அவர் கிளம்பிப் போயிருக்கலாம். வேணும்னா கொஞ்ச நேரம் வெயிட் பண்ணி பாருங்க...''

விஜயேந்திரன் தோள்களைக் குலுக்கினார். ''நோ ப்ராப்ளம். ஷ்யாம் இந்நேரம் ஆபீஸில் இருக்கலாம். நான் போய்ப் பார்த்துக்கிறேன்... பை த பை... இங்கு ஏதாவது பிரச்னையா... இன்வெஸ்டிகேஷன் நடக்கிற மாதிரி தெரியுது...''

''யெஸ்...''

''என்ன...?''

''ஒரு போஸ்ட் மேனைக் காணலை... இந்த ஸ்பாட் வரைக்கும் லெட்டர் டெலிவரி பண்ணியிருக்கார். அதுக்கப்புறம் பண்ணலை... ஸோ, இந்த இடத்துல அந்த போஸ்ட் மேனுக்கு ஏதாவது நேர்ந்து இருக்குமோ என்கிற எண்ணத்தில் ஸீன் ஆஃப் க்ரைம் பார்த்துக்கிட்டிருக்கோம்...''

இன்ஸ்பெக்டர் குருவாயூர் கண்ணன்



சொல்லிக்கொண்டிருக்கும்போதே இரண்டு கான்ஸ்டபிள்களும் தபால்துறை ஊழியர்களும் மெதுவாக பக்கத்தில் வந்து நின்றனர்.

''என்ன...?''

''எதுவும் கிடைக்கலை சார்...''

''நல்லா சர்ச் பண்ணீங்களா...?''

''பார்த்துட்டோம் சார்... அங்கே காதருக்கு எதுவும் நேர்ந்திருக்க வாய்ப்பில்லை. கேஸை நாம வேற கோணத்துல பார்க்கணும் சார்...''

விஜயேந்திரன் இன்ஸ்பெக்டரை ஏறிட்டான். ''எக்ஸ்கியூஸ்மீ... நான் கிளம்பறேன்... உங்களுக்கு இடைஞ்சலா இருக்க நான் விரும்பலை...''

''நீங்க புறப்படுங்க ஸார்...'' - விஜயேந்திரனை கை குலுக்கி அனுப்பிவிட்டு, தபால்துறை ஊழியர்களிடம் திரும்பினார் குருவாயூர் கண்ணன்.

''ஸீன் ஆஃப் க்ரைம் பார்த்ததுல எதுவுமே கிடைக்காத பட்சத்தில் காதர் விவகாரத்தில் நாம ஒரு முடிவுக்கு வரவேண்டியிருக்கு...''

''என்ன முடிவு சார்...?''

''காதர் மணியார்டர் பணத்தோடு தலைமறைவாகி இருக்கலாம்...''

''காதர் அப்படிப்பட்ட நபர் கிடையாது சார்...''

''பணத்துக்கு அப்படிப்பட்ட சக்தி இருக்கே... இந்த கேஸை நாம ஒரு கோணத்துல பார்த்துட்டிருக்கிறது ரொம்பவும் தப்பு. காதரோட ஃபேமிலியைப் பத்தி இன்னும் கொஞ்சம் டீப்பா தெரிஞ்சுக்க விரும்பறேன். வாங்க... ஸ்டேஷனுக்குப் போய் பேசலாம்.''

இன்ஸ்பெக்டர் குருவாயூர் கண்ணன் ரோட்டின் மறுபக்கத்தில் நிறுத்தியிருந்த போலீஸ் ஜீப்பை நோக்கிப் போனார்.

ஒரே ஒரு நிமிஷம்தான்!

ஜீப்புகள் புகை கக்கிப் போய்விட, எங்கோ ஒளிந்திருந்த அந்த மயான அமைதி மீண்டும் ஆட்சிக்கு வந்தது. ஷ்யாம் ஜன்னலைச் சாத்திவிட்டு

மண்வெட்டியையும் காதரின் தபால் பையையும் எடுத்துக்கொண்டான்.

'இனி இங்கே ஒரு விநாடி நேரத்தைக்கூட வீணாக்கிக்கொண்டு இருக்கக்கூடாது...!'

'முதலில் காதரின் உடல் இருக்கும் பில்லர் குழியை மண்ணால் நிரப்ப வேண்டும்...!'

'இரண்டாவது, சாய்பிரசாத்தை இந்த வீட்டிலிருந்து அப்புறப்படுத்தி எங்கேயாவது கொண்டுபோய் போட்டுவிட வேண்டும்!'

ஷ்யாம் பின்பக்கக் கதவைத் திறந்துகொண்டு வெளியே வந்தான். ராவின் வீட்டு காம்பௌண்ட் சுவரைத் தாண்டி பில்லர் குழியை நெருங்கினான்.

கால் பங்கு பில்லர் குழியை மண் மூடி காதரின் உடலை முழுமையாக மறைத்திருக்க, ஷ்யாம் தபால் பையை அதில் போட்டான். கொண்டு போயிருந்த மண்வெட்டியால் மண்ணை இழுத்து குழிக்குள் தள்ளினான்.

ஐந்தே நிமிஷம்!

குழியின் வயிறு நிரம்பியது. பழக்கமில்லாத வேலையின் காரணமாக மூச்சு வாங்கி வியர்வை கொட்டியது.

'இனி எந்த ஜென்மத்துக்கும் யாரும் காதரைக் கண்டுபிடித்துவிட முடியாது.

ஷ்யாம் சந்தோஷக் காற்றை சுவாசித்துக்கொண்டே மண்வெட்டியோடு காம்பௌண்ட் சுவர் தாண்டி வீட்டுக்கு வந்தான். மனசுக்குள் பயம் குறைந்திருந்தது. அடி வயிற்றுக் கலக்கம் காணாமல் போயிருந்தது.

'இனி சாய்பிரசாத்தை காருக்கு கொண்டுபோக வேண்டும்...!'

பாத்ரூமுக்குள் நுழைந்து கைகால் அலம்பிக்கொண்டவன், படுக்கையறையின் டிரெஸ்ஸிங் டேபிளுக்கு வந்து உள்ளே மறைவாக வைத்திருந்த அந்த ஃபர்ஸ்ட் எய்ட் கிட்டை எடுத்து ஒரு மஞ்சள் நிற ஊசி



மருந்தை சிரஞ்சில் ஏற்றிக்கொண்டான்.

உதட்டின் கோடியில் ஒரு புன்னகையை மடித்துவைத்துக்கொண்டு சாய்பிரசாத் இருந்த ஸ்டோர் ரூம் நோக்கி அந்த அரையிருட்டில் நடைபோட்டான் ஷ்யாம்.

வெளியே காகம் ஒன்று விடாப்பிடியாகக் கத்திக்கொண்டிருந்தது.

ஜீப் ஸ்டேஷனை நோக்கிப் போய்க்கொண்டிருக்க... இன்ஸ்பெக்டர் குருவாயூர் கண்ணனுக்குப் பக்கத்தில் உட்கார்ந்திருந்த அந்த தபால் ஊழியர் சொன்னார்.

''சார்... எதிரில் ஒரு கார் வருது பார்த்தீங்களா...?''

''ஆமா...''

''அது ராம்கோபாலோட கார்...''

''அந்த கெஸ்ட் ஹவுஸ் ஓனர்...?''

''அவரேதான்... அண்ணனும் தம்பியும் எங்கேயோ போயிட்டு வர்றாங்க போலிருக்கு. அவங்களை என்கொயர் பண்ணிப் பாருங்க சார்... காதரைப் பத்தி ஏதாவது தகவல் கிடைக்கலாம்...''

''ராஜேந்திரன்...''

''சார்...''

''எதிர்ல வர்ற காரை நிறுத்து...''

**கோல்ட் பைத்தான் எனும்**
**வெற்றுத் துப்பாக்கி.**
**இதன் மதிப்பு இந்திய**
**ரூபாயில் ஏறக்குறைய**
**ரூ.2,958.00**
**(39.95 பவுண்)**



# 19

போலீஸ் ஜீப் வேகத்தைக் குறைத்துக்கொண்டு

எதிரே வந்த ராம்கோபாலின் காரை நாகரீகமாக மறித்து நிறுத்த... ராம்கோபால் முகம் நிறைய திகைப்பை தேக்கிக்கொண்டு கீழே இறங்கினார். இன்ஸ்பெக்டர் குருவாயூர் கண்ணன் அவரை எதிர்கொண்டார்.

''ஸாரி சார்... அவசரமா போயிட்டிருக்கும்போது இப்படி வழிமறிச்சுட்டேன்...''

''நோப்ராப்ளம்... என்ன விஷயம் இன்ஸ்பெக்டர்...''

''இப்போ நீங்க எங்கே போயிட்டிருக்கீங்க... உங்க கெஸ்ட் ஹவுஸுக்கா...?''

''ஆமா''

''உங்க பிரதர் ஷ்யாம் எங்கே...?''

ராம்கோபால் நிதானித்தார். 'ஷ்யாமை போலீஸ் எதற்காகக் கேட்கிறார்கள்...? ஏதாவது பிரச்னையில் மாட்டிக்கொண்டு விட்டானா...?'

''ஷ்யாமை எதுக்காகக் கேட்கறீங்க இன்ஸ்பெக்டர்...''

''அவரோட கார் கெஸ்ட்ஹவுஸுக்கு முன்னால் நின்னுட்டிருந்தது. ஆனா, கெஸ்ட் ஹவுஸ் லாக்காகியிருந்தது. காரை நிறுத்திட்டு எங்கே போனார்னு தெரியலை. அவர்கிட்ட ஒரு சின்ன என்கொயரி நடத்த வேண்டியிருந்தது...''

''எ... எ... என்ன... என்கொயரி...?''

''இந்த ஏரியா போஸ்ட்மேனை இன்னிக்குக் காலை பதினொரு மணியிலிருந்து காணலை. கடைசியா ஒரு ரிட்டயர்டு ஹெட்மாஸ்டர் வீட்டுக்கு லெட்டர் டெலிவரி பண்ணியிருக்கார் அந்த போஸ்ட்மேன். அதுக்கு அடுத்தபடியா நூறு மீட்டர் தூரம் தள்ளியிருக்கிறது மிஸ்டர் சுதாகர் ராவோட பங்களா. அவர் இப்போ வெளிநாட்டுல இருக்கார். அவரோட பங்களாவுக்கு அடுத்ததுதான் உங்க கெஸ்ட் ஹவுஸ்... போஸ்ட்மேன் காதர் உங்களுக்கு ஏதாவது லெட்டர் டெலிவரி பண்ணியிருக்காரானு தெரிஞ்சுக்கத்தான் இந்த என்கொயரி...''

''மத்தியானம் நான் கெஸ்ட் ஹவுஸில் இருந்தபோது,



போஸ்டல் டிபார்ட்மெண்ட்டிலிருந்து ரெண்டு பேர் வந்து போஸ்ட்மேனைப் பத்தி என்கொயரி பண்ணினாங்களே...? லெட்டர் ஏதும் டெலிவரி பண்ணலைனு சொன்னேனே... ஷ்யாம் கிட்டேயும் போன்ல கேட்டேன். அவனும் இல்லைன்னு சொன்னான்...''

''போஸ்ட்மேன் சில முக்கியமான ரெஜிஸ்டர் லெட்டர்களை டெலிவரி பண்றதுக்காகக் கொண்டு வந்திருக்கார். மணியார்டர் பணமும் நிறைய இருந்திருக்கு. ஸோ... போஸ்ட்மேனுக்கு ஏதாவது ஆபத்து ஏற்பட்டிருக்குமோங்கிற கோணத்துல் கேஸை இன்வெஸ்டிகேட் பண்ணிட்டிருக்கோம்...''

''ஸாரி இன்ஸ்பெக்டர்... நானோ, என்னோட பிரதர் ஷ்யாமோ அந்த போஸ்ட்மேனைப் பார்க்கலை. பொதுவா, எங்க கெஸ்ட் ஹவுஸ் அட்ரஸுக்கு யாரும் தபால் போட மாட்டாங்க. கார்ப்பரேஷனிலிருந்து வரி நோட்டீஸ் வரும். டெலிகம்யூனிகேஷன் டிபார்ட்மெண்ட்டிலிருந்து ரெண்டு மாசத்துக்கு ஒரு தடவை டெலிபோன் பில் வரும். அவ்வளவுதான்...''

''இட்ஸ் ஓகே மிஸ்டர் ராம்கோபால்... இது, ஜஸ்ட் ஒரு என்கொயரிதான்... உண்மையிலேயே அந்த போஸ்ட் மேனுக்கு ஏதாவது ஆபத்து ஏற்பட்டதா...? இல்லை... அவரே தன்னோட சொந்தப் பிரச்னைகளுக்காகத் திடீர்னு தலைமறைவாயிட்டாரானு தெரியலை. எனி ஹவ், நீங்க கொடுத்த தகவல்களுக்கு நன்றி...'' என்று சொல்லிவிட்டு ஜீப்புக்குப் போகத் திரும்பிய குருவாயூர் கண்ணன் சட்டென்று நின்றார்.

''சொல்ல மறந்துட்டேன்... உங்க கெஸ்ட் ஹவுஸுக்குப் பக்கத்துல நாங்க இன்வெஸ்டிகேட் பண்ணிட்டிருந்தபோது, உங்க பிரதர் ஷ்யாமைத் தேடி ஒருத்தர் வந்திருந்தார்...''

''ஷ்யாமைத் தேடியா...?''

''ம்...''

''யார்...?''

''பேர் விஜயேந்திரன். மிடில் ஏஜ்... கார்ல வந்திருந்தார். கெஸ்ட் ஹவுஸ் பூட்டியிருக்கிறதைப் பார்த்துட்டுப் போயிட்டார்...''

ராம்கோபாலின் இதயத்துக்குள் ரோடு ரோலர் ஒன்று இரைச்சல் போட்டுக்கொண்டு ஊர்ந்தது. அந்த அவஸ்தையைக் காட்டிக்கொள்ளாமல் புன்னகைத்தார்.

''ஓ... அவரா! அவர், எங்க பிஸினஸ் க்ளையண்ட். ஷ்யாம் வெளியூர் போயிருக்கான். நான் அவரை காண்டாக்ட் பண்ணிக்கிறேன் இன்ஸ்பெக்டர்...''

ராம்கோபால் காருக்கு வந்தார். ஜீப் எதிர் திசையில் வேகம் எடுத்து, பத்தே விநாடிகளில் மறைந்துபோக... தன் காரை கெஸ்ட் ஹவுஸை நோக்கி விரட்டினார்.

பயம் மூளையைப் பிறாண்டியது. 'விபாவின் உண்மையான அப்பா விஜயேந்திரன், ஷ்யாமைப் பார்க்க கெஸ்ட்ஹவுஸுக்கே வந்திருக்கிறான்...'

'எதற்காக...?'

'மிரட்டவா...?'

'ஷ்யாம் அவனுடைய கண்களில் பட்டுவிடக்கூடாது. உடனடியாக அவனை ஊட்டிக்கு அனுப்பிவிட வேண்டும்...'

- மனதில் எழுந்த இந்தப் பதட்டத்தின் காரணமாக கார் வேகம் பிடித்து, கெஸ்ட் ஹவுஸை நோக்கிச் சீறியது.

கெஸ்ட் ஹவுஸுக்கு வெளியே காகம் ஒன்று விடாப்பிடியாகக் கத்திக்கொண்டிருக்க, ஷ்யாம் ஸ்டோர் ரூமுக்குள் நுழைந்தான். நாற்காலியில் துவண்டு கிடந்த சாய்பிரசாத்தின் வலது தோள்பட்டையைப் பிடித்து, கையில் வைத்திருந்த மஞ்சள் நிற ஊசிமருந்தைத் துளித் துளியாக ஏற்றினான்.

லேசாக வலியில் முனகிய சாய்பிரசாத், பின் மௌனமாகிவிட..... அவனைத் தூக்கித் தோள்மேல் போட்டுக்கொண்டான். கதவைச் சாத்திவிட்டு, ஒரு நிமிஷ நேரம் சுற்றுப்புறத்தை மோப்பம் பிடித்தான்.

கத்திக்கொண்டிருந்த காகமும் இப்போது பறந்து



போயிருக்க, எல்லா திசைகளிலும் நிசப்தம்...

ஷ்யாம் மின்னல் வேகத்தில் செயல்பட்டான். சாய்பிரசாத்தை வாகாகத் தோளில் போட்டுக்கொண்டவன், காம்பௌண்ட் கேட்டின் முன்பக்கச் சுவருக்கு வந்து, அதன் விளிம்பை இடது கையால் பற்றிக்கொண்டு எம்பினான். குட்டையான சுவர் உச்சிக்குச் சுலபமாக வந்தவன், ரோட்டின் மறுபக்கம் சத்தமில்லாமல் குதித்துத் தன் சான்ட்ரோ காரை நோக்கிப் போனான். சுவரை வலுவாகப் பற்றியதில் கை எரிந்தது.

காரின் பின்பக்கக் கதவைத் திறந்தவன், பின் இருக்கைக்கும் முன் இருக்கைக்கும் உள்ள இடைவெளியில் சாய்பிரசாத்தைப் படுக்க வைத்தான். கதவை அறைந்து சாத்திவிட்டு, டிரைவிங் ஸீட்டுக்கு வந்து உட்கார்ந்து, காருக்குச் சாவியைக் கொடுத்த விநாடி

சாலையின் வளைவில் அந்த கார் திரும்பியது.

ஷ்யாம் கலவரமானான்.

'இது அண்ணனின் கார்... அவர் எதற்காக வந்து கொண்டிருக்கிறார்...?'

ஷ்யாம் யோசித்துக்கொண்டிருக்கும்போதே, ராம்கோபாலின் கார் சான்ட்ரோவை இடிக்காத குறையாக வந்து நின்றது. காரினின்றும் எட்டிப் பார்த்து, முகம் சிவக்கக் கத்தினார் ராம்கோபால்...

''இங்கே என்னடா பண்ணிட்டிருக்கே...?''

''அ... ண்... ணா...!'' ஷ்யாம் காரினின்றும் பதட்டமாக இறங்கி, ராம்கோபாலுக்குப் பக்கத்தில் வந்தான். ''இ... இ... இங்கே கொஞ்சம் வேலை இருந்ததண்ணா...''

''கெஸ்ட் ஹவுஸ்தான் பூட்டியிருக்கே! பூட்டிக் கிடக்கிற கெஸ்ட் ஹவுஸுக்குள்ளே உனக்கு என்ன வேலை...?''

''நான் கெஸ்ட் ஹவுஸுக்கு வரலை...''

''பின்னே...?''

''பக்கத்துல இருக்கிற சுதாகர்ராவ் பங்களாவுக்கு வந்தேன்...''

''அதுவும்தான் பூட்டிக்கிடக்கே?''

''சுதாகர்ராவ் இங்கே வர்றதா சொல்லியிருந்தார்...''

''என்னடா உளர்றே? ராவ்தான் ஃபாரின்ல இருக்காரே...?''

''இப்ப கோயம்புத்தூர்ல இருக்கார்... எனக்கு போன் பண்ணி, அவரோட பங்களாகிட்ட வரச் சொன்னார்...''

''எதுக்கு...?''

''அவரோட பங்களாவை சேல் பண்ணப் போறாராம்...''

''சரி... அதுக்காக உன்னை எதுக்கு வரச்சொல்லணும்...?''

''அந்த பங்களாவை என்னை வாங்கிக்கச் சொன்னார்...''

''ஏற்கனவே ஒரு தடவை கேட்டு, நாமதான் வேண்டாம்னு சொல்லிட்டோமே!''

''நான் அந்த பங்களாவை வாங்கிக்கலாம்னு இருக்கேன்...''

ராம்கோபால் காரின் கதவைத் திறந்துகொண்டு கோபமாக இறங்கினார்.

''டேய் ஷ்யாம்... உனக்கென்ன பைத்தியம் பிடிச்சிருக்கா...? சாயந்திரம் ஏழு மணியாயிட்டா, துளியும் பாதுகாப்பு இல்லாத ஏரியா இது. நம்ம கெஸ்ட் ஹவுஸை விக்கிறதுக்கு அதுவும் ஒரு காரணம்...''

''எனக்கு இந்த ஏரியா பிடிச்சிருக்கு... உங்க விருப்பப்படி கெஸ்ட் ஹவுஸை வித்துடுங்க. என்னோட விருப்பப்படி, ராவோட பங்களாவை நான் வாங்கிக்கறேன். கல்யாணமான பின்னாடி நானும் விபாவும் ராவ் பங்களாவுக்கு குடி வந்துடலாம்னு இருக்கேன்...''

''அந்த ராவ், உன்னோட மனசைக் கெடுத்துட்டார் போலிருக்கு... ஷ்யாம், அது ராசியில்லாத பங்களா, வாஸ்து பார்க்காம கட்டப்பட்ட அந்த பங்களாவுல



ரெண்டு துர்மரணங்கள் நடந்திருக்கு. ராவோட மனைவி தீக்குளிச்சுத் தற்கொலை பண்ணிக்கிட்டாங்க. ஃப்ரிஜ்ஜை ரிப்பேர் பார்க்க வந்த எலெக்ட்ரீஷியன் ஒருத்தன் ஷாக் அடிச்சு செத்தான். ராவ் அந்த பங்களாவில் இருந்த வரைக்கும் ஹெல்தியாகவே இல்லை. ஹார்ட் அட்டாக் வந்தது. பைபாஸ் சர்ஜரி பண்ணிக்கிட்டார். அதுக்கப்புறம் அந்த வீட்ல அவரால் இருக்க முடியலை. ஃபாரினுக்குப் போயிட்டார். இப்படி எல்லா வகையிலேயும் சரியில்லாத அந்த பங்களாவை ஒரு பைத்தியக்காரன்கூட வாங்கமாட்டான்...''

ஷ்யாம் எங்கோ நேர்பார்வை பார்த்துக்கொண்டு, இறுகிய முகத்தோடு சொன்னான்...

''எனக்கு ராவ் பங்களா வேணும்...''

''ஏண்டா... இப்படிப் பிடிவாதம் பிடிக்கிறே...?''

''நான் ஆசைப்பட்டதை வாங்கிக்க எனக்கு உரிமை கிடையாதா என்ன...?''

''இதோ பார் ஷ்யாம்... ராவோட பங்களாவை வாங்கறது சம்பந்தமா பின்னாடி பேசிக்கலாம். கடந்த சில மணி நேரமா நான் வேற ஒரு பிரச்சனையில் மாட்டிக்கிட்டு, மூச்சு திணறிக்கிட்டிருக்கேன்...''

''அப்படியென்ன பிரச்னை...?''

''விபாவுக்கும் உனக்கும் நடக்கப் போகிற கல்யாணம், இப்போ ஒரு பெரிய கேள்விக்குறி...''

''கேள்விக்குறியா...?''

''யெஸ்! வா இப்படி. எல்லாத்தையும் சொல்றேன். கேட்டுட்டு, இந்த விஷயத்தை எப்படி ஹேண்டில் பண்ணலாம்னு நீயும் சொல்லு...''

ஒரு முழு பத்து நிமிடம் ராம்கோபால் அன்றைக்கு மத்தியானம் நடந்த சம்பவங்களைக் கோவையாகச் சொல்லி முடிக்க, ஷ்யாமுக்குக் கழுத்து நரம்புகள் புடைத்துக்கொண்டன. கார்பானெட்டைக் குத்திவிட்டுக் கத்தினான்...

''நாற்பத்தெட்டு மணி நேரம் கெடு

கொடுத்திருக்காங்களா...? அதே அவகாசம் எனக்கும் போதும்...''

''எதுக்குடா...?''

''அந்த ஜமீன் பரம்பரை ஆட்களைத் தீர்த்துக்கட்டத் தான்...''

''தீர்த்துக்கட்டிட்டு ஜெயிலுக்குப் போயிடறியா...? எதையும் அறிவால சாதிக்கணும். அரிவாளால சாதிக்க நினைக்கக்கூடாது...''

''அவங்களுக்குப் பயந்துட்டு, ஊட்டியில் போய்த் திருட்டுத்தனமா கல்யாணம் பண்ணிக்க எனக்குப் பிடிக்கலை. கல்யாணம் இதே கோயம்புத்தூர்ல, நிச்சயம் பண்ணின அதே மண்டபத்துல நடக்கணும். அவங்களால எதையும் செய்ய முடியாம, மண்டபத்துக்கு வந்து அட்சதையை வீசிட்டுப் போகணும்...''

''முட்டாள்தனமா பேசாதே ஷ்யாம்... எதிரி கோபத்தோடு இருக்கும்போது, நாம விவேகமா செயல்படணும். ஒரு காரியத்தைப் பண்ணப் பின்வாங்கறது கோழைத்தனம் கிடையாது ஒருவகை ராஜதந்திரம்...''

''விபா என்ன சொல்றா...?''

''விபா ஆரம்பத்துல ரொம்ப அப்செட்... ஜெயப்பிரகாசமும் யசோதாவும் தன்னோட உண்மையான அப்பா - அம்மா கிடையாதுனு தெரிஞ்சதுமே அப்படியே இடிஞ்சுபோயிட்டா. அவளைச் சமாதானப் படுத்திப் பழைய நிலைமைக்குக் கொண்டு வர்றதுக்குள்ளே போதும் போதும்னு ஆயிடுச்சு. அவளோட பிறப்பைப் பத்தி நீ என்ன நினைப்பியோனுதான் ரொம்பவும் கவலைப்பட்டா...''

''விபாவோட அம்மாவுக்கு இப்போ எப்படியிருக்கு...?''

''பயமில்லை... மைல்ட் ஹார்ட் அட்டாக்தான்... நீ இந்த நிமிஷமே கிளம்பி ஹாஸ்பிடலுக்கு வர்றே... விபாவுக்கு ஆறுதல் சொல்றே...''

காரின் பின் சீட்டுக்கு இழே படுக்க



வைக்கப்பட்டிருக்கும் சாய்பிரசாத் மனசுக்குள் திரடினான்.

''என்னடா... யோசனை பண்றே...?''

''ஒண்ணுமில்லை...''

''உன்னை விட்டா, ஏதாவது ஒரு காரணத்தைச் சொல்ல ஆரம்பிச்சுடுவே... நீ மொதல்ல காரை எடு. கார் நேரா ஆஷாதேவி ஹாஸ்பிடலுக்குத்தான் போகணும். நான், என் கார்ல உன் பின்னாடியே வருவேன்...''

ஷ்யாம் நகம் கடித்துத் துப்ப, ராம்கோபால் அவன் தோளைத் தட்டினார்.

''போய் காரை எடு...''

ஷ்யாம் சாண்ட்ரோவுக்குத் திரும்பி, டிரைவிங் ஸீட்டில் பொருந்தினான். பின் ஸீட்டை எட்டிப் பார்க்க, சாய்பிரசாத்தின் செர்ரி நிற யூனிஃபார்ம் தெரிந்தது.

கார் நகர்ந்தது-

விபா மையமனதுக்குள் வந்தாள். கண்களில் நீர் மின்ன, ஷ்யாமைப் பார்த்தாள்.

ஷ்யாமின் வலது பக்க உதட்டுக் கோடியில் ஒரு குரூரப் புன்னகை.

'உனக்கு இப்படியொரு கறுப்பு ஃப்ளாஷ் பேக்கா...?'

'ரெண்டு அப்பன்! ஒருத்தன் பெத்தவன்... இன்னொருத்தன் வளர்த்தவன்...'

'பேஷ்! இதுபோதும் எனக்கு. உன்னோட கண்ணீர் சுரப்பிகளுக்கு இருபத்துநாலு மணி நேரமும் வேலை கொடுக்க, இந்த அஸ்திரம் போதும் எனக்கு! சாக்கடையில் கண்டெடுக்கப்பட்ட என் சந்தனச் சிலையே... அட! கவிதை கூட வரும் போலிருக்கே! என் அழகான அசிங்கமே, இலவசமாகக் கிடைத்த சொர்க்கமே...'

ஹைவேஸ் ரோட்டில் கார் திரும்பி, வேகம் பிடிக்க... ஷ்யாம் டாஷ்போர்டைத் திறந்தான். வெள்ளி சிகரெட் கேஸ் பார்வைக்குக் கிடைக்க... சிகரெட் ஒன்றை உருவி உதட்டு இடுக்கில் சிக்க வைத்துக்கொண்டு, லைட்டரை க்ளிக்கினான். ஆரஞ்சு நிறத்தில் உற்பத்தியான ஜ்வாலை

ஒன்று தன் நாக்கைச் சுழற்றியது. காரின் வேகத்தைக் குறைத்த ஷ்யாம் விபாவின் பாஸ்போர்ட் சைஸ் போட்டோ ஒன்றை எடுத்து லைட்டரின் ஜ்வாலையில் பற்ற வைத்து, அந்தத் தீயை உதட்டில் தொங்கிக்கொண்டிருந்த சிகரெட்டுக்கும் பொருத்திக்கொண்டான்.

''தேங்க்யூ விபா... இது உன்னோட நூத்து அறுபதாவது பாஸ்போர்ட் போட்டோ. இன்னும் கைவசம் எண்ணூத்து நாற்பது போட்டோ இருக்கு. என்னோட ஆயிரமாவது சிகரெட்டுக்கு உன் போட்டோ நெருப்பைக் கொடுக்கும்போது, அநேகமா உன்னோட உடம்புக்கு நான் தீ வெச்சிருப்பேன்!''

கோபத்தில் ஆக்ஸிலேட்டர் மிதிபட, சான்ட்ரோ நூற்றி இருபதில் பறந்தது. எதிரே வந்த லாரிகள், மைக்ரோ செகண்டுகளில் காற்றை வெட்டிவிட்டுக் காணாமல் போயின.

சிகரெட்டின் உடம்பு எழுபது சதவிகிதம் கரைந்துபோயிருந்தபோது, சாய்பாபா காலனி வந்தது. போக்குவரத்தில் ஊர்ந்து, ஆஷாதேவி ஹாஸ்பிடல் போய்ச் சேர்ந்தபோது, சூரியன் மேற்குத் திசையில் ஜீரோ வாட்ஸ் பல்பாக மாறியிருந்தான்.

காரை பார்க்கிங் பிளேஸில் மௌனமாக்கி, ஏ.ஸி.யை ஆஃப் செய்துவிட்டு, கண்ணாடிக் கதவுகளை உயர்த்தி லாக் செய்த பின் கீழே இறங்கினான்.

ராம்கோபால் காரை இன்னமும் காணோம். 'அண்ணன் எப்போதும் ஸ்லோ டிரைவிங்தான்!'

ஷ்யாம் வாட்சைப் பார்த்தபடி காத்திருக்க, பின் பக்கமாக அந்தக் குரல் கேட்டது.

''நமஸ்காரம்...''

ஷ்யாம் திரும்பிப் பார்த்தான்.

அந்த சாஸ்திரிகள் நின்றுகொண்டிருந்தார். பட்டுவேட்டி... காதில் கடுக்கன்... தாம்பூலத்தில் சிவந்த வாய்... தோளில் ஒரு மஞ்சள் பை.

சிரித்தார்.



''என் பேர் பஞ்சவர்ண சாஸ்திரிகள். தொழில் கதாகாலட்சேபம்...''

ஷ்யாம் எரிச்சலாக அவரைப் பார்த்தான். ''இப்ப உங்களுக்கு என்ன வேணும்...?''

''ஒண்ணும் வேணாம்... உங்களைப் பாராட்டிட்டுப் போகலாம்னு வந்தேன்...''

''பாராட்டா...?!''

''ம்... போஸ்ட்மேன் காதர் உடம்பை நீங்க டிஸ்போஸ் பண்ணின விதம் இருக்கே... சிம்ப்ளி சூப்பர்!''

## 20

ஷ்யாம் உடம்பின் முக்கிய கேந்திரங்கள் சில விநாடிகள் பந்த் அனுஷ்டித்துவிட்டு இயல்புக்கு மீண்டன. நெற்றி வியர்த்து, அந்த சாஸ்திரியையே பயமாகப் பார்க்க, அவர் தாம்பூல வாயோடு சிரித்தார். அக்கம்பக்கம் ஒரு கள்ளப் பார்வை பார்த்துவிட்டு, குரலைத் தாழ்த்திக்கொண்டார்.

''உங்க தொழிலே கொலை பண்றதுதானா...?''

ஷ்யாமின் தொண்டைப் பிரதேசம் வறட்சிப் பகுதியாக அறிவிக்கப்பட்டது.

''இ... இ... இதெல்லாம் உங்களுக்கு... எ... எ... எப்படி...?''

''தெரியும்னு கேக்கறீங்களா...? உங்க ஜாதகமே எனக்குத் தெரியும்! அந்த கான்வென்ட் பையன் சாய்பிரசாத், இப்போ இந்த சான்ட்ரோ காருக்குள்ளே இருக்கிறதும் எனக்குத் தெரியும்...''

ஷ்யாம் வியர்த்து வழிந்து கொண்டு சுற்றும்முற்றும் பார்க்க, சாஸ்திரிகள் ஒரு சிநேகச் சிரிப்போடு அவன் தோள்மேல் கையை வைத்தார்.

''என்ன ஷ்யாம்... நான் யார்னு தெரியலையா...?''

''தெ... தெரியலையே!''

''நான் பிரம்மபுத்திரியோட ஹஸ்பெண்ட் ரத்னாகரன். என்னையும் பிரம்மபுத்திரியையும் கீழ

பிராஞ்ச் போலீஸ், இந்த கோயம்புத்தூர் பூராவும் சல்லடை போட்டுத் தேடிக்கிட்டிருக்காங்க. அவங்க கண்ல மண்ணைத் தூவதான் இந்த பஞ்சவர்ண சாஸ்திரிகள் வேஷம்...''

ஷ்யாமின் நுரையீரல்கள் சகஜ நிலைமைக்கு வந்தன. வீசிய காற்று முகத்தின் மேல் குளிர்ச்சியாக மோதியது. ரத்னாகரனைக் கோபப்பார்வை பார்த்தான்.

''எதுக்காக நீயும் உன்னோட வொய்ஃபும் என்னையே சுத்திச் சுத்தி வந்துக்கிட்டிருக்கீங்க... நான்தான் பணம் தர்றதா சொல்லிட்டேனே!''

''தர்றதா சொல்லியிருக்கே... வாஸ்தவம்தான்! ஒரு வேளை, உனக்கு இருக்கிற பிரச்னைகளில் மறந்துபோயிட்டா, என்ன பண்றது...?''

''நான் மறக்கமாட்டேன். இன்னிக்கு ராத்திரி பதினோரு மணிக்கு ஆர்.எஸ். புரம் சாஸ்திரி மைதானத்துக்கு வந்து, நீங்க கேட்ட ரெண்டு லட்சத்தைக் கொடுத்துடறேன். போதுமா...?''

''கண்டிப்பா பணத்தைக் கொண்டு வந்துடுவியா...?''

''சந்தேகமே வேண்டாம். உங்களை ஏமாத்த நினைச்சா, என்னோட கதி என்னாகும்னு எனக்குத் தெரியாதா...?''

''ஷ்யாம்! பேசினபடி நீ பணத்தைக் கொடுத்துட்டா அந்த நிமிஷமே இந்த ஊரைவிட்டுக் கிளம்பிடுவோம். அதுக்கப்புறம் உன்னை மறந்துடுவோம்...''

''சரி, நீ கிளம்பு... என்னோட அண்ணன் கார்ல வந்துட்டிருக்கார். நீயும் நானும் பேசிக்கிறதை அவர் பார்த்துட்டார்னா என்ன ஏதுன்னு கேட்டுக் கேள்விகளாலேயே என்னைத் துளைச்சு எடுத்துடுவார்...''

''இதோ கிளம்பிடறேன்... அதுக்கு முந்தி..''

''என்ன...?''

''உன் பாக்கெட்ல எவ்வளவு பணம் இருக்கு...?''

''ரெண்டாயிரத்துக்குள்ளே...''

''அந்தப் பணம் எனக்கு வேணும்...''



''எதுக்கு...?''

''ஒரு அவசர செலவுக்குத்தான்! அந்த ரெண்டாயிரத்துக்கு பட்ஜெட் போட்டாதா முடியும்...?''

ஷ்யாம் முறைத்துக்கொண்டே பாக்கெட்டுக்குள் கையைவிட்டுக் கிடைத்த பணத்தை எடுத்துக்கொடுக்க, ரத்னாகரன் கிட்டத்தட்ட அதைப் பறித்து, வேஷ்டியின் இடுப்பு மடிப்புக்குள் சரேலெனத் திணித்துக்கொண்டு வெற்றிலைக் காவிப் பற்களைக் காட்டிச் சிரித்தான்.

''தேங்க்ஸ்...''

''பேசிட்டிருக்காதே... கிளம்பு...''

''ராத்திரி பதினோரு மணிக்கு...''

''வந்துடறேன்! நீ மொதல்ல இடத்தைக் காலி பண்ணு...'' ஷ்யாம் சொல்லிக்கொண்டிருக்கும்போதே ராம்கோபாலின் கார், ஹாஸ்பிடலின் காம்பௌண்ட் கேட்டுக்குள் நுழைந்தது.

ரத்னாகரன் பின்வாங்கிக் காணாமல் போக, ராம்கோபால் காரை பார்க்கிங்கில் நிறுத்திவிட்டு, ஷ்யாமிடம் வந்தார். முகத்தில் கோபம்.

''காரை இப்படியா ரேஷ்டிரைவ் பண்றது! எதிர்ல எத்தனை லாரி வருது... கொஞ்சமாவது பொறுப்பு வேண்டாம்...?''

''ஸாரிண்ணா... விபாவோட விவகாரத்துல கொஞ்சம் எமோஷனலாயிட்டேன்...''

''கார் ஆக்ஸிடெண்ட் ஆகியிருந்தா...?''

''அதான், ஸாரி சொல்லிட்டேனே! விபாவைப் பார்க்க உள்ளே போகலாமா...?''

''வா...''

இருவரும் ஹாஸ்பிடலை நோக்கி நடந்தார்கள். ஷ்யாம் யதேச்சையாகத் திரும்பிப் பார்க்க, டூ - வீலர்ஸ் பார்க்கிங்கில் நிறுத்தியிருந்த பைக் ஒன்றை ரத்னாகரன் உதைத்துக்கொண்டிருந்தான்.

''ஷ்யாம்...'' ராம்கோபால் கூப்பிட்டார்.

''ம்...''

''விபா வெளிப் பார்வைக்கு இயல்பாயிருந்தாலும்

உள்ளுக்குள்ளே ரொம்பவும் நொறுங்கிப் போயிருக்கா... நீதான் தகுந்த சமாதானம் சொல்லி, அவ மனசைப் பழைய உற்சாகத்துக்குக் கொண்டு வரணும். அதே மாதிரி ஜெயப்பிரகாசத்துக்கும் ஆறுதல் சொல்லி அவரையும் பழைய சந்தோஷ நிலைமைக்குக் கொண்டு வரணும்...''

''கண்டிப்பா...'' - ஷ்யாமின் உதடுகள் இந்த வார்த்தையைச் சொன்னாலும் உள்ளுக்குள் சந்தோஷம் குதி போட்டுக்கொண்டிருந்தது.

'விபாவும் அவளோட இரவல் அப்பனும் நொறுங்கிப் போயிருக்காங்களா...? நொறுங்கட்டும்... விபாவைக் கல்யாணம் பண்ணிக்கிட்ட பின்னாடி, நான் ஆரம்பிச்சிருக்க வேண்டிய வேலை இது. அந்த ஜமீன் பரம்பரை முந்திக்கிட்டு சந்தோஷ இடிப்பு வேலையை ஆரம்பிச்சிருக்காங்க... கல்யாணத்துக்கப்புறம் நான் அதை கண்டினியூ பண்றேன்!'

''ஷ்யாம்...'' - நடந்துகொண்டிருந்த ராம்கோபால் சட்டென்று அவனுடைய தோளைத் தட்டினார்.

''என்னண்ணா...?''

''என்ன... உனக்கு நீயே ஏதோ பேசிட்டு வர்றே...?''

''இல்லையே!''

''நீ பேசினது, என் காதுல விழுந்ததே...''

''என்ன பேசினேன்...?''

'''சந்தோஷ இடிப்பு வேலை... கண்டினியூ பண்றேன்... நொறுங்கட்டும்...' - இது மாதிரி துண்டு துண்டா வார்த்தைகள். யாரைத் திட்டிக்கிட்டு இருக்கே... அந்த ஜமீன் பரம்பரையையா...?''

''ஆ... ஆமா...!''

''இவ்வளவு கோபம் இருந்தா, உன்னால எந்தவொரு காரியத்தையும் பண்ண முடியாது. விபாவுக்கும் உனக்கும் கல்யாணம் நடக்கணும்னா, பொறுமை ரொம்ப அவசியம். கோபத்தை நாம வெளிக்காட்டிக்கவே கூடாது. நம்ம கோபம் எதிரிகளுக்கு லாபம்...''



''இட்ஸ் ஓகே! டெல் மீ ரிலாக்ஸ்... இனிமே நான் கோபப்படமாட்டேன். இந்த விஷயத்துல நீங்க எப்படி நடந்துக்கச் சொல்றீங்களோ, அப்படியே நடந்துக்கறேன்''

''தட்ஸ் குட்!''

இருவரும் ஐ.சி.யூ.வார்டுக்கு வந்தார்கள். யூனிட் வாசலிலேயே விபாவும் சந்திராவும் தெரிந்தார்கள்.

''ஷ்யாம்! விபாகிட்டே நீ பேசிட்டிரு...'' - சந்திராவுக்கு ராம்கோபால் கண்ஜாடை காட்டிவிட்டு விலகிக் கொள்ள, ஷ்யாமும் விபாவும் நேர்பார்வை பார்த்துக் கொண்டு நின்றார்கள்.

விபாவின் விழிகளில் நீர் நிரம்பி, ஜரிகை தாளாகப் பளபளத்தது. நாசித் துவாரங்கள் விம்ம ஏதோ பேச முற்பட்டவளைப் புன்னகையோடு கையமர்த்தினான் ஷ்யாம்.

''எனக்கு எல்லாமே தெரியும்... உன்னோட பிறப்பு சம்பந்தப்பட்ட அந்தக் கறுப்பான ஃப்ளாஷ்பேக்கை நீ மறந்துடலாம். எனக்கு நிகழ்காலம்தான் முக்கியம். எனக்கு நீதான் மனைவின்னு முடிவான பின்னாடி, திடீர் திடீர்னு வர்ற சொந்தங்களுக்கு இங்கே இடமில்லை...''

விபாவின் கண்களில் தத்தளித்துக் கொண்டிருந்த நீர், இப்போது உருண்டது. அதை ரசனையோடு பார்த்தான் ஷ்யாம். ஆள்காட்டி விரலால் அந்த கண்ணீரைத் தொட்ட விநாடி மனசுக்குள் ஒரு மிருகம் பரபரத்தது.

விபா தொண்டை அடைத்துக் கொள்ள, தழுதழுத்த குரலில் கேட்டாள்...

''நம்ம கல்யாணம் நடக்குமா?''

ஷ்யாம் தோள்களைக் குலுக்கிச் சிரித்தான்.

''இதே இடத்துல, இப்பவே உன் கழுத்துல தாலி கட்ட நான் தயார். ஆனா, அதுல எனக்கு உடன்பாடு கிடையாது. நாம ஏற்கெனவே ஒரு முகூர்த்தத் தேதியை ஃபிக்ஸ் பண்ணி வெச்சிருக்கோம். அதே தேதியில்... அதே வேளையில் கல்யாணத்தை நடத்தினாத்தான், எதிரிகளுக்கு நம்ம மேல ஒரு பயம் வரும்... ஒரு மதிப்பு

வரும்..."

"என்னோட பிறப்பு விவகாரம் உங்க மனசுக்கு உறுத்தலாகவே படலையா...?"

"எனக்கு வேண்டியது நீ மட்டுமே... உன்னோட நிழலையும்கூட நீயே வெச்சுக்கலாம். என்னைப் பொறுத்தவரைக்கும் உன்னை வளர்த்தவங்கதான் என்னோட மாமனார் - மாமியார்..."

"எனக்கு இந்த வார்த்தை போதும்..."

விபா உணர்ச்சிவசப்பட்டவளாக ஷ்யாமின் கைகளைப் பிடித்துக் கண்களில் ஒற்றிக்கொள்ள புறங்கையில் கண்ணீர் சிதறியது.

"உங்கம்மாவைப் பார்க்கப் போகலாமா...?"

"வாங்க... அப்பாவும் அம்மா பக்கத்துலதான் இருக்கார்..."

விபா கண்களைத் துடைத்துக் கொண்டு ஐ.ஸி. யூனிட்டை நோக்கி நடக்க, ஷ்யாம் பின் தொடர்ந்தான் விபாவின் கண்ணீர் இன்னமும் ஈரம் காயாமல் புறங்கையின் மேல் 'சில்'லென்று படிந்திருக்க, அதை உதட்டுக்குக் கொண்டு போனான் ஷ்யாம்.

சட்டை பாக்கெட்டில் இருந்த செல்போன் திடுமென்று கூப்பிட்டது.

"எக்ஸ்க்யூஸ் மீ... விபா..." - சொல்லி, சுவரோரமாக ஒதுங்கியவன் செல்போனை எடுத்துக் காதுக்குக் கொடுத்து "யெஸ்..." என்றான்.

"வி... விபா..."

"எ... எ... என்னங்க...?"

" பிஸினஸ் விஷயமா நான் ஒருத்தரை அவசரமா பார்க்க வேண்டியிருக்கு..."

"போயிட்டு வாங்க... அதுக்கப்புறமா என்னோட அப்பா, அம்மாவைப் பார்த்துக்கலாம்..."

ஷ்யாம் சுற்றும் முற்றும் பார்த்தான்.

"யாரைத் தேடறீங்க...?"

"என்னோட அண்ணன், அண்ணி..."

"அவங்க கான்டீன் பக்கம் போயிருக்காங்க. நான்



சொல்லிக்கறேன்... நீங்க புறப்படுங்க..."

"தப்பா நினைச்சுக்காதே விபா! அந்த ஆளை உடனடியா பார்க்கலைன்னா, ஒரு பெரிய பிஸினஸ் ஆர்டர் கான்சலாயிடும்..."

"இவ்வளவு டீடெய்லா நீங்க எனக்கு விளக்கவேண்டிய அவசியமே இல்லை. அவசரம், அவசியம்னா உடனே கிளம்புங்க..."

"தேங்க்ஸ் விபா!" - வியர்த்த முகத்தை இரண்டு கைகளாலும் வழித்துவிட்டுக்கொண்டு செலுத்தப்பட்டவனைப் போல் வேகமாக நடந்தான் ஷ்யாம்.

மனதின் ஒரு ஓரத்தில் சுருண்டு படுத்துத் தூங்கிக்கொண்டிருந்த அந்த மிருகம் அரைக்கண் திறந்து பார்த்துச் சோம்பல் முறித்தது.

ஷ்யாம் போர்ட்டிகோ படிகளை இரண்டிரண்டாகத் தாவிக் கீழே இறங்கி, கார் பார்க்கிங்கை நோக்கிப் போனான்.

டிரைவிங் ஸீட்டில் தன்னைத் திணித்துக்கொண்டு இக்னீஷியனை உசுப்ப முயன்றபோது, காரின் பின்ஸீட்டுக்குக் கீழேயிருந்து சாய்பிரசாத்தின் முனகல் சத்தம் கேட்டது.

யோசனையோடு காரைக் கிளப்பினான். ஹாஸ்பிடலினின்றும் சிறி ரோட்டுக்கு வந்த கார், தோட்டாவாக மாறியது. கோவை இருட்டுக்குப் போய்க்கொண்டிருக்க சோடியம் விளக்குகள் மஞ்சள் பூசிக் குளித்தன. வட கோவை மேம்பாலத்தில் ஏறிய சான்ட்ரோ, டாடாபாத்தை நோக்கிப் போயிற்று.

'அங்கே இருட்டான, நிசப்தமான தெருக்கள் அதிகம். சாய்பிரசாத்தை ஏதாவது ஒரு பக்கம் இறக்கிவிட்டு விட்டுப் போய்விடலாம். இவனை காரில் வைத்துக்கொண்டிருக்கும் ஒவ்வொரு நிமிடமும் எனக்குத்தான் ஆபத்து...'

வேகமான பத்து நிமிடப் பயணத்தில், டாடாபாத்தின் வெளிச்சப் பகுதிகள் காணாமல் போய்விட... கார்

போய்க்கொண்டிருந்தது. ஆள் இல்லாத ரயில்வே கேட் ஒன்றைத் தாண்டியதும் இருட்டில் உறைந்துபோன பொட்டல்வெளி, சொற்பமான வீடுகளோடு பார்வைக்குக் கிடைத்தது.

காரை நிறுத்தினான் ஷ்யாம்.

இறங்கினான்.

சுற்றும் முற்றும் பார்த்தான். மனிதத் தலை எந்தத் திசையிலும் தட்டுப்படாமல் போகவே காரின் பின்பக்கக் கதவைத் திறந்து சாய்பிரசாத்தை இரண்டு கைகளாலும் தூக்கிக் கொண்டான்.

'உனக்கு விடுதலை. போன தடவை கமலக்கண்ணனுக்கு இவ்வளவு சீக்கிரத்துல விடுதலை கிடைக்கலை. நாலு நாள் என்கிட்ட இருந்தான். உனக்கு ரெண்டே நாள்ல விடுதலை. இப்படி ஓரமா படுத்துக்கோ...'

சாய்பிரசாத்தைக் குற்றுச் செடிகளுக்குப் பக்கத்தில் கிடத்திவிட்டு எழுந்தான் ஷ்யாம்.



**சைலன்சர் பொருத்தப்பட்ட ஸ்டெர்லிங் எஸ்.எம்.ஜி துப்பாக்கி. இதன் மதிப்பு இந்திய ரூபாயில் ஏறக்குறைய ரூ.25,512.75 (345 பவுன்)**

## 21

க்ரைம் பிராஞ்ச் இன்ஸ்பெக்டர் பாலமுரளி, தன் பைக்கை விரட்டிக்கொண்டு டாடாபாத் எக்ஸ்டென்ஷன் வந்து சேர்ந்தபோது சின்னதாக ஒரு கும்பல் கூடியிருக்க கும்பலின் நடுவே அந்த ஏரியா சப் - இன்ஸ்பெக்டர் ரவீந்திரன் உயரமாகத் தெரிந்தார். பாலமுரளியைப்



பார்வையில் வாங்கியதும் கும்பலை விலக்கி வெளிப்பட்டவர் 'கன்'னென்று ஒரு சல்யூட் அடித்தார்.

பாலமுரளி கேட்டார்:

"பையன் எங்கே...?"

"நாலஞ்சு வீடு தள்ளி ஒரு டாக்டர் இருந்தார். அவர் வீட்டுக்குக் கொண்டு போயிட்டோம். டாக்டர், பையனுக்கு ட்ரிப்ஸ் போட்டிருக்கார்..."

"காணாமப் போன சாய்பிரசாத்தானே அவன்...?"

"ஆமா சார்! நீங்க ஏற்கனவே இந்த ஸ்டேஷனுக்கு அனுப்பியிருந்த போட்டோவை வெச்சு கன்ஃபார்ம் பண்ணிட்டோம்..."

"பையன் உயிருக்கு எந்த ஆபத்தும் இல்லையே...?"

"இல்லை சார்!"

"உடம்புல ஏதாவது காயம்...?"

"டாக்டர் பார்த்துட்டார்... உடம்போட எந்தப் பாகத்துலயும் ஒரு சின்னக் கீறல்கூட இல்லை..."

"பையனை எந்த இடத்துல போட்டுட்டுப் போயிருந்தாங்க...?"

"ப்ளீஸ், கம் திஸ் சைட் சார்..." - ரவீந்திரன் கூட்டிக்கொண்டு போய், குற்றுச்செடிகள் அடர்த்தியாக வளர்ந்திருந்த இருட்டான பகுதியைக் காட்டினார்.

"பையனை மொதல்ல யார் பார்த்தது...?"

"ராகவேந்திரன்னு ஒருத்தர் சார்..."

"யாரது...? கூப்பிடுங்க..."

"நான்தான் சார்..." - கும்பலிலிருந்து தன்னைப் பிரித்துக்கொண்டு வந்த அந்த இளைஞனுக்கு முப்பது வயது இருக்கலாம். கண்களில் சின்னதாகக் கலவரம்...

பாலமுரளி, ராகவேந்திரனை ஏற இறங்கப் பார்த்துக்கொண்டே கேட்டார்:

"இந்த ஸ்பாட்ல பையன் இருக்கறது உனக்கு எப்படித் தெரிஞ்சது...?"

"சார்... எனக்கு வீடு என்.ஜி.ஓ. காலனி! எலெக்ட்ரிகல்ஸ் கடையில எனக்கு வேலை சார். இந்த ஏரியாவில் இருக்கிற ஒரு வீட்டுக்கு ஏ.ஸி. யூனிட்டை

ஃபிக்ஸ் பண்றதுக்காக வந்தேன். அதோ, அந்த வீடுதான் சார்...''

பாலமுரளி திரும்பிப் பார்த்தார். சுமார் இருநூறு மீட்டர் தூரத்தில் மொட்டைமாடியோடு கூடிய ஒரு வீடு வெளிச்ச ஜன்னல்களோடு தெரிந்தது.

ராகவேந்திரன் தொடர்ந்தான்: ''ஒரு வயரிங் வேலை பண்றதுக்காக நான் மொட்டைமாடியில் நின்னுக்கிட்டு இருந்தபோது, ஒரு கார் ஹெட் லைட் வெளிச்சத்தோடு இந்தக் குற்றுச் செடிகள் பக்கமா வந்து நின்னுது சார். நான் பார்த்துட்டிருக்கும்போதே, ரெண்டு ஹெட்லைட்டும் ஆஃப் ஆயிடுச்சு. காரை விட்டு இறங்கிய ஆள் சுற்றும் முற்றும் பார்த்துக்கிட்டே போய், காரின் பின்பக்கக் கதவைத் திறந்து, பின்ஸீட்டுக்குக் கீழேயிருந்து எதையோ இழுத்து ரெண்டு கைகளாலும் தூக்கிக்கிட்டான்...''

''அப்போ, அது உனக்குப் பையன்னு தெரியாதா...?''

''தெரியாது சார்! அந்த வீட்டுக்கும் இந்த இடத்துக்கும் தூரம் நிறைய இருந்ததால, என்னால சரியா பார்க்க முடியலை சார். நல்லா இருட்டிக்கிட்டு வந்த நேரம் அது...''

''சரி... மேலே சொல்லு...''

''நான் பார்த்துக்கிட்டிருக்கும்போதே அந்த ஆள் புதர் பக்கமா போய்க் கையில வெச்சிட்டிருந்ததைப் போட்டுட்டு வந்தான். நான் மொட்டை மாடியிலிருந்து கீழே இறங்கிப் போய் வீட்டுக்காரர்கிட்ட விஷயத்தைச் சொன்னேன் சார்... அதுக்கு வீட்டுக்காரர் 'எவனோ கார்ல வந்து, எதையோ போட்டுட்டுப் போகட்டும். அந்தக் கவலை உனக்கும் வேண்டாம், எனக்கும் வேண்டாம். போய் வேலையைப் பார்'னு சொன்னார். எனக்கு மனசு கேட்கலை சார்... வீட்டுக்காரர் சொன்னதையும் மீறிக்கிட்டுப் போய்ப் பார்த்தேன். வாடிப்போன வெள்ளரிப் பிஞ்சா கிடந்த பையனைப் பார்த்ததும் மனசு பதறிப் போயிட்டேன் சார்...''

''கார்ல வந்த ஆள் எப்படி இருந்தான்னு சொல்ல முடியுமா...?''



''மசமசப்பான அரைவிருட்டுல அந்த ஆள் நிழல் உருவமாத்தான் தெரிஞ்சான் சார்... அதே மாதிரி, காரையும் இனம் கண்டுபிடிக்க முடியலை. ஸ்பாட்டுக்கு வர்றதுக்குள்ளே கார் போயிடுச்சு...''

பாலமுரளி திரும்பிக் கும்பலைப் பார்த்துக் குரல் கொடுத்தார்.

''வேற யாராவது அந்தக் காரைப் பார்த்தீங்களா...?''

ரவீந்திரன் குறுக்கிட்டார்: ''நான் இங்கே வந்ததுமே என்கொயரி பண்ணிப் பார்த்துட்டேன் சார்... ராகவேந்திரனைத் தவிர வேற யாருமே அந்த காரைப் பார்க்கலை...''

''காரோட டயர் மார்க்கை இந்த இடத்திலிருந்து கேதர் பண்ண முடியுமா...?''

''அதுக்கான வாய்ப்புகள் குறைவு சார்... இது வறண்ட பூமி. மெட்டல் காப்பி ரோடு. மார்க்ஸ் கிடைக்கும்கிற நம்பிக்கை எனக்கு இல்லை சார்... பையன் கண் முழிச்சு, ஏதாவது சொன்னாத்தான்... ஆள் யாருங்கிறதைக் கண்டுபிடிக்க முடியும்...''

''வாங்க பையனைப் பார்க்கலாம்...''

கும்பலை விட்டு விலகி இருவரும் நடந்தார்கள்.

''பக்கத்திலேயே ஒரு டாக்டர் வீடு இருந்தது வசதியா போச்சு சார்...''

''டாக்டர் யாரு...?''

''நடராஜன்... கென்னடி ஸ்ட்ரீட்டுக்கு எதிர்ல இருக்கிற ஷண்முகா நர்ஸிங்ஹோம் அவரோடதுதான்...''

''ஓ! அவரா...?''

''அவரை உங்களுக்குத் தெரியுமா சார்...?''

''தெரியுமாவது! ஹி வாஸ் மை ஸ்கூல் மேட். உங்களுக்கு அவர் நடராஜன். எனக்கு அவர் நட்ஸ்! வாங்க பார்த்துடலாம்...''

போனார்கள்.

அடுத்த தெருவின் ஆரம்பத்திலேயே டாக்டர்

நடராஜனின் பங்களா, போகன்வில்லா பூக்களோடு தெரிய... உள்ளே போனார்கள். முன்னறையிலேயே நடராஜன் கிடைத்தார். பாலமுரளியை அடையாளம் தெரிந்துகொண்டு புன்னகையோடு கைகுலுக்கினாலும் அவருடைய கண்களில் கெட்டியான கவலை ஒட்டியிருந்தது. அதை அடையாளம் கண்டு பாலமுரளி கேட்டார்.

"சாய்பிரசாத்தோட கண்டிஷன் இப்போ எப்படியிருக்கு...? அவனுக்கு எப்போ நினைவு திரும்பும்...?"

"அவனுக்கு நினைவு திரும்பிடுச்சு. ஒரு பாட்டில் க்ளூகோஸ் ட்ரிப்ஸா உள்ளே போனதும் கண்ணைத் திறந்து பார்த்துட்டான். பட்..."

"பட்...?"

"அவனால பேச முடியலை... எந்தக் கேள்வியைக் கேட்டாலும் திடுக்கிட்ட மாதிரி என்னைப் பார்த்துட்டு, ஓரேயடியா வெறிக்கப் பார்க்கிறான்! இதுவரைக்கும் ஒரு வார்த்தைகூட அவனோட வாயிலிருந்து பெயரலை..."

"அவனைப் பார்க்கலாமா...?"

"ப்ளீஸ்..."

நடராஜன் உள்ளே கூட்டிப் போனார். அந்தச் சிறிய அறை ஒரு கிளினிக் மாதிரி தெரிய... சற்று உயரமான அந்த மேஜையின் மேல் சாய்பிரசாத் தெரிந்தான். இடது கை மணிக்கட்டு வழியாக ட்ரிப்ஸ் உள்ளே போய்க்கொண்டிருந்தது.

பாலமுரளி பக்கத்தில் போய் நின்றார். சாய்பிரசாத் கண்களை மூடியிருக்க, மெள்ள அவன் நெற்றியைத் தொட்டார்.

சாய்பிரசாத்தின் விழிகள் மெதுவாகப் பிரிந்தன. பாலமுரளி புன்னகைத்தார்.

"பயப்படாதே! உனக்கு ஒண்ணும் ஆகலை..."

"....."

"அம்மாகிட்ட போறியா...?"

சாய்பிரசாத்தின் முகத்தில் எந்த உணர்ச்சியும்



கிடைக்கவில்லை. பாலமுரளியை இமைக்காமல் பார்த்தான். பையனின் தலையைக் கோதிக்கொண்டே பாலமுரளி கேட்டார்.

"உன் பேர் என்ன சொல்லு பார்க்கலாம்..."

சாய்பிரசாத் மிரண்ட மாதிரி பார்த்தான். கண்கள் சட்டென்று நீரால் பனித்தன. தொண்டைக்குழி இன்னமும் ஆழமாக இறங்கி, ஸ்லோமோஷனில் மேலே ஏறியது.

பாலமுரளி, நடராஜனைப் பார்த்தார்.

"எதனால இப்படி...?"

"தெரியலை... உடனடியா ஹாஸ்பிடலைஸ் பண்ணி ஸ்கேன் பார்க்கணும்; ஆம்புலன்ஸுக்கு போன் பண்ணியிருக்கேன்."

## 22

இன்ஸ்பெக்டர் பாலமுரளி, டாக்டர் நடராஜனின் அறைக்குள் நுழைந்தபோது, அவர் எக்ஸ்ரேக்களை டியூப் வெளிச்சத்தில் உயர்த்திப் பிடித்துப் பார்த்துக்கொண்டிருந்தார். சுவரில் பொருந்தியிருந்த டிஜிடல் வால்கிளாக் இரவு பத்து மணியை நெருங்கிக்கொண்டிருந்தது. ஸ்கேன் ரிப்போர்ட் தாள்கள் சுழலும் ஃபேன் காற்றுக்கு விட்டுவிட்டுப் படபடத்தது.

"வாங்க பாலமுரளி..."

"ரிப்போர்ட் என்ன சொல்லுது டாக்டர்...?"

"சாய் பிரசாத்தோட மூளைப் பகுதியில் ஒரு சின்ன ஸ்தம்பிதம் நடந்திருக்கு. அனஸ்தீஷியாவுக்கு உபயோகப்படுத்தற ஒரு இன்ஜெக்ஷன் மருந்தை ஹெவி டோஸா கொடுத்திருக்காங்க. இன்ட்ரா வீனஸ் மூலமா கொடுக்கப்பட்ட அந்த அனஸ்தடிக் ட்ரக் தையோ பென்டோன் சோடியமாக (Thio Penthone Sodium) இருக்கலாம்..."

"டாக்டர்... பையனோட உயிருக்கு எந்த ஆபத்தும் இல்லையே...?"

''சரியான நேரத்துக்குக் கொண்டு வந்து ஹாஸ்பிடலில் சேர்த்தோம் ஸோ... உயிருக்கு ஆபத்து இல்லை. பட், அனஸ்தடிக் ட்ரக் மூலமா மூளையில் ஏற்பட்டிருக்கிற பாதிப்பு பையனுக்கு மறதியை உண்டாக்கலாம்...''

''இதைக் குணப்படுத்த முடியாதா...?''

''சைக்யாட்ரிஸ்ட் குருவில்லா இது மாதிரியான கேஸ்களுக்கு எக்ஸ்பர்ட். அவருக்கு போன் பண்ணிப் பார்த்தேன். டெல்லிக்குப் போயிருக்கார்... ரெண்டு நாள்ல திரும்பி வர்றார். வந்ததும் அவரை கன்சல்ட் பண்ணுவோம்.'' பாலமுரளி பெருமூச்சு விட்டார்.

''சாய்பிரசாத்தோட பேரண்ட்ஸைக் கண்கொண்டு பார்க்க முடியலை. பையனைப் பார்த்துப் பார்த்து ஓயாம அழுதுகிட்டே இருக்காங்க. நீங்கதான் அவங்களுக்குத் தைரியம் சொல்லணும் டாக்டர்...''

''நானும் எவ்வளவோ சொல்லிப் பார்த்துட்டேன். அவங்களை கன்வின்ஸ் பண்ண முடியலை. பையனைக் கடத்தினது யார்னு கண்டு பிடிச்சுட்டீங்களா இன்ஸ்பெக்டர்...?''

''இன்னும் இல்லை... மும்முரமா முயற்சி பண்ணிட்டிருக்கோம். இதுவரைக்கும் எந்த க்ளூவும் கிடைக்கலை... இதுக்கு முன்னாடி அதே கான்வெண்ட்டைச் சேர்ந்த கமலக்கண்ணன் என்கிற பையன் கடத்தப்பட்டு நாலஞ்சு நாளைக்கப்புறம் புத்தி பேதலிச்ச நிலைமையில் பாரதி பார்க்குக்குப் பக்கத்துல ஒரு முட்புதர் ஓரமா கிடைச்சான். இன்னிக்கு சாய்பிரசாத், டாடாபாத் எக்ஸ்டன்ஷன் ஏரியாவில் கிடைச்சிருக்கான்...''

''எதுக்காக இந்தக் கடத்தல்...?''

''தெரியலை...''

''பணம் கேட்டு ஏதாவது போன் வந்ததா...?''

''அதுவும் இல்லையே!''

''கமலக்கண்ணன், சாய்பிரசாத்... இவங்க ஃபேமிலிக்கு வேண்டாதவங்க யாராவது...?''



''அந்தக் கோணத்துலயும் இன்வெஸ்டிகேட் பண்ணிப் பார்த்துட்டோம். சரியான மோட்டிவ் கிடைக்கலை...''

''இப்படிக் குழந்தைகளைக் கடத்திக்கிட்டுப் போய் இம்சை பண்றதுல யாருக்கு என்ன லாபம்...?''

''சிட்டியில் இருக்கிற ஒவ்வொரு கான்வெண்ட் நிர்வாகமும் அரண்டு போயிருக்கு. எஜுகேஷன் மினிஸ்டர் போலீஸ் உயர் ஆபீஸர்களைக் கூப்பிட்டுக் கண்டபடி எகிறிக்கிட்டிருந்தார்... இனி மூணாவதா ஒரு பையன் கடத்தப்பட்டால்... எல்லா கான்வெண்ட்டுகளையும் காலவரம்பின்றி இழுத்து மூட வேண்டியிருக்கும்...''

அறைக் கதவு அவசரமாகத் தள்ளப்பட்டு, ஒரு நர்ஸின் பதட்ட முகம் எட்டிப் பார்த்தது.

''டாக்டர்...''

''என்ன...?''

''அந்தப் பையன் சாய்பிரசாத் மயக்கம் தெளியாமலேயே துண்டு துண்டா ரெண்டு வார்த்தை பேசறான். சிலது புரியுது... சிலது புரியலை...''

டாக்டர் நடராஜனும் இன்ஸ்பெக்டர் பாலமுரளியும் எழுந்து வேக வேகமாகப் போனார்கள்.

சாய்பிரசாத்தை ஜுரம் தகித்துக்கொண்டிருக்க, வறண்ட உதடுகள் தன்னிச்சையாக வார்த்தைகளை உதிர்த்துக்கொண்டிருந்தன. தெளிவில்லாத உச்சரிப்பு...

பாலமுரளி ஸ்டூலை இழுத்துப் போட்டுக்கொண்டு உட்கார்ந்தார். சாய்பிரசாத்தின் உதட்டுக்கு நேராகத் தன் வலது காதைச் சாய்த்தார். வார்த்தைகள் சிதைந்து வெளிப்பட்டன.

''சி... ஸை... ர்...''

''அ... ங்... கி... ள்...! த... தண்ணி...''

''அ... அம்மா... வே... வேணும்...''

இந்த வார்த்தைகள் தவிர, மற்ற வார்த்தைகள் உதட்டுக்குள்ளேயே அமுங்கிப் போக, பாலமுரளி நிமிர்ந்தார். அழுது அழுது களைத்துப் போயிருந்த

சாய்பிரசாத்தின் அம்மா இந்திரா பார்வைக்குக் கிடைத்தாள்.

''வீட்ல நாய் வளர்க்கறீங்களா...?''

''இல்லையே!''

''பின்னே... யாரது சீஸர்...?''

''தெரியலை...''

''உங்க பையனுக்கு நாய்கன்னா இஷ்டமா...?''

''கிடையாது! நாய்ன்னாலே அவனுக்குப் பயம்...''

''உங்களுக்குத் தெரிஞ்ச அளவுல யார் வீட்டிலாவது சீஸர்ங்கிற பேர்ல நாய் இருக்கா...?''

யோசிக்க ஆரம்பித்தாள் இந்திரா

ராத்திரி பத்தேமுக்கால் மணி.

ஷ்யாமின் சான்ட்ரோ கௌலி ப்ரவுன் ரோட்டில் சீறிக்கொண்டிருந்தது. பக்கத்தில் சின்னதாகக் கிடந்த ப்ரீஃப்கேஸ் ஒன்று இரண்டு லட்ச ரூபாய்க்கான நோட்டுக்கள்களைக் கர்ப்பம் தாங்கியிருந்தது.

கார் திவான் பகதூர் ரோட்டின் வளைவில் திரும்பியபோது செல்போன் குரல் கொடுத்தது.

எடுத்தான்.

போனில் பிரம்மபுத்திரி சிரித்தாள்.

''என்ன ஷ்யாம்... மறந்துட்டியா...?''

''இல்லே... மறக்கலை...''

''இப்போ மணி பத்தேமுக்கால்...''

''தெரியும்... பணத்தோட வந்துட்டிருக்கேன்...''

''கார் இப்போ எங்கேயிருக்கு...?''

''திவான் பகதூர் ரோட்ல...''

''பக்கத்துல வந்துட்டே...!''

''ஆமா. இன்னும் ரெண்டே நிமிஷம்... சாஸ்திரி மைதானத்துல இருப்பேன்...''

''குட்! ஏற்கெனவே நான் சொன்னபடி மைதானத்தோட வடக்குப் பக்கம் போய் காரை நிறுத்திக்க... எவ்வளவு நேரமானாலும் காரை விட்டு நீ இறங்கவே கூடாது. நானோ, என்னோட கணவரோ



காருக்குப் பக்கத்துல வந்து குரல் கொடுத்தாத்தான் நீ காரைவிட்டு இறங்கணும்...''

''சரி...'' என்றான் ஷ்யாம்.

''எங்களை ஏமாத்தற எண்ணம் மனசுக்குள்ளே இருந்தா, இப்பவே அழிச்சுடு...''

''அந்த எண்ணம் எனக்குக் கொஞ்சமும் இல்லை. அதே மாதிரி, பணம் உங்க கைக்கு வந்த பின்னாடி என்னை போலீஸில் மாட்டிவிடக்கூடாது...''

''உனக்கும் எனக்கும் வேண்டாதவங்க போலீஸ். பணம் எங்க கைக்குக் கிடைச்சுட்டா, இந்தத் தமிழ் நாட்டைவிட்டே பறந்துடுவோம். அதுக்கப்புறம் நாங்க உன்னை மறந்துடுவோம்...''

''உங்களை நம்பறேன்...''

''பையனை ஒண்ணும் பண்ணாம விட்டுட்டே போலிருக்கே...?''

''உனக்கெப்படி தெரியும்...?''

''டி.வி. நியூஸ்ல சொன்னாங்களே... ஏன், பையன் ரொம்பவும் தொந்தரவு கொடுத்துட்டானா...?''

''பேசாதே! பணத்தைக் கொண்டு வர்றேன். வாங்கிட்டு என்னை மறந்துடு...''

செல்போனை அணைத்தான் ஷ்யாம். மேற்கொண்டு அது கத்தாமல் இருக்க, வாயை அடைத்தான்.

கார் போஸ்ட் ஆபீஸ் சந்திப்பைக் கடந்து, ரத்தின விநாயகர் கோயிலை நெருங்கியபோது -

ரோட்டோர இருட்டில் நின்றிருந்த போலீஸ் அதிகாரி ஒருவர் சட்டென்று வெளிப்பட்டார்.

காரை நிறுத்தினார்.

சான்ட்ரோ, ரோட்டைத் தேய்த்துக்கொண்டு நின்றது. கலக்கமாக எட்டிப் பார்த்த ஷ்யாமை போலீஸ் அதிகாரி கேட்டார்.

''எந்தப் பக்கமா போறீங்க...?''

''சாஸ்திரி மைதானம் வழியா...''

''அந்த வழியா நீங்க போக முடியாது. ஒண்ணு நேரா போயிடுங்க... இல்ல, திரும்பி வந்த வழியே

போயிடுங்க...''

''ஏன் சார்...?''

''சாஸ்திரி மைதானத்துக்குள்ளே ஒளிஞ்சுக்கிட்டிருக்கிற ரெண்டு இலங்கைத் தீவிரவாதிகளைப் பிடிக்கறதுக்காக போலீஸ் ரவுண்ட்-அப் பண்ணி இருக்கு. எந்த வண்டிகளையும் அந்தப் பக்கமா அனுமதிக்கறதில்லை. எப்படி நேரா போறீங்களா, இல்ல... திருப்பிட்டுப் போயிடறீங்களா...?''

ஷ்யாமுக்குள் இதயம் அறுந்து விழுந்த உணர்வு.



**சைலன்சர் பொருத்தப்பட்ட ஏ.கே. துப்பாக்கி. இதன் மதிப்பு இந்திய ரூபாயில் ஏறக்குறைய ரூ.34,386.75 (465 பவுண்)**

# 23

''என்ன சார் யோசனை பண்ணிக்கிட்டு இருக்கீங்க...? சீக்கிரமா காரை நகர்த்துங்க... அங்கேயிருந்து ஏ.ஸி. பார்த்துக்கிட்டிருக்கார்...! ஏய் ஆட்டோ...! வண்டியை அங்கே நிறுத்தாதே. எதிர் ரோட்ல போயிடு...''

போலீஸ் அதிகாரியின் கத்தலுக்குக் கட்டுப்பட்டு ஆட்டோ எதிர்ரோட்டுக்குள் நுழைந்துவிட, ஷ்யாம் தன் காரை அரை வட்டம் அடித்துத் திருப்பினான்.

இதயம் பயத்தில் ஈயக்குண்டாகக் கனத்தது. உடம்பு முழுவதும் வெப்ப ரத்தம் பாய்ந்தது.

'பிரம்மபுத்திரியும் அவளுடைய கணவன்



ரத்னாகரனும் போலீஸில் மாட்டிக்கொள்வார்களா... இல்லை தப்பித்து விடுவார்களா...?'

'தப்பித்துக்கொண்டால் பிரச்னையில்லை. மாட்டிக்கொண்டால் என்னையும் காட்டிக்கொடுத்துவிட வாய்ப்பு அதிகம்.'

'ஷ்யாம் யோசித்தபடியே சான்ட்ரோவை விரட்டிக்கொண்டிருக்க, பின்னால் காரின் ஹாரன் சத்தம் கேட்டது.

திரும்பிப் பார்த்தான்.

அண்ணன் ராம்கோபாலின் கார்.

ஷ்யாம் சான்ட்ரோவின் வேகத்தைக் குறைக்க, ராம்கோபாலின்கார் பக்கவாட்டில் வந்தது. காரை அவர் ஓட்ட... பின் ஸீட்டில் சந்திராவும் விபாவும் தெரிந்தார்கள். இரண்டு கார்களும் ஓரமாக நிற்க, ராம்கோபால் கோபமாகக் கத்தினார். ''டேய்... ஷ்யாம், எங்கடா ஊரைச் சுத்திக்கிட்டிருக்கே...?''

''இல்லேண்ணா... பிஸினஸ் சம்பந்தமா ஒரு பார்ட்டியைப் பார்த்துட்டு...?''

''ஏண்டா...! உனக்கு இப்ப பிஸினஸ்தான் பெரிசா போச்சா...! எவ்வளவு பெரிய பிரச்னையில் மாட்டிக்கிட்டு இருக்கோம்னு உனக்குத் தெரியாதா...? விபாகிட்டே ரெண்டு வார்த்தை ஆறுதலா பேசிட்டிர்றான்னு சொல்லிட்டுப் போனா... நீ பாட்டுக்கு பிஸினஸ்... வெங்காயம்... அது இதுன்னு சொல்லிட்டுப் போனா என்னடா அர்த்தம்? மொபைல் போன்ல காண்டாக்ட் பண்ணிப் பேசலாம்னா அதையும் ஆஃப் பண்ணி வெச்சுட்டே.''

''அது வந்துண்ணா...''

''ஐ டோண்ட் வாண்ட் யுவர் எக்ஸ்ப்ளனேஷன்ஸ். நாங்க டென்ஷன்ல வெந்துக்கிட்டு இருக்கோம். அந்த ஜமீன் பரம்பரை ரெண்டு நாள் டயம் கொடுத்து கெடு வெச்சுட்டுப் போயிருக்காங்க... நாம எவ்வளவு கவனமா இருக்கணும்...''

சந்திரா கணவரைக் கட்டுப்படுத்தினாள்.

''என்னங்க... வீட்டுக்குப் போய் எல்லாத்தையும் பேசிக்கலாம். ரோட்ல எதுவும் வேண்டாம்.''

''இப்ப அவன் எங்கே போயிட்டிருக்கான்னு தெரியுமா...!''

ஷ்யாம் சொன்னான்: ''வீட்டுக்குத்தான் போய்க்கிட்டிருக்கேன்.''

''சரி... முன்னாடி போ... நான் பின்னாடியே ஃபாலோ பண்ணிட்டு வர்றேன்.''

சான்ட்ரோ கோபமாக நகர்ந்தது. 'இனி தப்பிக்க முடியாது. வீட்டுக்குப் போக வேண்டியதுதான்...!'

இரண்டு கார்களும் வீட்டைத் தொட்டபோது பதினோரு மணி. ஹாலுக்குள் நுழைந்தார்கள்.

ராம்கோபால் ஷ்யாமின் தோளைத் தொட்டார்.

''சாப்பிட்டியா...?''

''ம்... சாப்பிட்டேன்...''

''சரி... என்னோட ரூமுக்கு வா... உனக்கும் விபாவுக்கும் நடக்கப் போகிற கல்யாணத்தைப் பத்தி கொஞ்சம் பேச வேண்டியிருக்கு...'' சொல்லிவிட்டு ராம்கோபால் வேகமாக தன்னுடைய அறையை நோக்கிப் போய்விட, ஷ்யாம் தயக்கமாக நடைபெயர்ந்தான்.

சந்திரா குறுக்கே வந்தாள்.

''ஷ்யாம்...''

நின்றான். ''என்னம்மா...?''

''விபா இனிமே நம்ம வீட்லதான் இருக்கப் போறா... முதல் தடவையா நம்ம வீட்டுக்கு வந்திருக்கிற அவளுக்கு ஒரு 'ஹலோ'கூட சொல்லக்கூடாது...?''

ஷ்யாம் விபாவை ஒரு அரைகுறை புன்னகையோடு ஏறிட்டான்.

''வெல்கம்... விபா!''

விபாவின் கண்களில் நீர் பளபளத்தது. ''என் ஒருத்தியால் உங்க எல்லோருக்கும் தொந்தரவு.''

''அப்படி நீ ஃபீல் பண்ணக்கூடாது. இது மாதிரி சமயங்கள்லதான் தைரியமாயிருக்கணும். இனிமே இது



உன் வீடு. உனக்கும் எனக்கும் என்னிக்குக் கல்யாண நிச்சயதார்த்தம் நடந்ததோ அந்த தினத்திலிருந்தே இந்த வீட்டுக்கு நீ மருமகளாயிட்டே! பி ஹேப்பி...! நம்ம கல்யாணத்தை யாராலேயும் தடுத்து நிறுத்த முடியாது. நீ போய் ரெஸ்ட் எடுத்துக்கோ விபா. நாளைக்குக் காலையிலே பேசிக்கலாம்...'' விபாவின் கண்களில் மின்னிய நீரை ரசனையோடு பார்த்துக்கொண்டே பேசிய ஷ்யாம் ஒரு சிதிலமான புன்னகையோடு அண்ணன் ராம்கோபாலின் அறையை நோக்கிப் போனான்.

அவர் நாற்காலியில் கண்மூடிக் காத்திருந்தார். ஷ்யாமின் வரவால் கலைந்தவர், பக்கத்து இருக்கையைக் காட்டினார். உட்கார்ந்தான்.

''விபாவை பார்த்தியா ஷ்யாம்...''

''ம்...''

''ஹாஸ்பிடல்ல ஜெயப்பிரகாசம் தன் மனைவிக்குப் பக்கத்துல இருக்க வேண்டிய கட்டாயம். இப்ப இருக்கிற சூழ்நிலையில் விபா அவங்க வீட்ல தனியா இருக்கிறது என் மனசுக்கு உசிதமா படலை. அதான் நம்ம வீட்டுக்குக் கூட்டிட்டு வந்துட்டேன்...''

''நீங்க செஞ்சது சரிதான்...''

''ஆனா... நீ செய்யறது சரியாயில்லையே...?''

''நா... நான்... என்ன பண்ணிட்டேன்...?''

''இன்னிக்குக் காலையிலிருந்தே உன்னோட நடவடிக்கைகள் சரியில்லை. நினைச்ச நிமிஷம் எங்கேயாவது புறப்பட்டுப் போறே. கேட்டா பிஸினஸ்னு சொல்றே...! நீயும் நானும் ஒரே பிஸினஸைத்தான் பார்த்துக்கிட்டிருக்கோம். எனக்குத் தெரியாம உனக்கு யார்கூட அப்படியென்ன பிஸினஸ் டீலிங்...?''

''புதுசா பிஸினஸ் தொடங்கலாம்னு என்னோட ஃப்ரெண்ட் ஒருத்தர்...''

''யாரந்த ஃப்ரெண்ட்...?''

''ஈரோட்டுல அருண்னு ஒருத்தர்...''

''ஏன்டா இப்படிப் பொய் சொல்றே...? உன்னோட

வரயிலிருந்து உண்மையே வராதா...?''

ஷ்யாம் தலை குனிந்து நகம் கடிக்க ஆரம்பித்தான். ராம்கோபாலைப் பத்து விநாடிக்கு ஒரு முறை கீழ்ப்பார்வை பார்த்தான்.

''இதோபார் ஷ்யாம்! கடந்த ரெண்டு நாளாவே நீ ரெஸ்ட்லஸ்ஸா இருக்கே... உனக்கு என்ன பிரச்னை சொல்லு. என்கிட்ட சொல்லப் பிரியப்படலைன்னா உன்னோட அண்ணிகிட்டேயாவது சொல்லு...''

அண்ணனின் கேள்விக்கணைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க எண்ணி ''எனக்கு உங்கமேல ஒரு வருத்தம்...'' என்றான்

ராம்கோபாலின் புருவங்கள் உயர்ந்தன.

''கெஸ்ட் ஹவுஸை விக்கறது எனக்குப் பிடிக்கலை. அந்த கெஸ்ட் ஹவுஸ் எனக்கு வேணும்.''

''சரி... அந்த கெஸ்ட்ஹவுஸை நான் விக்கலை. இனிமேலாவது நீ சந்தோஷமா இருப்பியா...?''

''ம்...''

''நாளையிலிருந்து நீ ஒரு புது மனுஷனா மாறணும். வெளியே எங்கேயும் போகக்கூடாது. என்பார்வையோட எல்லைக்குள்ளேயே இருக்கணும்.''

''ம்...''

''நாளைக்குச் சாயந்தரம் ஏழு மணி சுமாருக்கு ஆஷா தேவியோட ஹாஸ்பிடலிலிருந்து ஏற்கெனவே திட்டம் போட்டபடி ஆம்புலன்ஸ் வேன்ல ஊட்டிக்குப் பயணம். நீ, விபா, உன் அண்ணி, விபாவோட அப்பா... நாலு பேரும் ஊட்டியில் ரெண்டு நாள் தங்கி முகூர்த்தம் ஃபிக்ஸ் பண்ணின அதே தேதியில் எஸ்டேட்ல இருக்கிற வீரமாத்ரே அம்மன் கோவில்ல கல்யாணத்தை முடிச்சுக்கிட்டு திரும்பறீங்க...''

''அண்ணா... அந்த ஜமீன் பரம்பரை ஆட்களாலே உங்களுக்கு ஏதாவது ஆபத்து ஏற்பட்டுட்டா...?''

''அவங்க பார்வைக்கு நான் கிடைச்சாதானே பிரச்னை...? விபாவும் நீயும் மாலையும்கழுத்துமா கோயம்புத்தூர் திரும்பின பிறகு போலீஸ்



பாதுகாப்போடு ரிசப்ஷன் நடக்கும். என்னோட நண்பரான போலீஸ் கமிஷனர்கிட்ட இதைப்பத்தி பேசிட்டேன். எல்லா பாதுகாப்பு ஏற்பாடுகளையும் அவர் பண்ணிக் கொடுப்பார்...''

''அதே போலீஸ் பாதுகாப்பை வெச்சு நாம ஃபிக்ஸ் பண்ணின மண்டபத்திலேயே கல்யாணத்தை நடத்திட்டா என்ன...?''

''கமிஷனர்கிட்ட அதையும் கன்சல்ட் பண்ணிப்பார்த்தேன். உனக்கும் விபாவுக்கும் கல்யாணம் நடந்த பின்னாடி எதிரிகளோட வாதம் பலவீனமாயிடும். அந்தச் சமயத்துல அவங்க ஏதாவது தப்புப்பண்ணினா உடனடியா கைது பண்ணவும் உள்ளே தள்ளவும் சட்டத்துல இடம் இருக்காம். எதிரிகளை வீழ்த்த நாம் போட்டிருக்கிற வியூகம்தான் சரியானதுன்னு கமிஷனர் சொன்னார். அவர் சொல்றபடியே கேட்போம்.''

ராம்கோபால் எழுந்துகொண்டார். ''சொன்னது ஞாபகம் இருக்கட்டும் ஷ்யாம். நாளையிலிருந்து நீ மாறணும். அதுக்கு ஆரம்பமா நாளைக்குக் காலையில் ஆறு மணிக்கெல்லாம் குளிச்சு ரெடியாகி விபாவை ஹாஸ்பிடலுக்குக் கூட்டிட்டுப் போகணும்... விபாவோட அம்மாகிட்டே ஆறுதலா ரெண்டு வார்த்தை பேசணும். என்ன... சரி, போய்ப்படு... குட்நைட்...''

ஷ்யாம் அறையைவிட்டு வெளியே வந்தான். அண்ணன் கெஸ்ட்ஹவுஸை விற்கப்போவதில்லை என்று சொன்னது மனதின் ஒரு மூலையில் வெற்றி விழாவாகக் கொண்டாடப்பட்டுக்கொண்டிருந்தாலும் மனதின் இன்னொரு மூலையில் பிரம்மபுத்திரியும் ரத்னாகரனும் முட்களாக மாறிக் குத்திக் கொண்டிருந்தார்கள்.

மாடியேறி அறைக்கு வந்த ஷ்யாம் கதவைத் தாழிட்டுவிட்டு விபாவின் பாஸ்போர்ட் போட்டோ ஒன்றை தீக்குச்சிக்குத் தின்னக் கொடுத்து அந்த நெருப்பின் ஜ்வாலையில் சிகரெட் ஒன்றைப்

பற்றவைத்துக்கொண்டான்.

பெருமூச்சோடு கட்டிலில் சாய்ந்தவனின் வலதுகை தலையணை மேல் இருந்த ரிமோட் கண்ட்ரோலில் பட, எதிரில் இருந்த டி.வி. உயிர் பெற்று நியூஸ் சேனலைக் காட்டியது. ஒரு அரசியல்வாதியை கதர் அணிந்த டி.வி. ரிப்போர்ட்டர் பெண்மணி சிரத்தையாக ஏதோ கேள்வி கேட்டுக்கொண்டிருக்க... கீழே ஃப்ளாஷ் நியூஸ் ஓடிக்கொண்டிருந்தது.

**'கோவையில் இலங்கைத் தீவிரவாதிகள் இரண்டுபேர் சுட்டுக்கொல்லப்பட்டனர். விரிவான செய்தி இன்னும் சில நிமிடங்களில்'** - தமிழைத் தொடர்ந்து இதே செய்தி ஆங்கிலத்திலும் ஊர்வலமாக வர - ஷ்யாம் நிமிர்ந்தான். மனம் பிருந்தாவனமாக மாறிக்கொண்டிருக்க... சந்தோஷ நீரூற்றுக்கள் உடம்பின் எல்லா திசைகளிலும் பீறிட்டன. உட்காரப் பிடிக்காமல் அறைக்குள் நடை போட்டான்.

சிகரெட் தன் உடம்பில் பாதியைக் கரைத்து இருந்தபோது அரசியல்வாதியின் பேட்டி முடிந்து லோகோ இசைக்குப் பின்னால் செய்தி வாசிக்கிற பெண் உறுத்தாத மேக்கப்பில் தோன்றி புன்னகைத்தாள்.

''வணக்கம்...! சற்றுமுன் கிடைத்த செய்தி... கோவையில் பிரம்மபுத்திரி என்கிற பெண் தீவிரவாதியும் அவளுடைய கணவர் ரத்னாகரன் என்கிற தீவிரவாதியும் இரவு பதினொரு மணியளவில் போலீஸாரால் சுட்டுக்கொல்லப்பட்டனர். இவர்கள் இரண்டு பேரும் ஆர்.எஸ்.புரம் சாஸ்திரி மைதானத்தில் பதுங்கியிருந்தபோது போலீஸார் விரைந்து சென்று முற்றுகையிட்டனர். தீவிரவாதிகள் சரணடைய மறுத்ததோடு போலீஸாரையும் துப்பாக்கியால் சுட முயன்றனர். பதிலுக்கு போலீஸாரும் சுட்டதில் இரண்டு பேரும் சம்பவ இடத்திலேயே பலியானார்கள். துப்பாக்கிச் சூட்டில் இரண்டு போலீஸார் காயம் அடைந்தனர். அந்த இரண்டு தீவிரவாதிகளையும் க்யூ பிராஞ்ச் போலீஸார் பல மாத காலமாக கோவையில்



முகாமிட்டுத் தேடி வந்தனர் என்பது குறிப்பிடத் தக்கது...''

ஷ்யாம் சந்தோஷம் தாளாமல் அகலமான அந்தக் கட்டிலின் ஃபோம் மெத்தையில் ஒரு குட்டிக்கரணம் அடித்து மல்லாந்தான். சற்று முன்பு வரை மனசுக்குள் முளைத்திருந்த முட்கள் இப்போது பூக்களாக மாறியிருந்தன!

அந்த நள்ளிரவு வேளையிலும் சாஸ்திரி மைதானத்தைச் சுற்றிலும் ஒரு ஜனக்கும்பல் பரவியிருக்க, போலீஸ் இயங்கிக்கொண்டிருந்தது. இரண்டு அதிரடிப்படை வேன்கள், நான்கு போலீஸ் ஜீப்கள் சுழலும் சிவப்பு விளக்குகளோடு வயர்லஸ் பேசிக்கொண்டிருந்தன.

மைதானத்தின் வடக்குப்பகுதி சில பெட்ரோமாக்ஸ் விளக்குகளின் உபயத்தால் வெளிச்சமாகத் தெரிய, மார்பில் ரத்தப்பொத்தல்களோடு பிரம்மபுத்திரியும் ரத்தினாகரனும் கால்களையும் கைகளையும் பரப்பிக்கொண்டு உயிரில்லாத கண்களால் வானத்தில் சிதறிக்கிடந்த நட்சத்திரங்களைப் பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

கமிஷனர் ஏ.ஸி.யிடம் தனியே எகிறிக்கொண்டிருந்தார்.

''சுட்டுத்தள்றது பெரிய விஷயமே கிடையாது. உயிரோடு மடக்கி லாக்கப்புக்குக் கொண்டு வந்திருக்கணும்...''

''முடியலை சார்... அதிரடிப்படையைச் சேர்ந்தவங்க ரொம்பவும் ட்ரை பண்ணாங்க... அவங்க ரெண்டு பேரும் கன்னாபின்னானு ஷூட் பண்ண ஆரம்பிச்சுட்டாங்க. இருட்ல அவங்களை 'எய்ம்' பண்றதே கஷ்டமாயிருந்தது.''

''டெல்லியிலிருந்து ஃபோன்கள் வந்தாச்சு... ஏன் ரெண்டு பேரையும் உயிரோடு பிடிக்கலைன்னு...! நீங்க இப்ப சொன்ன பதிலை நான் டெல்லிக்குச் சொல்ல முடியாது.''

ஏ.ஸி. மௌனமாக நின்றார்.

''இவங்களோட சாமான்கள் என்னென்ன...?''

''ரெண்டு பிஸ்டல்... துணிமணிகள் அடங்கிய ஒரு சின்ன சூட்கேஸ். சில பொருட்களை அவசர அவசரமாக பெட்ரோல் ஊற்றி எரிச்சிருக்காங்க... ரத்னாகரனின் ஷர்ட் பாக்கெட்டில் இருந்த ஒரு சின்ன டைரி ரத்தத்துல நனைஞ்சு கிடந்தது.''

''கொண்டாங்க அந்த டைரியை...''

பத்திரப்படுத்தி வைத்திருந்த அந்த டைரியைக் கொண்டுவந்து கொடுத்தார் ஏ.ஸி.

''டைரியைப் புரட்டிப் பார்த்தீங்களா?''

''இல்ல சார்... ஒரே ரத்தக்கறையாயிருந்தது.''

பென் டார்ச்சின் உதவியால் ரத்தம் தோய்ந்த பக்கங்களை மெள்ளப் புரட்டினார்.

ஏதேதோ சங்கேத வார்த்தைகள். ரத்தத்துளிகள் பல எழுத்துக்களை விழுங்கியிருந்தன.

**9 A.M. ப்ளாக் லோட்டஸ்**

**11 A.M. க்ரீன் லோட்டஸ்**

**காக்ரோஜா, கடவுளைப் பார்க்க வேண்டும். சொர்க்கத்துக்கு வாடகை தர வேண்டும்.**

புரியாத வார்த்தைகள்.

பக்கங்களை மளமளவென்று புரட்டிக்கொண்டு நேற்றைய தேதிக்கு வந்தார் கமிஷனர்.

**'அட்சய பாத்திரம்'** என்ற வார்த்தைகளுக்குக் கீழே இரண்டு பெயர்கள் கிறுக்கலான ஆங்கிலத்தில் எழுதப்பட்டிருந்தன.

**SAIPRASHATH**

SH...ல் ஆரம்பித்திருந்த இன்னொரு பெயரை ரத்தம் மெழுகியிருந்தது.

அதையே பார்த்துக்கொண்டிருந்த கமிஷனர், சில விநாடி யோசனைக்குப் பின் ஏ.ஸி - யிடம் நிமிர்ந்தார்.

''நேத்துக் காணாமப் போய் இன்னிக்குக் கிடைச்ச அந்தப் பையன் பேர் சாய்பிரசாத்துதானே...?''



# 24

அசிஸ்டெண்ட் கமிஷனர், தன் பரந்த நெற்றியை ஐந்து விநாடிகள் யோசிப்பாகத் தேய்த்துவிட்டு கமிஷனரிடம் நிமிர்ந்தார்.

''ஆமா சார்... நேற்றைக்கு கான்வெண்டிலிருந்து காணாமப் போய் இன்னிக்கு ராத்திரி டாடாபாத்துக்குப் பக்கத்துல கிடைச்ச அந்தப் பையன் பேர் சாய்பிரசாத்தான்...''

கமிஷனர் தன் கையில் வைத்திருந்த பாக்கெட் டைரியை ஏ.ஸி - யிடம் காட்டினார்.

''இது டைரியோட நேற்றைய தேதி பக்கம். இந்தப் பக்கத்துல அட்சயப் பாத்திரம்னு ஒரு வார்த்தையை எழுதி இருக்கான். பாருங்க...''

ஏ.ஸி. டைரியை வாங்கி, பென் டார்ச் வெளிச்சத்தில் பார்த்துவிட்டுக் கலக்கமாய் நிமிர்ந்தார்.

''அப்படின்னா சாய்பிரசாத்தைக் கடத்திக்கிட்டுப் போனது இந்தத் தீவிரவாதிகள்தான்...?''

''இருக்கலாம்... தேதி, அந்த அட்சயப்பாத்திரம் என்கிற வார்த்தை எல்லாம் பொருந்தி வருதே... பையனைக் கடத்திக்கிட்டுப் போய்ப் பணம் பறிக்க நினைச்சிருக்காங்க... அதுக்காகத்தான் இந்த அட்சயப் பாத்திரம் என்கிற வார்த்தை...''

''எனக்கு அப்படித் தோணலை சார்...''

கமிஷனர் புருவங்கள் நெளிந்தன.

''ஏன்...?''

''பணம் பறிக்கிறது அவங்க நோக்கமாயிருந்தா சாய்பிரசாத்தோட பேரண்ட்ஸுக்கு பணம் கேட்டு அந்தத் தீவிரவாதிகள் போன் பண்ணி இருக்கணுமே...! பையன் கடத்தப்பட்ட நிமிஷத்திலிருந்து அப்படி எந்த ஒரு போன் காலும் வரலையே சார்...''

''அப்புறம் எதுக்காக இந்த அட்சயப் பாத்திரம் என்கிற வார்த்தை...?''

''சாய்பிரசாத் பேருக்குக் கீழே வேற ஒரு பேரை

எழுதியிருக்காங்க... தெரியுதா சார்...?"

"ம்... தெரியுது...! ஆனா, அந்த பேர் மேல ரத்தம் பட்டு வழிஞ்ச 'SH' ஈன்ற இரண்டு எழுத்து மட்டும் தெரியுது..."

"அது என்ன பேர்னு கண்டுபிடிக்க முடிஞ்சா, அட்சயப் பாத்திரம் என்கிற வார்த்தைக்கும் அர்த்தம் கிடைக்கும் சார்..."

"இந்தப் பேரை எப்படிக் கண்டுபிடிக்கிறது. ரத்தக் கறையை டைலூட் பண்ணி எடுத்தா, அந்த எழுத்துக்களும் போயிடும்..."

"எழுத்துக்கள் அழியாம ரத்தக் கறையை டைலூட் பண்ணி எடுக்க முடியுமான்னு ஃபாரன்ஸிக் விக்டர்கிட்ட கேட்டுப் பார்க்கலாம் சார்..."

"இன்னிக்கே விக்டரைப் பார்த்துடுங்க... நாளைக்குக் காலையில எனக்கு ரிசல்ட் வேணும்..."

"யெஸ்... சார்..."

க்யூ பிராஞ்ச் இன்ஸ்பெக்டர் ஒருவர் தயக்கமாகப் பக்கத்தில் வந்து நிற்க, கமிஷனர் கலைந்தார்.

"என்ன ராகவன்...?"

"சார்... நம்ம கையில் எந்தப் பொருளும் சிக்கிவிடக் கூடாதுங்கிறதுக்காக ரெண்டு தீவிரவாதிகளும் ஒரு சின்ன சூட்கேஸை பெட்ரோல் ஊத்திக்கொளுத்திட்டாங்க. அந்தச் சாம்பலைக் கிளறிப் பார்த்தப்ப இது கிடைச்சது சார்..." - சொல்லிக்கொண்டே கைக்குட்டையில் கறுப்பாக எதையோ ஒன்றை வைத்துக்காட்டினார் இன்ஸ்பெக்டர்.

கமிஷனர் வாங்கிப் பார்த்தார். கறுப்பு களிமண்ணை உருட்டி உருண்டை வைத்த நிலையில் இருந்தது அது.

"என்ன இது...?"

"அவங்க உபயோகிச்ச செல்போன் சார் இது"

"இது செல்போனா...?"

"ஆமா சார்..."

"எப்படிக் கண்டுபிடிச்சீங்க...?"

"பென்டார்ச்சை அடிச்சு, அந்த வெளிச்சத்துல கருகிய



செல்போனை பாருங்க சார். ஏழு என்கிற டயல் பட்டன் மட்டும் நெருப்புக்கு சிக்காம தப்பியிருக்கும் சார்..."

கமிஷனர் பென்டார்ச்சை அடித்துப் பார்க்க... ஏழாம் எண் டயல் பட்டன் பார்வைக்குக் கிடைத்தது.

"செல்போனோட சிம் கார்டு நமக்குக் கிடைக்கக் கூடாதுங்கிற எண்ணத்துல இப்படிப் பண்ணி இருக்கணும்..."

க்யூ பிராஞ்ச் இன்ஸ்பெக்டர் ராகவன் சொன்னார் - "சார்...! நாங்க இந்த தீவிரவாதிகளை ரவுண்ட் - அப் பண்ணி அவங்களை அப்ஸர்வ் செய்துட்டிருந்தபோது. பெண் தீவிரவாதி பிரம்மபுத்திரி செல்போன்ல யார் கூடவோ பேசிக்கிட்டு இருந்தா... அது யார்னு தெரிஞ்சா, பல கேள்விகளுக்கு விடை கிடைக்கும்..."

"சிம் கார்டு இல்லாம, அது சாத்தியம் கிடையாதே..."

"சாத்தியம் கிடையாதுதான் சார்... பட், கொஞ்சம் துல்லியமா முயற்சி பண்ணினா ட்ரேஸ் செய்ய முடியும்னு எனக்குத் தோணுது சார்..."

"துல்லியமான்னா... எப்படி...?"

"செல்போன்ல பிரம்மபுத்திரி பேசின நேரத்தை நோட் பண்ணி இருக்கேன் சார். மணி சரியா பத்தே கால். அந்த டயத்தை எல்லா செல் சர்வீஸ் கம்பெனிக்கும் கொடுத்து அவங்க வாய்ஸ் மெயில் பாக்ஸில் பதிவாகியிருக்கும் கான்வர்சேஷனை எல்லாம் கேட்டுப் பார்த்தா, ஏதாவது விவரம் கிடைக்கலாம் சார்..."

"நோ... நோ...! வைக்கோல் போருக்குள்ளே ஊசியைப் போட்டுட்டுத் தேடற கதை இது... பொதுவா செல் சர்வீஸ் அப்படி மானிட்டர் பண்றது கிடையாது. செல் சர்வீஸ்"க்கு முன் தகவல் கொடுத்தால்தான் வாய்ஸ்மெயில் பாக்ஸில் பதிவு பண்ணிக் கொடுப்பாங்க..."

"ஐ நோ வெரிவெல் சார்... இருந்தாலும்..."

"ஓகே... ட்ரை பண்ணுங்க..." கமிஷனர் தன் தோள்களைக் குலுக்கி அனுமதி கொடுத்தார்.

மறுநாள் காலை ஏழு மணி.

ஹாஸ்பிடலில் டாக்டர் ஆஷாதேவியின் அறை. இறுக சாத்தப்பட்டு ஏ.ஸி. கசிந்து கொண்டிருந்த அந்த அறையில் வட்டம் போட்டு ஷ்யாம், ராம்கோபால், சந்திரா, ஜெயப்பிரகாசம் உட்கார்ந்திருந்தார்கள். அவர்களுக்கு முன்பாக ஆஷாதேவி கவலைக் குரலில் பேசிக்கொண்டிருந்தாள். பக்கத்தில் விபா.

''அந்த ஜமீன் பரம்பரை ஆட்கள் நம்ம எல்லோருடைய நடவடிக்கைகளையும் உன்னிப்பா வாட்ச் பண்ணிட்டு வர்றாங்க. அவங்க எந்த நேரத்துல எது மாதிரியான ஸ்டெப்ஸ் எடுப்பாங்கனு தெரியலை... நாம இன்னமும் கொஞ்சம் அலர்ட்டா இருக்கிறது பெட்டர்...''

ராம்கோபால் புன்னகைத்தார். ''டாக்டர்... அவங்களை சமாளிக்க நான் எல்லா ஏற்பாடுகளையும் பண்ணிட்டேன். இன்னிக்கு சாயந்தரம் ஏழு மணி சுமாருக்கு நாம ஏற்கெனவே போட்ட திட்டப்படி ஸ்ட்ரெச்சர் மூலமா இவங்க நாலு பேரும் ஆம்புலன்ஸ் வேனுக்குள்ளே போய் ஊட்டிக்குப் பயணப்படறாங்க... ஹாஸ்பிடலுக்குள்ளே போனவங்க ஏன் வெளியே வரலைன்னு அவங்க குழம்பிக்கிட்டு இருக்கும்போதே இவங்க ஊட்டிக்குப் போயிடுவாங்க. ஊட்டிக்கு மேலே நடுவட்டம் போற பாதையில தன்னந்தனியா இருக்கிற எங்க எஸ்டேட்டுக்கு உள்ளே போயிட்டா யாராலயும் கண்டுபிடிக்க முடியாது. அடுத்த மூணாவது நாள் வீரமாத்தே அம்மன் கோயிலில் ஷ்யாமுக்கும் விபாவுக்கும் கல்யாணம். அன்னிக்கு சாயந்தரமே கோயம்புத்தூர்ல போலீஸ் பாதுகாப்போடு ரிசப்ஷன்...''

ஆஷாதேவி குறுக்கிட்டாள்.

''மிஸ்டர் ராம்கோபால்... உங்க திட்டத்துல ஒரு சின்ன கரெக்‌ஷன் பண்ணிக்கலாமா...?''

''என்ன...?''

''உங்க திட்டத்தை இப்பவே செயல்படுத்தினா



என்ன...? அதாவது சாயந்திரம் ஏழு மணிக்கு மேல் ஆம்புலன்ஸ் வேனில் ஊட்டிக்குப் பயணப் படறதைக் காட்டிலும் இப்பவே கிளம்பறது பெட்டர். அவங்க கண்காணிப்பு அசட்டையாக இருக்கிற நேரம் இது... இந்த நேரத்தை நாம் உபயோகப்படுத்திக்கிறது உத்தமம்...''

ஆஷாதேவி இப்படிச் சொன்னதும் அறைக்குள் சில விநாடி கனத்த நிசப்தம் நிலவியது. அந்த நிசப்தத்தை பத்தாவது விநாடி கலைத்தார் ஜெயப்பிரகாசம்.

''டாக்டர் சொல்றதுதான் சரின்னு என் மனசுக்குப் படுது. அந்த ஜமீன் பரம்பரை ஆட்களோட கண்காணிப்பு ராத்திரி நேரத்துலதான் அதிகமா இருக்கும். இப்பவே ஊட்டிக்குப் புறப்பட்டு போயிடறது நல்லது...''

''ஷ்யாம்... நீ என்ன சொல்றே...?''

''பெரியவங்க நீங்க பார்த்து எப்படிச் சொன்னாலும் சரி... விபாவோட கழுத்துல தாலியைக் கட்ட நான் இந்த நிமிஷத்தில் இருந்தே ரெடி.''

சந்திரா அவனுடைய தலையைத் தட்டினாள்.

''உனக்கு இந்த அவசரம் கூடாது ஷ்யாம். நல்ல நாள், நல்ல நேரம் பார்த்து வெச்சிருக்கிறது எதுக்காக...?''

ஆஷாதேவி எழுந்தாள்.

''நான் ஆம்புலன்ஸுக்கு ஏற்பாடு பண்ணட்டுமா?''

''வேன் டிரைவர் நம்பிக்கையானவர்தானே...?''

''இருபத்தஞ்சு வருஷ சர்வீஸ் டிரைவர். விஷயத்தை அவர்கிட்டே சொல்லிட்டேன். அவர் யார்கிட்டேயும் வாய் திறக்கமாட்டார். அதே மாதிரி நம்பிக்கைக்குரிய ரெண்டு வார்டு பாய்ஸ்தான் உங்களை ஒவ்வொருத்தரா ஸ்ட்ரெச்சர்ல வெச்சு ஆம்புலன்ஸ் வேனுக்கு கொண்டுபோவாங்க... யாருக்கும் எந்த சந்தேகமும் வராத அளவுக்கு ரேம்ப் பாதையை உபயோகிச்சு இந்த திட்டத்தை நிறைவேத்தற பொறுப்பு என்னுடையது. நீங்க அஞ்சு பேரும் ரூமை விட்டு வெளியே போய்

ஃப்ரீயா வாக் பண்ணனும். ஹாஸ்பிடலைக் கண்காணிக்கிற ஜமீன் ஆட்கள் பார்வையில் நீங்க பட்டுகிட்டே இருக்கனும். பதினஞ்சு நிமிஷத்துக்கு ஒருத்தர்ன்னு கணக்கு வெச்சுக்கிட்டு காஷுவலா ஆபரேஷன் தியேட்டருக்கு வந்துடனும். அதுக்கப்புறம் அங்கிருந்து போர்டிகோவில் இருக்கிற ஆம்புலன்ஸுக்கு ஸ்ட்ரெட்சர் பயணம்...''

ஜெயப்பிரகாசம் தவிப்போடு கேட்டார்.

''எல்லாம் சரியாக நடக்குமா டாக்டர்...?''

''நடக்கும்... ஆபரேஷன் தியேட்டருக்கு வரப்போகிற முதல் நபர் நீங்கதான்...''

இன்ஸ்பெக்டர் பாலமுரளி கோவையின் மத்தியான வெயிலை சகித்துக்கொண்டு டாக்டர் நஞ்சப்பா ரோட்டில் இருந்த க்ரூ பிராஞ்ச் அலுவலகம் போய்ச் சேர்ந்தபோது இன்ஸ்பெக்டர் ராகவன் சுழலும் ஃபேனுக்கு கீழே உட்கார்ந்து க்ரைம் அக்கரன்ஸ் ஃபைல் ஒன்றைப் புரட்டிக்கொண்டிருந்தார். பாலமுரளியைப் பார்த்ததும் புன்னகைத்து ஃபைலை ஓரம் கட்டினார்.

''வாங்க மிஸ்டர் பாலமுரளி... நீங்க போன் பண்ணி வர்றேன்னு சொன்னது நல்லதாப் போச்சு... இல்லேன்னா வெளியே புறப்பட்டுப் போயிருப்பேன்... ப்ளீஸ் உட்காருங்க.''

பாலமுரளி உட்கார்ந்தார். கையில் சின்னதாக ஒரு புக் ஃபைல்.

''சொல்லுங்க... என்ன விஷயம்...?''

பாலமுரளி ஃபைலைப் பிரித்துக்கொண்டே சொன்னார். ''பையன் சாய்பிரசாத் காணாமப் போனது சம்பந்தமா இன்னிக்குக் காலையில் பேப்பர் நியூஸ் பார்த்தேன். பையனைக் கடத்திக்கிட்டு போனது தீவிரவாதிகளோட வேலைன்னு நீங்க ஸ்டேட்மெண்ட் கொடுத்திருந்தீங்க...''

''ஆமா...''



''எந்தக் காரணத்தை வெச்சு அந்த முடிவுக்கு வந்தீங்க...?''

''தீவிரவாதியின் டைரியில் சாய்பிரசாத்தோட பேர் இருந்தது. பையன் காணாமப் போன தினமும் அதுதான். அவன் பேருக்கு மேல அட்சயப்பாத்திரம் என்கிற வாசகம் வேற...! இப்படித்தான் இருக்கும்னு கன்ஃபார்ம் பண்ணிகிட்டோம்.''

''சாய்பிரசாத் பேருக்கு கீழே வேறு ஒரு பேர் எழுதப்பட்டு அது ரத்தத்தால மெழுகப்பட்டிருந்ததா கேள்விப்பட்டேன்... உண்மையா...?''

''உண்மைதான்... அது 'SH'ல் ஆரம்பிக்கிற பெயர். ரத்தத்தை டைலூட் பண்ணி மீதி எழுத்துக்களை கண்டுபிடிக்க முயற்சி செஞ்சோம். முடியலை... 'SH'ல் ஆரம்பிக்கிறபெயர் எத்தனையோ இருக்கு. அது ஆண் பெயரா... பெண் பெயராங்கறதுல வேறு குழப்பம். இருந்தாலும் அது என்ன பெயர்னு கண்டுபிடிக்கிறதுக்காக ஃபாரன்ஸிக்ல ஒரு செக்ஷன் இயங்கிட்டிருக்கு... அது விஷயமா உங்களுக்கு என்ன சந்தேகம் மிஸ்டர் பாலமுரளி...?''

''பையன் சாய்பிரசாத் கடத்தப்பட்டது. அந்த தீவிரவாதிகளோட வேலையா இருக்காது...''

''எப்படிச் சொல்றீங்க...?''

''டாடாபாத் புறநகர் பகுதியில் பையனைக் கொண்டு வந்து போட்டுட்டு போனது கார்ல வந்த ஒரு நபர். அந்த நபரை ராகவேந்திரன் என்கிற எலெக்ட்ரிகல் கடைக்காரர் ஒருத்தர் பார்த்திருக்கிறார். இருட்டுல அவருக்கு முகம் தெரியலைன்னாலும் வந்த நபர் உயரமாக இருந்ததாக சொல்றார். ஆனால், உங்களால் சுட்டுக் கொல்லப்பட்ட பிரம்மபுத்திரியும் ரத்னாகரனும் ரொம்பவே குள்ளம். தீவிரவாதிகளிடம் கார் இருக்கவும் வாய்ப்பில்லை. இந்தக் காரணங்கள் ஒரு பக்கம் இருக்க, இன்னொரு காரணம் - சாய்பிரசாத் இப்போ சுயநினைவு இழந்த நிலையிலேயே துண்டு துண்டா பேசிக்கிட்டிருக்கிற

வார்த்தைகள். அதுல ஒரு வார்த்தை ஷேர். இது ஆளோட பேரா... நாயோ பேரான்னு குழப்பமாயிருந்தது. பையன் ரெண்டாவது தடவையா, 'ஷேர்... வருது...! அதை தொரத்துங்க அங்கிள்'னு சொன்னதும் அது நாயோட பேர்னு தெரிஞ்சது. ஷோ... சாய்பிரசாத் கடத்தப்பட்ட களமே வேறு...''

ராகவன் புருவ மத்தியைக் கிறிக்கொண்டார். ''அப்படின்னா தீவிரவாதிகளின் டைரியில் சாய்பிரசாத்தோட பேர் இருக்க என்ன காரணம்?''

''அந்த 'SH'ல் ஆரம்பிக்கிற பேர் எதுன்னு தெரிஞ்சா நீங்க கேட்ட கேள்விக்குப் பதில் கிடைக்கும்...''

''யூ மே பி கரெக்ட் மிஸ்டர் பாலமுரளி...'' - சொன்ன ராகவன், இன்டர்காமின் ரிஸீவரை எடுத்து ஒரு பட்டனைதட்டிவிட்டு பேசினார்.

''பீட்டர்... எஸ். ஹெச் - ல் ஆரம்பிக்கிற பெயரையெல்லாம் ஒரு லிஸ்ட் பண்ணச் சொல்லியிருந்தேனே...''

ரிஸீவரில் குரல் கேட்டது.

''பண்ணிட்டேன் சார்...''

''மொத்தம் எத்தனை பேர் வருது...?''

''ஆம்பிளைங்க பேர் அம்பத்தொன்பது சார். லேடீஸ் நேம் எழுபது சார்...''

''அதுல ஒரு காப்பி கொண்டாங்க.''

''யெஸ்... சார்...''

அடுத்த ஐந்தாவது நிமிஷம் ஒடிசலான அந்த பீட்டர் கம்ப்யூட்டரில் பிரிண்ட் அவுட் எடுத்த காப்பியோடு வந்தார். அதில் இருபத்தியேழாவது எண்ணுக்கு நேராக ஷ்யாமின் பெயரும் இருந்தது.

ராகவன் அந்த கம்ப்யூட்டர் தாளை வாங்கி பாலமுரளியிடம் கொடுத்துக்கொண்டே சொன்னார் - ''இந்த நேம் லிஸ்ட்டை வெச்சுகிட்டு உங்க இன்வெஸ்டிகேஷனை கொஞ்சம் ஸ்பீட்-அப் பண்ணுங்க... ஏதாவது உதவி தேவைப்பட்டா போன்



பண்ணுங்க. உங்க பக்கத்துல நான் இருப்பேன்...''

''தேங்க்யூ...'' நேம் லிஸ்ட்டை புக் ஃபைலில் பத்திரப் படுத்திக்கொண்டு பாலமுரளி எழுந்தார்.

ராத்திரி எட்டு மணி.

புனல்வடிவ டம்ளரில் ஸ்காட்ச் நிரம்பி ததும்பிக்கொண்டிருக்க, அதைச் சுவை பார்க்க விஜயேந்திரன் உதடுகளைக் குவித்த விநாடி -

அவன் பாக்கெட்டில் இருந்த செல்போன் 'முணுமுணு'வென்று கூப்பிட்டது.

எடுத்தான்.

''யாரு...?''

''சார்... நான் கொண்டைய்யா.''

''சொல்லு...''

''காத்தால எழு மணி குமாருக்கு விபா, ஷ்யாம், ராம்கோபால், சந்திரா நாலு பேரும் ஹாஸ்பிடலுக்கு கார்ல வந்தாங்க. இப்ப மணி எட்டு, காலையில உள்ளே போனவங்க இன்னும் வெளியே வரலை. ராம்கோபால் மட்டும் அப்பப்ப பார்வைக்குக் கிடைச்சிட்டிருந்தார். மத்தவங்க பார்வைக்குக் கிடைக்கலை...''

''உள்ளே போய் பார்க்க வேண்டியதுதானே?''

''ஜக்கையன் போயிட்டு வந்தான் சார். ராம்கோபால் மட்டும்தான் உள்ளே இருக்கார். மத்த நாலு பேரையும் காணோம். ஹாஸ்பிடலையே அலசிப் பார்த்துட்டேன்...''

''கார் இருக்கா...?''

''இருக்கு...''

''ஹாஸ்பிடல் பின்பக்கம் நம்ம கண்காணிப்பு பலம்தானே?''

''நாலு பேரை போட்டிருக்கோம் சார்...''

''பின்னே எப்படி...?'' - கோபமாக கேட்ட விஜயேந்திரன், இடது கையில் இருந்த ஸ்காட்ச் டம்ளரைத் தூக்கி அடித்தான்.



**ஏ.யூ.ஜி ஸ்டெயர் ஏர் கன். இதன் மதிப்பு இந்திய ரூபாயில் ஏறக்குறைய ரூ.4,067.00 (54.95 பவுண்)**

## 25

ஸ்காட்ச் டம்ளர், கிரானைட் தரையில் மண்டையை உடைத்துக்கொண்டு சில்லுசில்லாகச் சிதறிய சத்தம் கேட்டுப் பக்கத்து அறையிலிருந்து ருத்ர நரசிம்மலு வெளியே வந்தார்.

''என்ன விஜய்...?''

விஜயேந்திரனின் முகம் கோபத்தில் தகித்தது. இரண்டு கைகளையும் உயர்த்திக்கொண்டு, ஆங்காரமாகச் சத்தம் போட்டான்.

''அவங்க தப்பிச்சுட்டாங்கப்பா...''

''யாரு...?''

''விபா, ஷ்யாம்...''

''போன் பண்ணினது யாரு...?''

''கொண்டய்யா. ஹாஸ்பிடலில் இருந்து பண்ணினான். காலையில் ஏழு மணி சுமாருக்கு விபா, ஷ்யாம், ராம் கோபால், சந்திரா நாலு பேரும் ஆஷாதேவி ஹாஸ்பிடலுக்குப் போயிருக்காங்க. காலையில் உள்ளே போனவங்க, இன்னும் வெளியே வரலை. சந்தேகப்பட்டு உள்ளே போய்ப் பார்த்தபோது, ராம்கோபால் மட்டும்தான் இருந்திருக்கார். மத்தவங்களை காணோம்!''



''அதாவது - விபா, ஷ்யாம், சந்திரா, ஜெயப்பிரகாசம்..?''

''ஆமா!''

''அவங்க வந்த கார்...?''

''ஹாஸ்பிடல் கார் பார்க்கிங்கில் நின்னுட்டிருக்காம்!''

ருத்ர நரசிம்மலு கவலையாக நடை போட்டார்.

''அவங்க வேற கார்ல வெளியே போயிருந்தாலும் நம்ம ஆட்கள் கண்காணிப்பிலிருந்து தப்பியிருக்க முடியாதே!''

விஜயேந்திரன் அருகிலிருந்த டீப்பாயை உதைத்துத் தள்ளிவிட்டு, வயிறு எக்கிக் கத்தினான். ''இப்படியெல்லாம் நடக்கும்னு தெரிஞ்சுதான், அவங்களுக்கு யோசிக்க 'கெடு' கொடுக்க வேண்டாம்னு சொன்னேன். நீங்க கேட்கலை... விபா - ஷ்யாம் கல்யாணம் நடந்துட்டா, நம்மால ஒரு துரும்பைக்கூடக் கிள்ளிப் போட முடியாது.''

''பொறு விஜய்...''

''அப்பா! தலைக்குமேல வெள்ளம் போயிட்டிருக்கு, இனிமேலும் பொறுமையா இருக்க முடியாது. நம்ம ஜமீன் பரம்பரைக்கு மேற்கொண்டு வாரிசுகள் வேணும்னா, விபா என்னோட மகளா இந்த வீட்டுக்கு வரணும். நாம பார்த்து வெச்சிருக்கிற ஜமீன் மாப்பிள்ளைக்கு மனைவியா வரணும்...''

''சரி... இப்ப என்ன பண்ணலாம்கிறே...?''

''கொஞ்சம் வன்முறையைக் கையில் எடுத்துக்க வேண்டியதுதான்...''

''வேண்டாம் விஜய்! விவகாரம் போலீஸ் ஸ்டேஷன் படியேறக்கூடாது. அது, அவங்களுக்கு லாபம். நமக்கு நஷ்டம்... ஒரு பத்து நிமிஷம் அப்படி உட்கார். நம்ம லாயரை கன்சல்ட் பண்ணிட்டு...''

'நோ! இனி இந்த கன்சல்டேஷன், பேப்பர் வொர்க் எதுவும் எடுபடாது. நான் கிளம்பறேன்... யாரைப் பார்த்து, எங்கே தட்டினா உண்மை கிடைக்கும்னு

எனக்குத் தெரியும்...''

''டேய் விஜய்! யாரைப் பார்க்கப் போறே...?''

''பார்த்துட்டு வந்து சொல்றேன்...''

வெளியே பாய்ந்தான் விஜயேந்திரன். அடுத்த விநாடி போர்டிகோவிலிருந்து ப்ளூ கலர் கார் ஒன்று புல்லட்டாகச் சீறிப் பாய்ந்து காம்பௌண்ட் கேட்டைக் கடந்தது.

கதவு வேகமாகத் திறக்கப்படும் சத்தம் கேட்டு, ஒரு மெடிக்கல் ரிப்போர்ட்டைப் படித்துக் கொண்டிருந்த டாக்டர் ஆஷாதேவி தலையை உயர்த்தினாள்.

விஜயேந்திரனைப் பார்வையில் வாங்கியதும் முகத்தில் எந்த உணர்ச்சியையும் காட்டாமல், ''யெஸ்...'' என்றபடி மூக்குக் கண்ணாடியைக் கழற்றினாள்.

விஜயேந்திரன் அலட்சியமாக ஒரு நாற்காலியை வேண்டுமென்றே 'தரதர'வென்று இழுத்துப் போட்டு உட்கார்ந்தான்.

''என்னைத் தெரியுதா டாக்டர்...?''

''தெரியாம... என்ன...! நேத்திக்குத்தான் கூட்டமா வந்துட்டுப் போனீங்களே...? ம்... சொல்லுங்க... உங்களுக்கு என்ன வேணும்...?''

''உண்மை...''

''என்ன உண்மை...?''

''அந்த நாலு பேரும் இப்போ எங்கே இருக்காங்க...?''

''எந்த நாலு பேர்...?''

''தூங்கற மாதிரி நடிக்காதீங்க டாக்டர்... உங்களுக்கு எல்லாமே தெரியும்கிற விஷயம் எனக்குத் தெரியும். விபா, ஷ்யாம் இப்போ எங்கே?''

''என்னைக் கேட்டா...? காலையில் ஏழு மணி சுமாருக்கு வந்தாங்க. ரெண்டு மணி நேரம் யசோதா பக்கம் இருந்தாங்க. அப்புறம் போயிட்டாங்க...''

''அதான், எங்கே...?''

''யாருக்குத் தெரியும்...? நான் இன்னிக்குக்



காலையிலிருந்து ரெண்டு ஆபரேஷன் அட்டெண்ட் பண்ணியிருக்கேன். லஞ்ச் சாப்பிடும்போது மணி நாலு... அதுக்கப்புறம் அவுட் பேஷண்ட்ஸ்... பார்த்து முடிய இவ்வளவு நேரமாச்சு. விபாவோட அம்மா யசோதா, என்னோட பேஷண்ட். அவங்க ஹெல்த்தைப் பத்தி ஏதாவது கேக்கிறதாயிருந்தா, தாராளமா கேளுங்க... எல்லா ரிப்போர்ட்டுகளையும் எடுத்து வெச்சுக்கிட்டு, ஒரு லெக்சரே தர்றேன்!''

விஜயேந்திரன் வன்மமாகப் புன்னகைத்தான். ''டாக்டர்! உங்க தொழில் டல்லடிச்சதுன்னா, நீங்க பேசாம நடிக்கப் போயிடலாம்...''

''அப்படியா! உங்க பாராட்டுக்கு ரொம்ப நன்றி..!''

''டாக்டர்! நீங்க தெரிஞ்சோ தெரியாமலோ விபாவுக்குத் துரோகம் பண்றீங்க. அவ, என்னோட ரத்தம்... எங்க ஜமீன் பரம்பரையோட வாரிசு. கோடிக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள சொத்துக்கு அவ ஒருத்திதான் வாரிசு. ஒரு பெரிய மகாராணி மாதிரி வாழக்கூடிய அமைப்பு அவளுக்காகக் காத்துக்கிட்டிருக்கும்போது நீங்க இப்படி...''

''ஓக்... மிஸ்டர் விஜயேந்திரன்! விபா, உங்க மகளா இருக்கலாம். ஆனா, அவ உங்களை அப்பாவா ஏத்துக்கத் தயாராயில்லை. இத்தனை வருஷ காலம் மௌனமாயிருந்துட்டு, இப்ப திடீர்னு வந்து 'நீதான் என் பொண்ணு... வீட்டுக்கு வா'ன்னு கூப்பிட்டா, எந்தப் பொண்தான் வருவா?'' அதுவும் நாலஞ்சு நாள்ல கல்யாணம் வேற... நிச்சயம் பண்ணின கல்யாணத்தை நிறுத்த முடியுமா, என்ன...?''

''டாக்டர்! உங்க வாதம் சரியில்லை. விபா என்னோட டாட்டர்னு எந்த நிமிஷத்திலிருந்து உறுதி ஆச்சோ, அந்த நிமிஷத்திலிருந்தே எல்லா உரிமையும் எங்க ஜமீன் ஃபேமிலிக்குத்தான் உண்டு. அவளுக்காக ஒரு நல்ல மாப்பிள்ளையைப் பார்த்து வெச்சிருக்கோம். ஸ்டேட்ஸ்ல மாப்பிள்ளை படிச்சுட்டு, அங்கேயே பெரிய போஸ்ட்ல இருக்கார். விபாவுக்கு இப்போ

பார்த்திருக்கிற மாப்பிள்ளையைக் காட்டிலும்..."

"ஸாரி! உங்ககிட்ட பேசிட்டிருக்க எனக்கு நேரமில்லை. நான் ரவுண்ட்ஸ் போகணும்..."

"அப்படின்னா விபா, ஷ்யாம் எங்கே இருக்காங்கங்கிற உண்மையைச் சொல்லமாட்டீங்களா...?".

"அவங்களைப் பத்தி எனக்கு எதுவும் தெரியாது..."

"இல்லை.. தெரியும்..."

"சரி, தெரியும்... நான் சொல்ல முடியாது. உங்களால என்ன பண்ண முடியும்...?"

விஜயேந்திரன் முறைக்க, ஆஷாதேவி தன் இடது கை கட்டுவிரலை உயர்த்தினாள். "உங்க பணபலமும் சரி, அதிகார பலமும் சரி... இந்த விபா விஷயத்தில் கூர் மழுங்கிப்போன கத்திகள். விபா - ஷ்யாம் கல்யாணம் சொன்ன தேதியில், நிச்சயம் பண்ணின நேரத்தில் நடக்கும். அதை உங்களால தடுக்க முடியாது..."

"டாக்டர்...!"

"ஸாரி! ஒரு டாக்டரோட விலைமதிப்பில்லாத நேரத்தை, நீங்க இப்படி வேஸ்ட் பண்றது சரியில்லை. ப்ளீஸ், கெட் லாஸ்ட்..."

விஜயேந்திரன் நெருப்புப் பார்வை ஒன்றை ஆஷா தேவியின்மேல் உமிழ்ந்துவிட்டு, அறையினின்றும் விருட்டென்று வெளியேறி வராந்தாவில் நடந்தான். அவன் எடுத்து வைத்த ஒவ்வொரு அடியிலும் ஆத்திரம் தெறித்தது.

வராந்தா திரும்பும்போது ராம்கோபால் எதிர்பட்டார்.

"ஹலோ விஜயேந்திரன்..."

விஜயேந்திரன் அவரைப் பொருட்படுத்தாமல் நடக்க, ராம்கோபால் அவனுடைய தோளைத் தொட்டார்.

"ஒரு நிமிஷம்..."

"என்ன...?"

"உங்களையும் உங்கப்பாவையும் பார்க்கிறதுக்காக, நானே நேர்ல வரலாம்னு இருந்தேன்..."

"எதுக்கு...?"



"இதைக் கொடுக்கத்தான்..." - ஒரு கவரை நீட்டினார்.

"என்ன இது...?"

"விபா - ஷ்யாம் கல்யாண ரிசப்ஷன் அழைப்பிதழ். இருபத்து மூணாம் தேதி சாயந்திரம் ஆறு மணிக்கெல்லாம் 'சங்கமம்' கல்யாண மண்டபத்துக்கு வந்துடுங்க..."

விஜயேந்திரனின் கையில் இன்விடேஷனைத் திணித்தார் ராம்கோபால். "விபா, உங்க மக... உங்க ஆசீர்வாதம் அவளுக்குக் கண்டிப்பா வேணும்... மறக்காம வந்துடுங்க..."

சொல்லிவிட்டு நகர முயன்ற ராம்கோபாலை, இடது கையை நீட்டி மறித்தான் விஜயேந்திரன்.

"யார் எனக்கு எதைக் கொடுத்தாலும் அதை ரெண்டா கொடுத்துதான் எனக்குப் பழக்கம். இதையும் அப்படியே வாங்கிட்டுப் போங்க..." சொன்ன விஜயேந்திரன், அந்த ரிசப்ஷன் அழைப்பிதழை இரண்டாகக் கிழித்து ராம்கோபாலின் கையில் திணித்துவிட்டு வேகமாக நடை போட்டான்.

ஊட்டி மேகங்களின் மெல்லிய அழுகையில் நனைந்து கொண்டிருக்க, எஸ்டேட் பங்களாவின் கதகதப்பான அறை ஒன்றுக்குள் உட்கார்ந்து விபாவும் சந்திராவும் டி.வி - யில் கிரிக்கெட் பார்த்துக்கொண்டிருந்தார்கள். ஜெயப்பிரகாசம் ஒரு உல்லன் சால்வையைப் போர்த்திக்கொண்டு, வார இதழ் ஒன்றைப் பிடிப்பின்றி புரட்டியபடி சோபாவுக்குச் சாய்ந்திருந்தார்.

வெற்றிக்கான ஒரு ரன்னை எடுத்துவிட்டு ஆட்டக்காரர் ஓடிக்கொண்டிருந்தபோது டெலிபோன் சிணுங்கியது. சந்திரா ரிஸீவரை எடுத்தாள். மறுமுனையில் ராம்கோபாலின் குரல்.

"சந்திரா! நான்தான்..."

ரிமோட் கண்ட்ரோலில் டி.வி.யின் வால்யூமைக் குறைத்துவிட்டு, சந்திரா பேச ஆரம்பித்தாள்.

"என்னங்க... அங்கே நிலவரம் எப்படியிருக்கு...?"

ராம்கோபால் சிரித்தார். "ஜமீன் பரம்பரை ஏகப்பட்ட டென்ஷன்ல இருக்காங்க. விபா - ஷ்யாம் இருக்கிற இடத்தை எப்படியும் கண்டுபிடிக்கணும்கிற வெறியில், யார் யாரையோ போய்ப் பார்த்து விசாரணை பண்ணிக்கிட்டிருக்காங்க... ஹாஸ்பிடல் ஸ்டாஃப்கிட்ட கேட்டுப் பார்த்திருக்காங்க. யாரும் அசைஞ்சு கொடுக்கலை..."

"ஆம்புலன்ஸ் வேன் டிரைவர் பணத்துக்கு ஆசைப்பட்டுக் காட்டிக்கொடுத்துடமாட்டாரே...?"

"வாயை ஃபெவிகாலாலே ஒட்டி, அதுக்கு மேல் பிளாஸ்திரி போட்ட மாதிரி இருக்கார் வேன் டிரைவர்!"

"இன்னும் ரெண்டு நாள் எப்படியோ பொழுதை ஓட்டிட்டா போதும்... அதுக்குள்ளே நாங்க இங்கே இருக்கிறதை, அவங்க கண்டுபிடிச்சுடாம இருக்கணும்..."

"அந்தக் கவலையே உனக்கு வேண்டாம். விபாவும் ஜெய்ப்பிரகாசமும் எப்படியிருக்காங்க...?"

"டென்ஷன்தான்! சரியா சாப்பிடறதும் கிடையாது, தூங்கறதும் கிடையாது...?"

"கழுத்துல தாலி ஏறிட்டா, எல்லா டென்ஷனும் காணாமப் போயிடும். சரி, ஷ்யாம் பக்கத்துல இருக்கானா...?"

"இல்லை... அவுட் ஹவுஸ்ல இருக்கான்..."

"அவனை ஏன் தனியா தங்கவிட்டே...?"

"உங்க தம்பி கேட்டாதானே... சரியான மூடி டைப். கல்யாணம் பண்ணிக்கப் போற 'த்ரில்' ஷ்யாம்கிட்ட மிஸ்ஸிங். விபாவைப் பார்த்து அட்லீஸ்ட், ஒரு ஜொள் பார்வை... ஊஹூம் ஏதோ சாவி கொடுத்த பொம்மை மாதிரி..."

ராம்கோபால் குறுக்கிட்டார். "விபா பக்கத்துல இருக்காளா...?"

"ஆமா!"

"அவளைப் பக்கத்துல வெச்சுக்கிட்டு இப்படிப்



புலம்பாதே... அவ மனசு கஷ்டப்படும். கல்யாணத்துக்கு அப்புறம் ஷ்யாம் சரியாயிடுவான்..."

"பார்க்கலாம்..."

"கல்யாணத்துக்கு வேண்டிய ஏற்பாடுகளைப் பண்ணியாச்சா...?"

"பண்ணியாச்சு... வீரமாத்தே அம்மன் கோயில் பூசாரியைக் கூப்பிட்டு, கோயில் மண்டபத்தைச் சுத்தம் பண்ணி, வாசல்ல வாழை மரம் கட்டச் சொல்லியிருக்கோம், மத்தியானம் ஊட்டி பஜாருக்குப் போய், கல்யாண ஜவுளி எடுத்தோம்...?"

"சரி! இனி வெளியே போக வேண்டாம். ஷ்யாம்கிட்டேயும் சொல்லி வை. மறுபடியும் நாளைக்கு போன் பண்றேன். ஊட்டியில் இப்ப மழையா...?"

"சாயந்திரம் ஆறு மணிக்கு 'நசநச'னு ஆரம்பிச்ச மழை, இன்னமும் அதே மாதிரி பெய்ஞ்சுக்கிட்டு இருக்கு. ஷ்யாமைப் பேசச் சொல்லட்டுமா...? ஜன்னலைத் திறந்து ஒரு குரல் கொடுத்தா வந்துடுவான்..."

"வேண்டாம்... நாளைக்குப் பேசிக்கிறேன். வேணும்னா, விபாகிட்ட ரிஸீவரைக் கொடு, அந்தப் பொண்ணு சந்தோஷப்படற மாதிரி ரெண்டு வார்த்தை பேசலாம்..."

சந்திரா ரிஸீவரை விபாவிடம் கொடுக்க, அவள் "ஹலோ அங்கிள்..." என்று பேச ஆரம்பித்த விநாடி...

வெளியே - போர்டிகோவில் அந்தச் சத்தம் கேட்டது.

சந்திரா வேகவேகமாக ஜன்னலுக்குப் போய் எட்டிப் பார்க்க ஒரு காண்டஸா கார் தெரிந்தது. ஒரு ஆணும் பெண்ணும் காரினின்றும் இறங்கிப் படி ஏறிக்கொண்டிருந்தார்கள். இருட்டில் முகங்கள் பிடிபடவில்லை.

'யார் இவர்கள்...?'

சந்திரா யோசித்துக்கொண்டிருக்கும்போதே காலிங்பெல் வீறிட்டது. விபா போன் பேசி

முடித்திருக்க, சந்திரா தயக்க நடையோடு போய்க் கதவைத் திறந்தான்.

படுகர் இனத்தைச் சேர்ந்த ஓர் இளைஞனும் ஒரு பெண்ணும் கவலை முகங்களோடு நின்றிருந்தார்கள்.

''யெஸ்...'' என்றான் சந்திரா.

''இந்த ராத்திரி வேளையில் உங்களுக்குத் தொந்தரவு தர்றதுக்கு மன்னிக்கணும்!''

''நோ பிராப்ளம்... என்ன விஷயம்...?''

''என் பேர் நஞ்சன், இவ என்னோட வொய்ஃப்... பக்கத்துல இருக்கிற க்ரீன் ஃபோர்ட் எஸ்டேட் எங்களோடதுதான். எங்களுக்கு ஒரே பையன். பேர் கஜேஷ். பக்கத்துல இருக்கிற கான்வென்ட்டில் ஃபர்ஸ்ட் ஸ்டாண்டர்டு படிச்சிட்டிருக்கான். இதுதான் அவனோட போட்டோ...''

சந்திரா போட்டோவை வாங்கிப் பார்த்தான். போஸ்ட்கார்டு சைஸ் போட்டோவில் கஜேஷ், கன்னத்தில் குழி விழ சிரித்துக்கொண்டிருந்தான்.

குழப்பமான முகத்தோடு சந்திரா அவர்களிடம் நிமிர்ந்தான்.

''சரி! என்ன விஷயம்...? சொல்லுங்க...''

''பையனை சாயந்திரத்திலிருந்து காணோம்!''

## 26

சந்திராவுக்கு லேசாகக் கோபம் வந்தது.

''உங்க பையனைக் காணோம்னா, நீங்க போய் போலீஸ்ல சொல்லணும். அதை விட்டுட்டு, இங்கே வந்து கேட்டா என்ன அர்த்தம்...?''

நஞ்சன் பதட்டமாகக் குறுக்கிட்டான். ''போலீஸில் கம்ப்ளெயின்ட் பண்ணிட்டோம். இருந்தாலும், நாங்களும் ஒரு பக்கம் தேடிட்டு இருக்கோம். பையனை யாராவது பார்த்திருந்தா, க்ளு கிடைக்குமேனு இந்த ஏரியாவில் இருக்கிற ஒவ்வொரு வீடா போய் போட்டோவைக் காட்டி விசாரணை பண்ணிக்கிட்டிருக்கோம்...''



''பையனை எப்பயிருந்து காணோம்...?''

''சாயந்திரம் நாலு மணியிலிருந்து...''

போர்ட்டிகோ படிகளில் நடைச் சத்தம் கேட்டது. எல்லோரும் திரும்பிப் பார்க்க, ஷ்யாம் படிகளில் ஏறிக் கொண்டிருந்தான். கனமான உல்லன் ஸ்வெட்டர், ஸ்னோ கேப், க்ளவுஸ் அணிந்து குளிரை விரட்டியிருந்தான். பக்கத்தில் வந்ததும் கேட்டான்.

''அண்ணி... யார் இவங்க...?''

''இவங்க பையனை சாயந்திரத்திலிருந்து காணோமாம்...''

''என்னது? பையனைக் காணோமா...? இதென்ன பையன்கள் காணாமப் போற சீஸனா? நாலு நாளைக்கு முன்னாடி கோயம்புத்தூர்லயும் இதே பிரச்னை. இப்ப... இங்கேயும் பிரச்னை...''

''ஸாரி! உங்களைத் தொந்தரவு படுத்தறதா நினைக்க வேண்டாம். இது ஜஸ்ட் ஒரு என்கொயரிதான்... போலீஸிலும் கம்ப்ளெயின்ட் கொடுத்திருக்கோம். பையனை யாராவது பார்த்திருக்கலாமோங்கிற எண்ணத்துல, இந்த ஏரியாவுல இருக்கிற ஒவ்வொரு வீடா போய், போட்டோவைக் காட்டிக் கேட்டுக்கிட்டிருக்கோம்.''

ஷ்யாம் கேட்டான்.

''பையன் பேர் என்ன...?''

''கஜேஷ்...''

''எப்படிக் காணாமப் போனான்...? கான்வென்ட்டிலிருந்து வீட்டுக்குத் திரும்பும்போதா...?''

''ஆமா! வழக்கம்போல கார் டிரைவர் கான்வென்ட் விடற நேரத்துக்குப் போய் கார்ல ஏத்திக்கிட்டு வீட்டுக்குத் திரும்பிக்கிட்டிருந்திருக்கார். வழியில கார் ஏதோ மக்கர் பண்ணப்போக... டிரைவர் காரை நிறுத்தி, பானெட்டை ஓபன் பண்ணி ரிப்பேர் பார்த்திருக்கார். அந்த சமயத்துல கஜேஷ் காரிலிருந்து இறங்கி, ரோட்டோரமா விளையாடிக்கிட்டு இருந்திருக்கான்.

டிரைவர் காரைச் சரி பண்ணிட்டுப் பார்க்கும்போது, ரோட்டோரமா விளையாடிக்கிட்டிருந்த சுஜேஷைக் காணோம்...''

''கார் ரிப்பேராகி நின்ன இடம் எது...?''

''கற்பூரச்சோலை அவென்யூ...?''

''ஆள் நடமாட்டம் அறவே இல்லாத ஏரியாவாச்சே அது...! டிரைவர் எப்படி? நம்பிக்கையான நபரா...?''

''எங்க அப்பா காலத்திலிருந்தே அவர்தான் டிரைவர். இருபத்தஞ்சு வருஷமா இருக்கார். பையன் காணாமப் போன நிமிஷத்திலிருந்து பிரமை பிடிச்சமாதிரி ஆயிட்டார்.''

''டோண்ட் வொர்ரி... பையன் எப்படியும் கிடைச்சுடுவான். ரோட்டோரமா விளையாடிக்கிட்டிருந்த பையன் வழி தவறி ஏதாவது ஒரு பக்கம் போயிருக்கலாம். போலீஸ் எப்படியும் பையனைக் கண்டுபிடிச்சு வீட்டுக்குக் கொண்டாந்துடுவாங்க. நீங்க தைரியமாகப் போங்க சார்... டெப்டி ஏ.ஸி. எனக்கு ரொம்ப வேண்டியவர்... போன் பண்ணி நானும் ஒரு வார்த்தை சொல்லிடறேன்...''

''ரொம்பவும் நன்றி சார்...'' இளைஞன் நஞ்சனும் அவனுடைய மனைவியும் நீர் மின்னும் விழிகளோடு கை கூப்பிவிட்டு, போர்டிகோவில் நின்றிருந்த தங்கள் காரை நோக்கிப் போனார்கள்.''

கார் புறப்பட்டு காம்பெளண்ட் கேட்டைத் தாண்டும் வரை மெளனம் சாதித்த சந்திரா கோபமாகப் பொரிந்தாள். ''நமக்கு நேரமே சரியில்லைனு நினைக்கிறேன். வீதியில் போற பிரச்னையெல்லாம் நம்ம வீட்டு வாசல் வரைக்கும் வந்து எட்டிப் பார்த்துட்டுப் போகுது.''

பக்கத்தில் நின்றிருந்த ஜெயப்பிரகாசம் அனல் பெருமூச்சொன்றை வெளியேற்றிவிட்டுச் சொன்னார்: ''எதுக்காக இப்படிப் பையன்களைக் கடத்திட்டுப் போறாங்கன்னு தெரியலை...! நம்ம கான்வெண்ட்



பையன் சாய்பிரசாத்தை கடத்திட்டுப் போனது ரெண்டு தீவிரவாதிகள் என்கிற உண்மை இப்போ வெளியே வந்திருக்கு. இதுவும் அவங்க வேலையாகத்தான் இருக்கும்...''

ஷ்யாம் இடைமறித்தான்... ''அவங்களும் இப்போ உயிரோடு இல்லையே... போலீஸ்தான் சுட்டுக்கொன்னுட்டாங்களே...?''

''அவங்க கூட்டாளிங்க யாராவது பண்ணியிருக்கலாமே..?''

விபா ஆச்சரியப்பட்டாள். ''இப்படியொரு பிரச்னை நாம எங்கே போனாலும் தொடர்ந்து வந்துட்டே இருக்கே... அதுதான் ஏன்னு புரியலை. கோயம்புத்தூர்ல காணாமப் போனது நம்ம கான்வெண்ட் பையன். இங்கே ஊட்டியில் காணாமப் போயிருக்கிறதும் ஒரு கான்வெண்ட் பையன்தான். இது வேற கான்வெண்ட்டா இருந்தாலும் பிரச்னை நம்ம காதுவரைக்கும் வருது. நடந்த ரெண்டு சம்பவங்களுக்கும் ஏதோ ஒரு தொடர்பு இருக்கிற மாதிரி எனக்குத் தோணுது...''

ஷ்யாம் அவசர அவசரமாக இடைமறித்தான். ''ஒரு தொடர்பும் கிடையாது விபா. எல்லாமே தற்செயலா நடக்கறதுதான்... நாட்டுல கிரிக்கெட் முதல் கொண்டு எல்லா விஷயமுமே கெட்டுப்போயிருக்கு. ஒரு நாட்டோட வளர்ச்சிக்குப் பக்கவாத நோயா இருக்கிறது தீவிரவாதமும் மதவாதமும்தான். இந்த ரெண்டையும் ஒழிச்சாதான் எல்லாமே ஒழுக்கத்துக்கு வரும்.''

சந்திரா கையமர்த்தினாள்... ''லெக்சர் போதும் ஷ்யாம்... நீ சாப்பிடறோனே வந்தே...?''

''ஆமா...''

''டைனிங் டேபிள்ல உன்னோட கோட்டா இருக்கு. போய்ச் சாப்பிடு...''

''நீங்க..?''

''நாங்க சாப்பிட்டாச்சு... உனக்காக வெயிட் பண்ணிப்பார்த்தோம். நீ வர்ற மாதிரி தெரியலை. சப்பாத்தி விறைச்சுப் போறதுக்குள்ளே டின்னரை

முடிச்சுக்கிட்டோம்...''

ஷ்யாம் டைனிங்டேபிளை நோக்கி போய்க்கொண்டே கேட்டான்:

''விபா... எனக்கு கம்பெனி தர்றியா?''

''ஸாரி... ஹவுஸ்ஃபுல்...''

''சரி... பக்கத்திலாவது வந்து உட்காரேன்...''

''இது நியாயம்...''

ஷ்யாம் டைனிங்டேபிளுக்குப் போய் உட்கார்ந்து- பீங்கான் தட்டில் இரண்டு சப்பாத்திகளை எடுத்து வைத்துக்கொள்ள, விபா ஹாட்பேக்கில் இருந்த வெஜிடபிள் கோப்தாவை எடுத்துப் பரிமாறினாள்.

சந்திரா குரல் கொடுத்தாள்.

''ஷ்யாம்...! உங்கண்ணன் போன் பண்ணியிருந்தார்...''

''எப்போ...?''

''கொஞ்ச நேரத்துக்கு முந்தி...''

''அங்கே நிலைமை எப்படியிருக்காம்...?''

''கோயம்புத்தூரையே சல்லடை போட்டுத் தேடிக்கிட்டிருக்காங்களாம் அந்த ஜமீன் பரம்பரை...''

''தேடட்டும்... நல்லா தேடட்டும்...''

''கல்யாணம் முடியறவரைக்கும் நீ வெளியே தலைகாட்டக்கூடாதுன்னு சொன்னார்...''

''நான் வெளியே போகவேயில்லையே...?''

''பொய் சொல்லாதே...! சாயந்திரம் நாலு மணிக்கு வெளியே போயிட்டு, ஏழு மணிக்குத்தான் நீ வந்தே...?''

''பழைய ஃப்ரெண்ட்ஸைப் பார்க்கலாம்னு போனேன். எவனும் இந்தியாவிலேயே இல்லை... எல்லாரும் ஸ்விஸ், அமெரிக்கான்னு போயிட்டாங்க...''

''சரி... நீயும் அடுத்த வாரம் விபாவோடு ஏதாவது ஒரு வெளிநாட்டுக்குப் போயிடு...''

விபா வெட்கித்துத் தலையைத் தாழ்த்திச் சந்தோஷப்பட்டுக்கொண்டிருக்க... அதைக் காணப் பொறுக்கமாட்டாமல் ஒரு சப்பாத்தியோடு எழுந்துகொண்டான் ஷ்யாம்.



விபா முகம் மாறினாள்.

''என்ன அதுக்குள்ளே எந்திரிச்சுட்டீங்க...?''

''சாப்பிடப் போகும்போது பசி இருந்தது. இப்ப இல்லை. லேசா தலையை வேற வலிக்கிற மாதிரி இருக்கு. ஒரு மாத்திரையைப் போட்டுட்டு நல்லா தூங்கி எந்திரிக்கணும்...''

ஷ்யாம் வாஷ்பேஸினில் கையைக் கழுவிக்கொண்டு, அவுட்ஹவுஸை நோக்கி வேகவேகமாகப் புறப்பட்டான். போர்டிகோ படிகளில் இறங்கும்போது முதுகில் அண்ணியின் குரல் கேட்டது.

''எப்பவுமே இவன் இப்படித்தான் விபா. சாப்பிட உட்காருவான்... பாதி சாப்பிட்டுக்கிட்டு இருக்கும்போதே ஆபீஸ்ல ஏதோ ஒரு வேலை பாக்கி இருக்குன்னு கிளம்பிப் போயிடுவான். கல்யாணத்துக்கப்புறம் நீதான் இவனை வழிக்குக் கொண்டுவரணும். இனிமே எல்லாம் உன் கையில்தான் இருக்கு...''

ஷ்யாம் கொட்டியிருந்த இருட்டில், தோட்டத்தின் வழியே அவுட்ஹவுஸை நோக்கி வேகநடை போட்டான். இரண்டு நிமிட நடையில் அவுட்ஹவுஸ் வந்தது.

வாசல் பூட்டுக்கு விடுதலை கொடுத்து உள்ளே போனவன், கதவை உட்பக்கமாகத் தாழிட்டுக்கொண்டு, விட்டில் மண்டிக்கிடந்த ஜீரோவாட்ஸ் வெளிச்சத்தில் மெதுவாக நடைபோட்டுப் படுக்கையறைக்குள் நுழைந்தான்.

கட்டில் அருகே போனவன், சட்டென்று மண்டிபோட்டு உட்கார்ந்து கட்டிலுக்கடியில் குனிந்து பார்த்தான்.

அந்த ஆறு வயதுப் பையன் கண்களை அகல விரித்து மிரண்டான். ஷ்யாம் பையனின் கன்னத்தைத் தட்டினான்.

''உன் பேர் கஜேஷாமே...! ப்யூட்டிஃபுல் நேம்...''

விஜயேந்திரன் காரை விரட்டிக்கொண்டிருக்க...

பின்ஸீட்டில் ருத்ரநரசிம்மனு சுருட்டைப் பிடித்தபடி சாய்ந்திருந்தார். நேரம் நள்ளிரவைத் தொட்டிருந்தது. வெறுமையான கோவை நகர் வீதிகளில் சோடியம் வேபர் வெளிச்சம் நிரம்பியிருந்தது.

''விஜய்...'' ருத்ர நரசிம்மனு புகை கசியும் உதடுகளோடு கூப்பிட்டார்.

''ம்...''

''கொண்டையாகிட்டயிருந்து ஏதாவது தகவல் வந்ததா...?''

''இல்லை...''

''அவனை எங்கே அனுப்பி இருக்கே...?''

''ஷ்யாமோட கெஸ்ட் ஹவுஸ் பங்களாவுக்கு...''

''அது வேஸ்ட்... அவங்க யாரும் உள்ளூர்ல இருக்க மாட்டாங்க...''

''எதுக்கும் போய்ப் பார்க்கட்டுமே! இந்த விஷயத்துல நாம எதையும் அலட்சியம் பண்ண முடியாது அப்பா...''

''இந்த ராத்திரிப் பொழுது விடிஞ்சா, நாளைக்குக் காலையில கல்யாணம். ஷ்யாமும் விபாவும் கல்யாணத்தைப் பண்ணிக்கிட்டு வந்துட்டா, நாம எல்லாரும் தலைகளைத் தொங்கப்போட்டுக்கிட்டு உட்கார்ந்துக்க வேண்டியதுதான்...''

''அவங்களைக் கண்டுபிடிச்சுடுவோம். கவலைப்படாதீங்கப்பா...''

''எப்படி விஜய்...! இப்ப மணி பதினொண்ணே முக்கால். நாளைக்குக் காலையில் அவங்க ஏற்கெனவே ஃபிக்ஸ் பண்ணியிருக்கிற ஆறு மணியிலிருந்து ஏழு மணிக்கு உள்ளே கல்யாணம். விபாவும் ஷ்யாமும் எந்தத் திசையில இருக்காங்கன்னுகூடத் தெரியாது. எப்படிக் கண்டுபிடிக்கப் போறோம்...?''

''ராம்கோபாலைப் போட்டு உலுக்கிற உலுக்கலில் எல்லா உண்மையையும் வெளியே கொண்டு வந்துடலாம்...''

''எனக்கு நம்பிக்கையில்லை விஜய். அவன் சொல்லமாட்டான்...''



''அவனைச் சொல்ல வைக்கப் போறேன்...''

''முரட்டுத்தனம் வேண்டாம் விஜய். ராம்கோபால்கிட்ட நான் இதமா பேசிப் பார்க்கிறேன். சில நேரங்கள்ல நாம காட்டுற பணிவுகூட, நமக்கு வெற்றியைத் தேடிக் கொடுக்கலாம்...''

''நீங்க மொதல்ல பணிவா பேசிப் பாருங்கப்பா. அவன் நம்ம வழிக்கு வரலைன்னா, அதுக்கப்புறம் நான் பேசிக்கறேன்...''

''பொறுமை விஜய், பொறுமை...'' ருத்ர நரசிம்மனு சொல்லிக்கொண்டிருக்கும்போதே, கார் வேகம் குறைந்து அரையிருட்டான தெருவுக்குள் நுழைந்தது. பங்களாக்கள் தள்ளித் தள்ளி மரங்களோடு தெரிய, கார் ஹெட்லைட் வெளிச்சத்தோடு மெள்ள ஊர்ந்து ராம்கோபாலின் பங்களாவுக்கு முன்பாக நின்றது.

வாட்ச்மேன் பக்கத்தில் வந்தார்.

''யார் வேணும்...?''

''ராம்கோபாலைப் பார்க்கணும்...''

''யாரையும் உள்ளே விடக்கூடாதுன்னு அய்யா சொல்லியிருக்கார்...''

''ஒரு அவசர வேலையா அவரைப் பார்க்கணும்...''

வாட்ச்மேன் மேற்கொண்டு பதில் சொல்லும் முன், மாடியில் விளக்கு எரிந்தது. ஜன்னலில் ராம்கோபாலின் முகம் தெரிந்தது. ''ஆறுமுகம்... யாரது...?''

''அய்யா! உங்களைப் பார்க்கணும்னு...''

ராம்கோபால் சிட் - அவுட் முகப்புக்கு வந்து நின்று இரண்டு பேரைப் பார்த்துவிட்டுச் சின்னதாக வியந்தார்.

''ஓ... நீங்களா...! என்ன இந்த நேரத்துல...? கொஞ்சம் முன்னாடி வந்திருக்கலாமே...! ஆறுமுகம்...''

''அய்யா...''

''அவங்களை முன்னாடி இருக்கிற ட்ராயிங் ரூம்ல உட்காரவை. வந்துடறேன்...''

வாட்ச்மேன் அவர்களைக் கூட்டிக்கொண்டு உள்ளே போய் உட்கார வைக்க... ராம்கோபால் நைட்கவுன் முடிச்சை இறுக்கிக்கொண்டே இறங்கி வந்தார்.

ஆறுமுகம் மறுபடியும் கேட்டுக்குப் போய்விட, புன்னகையோடு இரண்டு பேரையும் பார்த்தார் ராம்கோபால்.

"சொல்லுங்க... என்ன விஷயம்?"

ருத்ர நரசிம்மனு கும்பிட்டார். "நான் வயசுல பெரியவன். இருந்தாலும் உங்களைக் கும்பிட்டுக் கேட்டுக்கறேன். விபா என் பேத்தி; எங்க ரத்தம். அவளை நீங்க எங்ககிட்ட ஒப்படைக்கணும். அது சம்பந்தமா மொதல்ல உங்களை நாங்க மிரட்டியிருக்கோம். அப்படி மிரட்டினது தப்பு. அதுக்காக நாங்க மன்னிப்புக் கேட்டுக்கறோம். விபாவுக்கும் உங்க தம்பிக்கும் கல்யாணம் நடக்கக்கூடாது..."

ராம்கோபால் பெரிதாகப் புன்னகைத்துவிட்டுத் தோள்களைக் குலுக்கினார்.

"ஸாரி... இனிமே அந்தக் கடவுளே நினைச்சாலும் விபா - ஷ்யாம் கல்யாணத்தை நிறுத்த முடியாது. இது சொர்க்கத்தில் நிச்சயிக்கப்பட்ட திருமணம். நீங்களும் நானும் வேடிக்கை பார்த்துக்கிட்டு இருக்கலாமே தவிர ஒண்ணும் செய்ய முடியாது. இந்த ராத்திரி நேரத்துல இதுக்காக நீங்க இவ்வளவு மெனக்கெட்டு வந்திருக்கவேண்டாம்..."

"ப்ளீஸ்... உங்க பிடிவாதத்தால ஒரு பொண்ணுக்குக் கிடைக்கவேண்டிய ராஜபோக வாழ்க்கை பாழாயிடக்கூடாது..."

"என் தம்பியைக் கல்யாணம் பண்ணிக்கிட்டாலே விபாவுக்கு அந்த ராஜபோக வாழ்க்கை கிடைச்சுடும்..."

"நோ... இந்தக் கல்யாணம் நடக்கக்கூடாது..."

"இது நடக்கப்போகிற கல்யாணம்..."

"இந்தக் கல்யாணத்தை நிறுத்த எங்களால் முடியும்..."


"எப்படி... எப்படி...?"

விஜயேந்திரன் உதட்டில் ஒரு கோணல் சிரிப்பு உற்பத்தியாயிற்று.

"நீங்க டெட்பாடியா இந்த வீட்ல கிடக்கும்போது,



உங்க தம்பி ஷ்யாம் மாலையும் கழுத்துமா நின்னு ஒரு பொண்ணு கழுத்துல தாலிகட்ட முடியுமா, என்ன...?"



**சைலன்சர் பொருத்தப்பட்ட எஸ்.எல்.ஆர் துப்பாக்கி. இதன் மதிப்பு இந்திய ரூபாயில் ஏறக்குறைய ரூ.27,731.75 (375 பவுன்)**

## 27

ராம்கோபால் பயப்படாமல் புன்னகை காட்டினார்.

"ப்ளீஸ்... திருப்பிச் சொல்லுங்க..."

விஜயேந்திரன் அதே கோணல் சிரிப்போடு சொன்னான்: "நீங்க டெட்பாடியா இந்த வீட்ல கிடக்கும்போது உங்க தம்பி ஷ்யாம் மாலையும் கழுத்துமா நின்னு ஒரு பொண்ணு கழுத்துல தாலிகட்ட முடியுமா என்ன..?"

"என்ன மிரட்டறீங்களா...?"

"இது மிரட்டல் கிடையாது மிஸ்டர் ராம்கோபால். விபா இருக்கிற இடத்தை நீங்க சொல்லலைன்னா நடக்கப் போகிற நிஜம் இது..." சொல்லிக்கொண்டே இடுப்புப் பகுதிக்குக் கையைக் கொண்டுபோய் வெளியே எடுத்தான். மெட்டாலிக் பிஸ்டல் மினுமினுப்பாக உடம்பைக் காட்டியது.

ராம்கோபால் பதட்டப்படாமல் தன் புன்னகையின் பரப்பளவைப் பெரிதாக்கினார். "பரவாயில்லையே... சினிமா வில்லன் ரேஞ்சுக்கு வந்து மிரட்டிட்டு இருக்கீங்க. ஒண்ணில் இருந்து பத்து எண்ணி முடிக்கிறதுக்குள்ளே நான் உண்மையைச் சொல்லணும்... இல்லேன்னா இந்தத் துப்பாக்கி வாயைத்

திறக்கும்... அடுத்தபடியா நீங்க பேசப்போற டயலாக் இதுதானே...?''

''ராம்கோபால்...! பி சீரியஸ்... எங்க ஜமீன் பாரம்பரியத்தைக் காப்பாத்திக்கிறதுக்காக நாங்க எதையும் செய்யத் தயங்கமாட்டோம்...''

''உங்களுக்கு என்ன பிரியமோ... அதைச் செய்யுங்க. பட் விபா - ஷ்யாம் கல்யாணத்தை உங்களால தடுத்து நிறுத்த முடியாது...''

விஜயேந்திரன் கோபத்தில் தத்தளித்து பிஸ்டலை உயர்த்திய விநாடி - அவனுடைய ஷர்ட் பாக்கெட்டில் கங்காருக்குட்டியாக ஒளிந்திருந்த செல்போன் சிணுங்கிக் கூப்பிட்டது. இடதுகையில் செல்போனை எடுத்துக் காதுக்கு கொடுத்தான். மறுமுனையில் ஒலித்த குரலைக் கேட்டதும் லேசாக மலர்ந்தான்.

''என்ன கொண்டைய்யா... சொல்லு...''

''....''

''என்னது... ஷ்யாமோட கெஸ்ட் ஹவுஸுக்குள்ளேயே போயிட்டியா..? எப்படி...?''

''....''

''பின்பக்கக் கதவு தாழ்போடாம திறந்து கிடந்ததா? சரி! உபயோகமான தகவல் ஏதாவது கிடைச்சுதா...?''

''....''

ஒரு நிமிஷ நேரத்துக்கு மறுமுனையில் கொண்டைய்யாவின் குரல் கேட்டுக்கொண்டிருக்க, விஜயேந்திரனின் முகத்தில் சந்தோஷ ரேகைகள் கிளைவிட்டன.

''அப்படியா...! அதுபோதுமே நமக்கு...! அதைப் பத்திரமா ஒரு பாலிதீன் பேப்பர்ல வெச்சு சுத்தி ராம்கோபாலோட வீட்டுக்குக் கொண்டாந்துரு...''

''....''

''அரைமணி நேரத்துக்குள்ளே நீ இங்கே இருக்கணும்.'' சொல்லிவிட்டு செல்போனை அணைத்த விஜயேந்திரன், புன்னகைத்துக்கொண்டிருந்த



ராம்கோபாலிடம் திமிர்ந்தான்.

''இனி நீங்க ரொம்ப நேரத்துக்கு சிரிச்சுக்கிட்டு இருக்க முடியாது ராம்கோபால்...!''

''ஏன்...?''

''விதி நாலுகால் பாய்ச்சலில் வேகமாக வந்துகிட்டிருக்கு...''

ஊட்டி

கம்பளிக்குள் தூக்கம் பிடிக்காமல் விழித்துக்கொண்டிருந்தாள் விபா.

விடிந்தால் கல்யாணம்.

ஷ்யாம் தன் கழுத்தில் தாலி கட்டப்போகும் அந்த விநாடிகளை நினைக்கும்போதே விபாவின் உடம்பின் மொத்த நரம்பு மண்டலத்துக்கும் ஐஸ் வாட்டர் இலவசமாக சப்ளையாயிற்று.

தாலி கட்டிய கையோடு காரில் கோவைக்குப் பயணம். மாலையில் ரிசப்ஷன். ஆர்க்கெஸ்ட்ராவின் இரைச்சலில் மூச்சை அடைக்கும் ரோஜா மாலைகளோடு ஷ்யாமின் தோளை உரசிக்கொண்டு நின்றபடி, வருகிற எல்லோருக்கும் வணக்கம் சொல்லி, கிஃப்ட் பாக்கெட்டுகளை வாங்கி...

படுத்துக்கொள்ளப் பிடிக்காமல் எழுந்து உட்கார்ந்தாள் விபா.

'இன்றைக்கு தூக்கம் வராது போலிருக்கிறதே!'

'அவரும் இதே அவஸ்தையில்தான் இருப்பாரோ!'

கட்டிலை விட்டு இறங்கிய விபா, அறையின் குறுக்கே நடந்து வெளிப்பக்க ஜன்னலை நெருங்கி கொக்கியை விலக்கிக் கண்ணாடியைத் தள்ளினாள். ஐம்பது மீட்டர் தூரத்தில் சில்வர் ஓக் மரங்களுக்கு மத்தியில் அவுட்ஹவுஸ் தெரிந்தது. ஒரு அறையில் மட்டும் டியூப்லைட் எரிந்துகொண்டிருப்பதற்கு அடையாளமாக கண்ணாடி ஜன்னல்களில் வெளிச்சம் ஒட்டியிருந்தது..

'அவரும் இன்னும் தூங்கலை போலிருக்கே! இண்டர்காமில் பேசிப் பார்க்கலாமா...?'

மறுபடியும் கட்டிலுக்கு வந்து தலைமாட்டில் இருந்த இண்டர்காமைத் தொட்டு ரிஸீவரை எடுத்துக்கொண்டு அவுட்ஹவுஸுக்குரிய பட்டனைத் தட்டினாள். அது மறுமுனையில் முணுமுணுத்தது. அரை நிமிஷ சாவகாசத்துக்குப் பிறகு ரிஸீவர் எடுக்கப்பட்டது. ஷ்யாமின் கரகரப்பான குரல்.

''யாரு...?''

விபா குரலைக் கிசுகிசுப்பாக்கிக்கொண்டாள்.

''நான்தான்...''

''விபாவா...?''

''ம்...''

''என்ன விஷயம்...?''

''ஒ... ஒண்ணுமில்லை. உங்க ரூம்ல லைட் எரிஞ்சிட்டிருந்தது. நீங்க இன்னும் தூங்கலையா...?''

''தூக்கம் வரலை...''

''எனக்கும் அதே நிலைமைதான்...'' விபா சிரித்துக்

வெட்கமாகச்

சொல்லிக்கொண்டிருக்கும்போதே ரிஸீவரில் அந்தச் சத்தம் கேட்டது.

முனகல் சத்தம்!

விபா முகம் மாறி ரிஸீவரைக் காதுக்கு நன்றாக ஒட்டவைத்துக்கொண்டு உன்னிப்பாகக் கவனித்தாள். அடிபட்ட யாரோ வலியால் முனகுகிற மாதிரியான சத்தம்.

அது என்ன சத்தம் என்று விபா கேட்க நினைத்த விநாடி ஷ்யாம் பேசினான்.

''போய் தூங்கு விபா. ரெண்டு மணி நேரமாவது தூங்கி எந்திரிச்சாத்தான் நாளைக்கு மணவறையில் ஃப்ரெஷ்ஷா உட்காரலாம். தூக்கம் வரலைன்னா ஒரு வேலியம் மாத்திரை போட்டுக்கோ. நாலு மணி நேரத் தூக்கம் கியாரண்டி. நாளைக்குக் காலையில் பார்க்கலாம். குட்நைட்...''

மறுமுனையில் ரிஸீவர் வேகமாகக் கவிழ்ந்து கொள்ள விபா ரிஸீவரைப் பிடித்துக்கொண்டு அப்படியே



நின்றாள்.

அந்த முனகல் சத்தம் இன்னமும் காதுகளில் கேட்டுக்கொண்டிருந்தது.

'அவுட்ஹவுஸில் அவரைத் தவிர வேறு யாரோ இருக்கிறார்கள்...'

மனசுக்குள் விதைக்கப்பட்ட அந்தச் சந்தேக விதை பனிச்சென்று இரண்டு இலைகளை விட்டது.

'ஷ்யாம் இரண்டு நாளாக சரியில்லை. என்னைக் கல்யாணம் பண்ணிக்கொள்ளப் போகிற சந்தோஷம்கூட அவரிடம் மிஸ்ஸிங்!'

'அவுட்ஹவுஸை விட்டு பெரும்பாலும் வெளியே வருவதில்லை...!'

'அவரிடம் ஏதோ தப்பு இருக்கிறது...'

'போய் பார்த்துவிடலாமா...?'

ஒரு தீர்மானத்துக்கு வந்தவளாக சால்வையை எடுத்துப் போர்த்திக்கொண்டு வெளிப்பக்கக் கதவைத் திறந்தாள். வெளியே காத்திருந்த ஐஸ் காற்று முகத்தில் அடித்தது. தூரத்தில் யூகலிப்டஸ் மரங்கள் இருட்டில் நட்டு வைத்த சட்டிகளாகத் தெரிந்தன. பிய்த்து எறியப்பட்ட பஞ்சுத் துணுக்குகளாக மேகக் கூட்டங்கள் நகர்ந்துகொண்டிருக்க, போர்டிகோ வராந்தாவுக்கு வந்தாள் விபா.

படிகளில் இறங்கும்போது ஒரு பயம் வந்தது.

'இப்படித் தனியாகப் போவது சரியா... சந்திராவையும் கூட்டிக்கொள்ளலாமா...?'

'வேண்டாம்... அவங்க தூக்கத்தைக் கெடுக்க வேண்டாம். மேலும் ஷ்யாமின் மேல் நீ சந்தேகப்படுவது சந்திராவுக்குச் சந்தோஷத்தைக் கொடுக்காது?'

'பிரச்னையை நீயே அனுபவிப்பாய்...' பனி பெய்த ஈரத்தில் நனைந்து கிடந்த வானில் வேகநடை போட்டு அவுட் ஹவுஸை நெருங்கினாள் விபா. உட்பக்கமாக இருந்த ஒரு கண்ணாடி ஜன்னலில் இன்னமும் டியூப்லைட் வெளிச்சம் ஒட்டிக்கொண்டிருந்தது.

அந்த ஜன்னலை நோக்கி மெள்ள நடை போட்டாள்.

இதயத்துடிப்பு லேசாக எகிறியது. அந்தக் குளிரிலும் விபாவின் மெத்தென்ற நெற்றிப் பரப்பில் வியர்வை வடிந்தது. டெலிபோனில் கேட்ட அந்த முனகல் சத்தம் இன்னும் காதுகளில் விடாப்பிடியாக ஒட்டிக்கொண்டிருந்தது.

கண்ணாடி ஜன்னலை நெருங்கியவள் மெள்ள அதைத் தள்ளிப் பார்த்தாள்.

முடியவில்லை. உட்பக்கமாகக் கொக்கி மாட்டியிருந்தது. விபா பின்வாங்கி யோசித்தாள்.

'என்ன பண்ணலாம்...?'

'ஏதாவது ஒரு ஜன்னல் திறந்திருந்தாலும் போதும்... உள்ளே என்ன நடக்கிறது என்று பார்த்துவிடலாம்...!'

விபா இடமிருந்து வலமாக அவுட் ஹவுஸை சத்தம் எழாமல் சுற்றி வந்து சாத்தப்பட்ட ஒவ்வொரு ஜன்னலையும் தள்ளிப் பார்த்தாள்.

எதுவுமே அசைந்து கொடுக்கவில்லை. பின்பக்கமாக நகர்ந்து வந்தபோது, கல்லடி வாங்கிய கண்ணாடி ஜன்னலொன்று உள்ளங்கைப் பரப்பளவுக்குப் பொத்தலை வாங்கியிருக்க, விபா நின்றாள்.

'இந்தப் பொத்தல் போதுமே...!'

சுற்றும் முற்றும் பார்த்துவிட்டு அந்தக் குட்டையான ஜன்னல் திட்டின் மேல் ஏறி வசதியாக உட்கார்ந்து கொண்ட விபா, ஜன்னலின் பொத்தல் வழியாக உள்ளே பார்த்தாள்.

ஜீரோவாட்டின் மங்கலான வெளிச்சத்தில் ஹாலின் பின்பகுதியும் சமையலறையும் தெரிந்தன. வீட்டுக்குள் உறைந்துபோன நிசப்தம். தலையை விதவிதமாகச் சாய்த்துப் பார்த்து அந்த வீட்டுக்குள் ஷ்யாமைத் தேடினாள்.

கிடைக்கவில்லை!

'இப்படியே ஒரு பத்து நிமிஷம் உட்கார்ந்து பார்க்கலாம்...!'

விபா மனசுக்குள் தீர்மானித்துக்கொண்டவளாக மறுபடியும் பார்வையை ஜன்னலின் பொத்தலுக்குக்



கொண்டு போனாள்!

தோளின் மேல் வெப்பமான அந்தக் கை விழுந்தது! விபா விருட்டென்று திரும்ப -

வெகு அருகில் ஷ்யாம் நின்றிருந்தான். உதட்டில் சாக்பீஸ் கோடு மாதிரியான சிரிப்பு. ஸ்க்ரூ ஆணியாக பார்வை.

விபா ஜன்னலிலிருந்து தன்னிச்சையாக உதிர்ந்தாள். கைகால்களில் நடுக்கம் தொற்றிக்கொள்ள ''ஸாரி'' என்றாள்.

ஷ்யாம் மார்புக்குக் குறுக்காக கைகளைக் கட்டிக்கொண்டு பவ்யமாக அவளருகே குனிந்தான்.

''எதுக்கு இப்ப ஸாரி...?''

''அது... வந்து... வந்து...''

''என்னைப் பார்க்கணும்னு நீ ஆசைப்பட்டிருந்தா வாசல் பக்கம் இருக்கிற காலிங்பெல்லுக்கு வேலை கொடுத்து இருக்கலாமே...?''

''நா... நான்... வந்தது...''

''சொல்லு... எதுக்கு...?''

விபா தயங்கிவிட்டுச் சொன்னாள். ''இன்ட்டர்காம்ல நீங்க என்கிட்ட பேசும்போது ஒரு சத்தம் கேட்டது...''

''சத்தமா...?''

''ம்... யாரோ அடிபட்டு வலியால முனகறமாதிரி...''

ஷ்யாமின் முகத்தில் கிரகண நிழல். சுதாரித்துச் சிரித்தான்.

''முனகற சத்தமா...?''

''ஆமா...''

''பிரமையாக இருக்கும்...''

''இல்ல... கேட்டேன்... நல்லா கேட்டேன்... என் காதுக்குள்ளே இன்னும் அந்த சத்தம் இருக்கு... உங்க அண்ணியையும் எழுப்பிட்டு வரலாம்னு பார்த்தேன். அப்புறம் அவங்க தூக்கத்தை எதுக்காக கெடுக்கணும்னு நானே வந்துட்டேன்...''

ஷ்யாம் அவசர அவசரமாகத் தன் முகத்துக்கு அப்பாவிக் கவசத்தை மாட்டிக்கொண்டான்.

''நீ சொல்றதைக் கேட்டு எனக்கே

ஆச்சரியமாயிருக்கு... வா... அவுட் ஹவுஸுக்குள்ளே
ஒரு தடவை பார்த்துடலாம்...''
''வேண்டாங்க...! நான் புறப்படறேன்...'' விபா நகர
முயல, ஷ்யாம் இரண்டடி நகர்ந்து நாசூக்காக மறித்தான்.
''நில்லு விபா...! என்மேல் உனக்கு ஏதோ சந்தேகம்
இருக்கப்போய்த்தானே இந்த ஜன்னல் ஓட்டை வழியா
பார்த்துட்டிருந்தே...?''
''ஸாரிங்க... அது... வந்து...''
''என்னைக் கல்யாணம் பண்ணிக்கப் போகிற உனக்கு
மனசுல எந்தச் சந்தேகமும் இருக்கக்கூடாது... வா...
ரெண்டு பேருமே வீட்டுக்குள்ளே போவோம். யாராவது
இருக்காங்களான்னு தேடிப் பார்ப்போம்...''
''யாரும் இல்லேன்னு நீங்க சொன்னா சரிதான்...''
''தோ...! நீ என்கூட வர்றே! வீட்டைச் சுத்திப்
பார்க்கிறே...''
''வேண்டாங்க...! எனக்கு பயம்மாயிருக்கு. நான்
வரலை... என் ரூமுக்குப் போறேன்...''
ஷ்யாமின் கண்கள் சட்டென்று இடுங்கின. குரல்
கோபம் கலந்து லேசாக உயர்ந்தது.
''நீ இப்ப வரப்போறியா, இல்லையா...!''
விபா முகம் மாறிப் பின்வாங்கி பயத்தோடு
ஷ்யாமைப் பார்த்தாள்.
''ஊஹூம்... நான் வரமாட்டேன். உங்க பேச்சு
சரியில்லை... பார்வை சரியில்லை... உங்ககிட்ட
என்னமோ தப்பு இருக்கு...''
ஷ்யாமின் வலதுபக்கப் புருவம் மட்டும் ஒரு
நெளியலுக்கு உட்பட்டு உயர்ந்தது.
''ஓ...! என்கிட்ட தப்பு இருக்குன்னு
கண்டுபிடிச்சுட்டியா...? அப்படின்னா இனிமே
இங்கிருந்து உயிரோடு தப்பிப் போக முடியாது...''
விபா எதிர்பார்க்காத ஒரு விநாடியில் ஷ்யாம் அவள்
மேல் பாய்ந்தான்.
விபா விலகுவதற்குள் சற்றே ஈரமான அந்த கர்ச்சீப்
விபாவின் முகப்பரப்பை ஆக்கிரமித்தது. ஏதோ அழுகிய
பழ நெடி நாசிப்பாதைக்குள் அவஸ்தையாக இறங்க...



விபாவின் கண்ணிமைகள் வலுக்கட்டாயமாக
ஷட்டர்கள் போல் கீழ்நோக்கி இழுபட்டன.
சரிந்த விபாவை இரண்டு கைகளாலும்
ஏந்திக்கொண்டான். விபாவை சிரமமில்லாமல்
தூக்கியபடி அவுட் ஹவுஸை நோக்கி நடைபோட்டான்.

ராம்கோபால் புன்னகைப்பதை நிறுத்திவிட்டு
நிதானத்துக்கு வந்தார். விஜயேந்திரனை ஒரு குழப்பப்
பார்வை பார்த்தார்.
''என்ன சொன்னீங்க... விதி நாலுகால் பாய்ச்சலில்
வேகமாக வந்துகிட்டிருக்கா...?''
''ஆமா...! இனி உங்களைப் பணிய வைக்க இந்த
பிஸ்டல் வேண்டாம். கொண்டய்யா கொண்டுட்டு
வரப்போற சங்கதி ஒண்ணே போதும்... அதைப்
பார்த்துட்டு நாம மேற்கொண்டு பேசிக்கலாம்...''
ராம்கோபால் ஏதோ பேச முற்பட விஜயேந்திரன்
கையமர்த்தினான்.
''வேண்டாம்... இனிமே நீங்க எது
பேசறதாயிருந்தாலும் கொண்டையா வந்த பின்னாடி
பேசறது நல்லது...''
காத்திருந்தார்கள்.
இருபது நிமிஷங்களுக்குப் பிறகு கொண்டையா
பைக்கில் வந்து சேர்ந்தான். கையில் ஒரு பிளாஸ்டிக்
கேரிபேக்.
விஜயேந்திரன் ஒரு சின்ன சிரிப்போடு நிமிர்ந்தான்.
''கொண்டையா...!! இவங்க கெஸ்ட் ஹவுஸ்ல உன்
கைக்குக் கிடைச்ச அந்தச் சங்கதியை எடுத்து இப்படி
இந்த டீபாய் மேல வை...!''
பிளாஸ்டிக் கேரிபேக்கிலிருந்து அதை எடுத்து
வைத்தான் கொண்டையா.
ராம்கோபால் உறைந்தார்!

# 28

ராம்கோபால் உறைந்த பார்வையோடு டீபாயின்

மேல் வைக்கப்பட்டிருந்த ரத்தக்கறை படிந்த அந்தத் தபால்கட்டையே பார்த்துக் கொண்டிருக்க, விஜயேந்திரன் அவர் காதருகே சிரித்தான். "இந்த ரத்தக் கறை படிந்த தபால் கட்டை உங்க கெஸ்ட் ஹவுஸ் பங்களாவிலிருந்துதான் கொண்டையா எடுத்திருக்கான். கடந்த நாலைஞ்சு நாளாவே போஸ்ட்மேன் காதர் காணாமப்போன நியூஸ்தான் எல்லா பேப்பர்ஸ்லேயும் முக்கிய செய்தி. காதர் காணாமப் போன ஏரியாவும் உங்க கெஸ்ட் ஹவுஸ் இருக்கிற ஏரியாதான்... டெலிவரி செய்யப்படாத இந்த ரெஜிஸ்டர் தபால் கட்டையும் இதன் மேல் படிந்திருக்கிற ரத்தக்கறையையும் பார்க்கும்போது..."

விஜயேந்திரன் கோணல் சிரிப்போடு பேசிக்கொண்டிருக்கும்போதே, ராம்கோபாலின் மனதுக்குள் நான்கு நாளைக்கு முந்தின ஷ்யாமின் நடவடிக்கைகள் ரீவைண்ட் செய்யப்பட்டு ஸ்லோமோஷனில் ஓடின. போஸ்ட்மேனைத் தேடிக்கொண்டு போலீஸ் வந்ததும் நினைவுக்கு வந்து இதயத்தைக் கனமாக்கியது.

"என்ன ராம்கோபால்... பேச்சையே காணோம்? இந்த ரத்தக்கறை படிஞ்ச தபால்கட்டைப் பார்க்கும்போது, போஸ்ட்மேன் காதர் உயிரோடு இருக்க வாய்ப்பு இல்லைன்னே தோணுது. போஸ்ட்மேனைக் கொலை பண்ணினது நீங்களா... இல்லை, உங்க தம்பி ஷ்யாமா...?"

"நா... நானில்லை..."

"அப்படின்னா... ஷ்யாமா...?"

"தெரியாது..."

"போலீஸுக்கு விஷயத்தைக் கொண்டு போனா போதும்... அவங்க எல்லா விஷயத்தையும் தோண்டி எடுத்துருவாங்க! கொண்டையா, போலீஸுக்கு போன் பண்ணு..."

ராம்கோபால் பதட்டமாக எழுந்தார்.

"வே... வே... வேண்டாம்..."



"என்னது... வேண்டாமா...? சரியா போச்சு! மிஸ்டர் ராம்கோபால், இது பிக்பாக்கெட் விவகாரம் கிடையாது. ஒரு போஸ்ட்மேன் காணாமப்போன விவகாரம். டெலிவரி செய்யப்படாத ரத்தக்கறை படிஞ்ச தபால்கட்டு உங்க கெஸ்ட் ஹவுஸ்ல கிடைச்சிருக்கு. நான் விஷயத்தை போலீஸுக்குக் கொண்டு போகாம இருக்க முடியுமா?"

"ப்ளீஸ்... வேண்டாம்...! இந்த விவகாரத்தை நமக்குள்ளேயே முடிச்சுக்குவோம்... போலீஸ் வரைக்கும் போக வேண்டாம்..."

"நாங்க போலீஸுக்குப் போகக் கூடாதுன்னு நீங்க விரும்பினா, உடனடியா ரெண்டு காரியம் பண்ணணும். ஒண்ணு இந்த நிமிஷமே உங்க மனைவிக்கு போன் பண்ணி விபா - ஷ்யாம் கல்யாணத்தை நிறுத்தணும். ரெண்டு, நாளைக்குக் காலையில் ஆறு மணிக்குள்ளே விபாவை எங்ககிட்ட ஒப்படைக்கணும்..."

"சரி..."

"மொதல்ல உங்க ஒய்ஃபுக்கு போன் பண்ணுங்க..."

விஜயேந்திரன் சொல்ல ராம்கோபால் எழுந்து நொந்துபோன நடையில் டெலிபோனை நோக்கிப் போனார்.

இன்ஸ்பெக்டர் பாலமுரளி தூக்கத்தைத் தள்ளி வைத்துவிட்டு, 'க்ரைம் அக்கரன்ஸ்' ஃபைல்களைப் புரட்டிப் பார்த்துக்கொண்டிருக்க... அவருடைய மனைவி வாணி, ஒரு மினி கொட்டாவியோடு பக்கத்தில் வந்து நின்றாள்.

"என்ன... இந்த ராத்திரியை வைகுண்ட ஏகாதசியா கொண்டாடறதா முடிவு பண்ணிட்டீங்களா...?"

பாலமுரளி கைகளை உயர்த்தி நெட்டி முறித்துக்கொண்டே சொன்னார்:

"என்ன பண்றது வாணி! சுட்டுக்கொல்லப்பட்ட தீவிரவாதி ரத்னாகரனின் டைரியில் இருந்த எல்லா கோட்வேர்ட்ஸுக்கும் அர்த்தம் கண்டுபிடிச்சுட்டோம்.

ஆனா, 'அட்சய பாத்திரம்'னு ஒரு வார்த்தையை எழுதி அதுக்குக் கீழே இன்னொரு பெயரையும் தீவிரவாதி எழுதி இருக்கான். அந்தப் பெயர் ரத்தத்தால மெழுகப்பட்டு, ரெண்டு எழுத்து மட்டுமே கிடைச்சது. SH-ல் ஆரம்பிக்கிற அந்தப் பெயர் எதுவாயிருக்கும்னு மண்டையைப் போட்டு உடைச்சுக்கிறோம். அதுக்காக SH-ல் ஆரம்பிக்கிற ஜென்ட்ஸ் நேம் லிஸ்ட்டையும் லேடீஸ் லிஸ்ட்டையும் தயார் பண்ணி ஒப்பிட்டுப் பார்த்துட்டிருக்கோம்..."

"அது வீண் வேலைங்க..."

"வீண் வேலைதான்... நல்லாத் தெரியுது... ஏ.ஸி-க்குத் தெரியலையே! SH-ல் ஆரம்பிக்கிற பேரையும் க்ரைம் அக்கரன்ஸ் ஃபைலில் இருக்கிற நபர்களோடு லிங்க் பண்ணி, அவங்களோட ஹிஸ்டரியைப் படிச்சுப் பார்க்க வேண்டியிருக்கு... விடியறதுக்குள்ளே என்னோட மூளை அல்வா பதத்துக்குப் போயிடும்னு நினைக்கிறேன். நீ போய்த் தூங்கு வாணி. இதையெல்லாம் பார்த்து முடிக்க எனக்கு எப்படியும் ரெண்டு மணி நேரமாயிடும்..."

"இப்போ லிஸ்ட்ல எத்தனையாவது பேரைப் பார்த்துக்கிட்டிருக்கீங்க...?"

"இருபத்தேழாவது பேர். ஷ்யாம்..."

"காக்கி யூனிஃபார்மைக் கட்டிக்கிட்டா, இப்படித்தான் தூக்கத்தைக் காவு கொடுக்கணும்..." சொல்லிக்கொண்டே நகர முயன்ற வாணி, சட்டென்று நின்றாள்.

"என்னங்க..."

"ம்..."

"இப்ப என்ன பேர் சொன்னீங்க...?"

"ஷ்யாம்... ஏன்...?"

வாணி தன் புருவ மத்தியை இடது கையின் ஆட்காட்டி விரலால் கீறிக்கொண்டாள்.

"இந்த ஷ்யாம் பெயரைக் கேட்டதும் என் மனசுக்குள்ளே ஒரு சின்ன நெருடல்..."

"என்ன... சொல்லு...?"



"பையன் சாய்பிரசாத் காணாமப் போன அன்னிக்கு, கான்வென்ட் வாசல்ல நானும் இருந்தேன். நம்ம பையன் அபிஷேக்கைக் கூட்டிக்கிட்டு வரும்போது, கான்வென்ட்டுக்கு கொஞ்சம் தள்ளி என்னோட கிளாஸ்மேட் ஷ்யாம் காரில் சாய்ஞ்சு நின்னுட்டிருந்தான்..."

பாலமுரளி நிமிர்ந்து உட்கார்ந்தார்.

"நானா போய் வலிய அவன்கிட்ட பேசினேன். அன்னிக்கு அவன் என்கிட்ட பேசும்போது கொஞ்சம் ரெஸ்ட்லெஸ்ஸா இருந்தான்..."

"என்ன கார்...?"

"சான்ட்ரோ... மப் லீப்ளு கலர்..."

"வீடு எங்கேன்னு சொன்னான்...?"

"மகாராணி அவென்யூ..."

"அவனுக்கு ஒரு கெஸ்ட் ஹவுஸ் இருக்கா...?"

"அதெல்லாம் எனக்குத் தெரியாது..."

"நீ சொல்றதைப் பார்த்தா, ராம்கோபாலோட தம்பி ஷ்யாம் மாதிரி தெரியுது. காணாமப்போன பையன் சாய்பிரசாத்தைப் பத்தி விசாரிக்கறதுக்காக நான் ஜெயப்பிரகாசம் வீட்டுக்குப் போனபோது, ராம்கோபாலும் ஷ்யாமும் அங்கே இருந்தாங்க. ஜெயப்பிரகாசத்தோட டாட்டருக்கும், ஷ்யாமுக்கும் கல்யாணம்னு பேசிக்கிட்டாங்க... ஷ்யாம் உயர்ந்தான ஃபேமிலியைச் சேர்ந்தவன்... அவன் எதுக்காகப் பையனை... கடத்தணும்...?"

"நான் என் மனசுக்குத் தோணின சந்தேகத்தை உங்ககிட்ட சொல்லிட்டேன்... அவ்வளவுதான்... ஷ்யாம் நல்லவனா கெட்டவனான்னு எனக்குத் தெரியாது..."

வாணி போய்விட, பாலமுரளி கண்களை மூடிக்கொண்டு யோசனையில் ஆழ்ந்தார்.

டெலிபோனைத் தொட்டு ரிஸீவரை எடுத்துக்கொண்ட ராம்கோபால் நடுங்கும் விரல்களால்

டயல் எண்களைத் தட்டினார்.

மறுமுனையில் வெகுநேரம் ரிங் போய் ரிஸீவர் எடுக்கப்பட்டு, சந்திராவின் தூக்கக் கலக்கக் குரல் கேட்டது.

''ஹலோ...''

''சந்திரா...! நான்தான்...''

''என்னங்க இந்த நேரத்துல போன்...?''

''சந்திரா... 'விபா - ஷ்யாம்' கல்யாணம் வேண்டாம்... ஷ்யாமை எஸ்டேட்டிலேயே விட்டுட்டு, நீயும் விபாவும் ஜெயப்பிரகாசமும் உடனடியாக புறப்பட்டு கோயம்புத்தூர் வாங்க...''

''என்னங்க இது... திடீர்னு இப்படிச் சொல்றீங்க? அந்த ஜமீன் பரம்பரை ஆட்களுக்கு விஷயம் தெரிஞ்சு போச்சா...?!''

''போன்ல எதுவும் பேசமுடியாது... நிலைமை சரியில்லை.... விபாவைக் கூட்டிக்கிட்டு, நீ உடனே புறப்பட்டு வா...''

''என்ன பிரச்னை...? சொல்லுங்க...''

''எதையும் கேட்காதே... நான் சொன்னபடி செய். விபாவைக் கூட்டிக்கிட்டு உடனே வா...''

''ஷ்யாம் கேட்டா என்ன பதில் சொல்றது...?''

''எனக்கு உடம்பு சரியில்லைனு சொல்லு. இல்லேன்னா உனக்கு தோணின பொய்யைச் சொல்லிட்டு உடனே புறப்பட்டு வா...''

''எனக்குப் பயமாயிருக்குங்க...''

''பதட்டப்படாம வந்து சேரு...''

ராம்கோபால் ரிஸீவரை வைத்துவிட்டுத் தன் இருக்கைக்குத் திரும்ப, விஜயேந்திரன் புன்னகைத்தான்.

''இதுவரைக்கும் நீங்க செஞ்ச காரியங்களிலேயே இதுதான் உத்தமமான காரியம்...''

ராம்கோபால் வியர்த்து வழிந்தார்... ''நீங்க சொன்னபடி நான் போன் பண்ணிட்டேன். விபா நாளைக்குக் காலையில் உங்க பக்கத்துல இருப்பா. இனிமே விபா விஷயத்துல நான் தலையிடமாட்டேன்.



அதேமாதிரி நீங்களும் என்னோட தம்பி ஷ்யாம் விஷயத்துல தலையிடக்கூடாது. அந்த போஸ்ட்மேன் காதர் விவகாரத்தை போலீஸுக்குத் தெரியப்படுத்தாம, என் தம்பியைக் காப்பாத்தறதா வாக்குக் கொடுத்திருக்கீங்க. அந்த வாக்கை நீங்க காப்பாத்தணும். ஷ்யாம் கொஞ்ச நாளாவே சரியில்லை. ஏதோ குழப்பத்துல இருந்தான். அவனை ஒரு நல்ல சைக்யாட்ரிஸ்ட்கிட்ட கூட்டிட்டுப் போகணுமுனு நானே நினைச்சுட்டிருந்தேன். போஸ்ட்மேன் காதரை, ஷ்யாம் ஏதோ ஒரு காரணத்துக்காகக் கொலை பண்ணியிருக்கலாம். அதை அவன்கிட்ட நான் கேட்டுத் தெரிஞ்சுக்கிட்டு, போலீஸுக்கு விஷயம் தெரியாத படிக்கு அந்த விவகாரத்தை எப்படி மறைக்கணுமோ அப்படி மறைச்சு...''

''ஸாரி மிஸ்டர் ராம்கோபால்... அது அவ்வளவு சுலபமில்லை...''

அறைவாசலில் குரல் கேட்க -

ராம்கோபால் உதறும் இதயத்தோடு திரும்பிப் பார்த்தார்.

இன்ஸ்பெக்டர் பாலமுரளி, ஒரு 70 எம்.எம். புன்னகையோடு அறைக்கதவுக்குச் சாய்ந்திருந்தார்.

சந்திரா கைவிரல்கள் நடுங்க ரிஸீவரை வைத்துவிட்டு, அப்படியே தளர்ந்துபோய் உட்கார்ந்தாள்.

'கோயம்புத்தூரில் என்ன பிரச்னை...? காரணம் இல்லாமல் அவர் கல்யாணம் வேண்டாம் என்று சொல்ல மாட்டாரே!'

'ஜமீன் ஆட்கள்தான் ஏதாவது பிரச்னை செய்திருக்க வேண்டும்...!'

சந்திரா அந்தக் குளிரிலும் வியர்த்துக்கொண்டு விபாவின் அறைக்குப் போனாள். கதவு திறந்து கிடக்க, லேசாக ஆச்சரியப்பட்டு உள்ளே எட்டிப் பார்த்தாள்.

விபா இல்லை.

'இந்த வேளையில் எங்கே போனாள்...?'
சந்திரா பாத்ரூம் கதவைத் திறந்து பார்த்தாள். இல்லை.

'அவளுடைய அப்பா ஜெயப்பிரகாசம் அறைக்குப் போயிருப்பாளா...?'

யோசிப்போடு நடையைப் பெயர்த்த விநாடி, திறந்திருந்த கண்ணாடி ஜன்னல் வழியாக ஷ்யாமின் அவுட் ஹவுஸ் பார்வைக்குக் கிடைக்க... முகம் மாறுதலுக்கு உட்பட்டது.

டியூப்லைட் வெளிச்சம் ஒட்டியிருந்த கண்ணாடி ஜன்னலில் ஒரு நிழல் உருவம் எதையோ ஏந்திக்கொண்டுபோக... துணுக்குற்றாள்!

'அது ஷ்யாமா... இல்லை, வேறு யாராவதா...?'

'விபா வேறு இந்த அறையில் இல்லை!'

சந்திரா படபடப்பாக அறையினின்றும் வெளிப்பட்டு போர்டிகோ படிகளை இரண்டிரண்டாகக் கடந்து பனியில் நனைந்துகிடந்த லானில் ஓடி அவுட் ஹவுஸுக்கு முன்பாகப்போய் நின்றாள். காலிங்பெல் பட்டனை அழுத்திவிட்டு, குனிந்து சாவித் துவாரம் வழியாக உள்ளே பார்த்தாள்.

ஷ்யாமின் கைகளில் விபா துவண்டு கிடக்க, அவன் ஹாலின் மையத்தில் நின்றுகொண்டு மிரள மிரளப் பார்த்துக்கொண்டிருந்தான்.

சந்திராவுக்கு உடம்பெல்லாம் தீப்பற்றிக்கொண்ட நிலையில் பதறியது.

'விபா ஏன் மயங்கிக்கிடக்கிறாள்...?'

சந்திரா சாவித் துவாரம் வழியாக பார்த்துக்கொண்டிருக்கும்போதே, விபாவை ஒரு பிரோவுக்குப் பின்னால் இருந்த இடைவெளியில் மறைத்து வைத்துவிட்டு, வாசல் கதவை நோக்கி வந்தான் ஷ்யாம். நடையில் கோபம் தெரிந்தது.

'ப்ளக்...!'

கதவு திறந்தது.

சந்திராவைப் பார்த்ததும் ஷ்யாமின் முகம்



இருட்டுக்குப் போயிற்று.

''அ... ண்... ணி...!''

ஷ்யாமைத் தள்ளிக்கொண்டு உள்ளே போனாள் சந்திரா.

''ஷ்யாம்... விபாவுக்கு என்ன...?''

''விபாவா...? விபா இங்கே இல்லையே...?''

சந்திரா ஆவேசமாகக் கத்தினாள். ''பொய் சொல்லாதே! நான் பார்த்துட்டேன்... நீ விபாவை அந்த பிரோவுக்குப் பின்னாடி...''

''ஓ... பார்த்துட்டீங்களா...?'' ஷ்யாமின் உதட்டில் இப்போது கேலிப் புன்னகை. போன விநாடி வரை முகத்தில் இருந்த பயம் விலக ஆரம்பித்தது.

''ஷ்யாம்! என்ன இதெல்லாம்...? எதுக்காக விபாவை இப்படி...'' சந்திரா ஆத்திரமாகக் கேட்டுக்கொண்டிருக்கும் போதே, பக்கத்துப் படுக்கையறையில் இருந்து பலவீனமான அழுகைச் சத்தம் கேட்டது.

சந்திரா அதிர்ந்தாள்.

''ஷ்யாம்! யாரது...?''

இரண்டு கைகளாலும் தலையைக் கோதிக்கொண்ட ஷ்யாம் அலட்சியக் குரலில் சொன்னான்.

''அது கிரேஷ்...!''

''ஒரு பையன் காணாமப் போனதா...''

''அதே... அதே...!''

''டேய்ய்ய்... ஷ்யாம்...! உனக்கு என்னாச்சுடா...? எதுக்காக அந்தப் பையனையும் விபாவையும் இப்படி...? ஷ்ஷ்ஷ்... நீ சரியில்லை... உன் கூடப் பேசிப் பிரயோஜனமில்லை... உன்னோட அண்ணனுக்கு இப்பவே போன் பண்ணி...''

சந்திரா கத்திக்கொண்டே பின்வாங்கி ஓட முயல ஷ்யாம் வெறி பிடித்தவனைப் போல் சீறினான்.

''எய் நில்லு...''

சந்திரா சர்வமும் திகைத்தாள்.

'அண்ணி... அண்ணி... என்று அழைத்தவன், வாயில்

இப்போது ஏய்...!'

ஷ்யாம் இப்போது ஷ்யாமாக இல்லை.

சந்திரா மூச்சிரைத்துக்கொண்டே பின்வாங்க... ஷ்யாம் சுற்றும்முற்றும் பார்த்து, இரும்பாலான அந்த ஃப்ளவர்ஸ்டாண்டை எடுத்துக்கொண்டான்.

''போன் பண்ணப் போறியா...? எங்கே போ பார்க்கலாம்...''

இரும்பு ஸ்டாண்டைத் தலைக்கு மேல் ஒரு சுழற்றுச் சுழற்றிக்கொண்டு சந்திராவை நோக்கிப் பாய, அவள் திறந்திருந்த கதவின் வழியாக வெளிப்பட்டு, இருட்டில் திசை தெரியாமல் ஓட.... ஷ்யாம் துரத்த ஆரம்பித்தான்.

''ஏய்... நில்லுடி...!''

முதுகுக்குப் பின்னால் அவனுடைய மூச்சிரைப்பு கேட்டது.

சந்திராவுக்குப் பயத்தில் கால்கள் சரத்துணியாகத் துவண்டன.

'ரோட்டுக்குப் போய் விட்டால் எப்படியும் உதவி கிடைக்கும்...!'

உயிரைப் பிடித்துக்கொண்டு இருட்டில் நிலைகொள்ளாமல் ஓடிய சந்திரா, 'த்தட்'டென்று யார் மீதோ மோதிக்கொண்டு நின்றாள்!

'யாரது...?'

பயத்தில் கண்கள் விரியப் பார்த்தவளின் முகம் அடுத்த விநாடி சந்தோஷத்துக்குப் போயிற்று.

போலீஸ்!

இருட்டில் இரண்டு ஜீப்கள் அவுட் லைன் போட்ட மாதிரி தெரிய, கான்ஸ்டபிள்கள் தள்ளித் தள்ளி தெரித்தார்கள்.

''பயப்படாதீங்க மேடம்... கோயம்புத்தூரிலிருந்து இன்ஸ்பெக்டர் பாலமுரளி பத்து நிமிஷத்துக்கு முன்னாடிதான் போன் பண்ணி ஷ்யாமைப் பற்றிச் சொன்னார். உடனே புறப்பட்டு வந்தோம். இனிமே ஷ்யாமை நாங்க பார்த்துக்கிறோம்...''

போலீஸ் அரை வளையம் போட்டுக்கொண்டு



ஷ்யாமை நோக்கி முன்னேறியது.

இரண்டு நிமிஷ மூர்க்கமான போராட்டத்துக்குப் பின் ஷ்யாமின் கைகளில் விலங்கு ஏறியது.

கோவை...

போலீஸ் கமிஷனர் அலுவலகத்தில் அந்த பிரஸ்மீட் கூட்டப்பட்டிருக்க... பத்திரிகை நிருபர்களின் கேள்விகளுக்கு நிதானமான குரலில் பதிலளித்துக்கொண்டிருந்தார் சைக்யாட்ரிஸ்ட் கிறிஸ்டோபர். பக்கத்து நாற்காலிகளில் விபா, ஜெயப்பிரகாசம், விஜயேந்திரன் தெரிந்தார்கள்.

வயதான அந்த நிருபர் கேட்டார்: ''ஷ்யாம் கான்வென்ட் பையன்களைக் கடத்திக்கொடுமைப்படுத்தினதுக்கு என்ன காரணம் டாக்டர்...?''

''ஷ்யாமை சப் - கான்ஷியஸ் மைண்ட்டுக்குக் கொண்டுபோய் அவனிடம் பேசிப் பார்த்ததில், அவன் ஒரு ஃபோபியாவுக்கு உட்பட்டிருந்தது தெரிந்தது. சின்ன வயசில் ஏழ்மையில் வாடிய ஷ்யாம், கான்வென்ட் பள்ளியில் சேர்ந்து படிக்க ஆசைப்பட்டிருக்கான். ஷ்யாமின் அம்மா தன் மகனோட ஆசையை நிறைவேத்தறதுக்காக ஜெஸ்மின் கான்வென்ட்டுக்குப் போய் ஜெயப்பிரகாசத்தைப் பார்த்து ஸீட் கேட்டிருக்காங்க. ஜெயப்பிரகாசம் அந்த அம்மாவைக் கிண்டலா பேசினதோடு மட்டுமல்லாம கழுத்தைப் பிடிக்க வெளியே தள்ளியிருக்கார். 'உன்னை மாதிரியான பஞ்சைப் பராரிகளுக்கு என் கான்வென்ட்ல இடம் கிடையாது... பக்கத்துல ஒரு முனிசிபல் ஸ்கூல் இருக்கு... அங்கே போ... உன் பிள்ளைக்கு சோறும் போட்டுப் படிப்பும் சொல்லிக் கொடுப்பாங்க'னு கடுமையான வார்த்தைகளால பேசியிருக்கார். இதை அந்த அம்மா மறந்துட்டாலும் ஷ்யாம் மறக்கலை. அந்த அஞ்சு வயசிலிருந்தே ஜெயப்பிரகாசத்துமேல் ஒரு வன்மம் ஏற்பட்டிருக்கு. அவரோட பொண்ணு

விபாவைக் கல்யாணம் பண்ணிக்கிட்டுக் கொடுமைப்படுத்திப் பழிவாங்கறதுதான் ஷ்யாமோட அடிமனசு எண்ணம்...''

''ஷ்யாமோட கோபம் ஜெயப்பிரகாசத்துமேல மட்டும்தானே...?''

''ஆமா...''

''கான்வென்ட் பையன்கள்மேல் ஷ்யாமுக்கு என்ன கோபம்...? அவர்களைக் கடத்தி ஏன் கொடுமைப்படுத்தனும்...?''

கிறிஸ்டோபர் புன்னைகைத்தார்.

''அதுக்கான காரணத்தையும் தோண்டி எடுத்துட்டேன்... இருபது வருஷத்துக்கு முன்னாடி ஜெஸ்மின் கான்வென்ட்டுக்குப் பக்கத்துல இருந்த முனிசிபல் ஸ்கூல்லதான் ஷ்யாம் படிச்சிருக்கான். கான்வென்ட்ல படிக்கிற பணக்காரக் குழந்தைகள் முனிசிபல் ஸ்கூலில் படிக்கிற குழந்தைகளைக் கேலி பண்ணி இருக்காங்க. ஒரு கான்வெஷ்ட் பையன், ஷ்யாம் கொண்டு போன டிபன் பாக்ஸைத் திறந்து மண்ணைப் போட்டிருக்கான். சட்டையில் மண்ணை அள்ளிப் பூசியிருக்கான். இப்படி எத்தனையோ சம்பவங்கள் ஷ்யாமோட மனசுக்குள்ளே ஆழமா பதிஞ்சு அதன் காரணமா ஒரு மிருகத்தனமும் வளர்ந்திருக்கு. அந்த மிருகத்தனம்தான் கான்வென்ட் குழந்தைகளைக் கடத்தற அளவுக்குப் போயிருக்கு...''

''ஷ்யாமோட சைக்கோ தனத்தைக் குணப்படுத்த முடியுமா...?''

''முடியும்... அந்தப் பொறுப்பும் எனக்குத்தான் கொடுக்கப்பட்டிருக்கு...?''

''கஜேஷ் தவிர, ஷ்யாமால் கடத்தப்பட்ட கமலக்கண்ணன், சாய்பிரசாத் அந்தப் பையன்களோட நிலைமை இப்போ எப்படியிருக்கு...?''

''அவங்க வேகமா குணமடைஞ்சுட்டு வர்றாங்க. அடுத்த மாதம் அவங்க நார்மலுக்கு வந்து, ஸ்கூலுக்குப் போயிடுவாங்க...''



இன்ஸ்பெக்டர் பாலமுரளியிடம் நிருபர் ஒருவர் கேட்டார்.

''போஸ்ட்மேன் காதரோட பாடியைக் கண்டுபிடிச்சுட்டீங்களா சார்...?''

''போலீஸ் நாயைக் கொண்டு போய் ஷ்யாமோட கெஸ்ட் ஹவுலை ஸ்மெல் பண்ணவிட்டதில், அது பக்கத்தில் இருக்கிற ராய் பங்களாவுக்குப் போய், காதர் புதைக்கப்பட்ட இடத்தைக் காட்டிக் கொடுத்தது. பாடி இப்போ போஸ்ட்மார்ட்டத்துக்காகப் போயிருக்கு...''

இன்னொரு நிருபரிடமிருந்து ஜெயப்பிரகாசத்துக்குக் கேள்வி போயிற்று.

''விபா இப்போ உங்க மகளா, இல்லை... விஜயேந்திரனின் மகளா...?''

ஜெயப்பிரகாசம் குரல் தழுதழுத்தார். ''விபாவுக்கு அப்பா விஜயேந்திரன்தான்! அவர் மட்டும் இப்படியொரு பிரச்னையைக் கிளப்பிக்கொண்டு வந்திருக்காவிட்டால், விபாவை நாங்க இழந்திருப்போம். மகளுக்கு ஏதோ ஒரு ஆபத்து வரப் போகிறது என்கிற உள்ளுணர்வுதான் அவரை இங்கே இழுத்து வந்திருக்கு...''

''இனி விபாவோட கல்யாணம்...?''

ஜெயப்பிரகாசம் பதில் சொல்வதற்கு முன், விபா ஒரு வெட்கப் புன்னகையோடு சொன்னாள்.

''பெற்ற அப்பா மாப்பிள்ளை பார்ப்பார்... வளர்த்த அப்பா கல்யாணம் பண்ணி வைப்பார். நீங்க எல்லோரும் அவசியம் கல்யாணத்துக்கு வரணும்!''

**(முற்றும்)**

ஜீயே பப்ளிகேஷனுக்காக ஜீயே பப்ளிகேஷனில்
அச்சிட்டு (பிரஸ்) வெளியிடுபவர் மற்றும் உரிமையாளர்
ஜி. அசோகன். முகவரி: 6/332, திருவல்லிக்கேணி
நெடுஞ்சாலை, சென்னை - 5.
ஆசிரியர்: ஜி.அசோகன். தொலைபேசி: 28544294